■ முகில்

# M.R. ராதாயணம்



'வாய்யா நீலகண்டா!
ராமச்சந்திரனைச் சுட்டேன்.
அவனும் சாவலை.
என்னைச் சுட்டுக்கிட்டேன்;
நானும் சாவலை.
என்னய்யா துப்பாக்கி
கண்டுபிடிக்கிறானுங்க?
இந்தத் துப்பாக்கியை
வைச்சுக்கிட்டுதான்
சைனாக்காரனை
ஓட்டப்போறாங்களா?'

– டைரக்டர் ப. நீலகண்டனிடம் எம்.ஆர். ராதா

ஓர் அபூர்வமான
கலைஞனின்
அசத்தலான வாழ்க்கை.

# M.R. ராதாயணம்

## முகில்

**மின்னூலாக்கம் : செல்லா**

கிழக்கு

மின்நூலாக்கம்
செல்லா

www.minnoolakam.blogspot.com

## M.R. ராதாயணம்

### முகில்

*அசாத்தியமான நகைச்சுவை எழுத்தால் வாசகர்களைச் சுண்டி இழுத்துக் கட்டிப்போடும் முகில், மிகத் தீவிரமான ஆய்வு நோக்கு கொண்டவர். அண்டார்டிகா குறித்த இவரது நூலான 'ஸ்..!', அந்தக் கண்டத்தின் பனியையே பேனாவில் நிரப்பி எழுதப்பட்டது. சந்திரபாபுவின் வாழ்வைச் சொல்லும் இவரது 'கண்ணீரும் புன்னகையும்' மிகவும் புகழ்பெற்றது. கிழக்கு பதிப்பகத்தின் உதவி ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.*

***முகிலின் பிற நூல்கள்:***

*கண்ணீரும் புன்னகையும்:* சந்திரபாபுவின் வாழ்க்கை

*துப்பாக்கி மொழி* (இந்தியத் தீவிரவாத இயக்கங்கள் குறித்த ஆய்வு)

*ஸ்...!* - அண்டார்டிகா பற்றி அனைத்தும்

*மும்பை :* குற்ற தலைநகரம்

*யூதர்கள் :* வரலாறும் வாழ்க்கையும்

***நகைச்சுவை நூல்கள்***

*லொள்ளு தர்பார்*

*லொள் காப்பியம்*

# M.R. ராதாயணம்

முகில்

கிழக்கு

M.R. ராதாயணம்
M.R. Radhayanam
*Mugil* ©
First Edition: December 2007
200 Pages, Price Rs. 80
Printed in India.

ISBN 978-81-8368-636-5

Kizhakku - 299

Kizhakku, An imprint of
New Horizon Media Pvt. Ltd.,
No.33/15, Eldams Road,
Alwarpet, Chennai - 600 018.
Phone : 044 - 42009601/03/04
Fax : 044 - 43009701

In Madurai: 82, 1st Floor, Dhaanapa Muthali St.,
Madurai - 1. Phone: 0452 - 4230701

Email support@nhm.in
Website www.nhm.in

All rights relating to this work rest with the copyright holder. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the copyright act, without the prior written permission of the publisher of this book.

Author's Email : mugil.siva@gmail.com

Inside Photo Courtesy: S.V. Jayababu

PRODN /02/12 - 07

*Publisher*
Badri Seshadri
*Chief Editor*
Pa. Raghavan
*Editor*
A.R. Kumar
*Editor-in-charge*
Marudhan
*Asst. Editor*
M.Muthuraman
*Sub Editors*
Mugil
Sa.Na. Kannan
R. Muthukumar
Balu Sathya
*Chief Designer*
T. Kumaran
*Designers*
S. Kathiravan
Muthu Ganesan
*Proof Reader*
W. Martin Inbaraj


நான் ராமாயணம் போட்டு உண்மைய சொன்னேன். 144 போட்டானுங்க. இவங்க ராதாயணம் போட்டு உண்மைய சொல்றாங்க, என்ன ஆகப்போவுதோ?

# புரோஜெக்டர்


1. கண்ணீரும் ரத்தமும் / 09

2. இன்னொரு துண்டு மீன் / 18

3. கூத்தாடிக்குப் பெண்
கொடுக்க முடியாது / 25

4. சுட்ட பாலைக் குடித்த பூனை / 33

5. பெரியார் என்ற கொட்டகைக்காரர் / 38

6. எம்.ஆர். ராதா சோடா / 48

7. ராதா Vs கருணாநிதி / 59

8. சிறுவெங்காயமும் பழையதும் / 65

9. உப்பு, புளி, சினிமா / 72

10. கோர்ட் ஏறட்டும் குடிகாரக் கடவுள் / 83

11. காங்கிரஸ் வெள்ளைக்காரனுக்குப் பிறந்தது / 100

12. மூன்றாவது இன்னிங்ஸ் / 104

13. மாமா... மாப்ளே! / 115

14. சரோஜா தேவியின் பிறந்தநாள் / 128

15. 1967, ஜனவரி 12 / 138

16. மீண்டு, மீண்டும் சிறை / 153

17. ரத்தமும் கண்ணீரும் / 167

பின்னிணைப்பு

1. மலேசியாவில் ராதா / 172

2. சினிமா உலகம் பற்றி ராதா / 181

3. ராதாவின் இறுதி பேட்டி / 184

4. ராதா சில சுவாரசியங்கள் / 189

5. எம்.ஆர். ராதா படவரிசை / 194



# கண்ணீரும் ரத்தமும்

1

தேனாம்பேட்டை போயஸ் சாலை. நேரம் காலை பத்தைத் தாண்டியிருந்தாலும் வெயில் அவ்வளவு கடுமையாக இருக்கவில்லை. அந்த வீட்டின் கேட்டுக்கு அருகே நாற்காலியைக் கொண்டு வந்து போட்டார் பணியாள் ஒருவர். அதைத் தன் மேல்துண்டால் ஒருமுறை துடைத்துவிட்டு உள்ளே சென்றார்.

முட்டிவரை நீண்ட அண்டர்வேர், வெள்ளை நிற முழுக்கை பனியனோடு வீட்டைவிட்டு வெளியே வந்தார் ராதா. முதுமையின் ஆக்கிரமிப்பு அவரது தேகத்திலேயே தெரிந்தது. சிறுவயதிலிருந்தே சிறை அவருக்குப் புதிதல்ல, ஆனால் கடந்த இரண்டு முறையாக அனுபவித்த நீண்ட சிறைத் தண்டனைகள், அவரது கம்பீரத்தைக் கொஞ்சம் களவாடிவிட்டுப் போயிருந்தன. மெதுவாக நடந்துவந்து அந்த நாற்காலியில் உட்கார்ந்தார்.

தெருவில் வருவோர் போவோரெல்லாம் அவரைப் பார்த்து வணக்கம் சொன்னார்

கள். பதிலுக்கு இவரும். 'அண்ணே நல்லாயிருக்கீங்களாண்ணே?' ராதாவின் அருகில் ஒருவர் மிகவும் பவ்யத்துடன் வந்து நின்றார்.

'வாய்யா, என்னய்யா இன்னிக்கு நாடகம் எதுவும் இல்லையா?'

'இல்லண்ணே...'

'சாப்டியா?'

'அது...'

'சரி சரி, உள்ளபோய்ச் சாப்பிடு' வந்த நபரை உள்ளே அனுப்பி விட்டு ராதா வாசல் பக்கம் திரும்புகையில், கேட்டின் அருகே தாம்பரம் லலிதா வந்து கொண்டிருந்தார்.

'வாம்மா லலிதா. ரொம்ப நாளா ஆளைக் காணோம். எப்படி இருக்க?'

'அண்ணே, நீங்க சுகமாயிருக்கீங்களா?'

லலிதாவை கருப்பு வெள்ளை காலத்தவருக்குத் தெரிந்திருக்கும். மற்றவர்கள் அறிந்திருக்க வாய்ப்பு குறைவு. முன்னாள் கதா நாயகி. வீரபாண்டிய கட்டபொம்மன் உள்பட சில படங்களில் நடித்திருக்கிறார். நாடகக் குழு ஒன்றையும் நடத்திக் கொண்டிருந்தார். மிகவும் நலிந்து போயிருந்தார். எனவே, ராதாவிடம் உதவி கேட்டு வந்திருந்தார்.

'என்னம்மா நீ, நான் நல்லாயிருந்த காலத்துல எல்லாம் விட்டுட்ட. இப்ப வந்து உதவி கேட்குறியே?'

'இல்லண்ணே. நீங்க வந்து நாடகம் போட்டீங்கண்ணா, அதுல வர்ற நிதியில...'

'சரி. நாடகத்தை எப்போ வைச்சுக்கலாம்? கஜபதி... இங்க வாய்யா...'

ராதாவின் ஒப்பனையாளரும் மேலாளருமான கஜபதி, வீட்டின் உள்ளிருந்து வேகமாக வந்தார். அடுத்த மாதம் திருக்கோவிலூரில் நாடகம் என்று முடிவு செய்யப்பட்டது. நன்றி சொல்லிவிட்டு லலிதா கிளம்பினார்.

அடுத்தநாள் நாடகம். திருக்கோவிலூருக்குக் கிளம்பிக் கொண்டிருக்கும் லலிதா, அதற்கு முன் ராதாவைப் பார்த்துவிடலாம் என்று தேனாம்பேட்டை வீட்டுக்குச் சென்றார்.

'அண்ணே மேல ரெஸ்ட் எடுத்துக்கிட்டு இருக்காரு' பணியாள் சொல்ல.. மாடிப்படி ஏறினார் லலிதா. அந்த அறைக்குள் நுழையும்போதே ஏதோ மருந்து வாசனை.

கட்டிலில் ராதா அமர்ந்திருந்தார். அவரது முகத்தில் வலியால் உண்டாகும் வேதனையின் பிரதிபலிப்பு. லலிதாவைப் பார்த்தவுடன், புன்னகையுடன் வரவேற்றார் ராதா. லலிதாவின் முகத்தில் கலவரம்.

'என்னண்ணே ஆச்சு?' - கண்களில் நீர் முட்டிக்கொண்டு நின்றது.

'அது ஒண்ணுமில்லம்மா. ஏதோ கட்டி வந்துச்சு. இந்த டாக்டருகிட்ட காண்பிச்சேன். வைத்தியம் பண்ணுறேன்னு சதையைத் தோண்டி எடுத்துட்டான்.'

ராதா, தன் வலது தொடையில் இருந்த அந்தக் காயத்தின் மேல் வைக்கப்பட்டிருந்த பஞ்சை எடுத்துக் காண்பித்தார். தோண்டப்பட்ட சதை வழியாக எலும்பு தெரிந்தது. லேசான ரத்தக்கசிவு. அவருக்குச் சர்க்கரை வியாதி என்ற காரணத்தினால், தையல் எதுவும் போட முடியாத நிலை. லலிதாவால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

'அட, நீ ஏம்மா அழுற?'

'அண்ணே இந்த நிலைமையில...'

'நாளைக்குத்தானே நாடகம். நீ போம்மா. நான் வந்துடுவேன்.'

'வேண்டாம்ணே, நாடகத்தைக் கேன்சல் பண்ணிடலாம்.'

'அதெல்லாம் செய்யாதே. நாளைக்கு நாடகம் நடக்கும்' ராதா உறுதியான குரலில் சொன்னார். அவர் சொல்லிவிட்டால் அதை எதிர்த்துப் பேசிவிட முடியுமா என்ன? லலிதா கண்களைத் துடைத்தபடியே அங்கிருந்து கிளம்பினார்.

'நடிகவேள் எம்.ஆர். ராதா நடிக்கும் 'ரத்தக்கண்ணீர்' இன்று மாலை ஏழு மணியளவில்.' திருக்கோவிலூர் எங்கும் போஸ்டர்

கள். நாடகத்துக்குத் தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமை தாங்குவதால் கூடுதல் பரபரப்பு. ராதாவின் நாடகம் என்பதற் காகவே கூடும் திருவிழாவையும் மிஞ்சும் கூட்டம். மணி மாலை ஆறரையை நெருங்கிக் கொண்டிருந்தது. நாடக மேடை தயாராக இருந்தது.

சின்ன உறுமலுடன் வந்து நின்றது ராதாவின் கார். அதிலிருந்து மெதுவாக இறங்கிய ராதாவை, லலிதா ஓடிச் சென்று வர வேற்றார். அவ்வளவு நேரம் தேங்கியிருந்த பயம் லலிதாவின் கண்களிலிருந்து விலகிக் கொண்டிருந்தது. ஒருவரது தோளைப் பிடித்தபடி, மேக்-அப் ரூமை நோக்கி கொஞ்சம் சிரமப்பட்டு நடக்க ஆரம்பித்தார் ராதா. அந்த வேடம் போட ஆரம்பித்து, கிட்டத்தட்ட இருபத்தைந்து வருடங்கள் நிறைவாகி இருந்தன. டாம்பீக கோட், சூட், நவநாகரிக தோற்றத்தில் மோகனாக மாறியிருந்தார் ராதா.

'ஏழு மணி ஆகப்போகுது. ஆரம்பிக்கலாமா?' கேட்டார் ராதா.

அண்டர்வேர் என்றால் காயத்தின் மேல் படாமல் வசதியாக இருக்கும். அரிதாரம் பூசியாயிற்று. இனி வேறெதையும் நினைக்கக் கூடாது. மேடையை நோக்கிக் கிளம்பினார்.

அத்தனை வருடங்களில் எத்தனை மேடைகள் ஏறியிருப்பார். நாடக மேடைகள் அவரது சுவாசம். நாடக மேடையில் நடித்துக் கொண்டிருக்கும்போதே என் உயிர் பிரியவேண்டுமென்று ஆசைப்படுகிறேன் என்று எத்தனையோ முறை கூறியிருக்கிறார். ஆனால் இன்று? மேடையேறுவதற்கு முன்பு உயிர் போய்விடும் போலிருந்தது. பாழாய்ப்போன காயம், படியில் காலெடுத்து வைக்க முடியவில்லை. அருகில் நின்ற இருவரை அழைத்தார். அவர்கள் தோள் கொடுத்தனர். கஷ்டப்பட்டு மேடை மேல் ஏறி நின்றார். திரை விலக்கப்பட்டது.

மக்களின் ஆரவாரம். மேடைமேல் கம்பீரமாக நடக்க ஆரம் பித்தார். வெளிநாட்டிலிருந்து திரும்பும் சீமான் மோகன் தொழி லாளர்கள் மத்தியில் கர்வத்துடன் பேசும் காட்சி ஆரம்பமானது.

'லேடீஸ் அன்ட் ஜென்டில்மேன்...'

அதே குரல். அதே வேகம். அதே துணிச்சல். அவ்வளவு நேரம் முகத்தில் சம்மணமிட்டு அமர்ந்திருந்த வலியின் பிரதிபலிப்பு

..ளைக் காணவில்லை. ராதா அங்கில்லை. அவருக்குள் மோகன் இறங்கியிருந்தான். மக்களின் வழக்கமான கைதட்டல், விசில்கள் தொடர்ந்து கொண்டிருந்தன. ஒவ்வொரு காட்சியாக முடிந்தது. காட்சிகளுக்கிடைப்பட்ட நேரத்தில் ராதா, வேகவேகமாக● ..யத்தில் வைக்கப்பட்டிருந்த பஞ்சை மாற்றிக் கொண்டார். ..ந்தக் கசிவு கொஞ்சம் அதிகமாகத்தான் இருந்தது. நாடகம் ஆரம்பித்தபின் அதையெல்லாம் யோசிக்கத் தோன்றுமா என்ன? மோகன் குஷ்டரோகி ஆகிக் கொண்டிருந்தான்.

அடுத்து காந்தா, போலீஸைக் கொண்டு குஷ்டரோகி மோகனை வீட்டைவிட்டு அடித்துத் துரத்தும் காட்சி. அந்தக் காட்சியில் கொஞ்சம் அதிகமாக விழுந்து புரண்டு நடிக்க வேண்டிய திருக்கும். காட்சிப்படி மரம் ஒன்று சாய்ந்து விழும்.

அண்ணே, அந்த மரம் விழுறதெல்லாம் வேண்டாம்ணே. தவறுதலா உங்க மேல விழுந்துட்டா கஷ்டம்' லலிதா கெஞ்ச லாகக் கேட்டார்.

'என்னை நம்பி காசு கொடுத்து நாடகம் பார்க்க வந்திருக்கிற மக்களை நான் ஏமாத்த மாட்டேன். முன்னாடியெல்லாம் என்னாமா ஆக்ட் கொடுப்பாரு தெரியுமா? இப்போ வயசா யிருச்சு. அவரால முடியலைன்னு சொல்லிடுவான். அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன். நீ போ' ராதாவின் குரலில் கண்டிப்பு இருந்தது.

மேடை. மின்னல், இடி, பெரும் புயல்காற்று, மழை எல்லாம் இருப்பது போன்ற செட்டிங். மோகன் கூன் விழுந்து தள்ளாடித் தள்ளாடி வருகிறான். ஒரு மின்னல் அவனைத் தாக்குகிறது. அவனது பார்வை பறிபோகிறது. 'அய்யோ என் கண்கள்.. என் கண்கள்..' கீழே விழுந்து புரளுகிறான். அவன் அருகிலேயே மரம் ஒன்று சரிந்து விழுகிறது. பின்னணியில் பாடல் ஒலிக்க ஆரம்பிக்கிறது.

'குற்றம் புரிந்தவன்
வாழ்க்கையில் நிம்மதி
கொள்வதென்பதேது?'

தன் நிலையை நினைத்து அழுது புலம்பி, தரையில் புரளுகிறான் மோகன்.

*காட்சியின் இடைவேளை. கால்களை அதிகமாக அசைத்து நடித்ததால், நிறுத்த முடியாத அளவுக்கு ரத்தக்கசிவு. கூடுதலாகப் பஞ்சை எடுத்து காயத்தில் மேல் வைத்துக்கொண்டு அடுத்த காட்சிக்குத் தயாரானார் ராதா.*

*தெருவில் கோலூன்றியபடி நடந்துகொண்டே பிச்சை எடுக்கிறான், கண் தெரியாத மோகன்.*

'மன்னவன் ஆனாலும்
மாடோட்டும் சின்னவன் ஆனாலும்
'மண்ணில் பிறந்தாலே இந்த
மண்ணுக்கிரைதானே!'

இது அப்பவே புரிஞ்சிருக்கணும். இப்ப புரிஞ்சு என்ன செய்ய?

*அப்போது மோகனின் நண்பன் பாலு வெளியூரிலிருந்து திரும்பி வருகிறான். பின்னாலேயே அவனது பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஒரு போர்ட்டர். உருவமெல்லாம் மாறி, குஷ்டத்தில் அவதியுறும் மோகனை, பாலுவுக்கு அடையாளம் தெரியவில்லை. மோகன் பிச்சை கேட்கிறான். காசு வேண்டாம் என்று மறுத்து சோறு கேட்கிறான். 'வீட்டுக்கு வா, சோறு போடுகிறேன்' என்கிறான் பாலு. போர்ட்டர், மோகனின் ஊன்று கோலைப் பிடித்து இழுத்தபடியே பாலுவின் பின்னால் அழைத்துச் செல்கிறான்.*

*வீட்டை அடைந்த பின், போர்ட்டருக்கும் பாலுவுக்கும் வாக்கு வாதம் நடக்கிறது.*

*'ஏ, என்னப்பா நாலணா கொடுக்கற?'*

*'என்ன நீ நாலணாதானே கேட்டே'*

*'ங்.. இத்தை இம்மாந்தூரம் இஸ்துகினு வந்துருக்கேனே..' மோகனைப் பார்த்து போர்ட்டர் சொல்கிறான்.*

*'இதையா? என்னங்கடா என்னை ஐந்து ஆக்கிட்டான்' மோகனின் வசனம் இது.*

*'கயுத கயுத. உன்ன இம்மாந்தூரம் இழுத்துக்கிட்டு வந்துருக்கேன். எம் பக்கம் பேசுவியா, பணக்காரன் பக்கம் பேசுறியே?'*

போர்ட்டர் கத்த, மோகன் வாக்குவாதத்தைத் தொடருகிறான்.

'தொழிலாளர்கள் பக்கம் கொடி பிடிக்குறாருப்பா இவரு. சரி இப்ப எதுக்காக நீ சத்தம் போட்டு கலாட்டா பண்ணுறே?'

'அட நாளைக்கு எங்கப்பனுக்கு தெவசம்பா! தெவசம் கொடுக்க காசு வேணும்னுதான் கூவிக்கினு கிடக்கிறேன்.'

'தெவசம் யாருக்கு?'

'எங்கப்பனுக்கு.'

'யாரைக் கூப்பிட்டுப் பண்ணப்போற?'

'அய்யர்சாமியைக் கூப்பிட்டுத்தான் பண்ணனும்.'

'ஆமா உங்கப்பன் என்ன சாப்பிடுவான்?'

'சோறு'

'மீன் சாப்பிடுவானா?'

'அய்யோ, கெண்டை மீனுன்னா ஒரு புடி புடிப்பானே எங்கப்பன். கறிச்சி இல்லாம சாப்பிட மாட்டானே.'

'அய்யரு என்ன கேட்டாரு?'

'பச்சரிசியும் காய்கறியுமில்ல கேட்டாரு.'

'இப்போ இதையெல்லாம் படைச்சு நீ யாருக்குக் கொடுக்கப் போற?'

'அய்யருக்குக் கொடுக்கப் போறேன்.'

'ஏன்டா தெவசம் உங்கப்பனுக்கா? அய்யருக்கா?'

'ஆமா... இப்ப நான் என்ன பண்ணுறது?'

'நீ நல்ல விறால் மீனா வாங்கி குழம்பு வைச்சு, அதைப் படைச்சு, கொடுறா அய்யருக்கு.'

நக்கல், நையாண்டி கொஞ்சமும் குறையாத பகுத்தறிவு வசனம். இடைவிடாத மக்களின் ஆர்ப்பரிப்பு. சிரிப்பொலி. கேட்கக்

கேட்க ராதாவுக்குத் தன் வேதனையெல்லாம் குறைந்தது போன்றதொரு உணர்வு. அடுத்தக் காட்சி புரட்சிகரமான க்ளைமாக்ஸ். சுபம்.

லலிதா, கண்ணீர் பெருக ராதாவுக்கு நன்றி சொன்னார். எந்தக் குறையும் இல்லாமல் நாடகத்தை நடத்திமுடித்துவிட்ட திருப்தி ராதாவின் முகத்தில். காயத்தின் மீது வைக்கப்பட்ட பஞ் செல்லாம் சிவப்பாகி இருந்தது.

அன்று இரவு ராதா திருக்கோவிலூரிலேயே தங்கிவிட்டு, காலை கிளம்பிச் செல்வதாக ஏற்பாடு. இரவு கழிந்தது. பொழுது விடிந்தது. அந்த ஊரில் அப்போது எடுப்புக் கழிவறைதான். அங்கு செல்ல ராதாவுக்கு விருப்பமில்லை. காட்டுக்குச் சென்றுதான் ஒதுங்கவேண்டும். தூரம் கொஞ்சம் அதிகம். காயத்தின் வலி. வேறு வழியில்லை. இரண்டு பேரை உதவிக்கு அழைத்துக்கொண்டு கிளம்பினார். சிரமப்பட்டு காட்டை அடைந்தார்.

ஏற்கெனவே ஒரு சிலர் காலைக்கடனுக்காக ஒதுங்கியிருந் தார்கள்.

ஒரு புதருக்குப் பின் கொஞ்சம் வயதானவர் ஒருவர் இருந்தார். முக்கல் சத்தம். 'ஷ்ஷ்.. அப்பா முருகா...'

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் நின்றுவிட்டார் ராதா. சிரித்தபடியே தன் பாணி கமெண்ட் ஒன்றை உதிர்த்தார்.

'எனக்கும் ரொம்ப நாளா இந்தச் சந்தேகம் இருந்துச்சு. முருகன் கையில வேல் எதுக்கு இருக்குதுன்னு? இப்பத்தான் புரியுது. தன்னோட ஆள்களுக்கு நோண்டி விடுறதுக்குன்னு...'

•

எம்.ஆர். ராதா நாடக மேடைகளில் வாழ்ந்தவர். ஆனால் நிஜ வாழ்க்கையில் ஒருபோதும் நடித்திராதவர். நாடகக்காரர், பகுத்தறிவுவாதி, சினிமா நடிகர், பெரியாரின் தொண்டர், அதிரடிப் பேச்சாளர், குடும்பத் தலைவர், சிறைச்சாலைக் கைதி என்று அவருடைய வாழ்க்கையில் ஏகப்பட்ட பாத்திரங்கள். ஆனால் எதிலுமே அவர் அரிதாரம் பூசியதில்லை. ராதா ராதாவாகவே வாழ்ந்தார்.

அவரது வாழ்க்கையை உணர உணர ஏகப்பட்ட கேள்விகளுக்கு விடை கிடைக்கலாம்.

புதிதாகச் சில கேள்விகள் தோன்றலாம்.

பதில் கிடைக்காமல் சில மீதமிருக்கலாம்.

அவற்றை விட்டுவிடுவோம். ஏனெனில் பதில் கிடைக்கும்வரை தான் அந்தக் கேள்விகளுக்கு உயிர் இருக்கும்.



2

# இன்னொரு துண்டு மீன்

பள்ளிக்கூடம் விடும் நேரமாகியிருந்தது. எனவே சென்னை சிந்தாதிரிப்பேட்டை நேப்பியர் பூங்காவிலிருந்து வேகவேக மாக சைக்கிளைத் திருப்பிக் கொண்டி ருந்தான் ராதா. அதனைக் கடையில் விட்டுவிட்டு, வாடகையாக காலணா கொடுத்துவிட்டு, புத்தகப் பையுடன் வீட்டை நோக்கி நடந்தான்.

உண்மையிலேயே பள்ளிக்குச் சென்று விட்டு அண்ணன் ஜானகிராமன் வருவதற் கும், ஊர் சுற்றிவிட்டு இவன் வீட்டுக்குள் நுழைவதற்கும் சரியாக இருந்தது. என்ன பள்ளிக்கூடம் அது? வாத்தியாரைப் பார்த் தாலே எரிச்சல் வருகிறது. கணத்த சாரீரம், அதிர வைக்கும் தொண்டை, மிரள வைக்கும் பிரம்படி. அப்படிப்பட்ட படிப்பு ஒன்றும் தேவையில்லை என்று அவனுக்குள்ளேயே முடிவெடுத் திருந்தான்.

சமையறையிலிருந்து மீன்குழம்பின் வாசம் பசியைத் தூண்டியது. தட்டை

எடுத்துவைத்து சாப்பிட உட்கார்ந்தான் ராதா. அண்ணனும், கடைக்குட்டி தம்பியும் ஏற்கெனவே உட்கார்ந்திருந்தார்கள்.

'அம்மா சீக்கிரம் வாம்மா. பசிக்குது' ராதா கத்தினான். உள்ளே யிருந்து ராஜம்மா வெளியே வந்தார்.

'பள்ளிக்கூடம் போகாத பிள்ளைக்கு சாப்பாடு மட்டும் கேட்குதோ?' ராதாவின் முகத்தில் குட்டு வெளிப்பட்ட அதிர்ச்சி. இருந்தும் சமாளித்தான்.

'என்னம்மா சொல்லுற? நான் பள்ளிக்கூடம் போனேன். வேணும்னா பக்கத்துவீட்டு விசுவைக் கேளு.'

'அப்போ தோட்டத்துல சைக்கிள் ஓட்டிக்கிட்டிருந்தது யாரு?'

'இல்லம்மா. எனக்குத்தான் சைக்கிள் விடவே தெரியாதே.'

'எல்லாம் எனக்குத் தெரியும். பொய் சொல்லாத. ஒழுங்கா பள்ளிக்கூடம் போய் படிப்பேன்னு சொல்லு.'

'வாத்தியாரு அடிக்கிறாரே?'

'நீ ஒழுங்காப் படிக்கணும். உன் அண்ணனைப் பாரு. அவன் என்ன அடியா வாங்குறான்?'

ராஜம்மா உணவு பரிமாற ஆரம்பித்தார். சாதம். பின்பு மீன் குழம்பு. ராதாவின் தட்டில் ஒரு மீன் துண்டு இருந்தது. அண்ணனின் தட்டில் இரண்டு. தனக்கு வைத்த மீன் துண்டை லபக்கென விழுங்கினான் ராதா.

'அம்மா...'

'என்னடா?'

'இன்னொரு துண்டு மீன் வையும்மா.'

'அடச்சீ, ஒழுங்காப் படிக்க மாட்ட. மீன் துண்டு மட்டும் வேணுமோ?' முதுகில் ஓர் அடி விழுந்தது.

'நாக்குல இருக்குற ருசி, படிப்பிலயும் வேணும். உனக்கு இன்னொரு மீன் துண்டு கிடையாது' கண்டிப்பாகச் சொன்ன ராஜம்மா, குழம்பு பாத்திரத்துடன் உள்ளே சென்றுவிட்டாள். ராதாவுக்கு அதற்கு மேல் சாப்பிடப் பிரியமில்லை. எழுந்து கைகழுவினான். வீட்டைவிட்டுக் கிளம்பினான்.

இலக்கின்றிப் போய்க் கொண்டிருந்தன கால்கள். மூர் மார்க்கெட் வந்தது, கூடவே தாத்தா போத்தும் வரதய்யாவின் நினைப்பும். வெளிநாட்டுப் பொருள்களை விற்று வந்தார் அவர். மூர் மார்க்கெட் தீ விபத்தில் எரிந்துபோனது. வியாபார நஷ்டம். வெள்ளையர்கள் இருந்த காலம் அது. எனவே, அவர்கள் உபயோகப்படுத்திக் கழித்த பொருள்களைச் சேகரித்து விற்க ஆரம்பித்தார். அவர் உயிரோடு இருந்திருந்தால் என் இஷ்டப்படி நான் வாழ அனுமதித்திருப்பாரோ?

மேலும் நடந்தான். எதிரே ஒரு போலீஸ்காரர் கடந்து போனார். ராணுவ உடையணிந்து போருக்குப் போன தந்தை ராஜகோபால நாயுடுவின் முகம் நினைவுக்கு வந்தது. ரஷ்ய எல்லையில் பஸ்ஸோவியா என்ற இடத்தில் அவர் வீர மரணம் அடைந்து விட்டார். ஆறு வயதிலேயே தந்தையை இழப்பது எத்தனை கொடுமை? அம்மா பாவம்தான்.

நடந்துகொண்டே இருந்தான். ஒரு மசூதி வந்தது. மொகரம் பண்டிகைக்குப் புலிபோல வேஷம் போட்டுக்கொண்டு நண்பர் களோடு ஆடும் ஆட்டம் நினைவுக்கு வந்தது. கூடவே அம்மா வின் மேல் கோபம் வந்தது. பிடிக்காத படிப்பைத் தொடர முடியுமா என்ன? இனிமேல் அந்த வீட்டுக்குப் போக மாட்டேன்.

எழும்பூர் ரயில் நிலையம் வந்திருந்தது. உள்ளே நுழைந்தான் ராதா. ஆனால் அதற்குமேல் எங்கே போகலாம், என்ன செய்ய லாம் - ஒன்றும் புரியவில்லை. திருதிருவென விழித்துக் கொண்டி ருந்தான்.

‘டேய் பயலே! இங்க வா.’

கணத்த பெட்டியுடன் வந்து கொண்டிருந்த ஒருவர், ராதாவை அழைத்தார். எதுவும் கேட்காமல் அவனது தலையில் பெட்டியைத் தூக்கி வைத்தார். அவர் பின்னாலேயே ராதா நடந்தான். அப்போது போர்ட்டர் என்று யாரும் கிடையாது. சிறுவர்கள்தான் அந்த வேலையைச் செய்து கொண்டிருந்தனர். ரயில் பெட்டியில் அவரது இருக்கையில் பெட்டியைப் பத்திரமாக இறக்கிவைத்த ராதாவுக்கு அவர் காலணா கொடுத்தார். முதல் சம்பளம். ராதாவின் முகத்தில் புன்னகை.

‘உன் பேரென்ன?’

‘ராதா.’

'அப்பா, அம்மா இருக்காங்களா?'

'இல்லை.'

'அப்படியா. சரி என்கூட வர்றியா? என் பேரு ஆலந்தூர் டப்பி ரங்கசாமி நாயுடு. நாடக கம்பெனி நடத்துறேன். கேள்விப்பட்டி ருக்கியா?'

'சரி வர்றேன்.'

'சரி, டிக்கெட் கேட்குறவரு வந்து போகற வரைக்கும் இந்த பெஞ்சுக்குக் கீழ ஒளிஞ்சு படுத்துக்கோ.'

ராதா ஒளிந்து கொண்டான். ஒரு விரிப்பைப் பெஞ்சின் மேல் போட்டு, அதைக் கீழே தொங்குமாறு செய்து, மேலே உட்கார்ந்து கொண்டார் ரங்கசாமி. ரயில் சிதம்பரம் நோக்கிப் பயணமானது. 14.04.1907-ல் பிறந்திருந்த மெட்ராஸ் ராஜகோபால நாயுடு மகன் ராதாகிருஷ்ணனின், (சுருக்கமே எம்.ஆர். ராதா) நாடக உலகை நோக்கிய பயணம் ஆரம்பமானது அப்போதுதான். அப்போது ராதாவுக்கு வயது ஏழு.

கம்பெனியில் ராதாகிருஷ்ணனுக்கு முதன்முதலில் நடிக்கக் கிடைத்த வேடம் பாலகிருஷ்ணன். விஷப்பால் கொடுக்க வருகிற பூதகியைக் கொல்லும் காட்சி. இப்படி சிறு சிறு பால வேடங்கள். மற்ற நேரத்தில் சீனியர் ஆர்ட்டிஸ்ட்களுக்கு பணிவிடை செய்ய வேண்டும். அவர்களுக்கு உடம்பு பிடித்து விடுவது, சமையல் செய்து போடுவது, துணி துவைத்துக் கொடுப்பது போன்ற எடுபிடி வேலைகள். ஏதாவது தவறு செய்தால் உதை நிச்சயம். ஏகப்பட்ட கனவுகளுடன் வந்த ராதா வுக்கு அது அடிமை வாழ்க்கை என்று புரிந்துபோனது. இருந் தாலும் மேடை ஏறி கூடியிருக்கும் மக்கள் முன் நடிப்பதென்பது உள்ளுக்குள் ஒரு கிளுகிளுப்பைக் கொடுத்தது.

சாப்பாடு? சீனியர்கள் சாப்பிட்டது போக மீதமிருந்தால் கிடைக்கும். அல்லது கையில் காலணா கொடுப்பார்கள். அதை வைத்துக்கொண்டு அரை வயிற்றுக்கு ஆப்பம் சாப்பிட வேண்டியதுதான். அந்த மாதிரி நாள்களில் இரவு நாடகம் எப்போது முடியும் என்று காத்திருப்பான் ராதா. காரணம், மது அருந்திவிட்டு நாடகத்துக்கு வந்திருந்தவர்கள் மண்ணில் புரண்டு சென்றிருப்பார்கள். அங்கே மண்ணைத் துழாவினால் நிச்சயம் காசு கிடைக்கும்.

நாள்கள் நகர்ந்தன. ராதாவைத் தேடி வந்த உறவுக்காரர் ஒருவர், அவனை அங்கிருந்து அழைத்துக்கொண்டு சென்னை வந்தார். ராஜம்மா கோபப்படவில்லை. தான் சேர்த்து வைத்த காசை தாயிடம் கொடுத்தான். அவள் முகத்தில் ஆனந்தம். கண்களில் கண்ணீர். இருந்தாலும் ராதாவால் வீட்டில் இருக்க முடிய வில்லை. நாடகமேடை அவனை இழுத்தது. தன் தம்பியிடம் அனுபவங்களைச் சொன்னான்.

'நீயும் வர்றியா?'

'வர்றேண்ணே!'

இருவரும் கிளம்பினார்கள். சொல்லாமல் கொள்ளாமல்தான். பசிக்குச் சாப்பிட கையில் வாழைப்பழத் தார் ஒன்றை எடுத்துக் கொண்டான் தம்பி. சென்ட்ரல் ரயில் நிலையம். திருட்டுத் தனமான ரயில் பயணம். மைசூர் வந்து இறங்கினார்கள். அங்கே சாமண்ணா அய்யர் நாடக கம்பெனியில் சேர்ந்தார்கள்.

ராதாவுக்குப் பழகி விட்டிருந்தது, ஆனால் தம்பியால் அடி, உதைகளைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. 'அண்ணே, இங்கிருந்து போயிடலாம்ணே!' - தம்பி வற்புறுத்தி அழைத்தான். அவர்கள் வெளியேறினார்கள். அடுத்தது ஆஞ்சநேயர் கோவிந்த சாமி நாயுடு கம்பெனி. அங்கு மட்டுமென்ன, ராஜ உபசாரமா கிடைக்கப் போகிறது? அங்கிருந்தும் வெளியேறினார்கள்.

தம்பி நாடக ஆசையை விட்டுவிட, ராதா மட்டும் ஜெகந்நாதய்யர் கம்பெனியில் சேர்ந்தான். அதன் பெயர் மதுரை ஸ்ரீ பால மீன ரஞ்சனி சங்கீத சபா. ஜெகந்நாதய்யர் நல்லவர். சாதி, மத பேதம் பாராதவர். தன் கம்பெனியில் சமபந்தி போஜனம் நடத்தியவர். கண்டிப்பான ஒழுங்குடன், அதேசமயம் மாறாத அன்புடன் நடந்துகொண்டார். ராதா அங்கு வளர்ந்தான். வளர்ந்தார்.

நாடக மேடை, நடிப்பு எல்லாம் பழகிற்று. யதார்த்தம் பொன்னுசாமிப் பிள்ளையும், சம்பந்தமும் ஜூனியர்களுக் கெல்லாம் நடிப்பு சொல்லிக் கொடுத்தார்கள். எதையுமே சுயமாகச் செய்து பார்க்க வேண்டுமென்ற வேட்கை கொண்ட ராதா, தன் இஷ்டப்படி நடித்தார். அது அவர்களுக்குப் பிடிக்க வில்லை. கண்டித்துப் பார்த்தார்கள், தண்டித்துப் பார்த்தார்கள். ராதா மாறிவிடுவாரா என்ன?

நடிப்பு அளவில் தன் இஷ்டத்துக்கு இருந்தாலும் அய்யர், ராதாவைக் கம்பெனியைவிட்டு வெளியே அனுப்பவில்லை. காரணம் மெக்கானிக்கல் வேலையும், எலக்ட்ரிகல் வேலையும் நன்றாகப் பழகிக் கொண்டிருந்தார். நாளடைவில் கம்பெனியின் ஆஸ்தான மெக்கானிக், எலக்ட்ரீசியனாக மாறிப் போனார். தேவைப்படும் போதெல்லாம் கம்பெனியின் டிரைவராகவும் பணியாற்றினார். எல்லாவற்றுக்கும் சேர்ந்து மாதச் சம்பளம் ரூபாய் ஐந்து மட்டும்.

அதே கம்பெனியில் இருந்த என்.எஸ். கிருஷ்ணன், ராதாவுக்கு நெருக்கமான நண்பராகிப் போனார். ஆனால் அவரால் கம்பெனி யில் பிரதான நகைச்சுவை நடிகராக மிளிர முடியவில்லை. காரணம், சாரங்கபாணி அதில் கோலோச்சிக் கொண்டிருந்தார். எனவே, தன் முன்னேற்றம் கருதி கம்பெனியிலிருந்து போராடி வெளியே போய்விட்டார் என்.எஸ்.கே.

அப்போது மாயவரத்தில் முகாமிட்டிருந்தார்கள். அன்று காந்தி மாயவரத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுவதாக ஏற்பாடு. ராதாவுக்குக் காந்திய வழிகளில் விருப்பம் இருக்கவில்லை. பகத் சிங்கின் அதிரடி வழிகள்தான் பிடித்திருந்தன. இருக்கட்டுமே, அதற்காக காந்தியைப் பார்க்கக்கூடாதா என்ன? தீவிர காந்தி பக்தரான சாரங்கபாணி அண்ணனுடன் கூட்டத்துக்குக் கிளம்பி னார் ராதா.

காந்தி பேச்சைத் தொடங்கினார். அவர் பேசப் பேச ஒருவர் தமிழில் மொழிபெயர்த்துக் கொண்டிருந்தார். 'அந்நிய உடை களைத் தவிர்ப்போம். எரிப்போம்' காந்தி கூறக்கூற கூட்டத்தி லிருந்தவர்கள் உடைகளைக் களைந்து ஓரிடத்தில் குவித்து தீ வைத்தார்கள். உணர்ச்சிவயப்பட்டிருந்த ராதாவும் அவ்வாறே செய்தார்.

தான் வெறும் கோவணத்துடன் நிற்பது தெரிய அவருக்குச் சிறிது நேரம் பிடித்தது. சுற்றி முற்றிப் பார்த்தார். சாரங்கபாணியைக் காணவில்லை. வேறென்ன செய்ய? அதே கோலத்தில் தெரு வழியாக நடந்து வந்து கம்பெனியை அடைந்தார்.

அங்கே சாரங்கபாணி, புதிய உடைகள் அணிந்திருந்தார். இருந்த ஓர் உடையையும் தீயில் போட்டாயிற்று. வேறு உடைக்கு எங்கே போவது? சாரங்கபாணிக்கு புதிய உடை கிடைக்கும். தனக்கு

அய்யர் தருவாரா என்ன? தன்னை இந்த நிலைமைக்கு கொண்டு வந்துவிட்ட சாரங்கபாணி மேல் ராதாவுக்குக் கோபமாக வந்தது. நேரடியாகச் சண்டை போடவும் முடியாது. யோசித்தார். அழுதுகொண்டே அவரை நோக்கி ஓடினார்.

'அண்ணே, யாரோ காந்தி செத்துட்டாரு. அவரை அடிச்சுக் கொன்னுட்டாங்கண்ணே!'

'என்னடா சொல்லுற?' தீவிர காந்தி பக்தரான அவரும் உடனே அதை நம்பி அழ ஆரம்பித்துவிட்டார். ராதாவுக்கு உள்ளுக்குள் சந்தோஷம். அந்தச் சமயத்தில் அய்யர் வந்துவிட்டார்.

'என்னடா ஆச்சு?'

'காந்தியைக் கொன்னுட்டாங்க' கள்ள அழுகை மாறாமல் கூறினார் ராதா.

'யார் சொன்னா?'

'கடைவீதியில பேசிக்கிட்டாங்க.'

'அதெல்லாம் ஒண்ணுமில்லை. புரளி. அவரு நல்லபடியா இப்பத்தான் ஊருக்குக் கிளம்பிப் போனாரு. நான் பார்த்துட்டு தான் வர்றேன்' அய்யர் சொல்லவும், சாரங்கபாணி அமைதி யானார். 'நீ என்னடா கோவணத்தோட நிக்குற?' என்று கேட்ட அய்யர், ராதாவுக்குப் புதுத் துணி கொடுத்தார். ராதா தன் கண் களைத் துடைத்துக் கொண்டு சிரித்தார்.



3

# கூத்தாடிக்குப் பெண் கொடுக்க முடியாது

அன்று மாலை திருப்பதியில் நாடகம். கீழ் திருப்பதியில் ஒரு வீட்டில் தங்கியிருந்தார்கள். அதிகாலையிலேயே ராதாவுக்கு விழிப்பு வந்துவிட்டது. ஏழுமலையானைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை. அப்போது அவருக்குக் கடவுள் நம்பிக்கை இருந்த காலம். யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பினார்.

அப்போது மலை ஏற சாலை எல்லாம் கிடையாது. கால்நடையாகத்தான் ஏற வேண்டும். காசிருந்தால் டோலியில் செல்லலாம். இருவர் கூலிக்குச் சுமந்து கொண்டு போவார்கள். அதெல்லாம் ராதாவிடம் ஏது? 'கோவிந்தா கோவிந்தா' என்று கத்தியபடியே கும்பலோடு கும்பலாக ஏற ஆரம்பித்தார்.

காலையில் மட்டும்தான் தர்ம தரிசனம் உண்டு. எனவே, அந்த நேரம் முடிவதற்குள் சென்றுவிட வேண்டும் என்ற அவசரம். தரிசித்துவிட்டு வந்து நாடகத்துக்கான ஒத்திகையில் கலந்துகொள்ள

வேண்டும் என்ற அவசரம், ராதாவை வேகவேகமாக மலை ஏற வைத்தது. கல், முள் எல்லாம் குத்தி கால்களில் ரத்தம். தாகத்தால் நாக்கு வேறு பாலைவனமாகிக் கிடந்தது.

'இன்னிக்கு தர்ம தரிசனம் காலைல கிடையாதாம். சாயங்காலம் தானாம்' ஒருவர் சொல்லிக்கொண்டு போனார். கால் முட்டி யெல்லாம் கழன்று விழும் நிலையில் கோயிலை அடைந்த ராதாவுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. 'உன்னைப் பார்க்க இவ்வளவு கஷ்டப்பட்டு வந்திருக்கேன். நீ என்னை ஏமாத்துறியா?' என்று திருப்பதி வெங்கடாசலபதி மேல் ஆத்திரம். தீபாவளி நெருங்கிக் கொண்டிருந்த சமயம் என்பதால் தூரத்தில் வேட்டுச் சத்தம் கேட்டது. 'இரு உன்னை கவனிச்சுக்கிறேன்' என்று வெங்கடாசலபதி இருக்கும் திசையை நோக்கி மிரட்டி விட்டு வேகவேகமாக மலை இறங்கினார்.

தான் தங்கியிருந்த வீட்டுக்கு வந்தார். அவசர அவசரமாக மொட்டை மாடிக்கு ஓடினார். கையில் வெடிமருந்து. ஒரு சிறிய பொட்டலத்தில் மனோசிலம். வேதியியலாகக் கூற வேண்டு மென்றால் ஆர்சனிக் டைசல்பைடு. அந்தக் கால ஆள்கள் பொது வாகப் பாஷாணம் என்பார்கள். வெடிமருந்தோடு, பாஷா ணத்தைக் கலந்து வெடிகுண்டு ஒன்றைத் தயார் செய்தார். ராதா, பகத் சிங் கட்சிக்காரராக இருந்ததால், இம்மாதிரியான வேலை களையும் ரகசியமாகக் கற்று வைத்திருந்தார். செய்த வெடி குண்டை காய வைத்துவிட்டு, கீழே ஒத்திகைக்குச் சென்று விட்டார். வெடிகுண்டு வைத்து கோயிலைத் தகர்க்கவேண்டும் என்பதே அவரது திட்டம்.

மாலை நேரம். சிகரெட் ஒன்றை பற்ற வைத்துக்கொண்டு மொட்டை மாடிக்கு ஏறினார் ராதா. வெடிகுண்டு காய்ந்தி ருக்கிறதா என்று பார்க்கப் போனார். சிகரெட்டிலிருந்து நெருப்புப் பொறி பறந்தது. பெரும் சத்தம்.

ராதா தூக்கியெறியப்பட்டார். அந்த வீடே கொஞ்சம் இடிந்து போனது. வீட்டிலிருந்த பலருக்குக் காயம். போலீஸ் விரைந்து வந்தது. விசாரணை செய்து ராதாவை இழுத்துக்கொண்டு போனது. காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டார்கள். ஜெகந்நாதய்யருக்குத் தாங்க முடியாத அதிர்ச்சி. கம்பெனி ஆர்ட்டிஸ்ட் ஒருவரது சொந்தக்காரர்தான் அப்போது தலைமைக் காவல் அதிகாரி. அவர் அய்யரிடம் விசாரித்தார்.

‘வெடிகுண்டு எப்படி வந்துச்சு?’

‘அது வந்துங்க, நாடகத்துல ராஜா வர்றப்போ வேட்டு போடு வோம். அதுக்கான வெடிமருந்துதாங்க...’

‘அதுல பாஷாணம் எப்படி கலந்துச்சுன்னு கேக்குறேன்.’

‘அய்யோ, பாஷாணமெல்லாம் இல்லீங்க. வெறும் வெடி மருந்துதாங்க.’

‘கட்டடமே உடைஞ்சு போயிருக்கு.’

‘அது பழைய கட்டடம் அதான்...’

ஒரு வழியாகச் சமாளித்தார் அய்யர். கேஸ் தலைமைக் காவல் அதிகாரியுடனேயே நின்று போனது. ராதா விடுதலையானார்.

●

சின்னச் சின்ன வேடங்களில் நடித்துக் கொண்டிருந்த ராதாவுக்கு கொஞ்சம் பெரிய வேடங்கள் கிடைக்க ஆரம்பித்தன. மாதச் சம்பளம் இருபத்தைந்து ரூபாயாக உயர்ந்தது.

‘பதிபக்தி’ என்ற நாடகத்தில் அவருக்கு சி.ஐ.டி வேடம். ஒரு மோட்டார் சைக்கிளிலேயே மேடைக்கு வருவார் ராதா. மக்கள் மேல் பாய்ந்துவிடுவதுபோல மேடையின் ஓரம்வரை வேகமாக ஓட்டிக்கொண்டு வந்து, லாகவமாக பிரேக் பிடித்து அரை வட்டமடித்து நிற்பார். கைதட்டல், விசில்கள் பறக்கும். இப்படிச் சின்னச் சின்ன விஷயங்களால் ராதா பிரபலமடையத் தொடங் கினார். அவர் எப்போது வருவார் என்று மக்கள் ஆர்வத்தோடு காத்திருப்பார்கள். அவர் வரும் நேரம் ஆரவாரம் செய்வார்கள்.

அந்த நேரத்தில் தமாஷா வரி அமலானது. அதாவது நாடகம் நடத்துகிறவர்கள் கட்ட வேண்டிய கேளிக்கை வரி. அய்யருக்கு அது சுத்தமாகப் பிடிக்கவில்லை. யாரும் என்னைக் கணக்கு கேட்கக் கூடாது, முனிசிபாலிடிகாரனிடம் என்னால் அடிமை யாக இருக்கமுடியாது என்று நாடக கம்பெனியையே கலைத்து விட்டார். ஆனால் அவருக்கு ராதாவைவிட மனமில்லை.

‘ராதா, நீ என்கூடவே டிரைவரா இருப்பா...’

நாடகத்துக்கான மேடையில்லாதபோது, ராதாவால் அங்கு சுவாசிக்க முடியுமா என்ன? ‘இதோ ஊருக்குப் போயிட்டு

திரும்பி வர்றேன்' என்று அய்யரிடம் சொல்லிவிட்டு சென்னைக்குக் கிளம்பினார் ராதா.

●

நாகலிங்கச் செட்டியார் என்பவர், நின்றுபோன ஜெகந் நாதய்யரின் கம்பெனியை விலைக்கு வாங்கினார். அய்யரின் மகன் ராமசுப்பு அதன் நிர்வாகத்தைக் கவனித்துக் கொண்டார். இதெல்லாம் பிடிக்காத அய்யர், ஒதுங்கிவிட்டார். பழைய ஆள் களை எல்லாம் தேடிப்பிடித்து மீண்டும் கம்பெனியில் சேர்க்க ஆரம்பித்தார்கள். ராதாவும் போய்ச் சேர்ந்துகொண்டார். புதிதாகச் சிலரும் வந்து சேர்ந்தார்கள்.

நடிப்புப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்காகப் புதிதாக ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் கந்தசாமி வாத்தியார். அவர் தன் மகனோடு வந்து அந்த கம்பெனியில் சேர்ந்தார். அவரது மகன் எம்.கே. ராதா. வாத்தியார் ரொம்ப சாது. அவருக்கு ராதாவின் முரட்டுப் போக்கு ஒத்துவரவில்லை. எல்லோருக்கும் பாடம் சொல்லிக் கொடுத்த அவர், ராதாவிடமிருந்து மட்டும் விலகியே இருந்தார். ராதாவுக்கும் அவரது பாடம் தேவையாக இருக்க வில்லை.

பழைய செட் இல்லையே. புதிதாகச் சிலர் வந்திருந்தார்கள். அவர்களுக்கும் ராதாவின் துடுக்குத்தனமான பேச்சும், அதிரடி செயல்களும் பிடிக்கவில்லை. ராதாவைத் தட்டி வைக்க வேண்டும் என்று திட்டமிட்டனர். நான் பார்த்துக் கொள்கிறேன் என்றான் போடிநாயக்கனூரான். அவன் ஒரு ஸ்டண்ட் ஆர்டிஸ்ட்.

பதிபக்தி நாடகத்தில் சிஐடி ராதாவும் போடிநாயக்கனூரானும் மோதும் காட்சிஒன்று உண்டு. அந்தச் சமயத்தில் ராதாவைக் கீழே தள்ளி மொத்து மொத்தென்று மொத்திவிடலாம் என்பது அவனுடைய திட்டம். ராதாவுக்கு அது எப்படியோ தெரிய வந்தது. சிஐடி வேடத்துக்கு டம்மி துப்பாக்கி உண்டு. அதில் பால் பேரிங் எஃகு ரவைகளைப் போட்டார். நாடகம் ஆரம்பமானது. அந்தக் காட்சியும் வந்தது.

ராதாவைவிட பலசாலியான போடிநாயக்கனூரான் ராதாவைப் பலமாகப் பிடித்துக் கீழே தள்ளினான். அவர் மேலேறி உட்கார்ந்து முகத்தில் குத்த எத்தனித்தான். ராதா சடாரென தன் துப்பாக்கியை உருவி வானத்தைப் பார்த்துச் சுட வேண்டும். ஆனால் போடிநாயக்கனூரானைக் குறி பார்த்தார். டுமீல்.

விலாவில் குண்டு பாய சுருண்டு விழுந்தான் அவன். ராதாவுக்கு அதிர்ச்சியாகத்தான் இருந்தது. மக்கள் மேடையேறி விட்டார்கள். ஏதோ தெரியாமல் நடந்துவிட்டதாக அவர்களே பேசிக் கொண் டார்கள். அங்கிருந்த ரத்தின சிங் என்பவர், போடிநாயக்க னூரானுக்கு முதலுதவி செய்து, குண்டுகளை வெளியே எடுத்து கட்டுப் போட்டு விட்டார். விபத்து என்று நம்பியதால் போலீஸிடம் யாரும் புகார் சொல்லவில்லை.

ஆனால் நாடக கம்பெனிக்குள் புகைய ஆரம்பித்தது. 'ராதா இருந்தால் நாங்கள் இங்கு இருக்க மாட்டோம்' என்று ஒரு சாரார் போர்க்கொடி பிடிக்க ஆரம்பித்தனர். பிரச்னை வலுவாகிக் கொண்டே போனது. பல வேலைகள் தெரிந்த ராதாவை விட்டு விட முடியுமா என்ன? ராமசுப்பு, மற்றவர்களிடம் சமாதானம் பேசினார். நீண்ட இழுபறிக்குப் பின் பிரச்னை கொஞ்சம் அடங்கியது.

•

ஈரோட்டுக்கு நாடகம் போடச் சென்றார்கள். அங்கு எல்லோரும் ஒருவரைப் பற்றி மட்டுமே பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த ஒருவர் நடத்தி வந்த 'குடியரசு' என்ற பத்திரிகையை ஒரு சாரார், நடுத்தெருவில் போட்டு எரித்து கோஷங்கள் எழுப்பினர். ஆனால் இன்னொரு புறம், சிலர் அந்தப் பத்திரிகையை பச்சை நிற அட்டை போட்டு மறைத்து வைத்து படித்துக் கொண்டிருந்தனர்.

ராதாவால் ஆர்வத்தை அடக்கிக் கொள்ளமுடியவில்லை. அப்படி என்னதான் இருக்கும் அந்தப் பத்திரிகையில்? இவ்வளவு கலகங்கள் நடக்கிறதே? தன் நண்பர் பொன்னையா என்பவரிடம் கேட்டார்.

'நீ அந்தப் பேரைச் சொல்லாதே. ராவணன் பத்திரிகைன்னு சொல்லு.'

'ராவணனா?'

'ஆமா. அவரு ராவணன்தான். இன்னிக்கு சாயங்காலம் நான் அவரை பார்க்கப்போறேன். நீ வர்றியா?'

'கண்டிப்பா. வா இப்பவே போகலாம்' என்று பொன்னையாவை நச்சரிக்க ஆரம்பித்தார் ராதா. ராவணன் என்றால் பத்து தலை, இருபது கைகள், அசுர பலத்தோடு ஒருவர் இருப்பார் என்று

ராதாவின் மனத்தில் ஒரு பிம்பம் உட்கார்ந்துகொண்டது. எனவே அவரை உடனே பார்க்கவேண்டும் என்று பொன்னையாவைப் படுத்தி எடுத்தார். ஒருவழியாகப் பொன்னையா, மதியத்துக்கு மேல் ராவணனின் வீட்டுக்கு ராதாவை அழைத்துச் சென்றார்.

உள்ளே பத்துப் பதினைந்து பெண்கள் உட்கார்ந்திருந்தார்கள்.

'யார் இவர்கள்?' என்று பொன்னையாவிடம் கேட்டார்.

'அவர்கள் எல்லாம் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். இளம் விதவைகள். மறுமணம் செஞ்சுக்க வந்திருக்கிறார்கள்.'

'மணமகன்கள் யாரையும் காணோமே?'

'தாங்களாகவே தேடி வருவார்கள் அல்லது பெரியாரும் தேடி வைப்பதுண்டு.'

'பெரியாரா?'

'ஆமாம். அதான் சொன்னேனே, ராவணன் என்று. அவர் பெயர் ஈ.வே.ராமசாமி. சுயமரியாதை இயக்கத்தின் தலைவர்.'

பெரியார் வெளியே வந்தார். அவர்களைப் பார்த்து 'வாங்கய்யா' என்று சொல்லிவிட்டு, மற்றவர்களிடம் பேசச் சென்றுவிட்டார். இவரா ராவணன்? பத்து தலை, இருபது கைகள் எதுவுமே இல்லையே. தாடியெல்லாம் வைத்துக்கொண்டு ஏதோ சாமியார் மாதிரியல்லவா இருக்கிறார். ராதாவுக்குச் சப்பென்று ஆகிவிட்டது.

பின் கொஞ்சம் கொஞ்சமாக பொன்னையா சொல்லக் கேட்டு, பெரியாரின் கொள்கைகள், இயக்கம் பற்றி புரிந்துகொள்ள ஆரம்பித்தார் ராதா. அவரது மனத்தில் பெரியார் நாற்காலியிட்டு அமர்ந்தது அந்தச் சமயத்தில்தான்.

●

ஒருநாள். நான்கு நண்பர்களோடு சேர்ந்து சினிமாவுக்குப் போனார். இரவு திரும்புகையில் ஒரு ஜட்கா வண்டிக்காரனிடம் வாடகை பேசினார் ராதா. அந்தச் சமயத்திலேயே வண்டியில் நான்கு நண்பர்களும் ஏறி அமர்ந்து கொண்டார்கள்.

'அவ்வளவுதான் ஏத்த முடியும்' என்று கறாராகச் சொல்லி விட்டான் வண்டிக்காரன்.

‘அட என்னப்பா நீ, என் ஒருத்தனுக்காகத் தனியாவா வண்டி பிடிக்க முடியும்’ என்று கேட்டார் ராதா.

‘அடப்போய்யா…’ என்று சொல்லிய வண்டிக்காரன் அதனைக் கிளப்பினான். ராதாவுக்கு ஆத்திரம். வண்டிக்காரனை அலேக் காகத் தூக்கி கீழே போட்டுவிட்டு, தான் அந்த இடத்தில் உட்கார்ந்து வண்டி ஓட்ட ஆரம்பித்தார். வண்டிக்காரன் விடாமல் பின்னாலேயே துரத்திக்கொண்டு வந்தான்.

‘அட பின்னால ஏறிக்கோப்பா, நான் வண்டி ஓட்டறேன்’ என்றார் ராதா. ஆனால் பொறுமையிழந்த வண்டிக்காரன், தன் இடுப்பில் வைத்திருந்த கத்தியை எடுத்து ராதாவைக் குத்த வந்தான். சட்டென சுதாரித்துக்கொண்ட ராதா, தன் கையிலிருந்த டார்ச் லைட்டால் கத்தியைத் தட்டி விட்டார். வண்டியிலிருந்து குதித்து, அவனோடு கட்டிப் புரண்டு குஸ்தி போட ஆரம்பித்தார். அடி தாங்க முடியாத அவன் ஓடிப்போனான். ராதாவின் நண்பர்களும் எப்போதோ ஓடிப் போயிருந்தார்கள்.

சில நிமிடங்களிலேயே அந்த வண்டிக்காரன், வேறு சிலரை அழைத்துக்கொண்டு வந்தான். அனைவரது கையிலும் கத்தி, கம்பு வகையறாக்கள். அனைவருமே இஸ்லாமியர்கள். அய்யோ இது மதக்கலவரமாகிவிடும் போலிருக்கிறதே என்று எண்ணிய ராதா, மேற்கொண்டு வம்பு வளர்க்காமல், சாதுர்யமாகத் தப்பி ஓடினார்.

நடந்த சம்பவத்தை எல்லாம் ராதா சொல்லச் சொல்ல நாகலிங்கச் செட்டியாருக்கும் ராம சுப்புவுக்கும் குலை நடுங்கிப் போயிற்று. இரவோடு இரவாக அவர்கள் ராதாவை சென்னைக்கு அனுப்பி வைத்தனர்.

•

யதார்த்தம் பொன்னுசாமிப் பிள்ளை, அப்போதுதான் ஒரு நாடக கம்பெனி ஆரம்பித்திருந்தார். சென்னைக்கு வந்த ராதாவை அவர் பிடித்துக்கொண்டார். கம்பெனியின் மேலாளராக ராதாவுக்குப் பொறுப்பு. வலிய ஏதாவது வம்பு வந்தால் விட மாட்டாரே ராதா. அப்படித்தான் அங்கும் நடந்து கொண்டார்.

‘கால்கட்டு போட்டா அடங்கிருவான் பையன்’ என்று நினைத்து வஸ்தாது நாயுடு என்பவரிடம் ராதாவுக்குப் பெண் பார்க்கச் சொன்னார் பொன்னுசாமி.

'பையன் என்ன பண்ணுறான்.'

'நாடக கம்பெனியில இருக்கான்.'

'ஓ கூத்தாடியா? அவனுக்கெல்லாம் பெண் தரமுடியாது.'

இதே பதிலை பலரிடம் கேட்ட வஸ்தாது, பையன் மெக்கானிக் என்று சொல்லி பெண் தேட ஆரம்பித்தார்.

'தம்பி, விழுப்புரத்துல ஒரு பொண்ணு. பேரு சரஸ்வதி. அப்பா ரயில்வேல டிராஃப்ட்ஸ்மேன். இன்னிக்கு உன்னைப் பார்க்க வர்றதா சொல்லிருக்காரு. அரிதாரத்தைப் பூசிட்டு நிக்காத. கையில ஸ்பேனரோட இரு' வஸ்தாது சொல்லி வைத்தார். ராதாவுக்கும் சரஸ்வதிக்கும் திருமணம் நடந்தது. அவர்களுக்குப் பிறந்த மகன் வாசு. சில வருடங்கள் கழித்து சரஸ்வதியின் தங்கை தனத்தையும் ராதா திருமணம் செய்துகொண்டார்.

•

பிரச்னைகள் இல்லாத நாடக கம்பெனி ஏது? ஒன்று நடிகர்களுக்கிடையே பிரச்னை இருக்கும். இல்லையேல், நடத்தும் நாடகங்களால் பிரச்னை இருக்கும். இந்து முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்த 'ராமதாஸ்' என்றொரு நாடகத்தை நடத்தினார்கள். அதில் இறுதிக் காட்சியில் ராமதாஸை, நவாப் இறுக அணைப்பது போன்றதொரு காட்சி. இஸ்லாமியர்கள் அதைக் கண்டித்து பிரச்னை செய்தார்கள். எல்லாவற்றையும் ராதாதான் சமாளித்தார்.

அதேபோல, ஏதாவது ஒரு காட்சி சிறப்பாக இருந்துவிட்டால் போதும். 'ஒன்ஸ்மோர்' என்று ரசிகர்கள் குரலெழுப்புவார்கள். ஒருநாள் ரசிகர்களின் ஒன்ஸ்மோர் தொந்தரவு அளவுக்கு அதிகமாகவே இருந்தது. பொறுமை இழந்த ராதா மேடை மேலிருந்தபடி கத்த ஆரம்பித்தார்.

'ஏய்... நீங்க நாடகத்தை நடத்தி முடிச்ச பிறகு ஒன்ஸ்மோர் கேப்பீங்க. நாங்க நடத்தணுமா என்ன?'

ராதாவின் இந்தப் பேச்சு, பொன்னுசாமிப் பிள்ளைக்குப் பிடிக்கவில்லை. ராதாவைக் கண்டித்தார். அதற்குப் பின்பும் ராதா அங்கிருப்பாரா என்ன?





# சுட்ட பாலைக் குடித்த பூனை

4

சென்னைக்கு வந்த ராதா, டி.ஆர். மகாலிங்கம், ரகோத்தமன் போன்ற சில நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு தனி யாக நாடகம் நடத்த ஆரம்பித்தார். அந்த நேரத்தில் 'ராஜசேகரன்' என்றொரு சண்டைப் படம் எடுக்கவிருந்தார்கள். அந்த நேரத்தில் நாடக நடிகர்களில் சண்டைக் காட்சிகளில் தூள் பரத்திக் கொண்டிருந்தவர் ராதாதான். எனவே அவர், படத்தில் ஒப்பந்தம் செய்யப் பட்டார்.

படத்தின் டைரக்டர் ஆர். பிரகாஷ். வெளிநாடுகளுக்குச் சென்று சினிமாப் பற்றி கொஞ்சம் தெரிந்துகொண்டு வந்தவர். அவரது முதல் படம் இது. ஹீரோ ஈ.ஆர். சகாதேவன். ஹீரோயின் அது பற்றி ராதாவே சொன்ன கமெண்ட்.

'அந்த நாளிலே ஹீரோயின் அவ்வளவு முக்கியமில்லே. தேவையானபோது ரெட் லைட் ஏரியாவுக்குப் போய் யாரா வது ஒருத்தியைப் பிடிச்சிக்கிட்டு வந்து ஹூனுருவாங்க.'

பூந்தமல்லி நெடுஞ்சாலையில் இருந்த நாராயணன் ஸ்டூடியோவில் படப்பிடிப்பு நடந்தது. டைரக்டருக்கு மதுப் பழக்கம் கொஞ்சம் அதிகம். ராதா உள்பட, எல்லோரும் காலை ஏழரை மணிக்கே ஸ்டூடியோவில் வந்து காத்திருக்க, அவர் புரசைவாக்கம் ரெக்ஸ் ஹோட்டலுக்குச் சென்று நன்றாக மது அருந்திவிட்டு பதினோரு மணிக்குச் சாவகாசமாகத்தான் வருவார். காட்சிகள் மிக மெதுவாகத்தான் எடுக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

அன்று சிறையில் ஒரு காட்சி. ஹீரோ சகாதேவனுக்கு, எப்படி எங்கு நிற்கவேண்டும், என்ன ஆக்ஷன் செய்யவேண்டும் என்றெல்லாம் டைரக்டர் சொல்லிக் கொடுக்கவில்லை. ஷாட் நேரத்தில் சகாதேவன் திருதிருவென விழித்துக்கொண்டு நின்றார். அருகிலிருந்த ராதாவால் அதற்கு மேல் பொறுமையாக இருக்க முடியவில்லை.

'டேய் மடையா, ஜெயில் காட்சின்னா, அங்கே ஒரு தூண் இருக்கும். அதிலே சாஞ்சுக்கோ. இப்படி அடைபட்டுக் கொண்டோமேன்னு வருத்தப்படு. அவ்வளவுதான். இதுக்குப் போய் பெரிய இது பண்றியே. எத்தனை தடவை ஐயா சொல்லித் தருவாரு?'

டைரக்டருக்குக் கோபம் வந்துவிட்டது. தன் வாயிலிருந்த சிகரெட்டைக் கடித்தபடி, 'ஐ ஆம் டைரக்டர். ஆர் யூ டைரக்டர்?' என்றார்.

'ஆமா. நானும் டைரக்டர்தான். எனக்கும் டைரக்ஷன் தெரியும்' என்று கோபமாகச் சொன்னார் ராதா. உஷாரான டைரக்டர், ராதாவிடம் மெதுவாக, 'அப்படியெல்லாம் பேசக்கூடாது தம்பி. நீ நாடக நடிகன்' என்றார். அவரைச் சமாதானப்படுத்தும் விதமாக ரெக்ஸ் ஹோட்டலுக்கு அழைத்துச் சென்றார். மது அருந்தச் சொன்னார். பழக்கம் இருந்தாலும், அப்போது வேண்டாம் என்று சொல்லிவிட்டார் ராதா.

'நாளைக்கு பெரிய ஷாட்ஸ் இருக்கு. அதிலே நீ நடிக்க வேண்டும்' என்று சொன்னார் டைரக்டர். ராதாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

●

பூந்தமல்லி பார்வையற்றோர் பள்ளி. கேமரா எல்லாம் தயாராக இருந்தது. பிரகாஷ் வழக்கம்போல தாமதமாக வந்தார். வந்தவுடன் ராதாவிடம் பேசினார்.

'கீழே குதிரை இருக்கும். மூணாவது மாடியிலே இருந்து குதிரை மேல சரியா குதிக்கணும். உன்னால முடியுமா?'

இப்படிக் கேட்டு உசுப்பேற்றினால் ராதாவால் சும்மா இருக்க முடியுமா என்ன? ரிஸ்க் எடுப்பது அவருக்கு மிகவும் பிடித்தமான பொழுதுபோக்காயிற்றே. சந்தோஷமாகத் தலையாட்டிவிட்டு, மூன்றாவது மாடி நோக்கி ஓடினார். கீழே நின்ற குதிரையும் சாதாரணமானதல்ல. ஒரு முரட்டுக் குதிரை. சொல்லி ஸ்பெஷலாக வரவழைத்திருந்தார் பிரகாஷ்.

ஷாட் ஆரம்பமானது. எந்தவித பயமுமின்றிக் குதித்த ராதா, குதிரை மேல் சரியாக வந்தமர்ந்தார். அதே வேகத்தில் குதிரையைக் கிளப்பி சவாரியும் செய்தார். கரணம் தப்புமென்று எதிர்பார்த்த பிரகாஷுக்கு உள்ளுக்குள் அது அவமானமாகப் பட்டது.

'தம்பி சரியா வரலப்பா. இன்னொரு தடவை குதிக்கணும்' என்றார்.

'இல்லியே சரியா வந்திருக்கே' என்றார் கேமராமேன்.

'அதான் நான் சொல்லுறேன்ல. ஒரு ப்ளைண்ட் குறுக்க வந்துட்டான். டிஸ்டர்ப் ஆயிருச்சு. ரீடேக்' என்றார், கேமராமேனின் தோளை அழுத்தியபடியே.

அப்போதுதான் ராதாவுக்கு, டைரக்டர் தன்னைப் பழி வாங்க நினைக்கிறார் என்பது புரிந்தது. வேறு வழியில்லை. குதித்துத்தான் ஆகவேண்டும். டூப் எல்லாம் இல்லாத காலம். 'சரி, இன்னொரு முறையும் சரியாகக் குதித்து அவன் மூக்கை உடைக்கலாம்' என்று நினைத்தபடியே மூன்றாவது மாடிக்குப் போனார் ராதா. குதித்தார். குதிரை விலகிவிட்டது. முட்டி கழண்டு போனது. ராதாவால் எழுந்து உட்காரக்கூட முடிய வில்லை.

கண்விழித்தபோது ராதா, ஜெனரல் ஆஸ்பத்திரி படுக்கையில் இருந்தார். எலும்பு முறிவு என்று சொன்ன டாக்டர், 'அதற்குக்

கட்டுப்போடும் வசதி இங்கில்லை, புத்தூருக்குப் போங்கள்' என்று சொல்லிவிட்டார். ராதா புத்தூருக்கு அழைத்துச் செல்லப் பட்டார்.

'இந்தச் சம்பவத்துக்குப் பிறகு நான் வெறி கொண்டவனைப் போல் மாறிவிட்டேன். டைரக்டர் சொல்லுவதையோ, வசன கர்த்தா சொல்லுவதையோ கேட்பதில்லை. சுட்ட பாலைக் குடித்த பூனை எதைக் கண்டாலும் குடிக்கப் பயப்படுமே, அப்படிப் பயந்தேன். இதுதான் என் முன்னேற்றத்துக்கு முக்கிய மான காரணம். அதாவது யார் பேச்சையும் கேட்பதில்லை. யார் யோசனையைய்யும் ஏற்றுக் கொள்வதில்லை.'

ராஜசேகரன் படப்பிடிப்பு ஆறுமாதங்கள் நின்று போனது. மீதி காட்சிகளை ராதாவை உட்கார வைத்தே எடுத்து முடித்தார்கள். 1937-ல் படம் வெளியானது. ஆனால் சரியாக ஓடவில்லை.

கால் குணமான பின்பு ராதாவுக்குத் தோன்றிய ஆசை, சொந்தப் படம் எடுக்க வேண்டும் என்பதுதான். தொழில் தெரிந்த நண்பர்கள் சிலரைச் சேர்த்துக் கொண்டார். ஃபைனான்ஸுக்கு இரண்டு பேரை பிடித்துக் கொண்டார். படத்துக்கு வைத்த பெயர் 'பம்பாய் மெயில்'. அப்போதுதான் சேலத்தில் மாடர்ன் தியேட்டர்ஸ் கட்டி முடித்திருந்தார்கள். அங்கு வைத்து படப் பிடிப்பு மிக மிக மெதுவாக வளர்ந்து முடிந்தது. ஆனால் ரிலீஸ் ஆனபின் வேகமாக பெட்டிக்குள் திரும்பிவிட்டது. ராதாவுக்குச் சொந்தமாகப் படம் எடுக்கும் ஆசை விட்டுப் போனது.

மாடர்ன் தியேட்டர்ஸ் ஆர்ட்டிஸ்டாக மாறிப் போனார். சந்தனத் தேவன், சத்தியவாணி, போன்ற படங்களில் நடித்தார். அவர் மாடர்ன் தியேட்டர்ஸில் அடுத்து நடித்த படமான சோகாமேளர், 1942-ல் ரிலீஸ் ஆனது.

மாடர்ன் தியேட்டர்ஸை ஒரு ஜெயில் போலத்தான் நடிகர்கள் நினைப்பார்கள். காரணம் சேலம் மலையடிவாரத்தில் அமைந்த அதற்குள் நுழைந்துவிட்டால் வெளியே வர முடியாது. கம்பெனி ஆர்ட்டிஸ்ட் எல்லாம் நினைத்த நேரத்தில் வெளிய வர முடியாது. அதன் அதிபர் டி.ஆர்.சுந்தரம், சரியாக ஒத்துழைக்காத நடிகர்களை கட்டி வைத்து அடிப்பார் என்றுகூட தகவல் உண்டு.

பி.எஸ். ஞானம் என்ற நடிகை அப்போது மாடர்ன் தியேட்டர்ஸ் படங்களில் நடித்துக்கொண்டிருந்தார். அவரோடு பேச

எல்லோரும் போட்டி போடுவார்கள். ஆனால் காவலை மீறி எதுவும் செய்ய முடியாது. ராதா இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டே இருந்தார்.

‘ஒரு பொண்ணு, அவகிட்ட பேச இத்தனைக் கட்டுப்பாடா? இந்தப் பசங்களும் ஏன் இப்படி மயக்கமா அலையறாங்களோ? நான் இவளை இங்கிருந்து வெளியே கடத்திட்டுப் போகப் போறேன். இவளை நாடகத்துல நடிக்க வைச்சா நல்லா யிருக்குமே. செஞ்சு காட்டுறேன்’ தனக்குள்ளேயே சவால் விட்டுக் கொண்டார்.

ஞானத்திடம் இயன்றவரை கண்களாலும், சமயம் கிடைக்கும் போது சைகைகளாலும் பேசினார். அவரது சம்மதம் கிடைத்தது. படு கச்சிதமாகத் திட்டமிட்டு, ஒரு நள்ளிரவில், எல்லாக் கட்டுக் காவல்களையும் மீறி ஞானத்துடன் மாடர்ன் தியேட்டர்ஸில் இருந்து தப்பித்து பொள்ளாச்சிக்கு வந்து சேர்ந்தார் ராதா.



5

# பெரியார் என்ற கோட்டைக்காரர்

அடுத்து என்ன செய்யலாம் என்று ராதாவுக்குத் தெரியவில்லை. அந்தச் சமயத்தில் பொள்ளாச்சிக்கு யதார்த்தம் பொன்னுசாமிப் பிள்ளை வந்தார். பழைய கோபத்தையெல்லாம் மறந்திருந்த இருவரும் சிரித்து பேசிக் கொண்டனர். ராதாவிடம் உதவி கேட்டார் பொன்னுசாமி.

'அதுல பாரு ராதா, பரமக்குடியில நான் ஒரு ரவுடி காண்டிராக்டர்கிட்ட சிக்கிக்கிட்டேன். அவன் பேசுன பணத்தையும் ஒழுங்காத் தரலை. அடுத்த ஊருக்குப் போய் நாடகம் போடவும் விடமாட்டேங்கிறான். நீதான் காப்பாத்தணும்.'

சவால். வாங்க போலாம் என்று கிளம்பினார் ராதா. சேலத்துக்கு வந்தார்கள். அங்கு ஓரியண்டல் தியேட்டர்ஸில் நாடகம் போட அனுமதி வாங்கினார்கள். அங்கு ஐநூறு ரூபாய் கடனாக வாங்கிக் கொண்டு, திருச்சிக்குச் சென்றார்கள். அங்கு ஒரு நண்பரிடம் இருநூறு ரூபாய் வாங்கினார்கள்.

‘நான் அங்க வந்தா சரிப்படாது. நீ எல்லாத்தையும் அழைச்சுட்டு வந்துரு. இங்கயிருந்து ஒண்ணா சேலத்துக்குப் போயிடலாம்’ என்றார் பொன்னுசாமி. ராதா மட்டும் பரமக்குடிக்குக் கிளம்பினார்.

காண்டிராக்டரைச் சந்திக்கச் சென்றார். ராதா வந்ததும் நாடகக் குழுவினருக்கெல்லாம் நிம்மதி வந்தது. குறிப்பாக அப்போது அந்தக் குழுவிலிருந்த (சிவாஜி) கணேசனுக்கு ஏக சந்தோஷம். ஏனென்றால் ராதாவின் துணிச்சல் பற்றி எல்லோரும் அறிந்திருந்தார்கள். படங்களில் நடித்திருந்ததால் அவருக்கு ஒரு நட்சத்திர அந்தஸ்தும் கிடைத்திருந்தது. காண்டிராக்டர் எழுந்து நின்று வரவேற்றார்.

‘நீங்களும் நாடகக் குழுவில் சேர்ந்து நடிக்கணும்னு பிரியப் படுறேன்.’

‘அதுக்குத்தான் வந்திருக்கிறேன். ஆனா நீங்க பரமக்குடிக்கு வந்து ரொம்ப நாளாச்சு. பக்கத்துல நாமக்கல்லுக்குப் போகலாமா?’

‘நல்ல யோசனைதான். அப்படியே செஞ்சுடலாம்’ காண்டி ராக்டர் முகமெல்லாம் புன்னகை. செட் சாமான்களையெல்லாம் பேக் செய்த ராதா, அவற்றை ரகசியமாகத் திருச்சிக்கு அனுப் பினார். எல்லோரும் ரயில் நிலையத்துக்கு வந்தார்கள். காண்டி ராக்டருக்கு மட்டும் நாமக்கல்லுக்கும், மற்றவர்களுக்கெல்லாம் திருச்சிக்கும் டிக்கெட் எடுத்தார் ராதா.

ரயில் கிளம்பியது. நாமக்கல் வந்ததும் வேக வேகமாக காண்டி ராக்டரிடம், ‘எங்க குழு நண்பர் ஒருத்தர் வீட்டு விசேஷம். திருச்சியில. போய்ட்டு இரண்டு நாள்ல திரும்ப வந்துடுறோம். நீங்க போய் ஆக வேண்டிய ஏற்பாடையெல்லாம் செய்யுங்க’ என்று சொல்லி ரயிலை விட்டு இறங்கி டாட்டா காண்பித்தார். அதனை நம்பிய காண்டிராக்டரும் பிளாட்பாரத்தில் நின்றபடி தலையாட்டினார்.

ரயில் கிளம்பியதும் நாடகக் குழுவினர் மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தனர். சேலத்தில் ஓரியண்டல் தியேட்டர்ஸில் ‘இழந்த காதல்’ நாடக போஸ்டர்கள் மின்ன ஆரம்பித்தன. நாடகத்தில் கணேசனுக்கு சரோஜா என்ற தாசி வேடம். ராதாவுக்கு ஜெகதீஷ் என்ற வில்லன் வேடம். நாடகம் ஓஹோவென பாராட்டப் பட்டது. நாளுக்கு நாள் கூட்டம் அதிகரித்துக்கொண்டே



போனது. 'எம்.ஆர். ராதாவின் சவுக்கடி ஸீனைக் காணத் தவறாதீர்கள்' என்று விளம்பரப்படுத்தப்பட்டது.

பொதுவாக நடிகர்கள் மேடையிலே நின்றபடி ரசிகர்களைப் பார்த்துத்தான் பேச வேண்டும். முதுகைக் காட்டியபடி ஒரு வசனம்கூட பேசக்கூடாதென்பதே நாடக இலக்கணம். ஆனால் 'இழந்த காதல்' இறுதிக் காட்சியில் ராதா, கதாநாயகியைப் பிடித்து நாற்காலியில் தள்ளுவார். தன் இரண்டு கைகளையும் நாற்காலியில் ஊன்றியபடி கதாநாயகியிடம் பேச ஆரம்பிப்பார். பதினைந்து நிமிட வசனம். பதினைந்து நிமிடங்களும் ரசிகர்கள் அவரது முதுகைத்தான் பார்க்க முடியும். முகபாவனைகளை, கைகளின் அசைவினைக் காண முடியாது. இருந்தாலும் ரசிகர்கள் அதனை ஆரவாரமாக ரசிப்பார்கள். சுருண்டு கிடக்கும் அவரது தலைமுடி நடித்துக் கொண்டிருக்கும்.

திரைப்படங்களைப் போல சேலம் ஓரியண்டல் தியேட்டர்ஸில் 'இழந்த காதல்' நாடகம் நூறாவது நாளைக் கொண்டாடியது. விஷயம் கேள்விப்பட்ட பல்வேறு முக்கியப் பிரமுகர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் எல்லோரும் சேலத்துக்கு வந்து நாடகத்தைப் பார்த்து ரசித்துவிட்டுப் போனார்கள்.

அப்படி வந்து சென்றவர்களுள் முக்கியமானவர் அண்ணாதுரை. குடியரசு பத்திரிகையின் துணையாசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த அவர், அடிக்கடி ஈரோட்டிலிருந்து சேலத்துக்கு வந்து நாடகத்தைப் பார்த்துவிட்டு கடைசி பஸ்ஸில் திரும்பிக் கொண்டிருந்தார். பத்திரிகையிலும் பாராட்டி விமரிசனம் எழுதினார்.

●

என்.எஸ்.கிருஷ்ணன் அந்தச் சமயத்தில் படவுலகில் பிரபலமாகி இருந்தார். 'இழந்த காதல்' நாடகத்தைத் திரைப்படமாக்கவும் திட்டமிட்டார். ஜெகதீஷ் வேடம் தனக்குத்தான் என்று நம்பிக் கொண்டிருந்தார் ராதா. ஆனால் என்.எஸ்.கேயின் மனத்தில் அந்த நினைப்பில்லை. ராதாவுக்கும் அது தெரிய வந்தது. உள்ளுக் குள்ளேயே குமுற ஆரம்பித்தார்.

பொன்னுசாமி குழுவினர் சேலத்திலிருந்து கிளம்பி பொள்ளாச்சிக்குச் சென்றார்கள். ஜெகதீஷ் வேடத்தில் வேறு யாராவது நடித்தால் மக்கள் ஏற்றுக் கொள்வார்களா என்று

சோதனை செய்து பார்த்தார்கள். எல்லாம் என்.எஸ்.கேயின் ஏற்பாடு. குழுவிலிருந்த நடிகர் பாலையா சில நாள்கள் அந்த வேடத்தை ஏற்று நடித்தார். அவர் நடிப்புக்கு என்ன குறை? ஆனால் மக்கள் அந்த வேடத்தில் அவரை ரசிக்கவில்லை. 'ராதாவைக் கூப்பிடுங்கள், ராதாவைக் கூப்பிடுங்கள்' என்று கூச்சல் போட்டார்கள்.

எதற்கும் எதிர்ப்பு காட்டாமல், நடப்பதையெல்லாம் அமைதி யாகக் கவனித்துக் கொண்டிருந்தார் ராதா. கோயமுத்தூருக்குச் சென்றார்கள். அங்கு ஜெகதீஷ் வேடத்தில் பஷீர் என்பவர் நடித்தார். ரசிகர்கள் கொந்தளித்தார்கள். அரங்கிலிருந்த நாற்காலி களையெல்லாம் போட்டு உடைக்க ஆரம்பித்துவிட்டார்கள். மேடைக்குக் கற்கள் பறந்து வர ஆரம்பித்தன.

'ராதாவைக் கூப்பிடு. ஒரு ஸீன்லயாவது அவரு தலைகாட்டுனாத்தான் விடுவோம்' என்று பலத்த ஆரவாரம் செய்தார்கள். நிலைமையைச் சமாளிக்கச் சொல்லி, பொன்னுசாமி வந்து ராதாவிடம் கெஞ்சினார். ராதா மேடையில் தோன்றினார். ஒரே ஒரு காட்சியில் மட்டும் நடித்தார். கலாட்டாவை நிறுத்திய ரசிகர்கள் கலகலப்புடன் கலைந்து சென்றார்கள்.

இத்தனைச் சம்பவங்களுக்குப் பிறகு, எப்படியும் என்.எஸ்.கே தன்னை அழைத்து வாய்ப்பு கொடுப்பார் என்று நம்பினார் ராதா. ஆனால் அவரோ, கே.பி. காமாட்சியைப் போட்டு படப்பிடிப்பை ஆரம்பித்துவிட்டதாக ராதாவுக்குத் தகவல் போனது. பொன்னு சாமி கம்பெனியிலும் இருக்கப் பிடிக்கவில்லை. வெளியேறிய ராதா, டி.கே. சம்பங்கி என்பவரின் கம்பெனியில் சேர்ந்தார். கரூரில் 'இழந்த காதல்' ஜெகதீஷாக வலம்வர ஆரம்பித்தார் ராதா. அவ்வப்போது குறி பார்த்துச் சுட பயிற்சியும் எடுத்துக் கொண்டிருந்தார். என்.எஸ்.கேயைச் சுட்டுவிடலாம் என்று திட்டம் போட்டிருந்தார் ராதா.

விஷயம் எப்படியோ பொன்னுசாமிக்குத் தெரிந்து போயிற்று. அவர் அவசரமாக ஓடிச் சென்று என்.எஸ்.கேயிடம் சொல்லி விட்டார். என்.எஸ்.கே. ஒரு நிமிடம்கூட தாமதிக்கவில்லை. நேரடியாகக் கரூருக்கு வந்தார். ராதா முன் சென்று நின்றார்.

'ஏன்டா, உனக்கு அறிவிருக்கா?'

என்.எஸ்.கேயைப் பார்த்ததும் தன்னையறியாமல் எழுந்து நின்றார் ராதா. ஆனால் பதில் எதுவும் பேசவில்லை.

'ஏன்டா, உன்னைத்தான் கேக்குறேன். புத்தியிருக்கா உனக்கு?'

ராதா பேசவில்லை.

'பணம், பங்களா, காரு, வயசு, அது, இது எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். நடிப்புன்னு வரப்போ, அதை உனக்குச் சொல்லிக் கொடுக்குற யோக்கியதை, தகுதி எனக்கு இருக்காடா? கே.பி. காமாட்சியைப் படத்துல போட்டா, இப்படி நடிக்காதே, அப்படி நடின்னு என்னாலே சொல்ல முடியும். உன்கிட்ட அப்படிச் சொல்ல முடியுமா? சொன்னா மரியாதைக் குறைவாயிருக்காதா? அந்த அவமரியாதையை நீ ஒருவேளை பணத்துக்காக வேணும்னா பொறுத்துக்கலாம். என்னால முடியாதுடா, என்னால பொறுத்துக்கவே முடியாது. அதனாலதான் நான் உன்னை படத்துல போடல. இப்பவாச்சும் புரிஞ்சுதா?'

என்.எஸ்.கே உணர்வுவயப்பட்டு நின்றார்.

'சரி, நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிட்டேன். சாக ரெடி. துப்பாக்கியை எடு. என்னைச் சுடு. நண்பன் கையால சாகற பாக்கியம் யாருக்குக் கிடைக்கும்.'

'இனிமே சுடறதா இருந்தா நீங்கதான் என்னைச் சுடணும்' ராதாவின் குரல் உடைந்துபோயிருந்தது.

'நீ புத்திசாலிடா' என்.எஸ்.கே., ராதாவைக் கட்டித் தழுவினார். ராதா தன் வாழ்க்கையில் முதன்முறையாகப் பெருங்குரலெடுத்து அழுதது அப்போதுதான்.

•

நண்பர் ஒருவர் பணம் போட தனியாக நாடக கம்பெனி ஆரம்பித்தார் ராதா. முதலீடெல்லாம் நண்பருடையது. ஈரோட்டில் நாடகம் நடத்திக் கொண்டிருந்தார்கள். நஷ்டம். அதனால் ஏற்பட்ட மனஸ்தாபம். அந்த நண்பர் பிரிந்து போனார். அப்போது நாடகக் கம்பெனி ராதாவின் கையில்தான் இருந்தது. பக்கத்தில் கோபிச்செட்டிப்பாளையத்துக்குச் சென்று நாடகம் போடலாம் என்று திட்டமிட்டார் ராதா.

ஆனால் கொட்டகைக்காரர் விடவில்லை.

‘எனக்கு பாக்கி இருநூறு ரூபா இருக்கு. அதைக் கொடுத்துட்டு எங்க வேணும்னாலும் போ’ என்றார் அவர்.

‘அய்யா, நான் பக்கத்தூருல போய் நாடகம் போட்டு வசூலாகிறதை…’

’முதல்ல இருநூறு ரூபாயை எண்ணிக் கீழே வை. அப்புறம் மற்றதைப் பேசு.’

‘அய்யா நீங்களே…’

‘அது வேற கதை, இது வேற கதை. ஏய், பூட்டு கொண்டு வாப்பா’ கொட்டகைக்காரர் கட்டளையிட்டார். பூட்டு வந்தது. நாடக செட் சாமான்கள் இருந்த அறையைப் பூட்டினார்.

‘என்னிக்கு பணம் கொண்டு வந்து கொடுக்குறியோ, அன்னிக்கு உன் சாமான்களை எடுத்துட்டுப் போ’ - கறாராகச் சொல்லிவிட்டு நடந்தார் கொட்டகைக்காரர். அவர் பெரியார்.

•

குமாரபாளையம் சென்ற ராதா, நண்பர்களிடம் கடன் வாங்கி, ஏற்பாடுகள் செய்து அங்கு நாடகம் நடத்த ஆரம்பித்தார். மீண்டும் இழந்த காதல். ஜெகதீஷ் வேடம். அன்றைய செய்திகளுக்கேற்ப, வசனங்களை புதிது புதிதாகப் பேசி நடித்தார். வசூல் குவிய ஆரம்பித்தது.

ஒருநாள் மேக்-அப் ரூமில் இருந்த ராதாவிடம் மேனேஜர் வேகவேகமாக ஓடி வந்தார். அவருக்கு மூச்சு வாங்கியது.

‘பெரியார் வந்திருக்கார். கூடவே அண்ணாவும் ஈ.வி.கே. சம்பத்தும் வந்திருக்காங்க’

‘எதுக்கு?’

‘நாடகம் பார்க்கத்தான்.’

‘பார்த்துட்டுப் போகட்டும்.’

‘உட்கார வைக்க இடமில்லையே.’

‘அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்ற? இஷ்டமிருந்தா தரையில் உட்கார்ந்து பார்க்கட்டும். இல்லைன்னா போகட்டும்.’

‘இல்ல, அவங்க ரொம்பப் பெரியவங்க...’

‘என்னைவிடப் பெரியவங்களா வேற யாரையும் நான் நினைச்சுக் கூட பார்க்கறதில்லை.’

மேனேஜரால் அதற்குமேல் பேச முடியவில்லை. காசு கொடுத்து டிக்கெட் வாங்கிக்கொண்டு வந்த பெரியார், அண்ணா, சம்பத் மூவரும் தரையிலமர்ந்தே இழந்த காதலை ரசித்தனர். இடை வேளை நேரம். டக்கென மேடையேறினார் அண்ணா.

‘அழையா வீட்டில் நுழையா சம்பந்திகள்போல நாங்கள் வந்துள்ளோம். திராவிடர் கழக மாநாடுகள் நூறு நடத்தறது சரி, எம்.ஆர். ராதா நாடகம் ஒண்ணு நடத்தறது சரி’ என்று பாராட்டிப் பேசிவிட்டு அமர்ந்தார். ராதாவுக்கு மகிழ்ச்சி. நாடகத்தை முழுதாகப் பார்த்துவிட்டே அவர்கள் கிளம்பினார்கள்.

ராதாவின் குழுவினர் கோயமுத்தூர் சென்றார்கள். ஜி.டி. நாயுடு தலைமையில் ஒருநாள் நாடகம் நடத்தினார் ராதா. பின்பு அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, சர் சி.வி. ராமன் தலைமையிலும் ஒருமுறை நாடகம் நடத்தினார். பின்பு நாகப்பட்டினத்துக்கு வந்தார்.

அங்கே ஒரு புதிய நாடகத்தைத் தயாரித்தார். அதன் பெயர் விமலா அல்லது விதவையின் கண்ணீர். விதவைகள் பிரச்னையைக் கூறி மறுமணத்தை வலியுறுத்துவதாக அமைந்த கதை. சும்மா இருப்பார்களா பெரிசுகள்? அவனா, அவன் தாலியறுத்த வளுக்குக்கூட மேடையிலேயே தாலி கட்டி வைப்பானே என்று எதிர்ப்பு காட்ட ஆரம்பித்தார்கள். எப்படி நீ நாடகத்தை நடத்தறேன்னு நாங்களும் பார்க்கறோம் என்று மிரட்டினார்கள்.

நாடகத்துக்கான தேதி குறிப்பிடப்பட்டு போஸ்டர்கள் ஒட்டப் பட்டன.

‘விமலா அல்லது விதவையின் கண்ணீர்’ நமது சாஸ்திரத்துக்கும் சம்பிரதாயத்துக்கும் எதிரான நாடகம். அதை நடத்தினால் சமூக அமைதி குலையும். அதனைத் தடை செய்ய வேண்டும்’ என்று நாகப்பட்டினம் கோர்ட்டில் பெட்டிஷன் போட்டார்கள். ஜட்ஜ் கணேசய்யர், அந்தப் பெட்டிஷனைப் பார்வையிட்டார். அவருக்கும் சாஸ்திர, சம்பிரதாயங்களில் நம்பிக்கை உண்டு. ஆனால் நேர்மையானவர்.

‘நாடகத்தைப் பார்த்துவிட்டு நான் ஒரு முடிவுக்கு வருகிறேன்’ என்ற கணேசய்யர், அன்று மாலையே அரங்கில் வந்து உட்கார்ந்தார். விதவையின் கண்ணீர் ஆரம்பமானது. எந்தவிதப் பிரச்னையும் இன்றி முடிந்தது.

கணேசய்யர் மேடையேறினார். ராதாவின் கையைப் பிடித்து பலமாகக் குலுக்கினார்.

‘இந்த மாதிரி நாடகங்கள் இங்கு நடந்தால் மட்டும் போதாது. இந்தியா முழுவதும் நடைபெறவேண்டும். இப்படி ஒரு நாடகத்தைத் துணிந்து தயாரித்து மேடையேற்றிய நண்பர் ராதாவை மனமார வாழ்த்துகிறேன். அவருடைய இந்த நாடகம் எல்லா வகையிலும் வெற்றிபெற என் ஆசிகள்.’

ஒவ்வோர் ஊரிலும் இந்த நாடகம் வெற்றிபெற ஆரம்பித்தது. திராவிட கழகத்தினரின் பரிபூரண ஆதரவு ராதாவுக்குக் கிடைத்தது. பெரியாருக்கும் ராதாவின் மேல் தனி மதிப்பு தோன்றியது. அந்தச் சமயத்தில் பாரதிதாசன் ஓர் அறிக்கை வெளியிட்டார். ‘ராதா எங்கள் கழக நடிகர். அவருடைய நாடகம் எங்கள் கழக நாடகம்.’

ராதா கழகக் கூட்டங்களில் கலந்துகொள்ள ஆரம்பித்தார். அவரது பேச்சைக் கேட்கவும் மக்கள் கூட ஆரம்பித்தார்கள்.

கழக மாநாடுகளில் ராதாவின் நாடகங்களைப் போட்டால் கூட்டம் சேரும் என்று பெரியாரிடம் ஆலோசனை சொன்னார் அண்ணா. அப்போது திருச்சியில் மாநாடு நடைபெறவிருந்தது. பெரியார் எதற்கெடுத்தாலும் முதலில் கணக்குப் பார்ப்ப வராயிற்றே.

‘ஒரு நாடகத்துக்கு எவ்வளவு கேட்பாங்க?’ என்றார். அண்ணா யோசித்தார். ‘நூறு ரூபாய் தரலாம்’ என்றார் பெரியார்.

‘நாடகக் குழுவுல அம்பது, அறுபது பேரு இருப்பாங்க. பிரயாணச் செலவெல்லாம் இருக்கும்.’

‘நூத்தம்பதா கொடுக்கலாம்’ இது பெரியார்.

ராதாவிடம் பேசச் சென்றார் அண்ணா. இருநூறு ரூபாய்க்காக சாமான்களைப் பிடித்து வைத்துக் கொண்டவராயிற்றே பெரியார். இதுதான் சமயம் என்றெண்ணிய ராதா, ‘ஆயிரம் ரூபாய்’ என்றார்.

‘ரொம்ப அதிகமா இருக்கே. முந்நூறுதானே வாங்குவீங்க. சரி, உங்களுக்காக ஐநூறுக்குப் பேசிப் பார்க்குறேன்’ என்றார் அண்ணா.

‘ஒரே ரேட். ஆயிரம் ரூபாய்’ என்று உறுதியாகச் சொன்னார் ராதா. ஒப்புக்கொண்டார் அண்ணா. பெரியாருக்குத் தெரியாமல்தான் பணம் திரட்ட வேண்டும் என்று முடிவு செய்து கொண்டார். திருச்சி மாநாட்டில் நாடகம் நடந்தது. கட்சி மாநாட்டிலே நாடகத்துக்கு டிக்கெட் விற்றது அங்குதான். நல்ல வசூல். பெரியாருக்குச் சந்தோஷம்.



M.R.
ராதாயணம்

# எம்.ஆர். ராதா சோடா

‘கட்சி எதிர்க்கட்சின்னு இருந்தா கலகம், கலாட்டா இல்லாம எப்படி இருக்கும்? கலகம், கலாட்டா இல்லேன்னா கட்சி எப்படி வளரும்? தலைவருங்கதான் எப்படி வளருவாங்க? பாவம், தொண்டர்கள் அவங்கதான் எந்தத் தலைவர் எப்பப்போ என்னென்ன சொல்றாரோ, அதை அப்படியே நம்பி, ஏதோ ஒரு வெறியில அவங்க சொல்ற படியே செஞ்சிட்டு, ஒண்ணு சாவாங்க, இல்லேன்னா குடும்பத்தை நடுத்தெருவிலே விட்டுட்டு ஜெயிலுக்குப் போவாங்க.’

திராவிட கழக மேடைகள் ராதாவுக்குப் பழகிப் போயிருந்தன. வெள்ளைக் குதிரை. அதன் மேல் கம்பீரமாக ராதா. கையிலே கழகக் கொடி. முன்வரிசையில் ராதா செல்ல, திராவிடர் கழக மாநாட்டு ஊர்வலங்கள் நடந்தன.

அன்றைக்கு கழகத்துக்கு இருந்த ஒரே எதிர்க்கட்சி காங்கிரஸ்தான். பெரியார்

6

ராஜாஜி மோதல்கள் அவ்வளவு பிரசித்தி பெற்றவை. அவர்கள் கூட்டத்திலே இவர்கள் கலாட்டா செய்வதும், இவர்கள் கூட்டத்திலே அவர்கள் கலாட்டா செய்வதும் சகஜம்.

அன்று பலத்த ஆரவாரத்துடன் கழக ஊர்வலம் கிளம்பியது. ராதா குதிரை மீதேறி, கொடி பிடித்தபடி முன்னிலை வகித்துச் சென்றுக் கொண்டிருந்தார். ஊர்வலத்தில் கலவரம் ஏற்படுத்த, சில கலகக்கார காங்கிரஸ்காரர்களும் கூட்டத்தோடு கலந்திருந்தனர்.

அவர்களுள் ஒருவர் ராதா அருகே வந்தார். குதிரையைக் கலவரப் படுத்தி எப்படியாவது ராதாவைக் கீழே தள்ளிவிட வேண்டு மென்பது அவரது திட்டம். குதிரையின் பின்புறம் நடந்து வந்து கொண்டிருந்த அவர், குச்சி ஒன்றால் குதிரையின் பின்புறம் குத்தினார். ராதா அதைப் பார்த்துவிட்டார்.

'டேய், குதிரைகிட்ட விளையாடாதே. நீ தாங்க மாட்டே' எச்சரிக்கை விடுத்துப் பார்த்தார். அவர் குத்திக் கொண்டே வந்தார். ராதா ஏறாத முரட்டுக் குதிரைகளா? கடிவாளத்தைப் பிடிக்கும் விதத்தில் பிடித்தார். மீண்டும் அந்த ஆள் குச்சியால் குத்தினார். குதிரை மிரண்டது. ஆனால் ராதா கடிவாளத்தின் பிடியை இறுக்கியிருந்ததால், முன்னங்கால்களைத் தூக்காமல், பின்னங்கால்களால் அந்த ஆளை எட்டி உதைத்தது.

தள்ளிப் போய் விழுந்த அந்த நபர், பிறகு எழுந்திருக்கவில்லை.

காங்கிரஸ்காரர்கள் இது விபத்தல்ல, கொலை என்று விவகாரத்தைப் பெரிய அளவில் கிளப்பப் பார்த்தார்கள். அந்த நேரத்தில் ராதாவுக்கு உதவியவர் ஜட்ஜ் கணேசய்யர்தான். அவரது முயற்சிகளினால் வழக்கிலிருந்து விடுதலையானார் ராதா.

●

'கணேசய்யர் உங்களை அழைச்சுட்டு வரச் சொன்னார்' என்று ஒருவன் வந்து சொன்னதுமே ராதாவுக்குள் படபடப்பு குடி கொண்டுவிட்டது. என்ன விஷயமாக இருக்கும் என்று மனத்துக்குள் ஆயிரத்தெட்டு கேள்விகள். அவர் முன் சென்று நின்றார் ராதா.

'வாடா, உனக்கு நல்ல சேதி ஒண்ணு வைச்சிருக்கேன்.'

'நீங்க எனக்கான கெட்ட சேதிகளைக்கூட நல்ல சேதிகள் ஆக்கினவராச்சே. சொல்லுங்க.'

'ரெண்டாவது உலக யுத்தம் நடக்குதுல்ல. தஞ்சை மாவட்டம் பூரா போர்ப்பிரசாரம் செய்யுற பொறுப்பை பிரிட்டிஷார் என்கிட்ட கொடுத்திருக்காங்க. இதுல நீ எனக்கு ஏதாவது உதவி செய்ய முடியுமா?'

'அய்யோ, இன்னொரு முறை உதவின்னு பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க. கட்டளை போடுங்க.'

'இல்லப்பா, இது எனக்கு சர்க்கார் கொடுத்துருக்குற வேலை. அதுல நான் உன்கிட்ட உதவி கேட்குறேன். உன்னால யுத்த பிரசார நாடகம் நடத்திக் கொடுக்க முடியுமா? பெரியாரும், தளபதி அண்ணாதுரையும் எதுவும் சொல்லுவாங்களா? உன் பிழைப்பு முக்கியம்ல.'

'பிரச்னை இல்லீங்க. அவங்களே இப்ப அதைத்தானே செய்யுறாங்க.'

'நல்லது. ஒரு நாடகத்துக்கு எவ்வளவு எதிர்பார்க்குற?'

'நூறோ, அம்பதோ  நீங்க என்ன கொடுத்தாலும் சரி.'

'அடப்பாவி, நாடக மேடையில என்னென்னமோ பேசி அசத்துற. இந்த விஷயத்துல இவ்வளவு அசடா இருக்கியே? நீ நாடகம் போடப்போறது எனக்காக இல்ல. பிரிட்டிஷ் காரனுக்காக. ஆயிரம், ஆயிரத்து ஐநூறு ஆகும்னு சொல்லி வைக்கிறேன். அதுவும் பிரசார நாடகங்கிறதால இந்தச் சலுகைன்னு எழுதி விட்டுடறேன். சரியா?'

ராதா, கணேசய்யரைக் கையெடுத்துக் கும்பிட்டார்.

'உனக்கு வரவேண்டிய பணம் செக்கா வந்து சேரும். எங்கங்க, எப்பப்போ நாடகம் போடணும்னு விவரக் கடிதாசியும் வரும். அதன்படி நடந்துக்கோ. நான் அப்பப்ப வந்து பார்ப்பேன். வேற அதிகாரிகளும் வந்து பார்ப்பாங்க. சரியா நடந்துக்கோ.'

போர் பிரசார நாடகங்களால் கிடைத்த நிதி, ராதாவின் நாடக கம்பெனியைப் பலப்படுத்தியது. வளமும் ஆக்கியது. கூடவே கழகத்துக்காகப் போட்ட நாடகங்கள் அவரது பெயரைப்



பரப்பின. பல பெரிய மனிதர்களின் நட்பும் கிடைத்தது. தமிழ் நாடெங்கும் நாடகங்கள் மூலம் ராதாவின் புகழ் பரவியது. அதாவது, காளிமார்க் சோடா கம்பெனி நடத்தி வந்த பரமசிவ நாடார், 'எம்.ஆர். ராதா சோடா' என்று ஒரு தனி பிராண்ட் போட்டு விற்குமளவுக்கு.

●

'அது முதல் காதலோ, முடிவில்லாத காதலோ, அது எனக்குத் தெரியாது. என்னுடன் நடித்து வந்த அவளை நான் அப்போ மனமார நேசிச்சேன். என் இதய ராணியாயிருந்த அவள், வெளியார் பார்வைக்கும் ராணியாவே இருக்கணும்னு நினைச்சு, பட்டுப் புடைவையைத் தவிர வேறே எந்தப் புடைவையும் கட்ட வேணாம்னு அவகிட்ட சொன்னேன். நெற்றிச் சுட்டியிலிருந்து பாதரசம் வரை நகைங்க செஞ்சிப் போட்டு, அவ அழகை உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை பார்த்துப் பார்த்து ரசித்தேன். அவளுடைய கொள்ளையழகு மட்டுமில்லே, குரலழகும் என்னைத் தேனுண்ட வண்டாக்கிடிச்சி. ஓய்வு கிடைச்சப்போல்லாம் அவளைப் பக்கத்திலே உட்கார வைச்சுக் கிட்டு, 'பேசு, ஏதாவது பேசு, பேசிக்கிட்டே இரு'ன்னு பேசச் சொல்லிக் கேட்டேன். பாடச் சொல்லியும் கேட்டேன். பரதம் தெரியும் அவளுக்கு. ஆடச்சொல்லியும் பார்த்தேன்.'

அந்தப் பெண்ணின் பெயர் பிரேமா. ராதா கோயமுத்தூரில் முகாமிட்டிருந்தபோது, அவரது குழுவில் வந்து இணைந்த பெண். ராதாவுக்குப் பிரேமா மீது தீராத காதல். நாள்கள் இனிமை யாகக் கழிந்தன. அவர்களுக்குத் தமிழரசன் என்றொரு மகன் பிறந்தான்.

அந்தக் காதல் வாழ்க்கை தொடரவில்லை. பிரேமாவுக்கு ஒருநாள் காய்ச்சல் வந்தது. படுக்கையைவிட்டு எழுந்திரிக்க முடியாதபடி கிடந்தார். ராதா டாக்டரை அழைத்து வந்தார்.

'இது அம்மை ஜுரம். இப்போ ஒண்ணும் பண்ணமுடியாது. முன்னாடியே வாக்சினேஷன் செஞ்சிருக்கணும்' என்று சொல்லி விட்டுப் போய்விட்டார். அடுத்த பத்து நாள்களில் பிரேமா இறந்து போனார். சில நாள்களிலேயே தமிழரசனும் இறந்து போனான்.

அதுவரை இல்லாத அளவு துக்கம் ராதாவைத் தாக்கியது. நிலைகுலைந்து போனார். பிரேமாவின் இறுதிச் சடங்குகளை

பெரிய அளவில் நடத்தினார். கோவையிலிருந்த ராஜா சாண்டோ சமாதிக்குப் பக்கத்தில், பிரேமாவை அடக்கம் செய்தார். அங்கு ஒரு நினைவு மண்டபம் எழுப்பினார். கோவைக்கு வரும் போதெல்லாம் அங்கு சென்று அமைதியாக அமர்ந்துவிட்டு வருவதை வழக்கமாகக் கொண்டார்.

'இப்படி ஒரு முட்டாள் இருப்பானா? யாரோ ஒரு நடிகை அம்மையிலே செத்துப் போனதற்காக, ஆயிரக்கணக்குல செலவு செய்து எவனாவது சமாதி கட்டுவானா?' ஜி.டி. நாயுடு கேட்டார். ராதாவிடமிருந்து உறுதியான குரலில் பதில் வந்தது.

'மும்தாஜுக்காக ஆக்ராவிலே தாஜ்மஹால் கட்டுன ஷாஜஹான் முட்டாள்னா நானும் முட்டாள்தான்.'

•

'சலவைத் தொழிலாளிகளே! சாக அடித்தான் சமரச நோக்கம் உடைய ஒருவரை. அந்த மாசுபடிந்த மன்னனின் அழுக்கை வெளுக்கிறீர்கள் நீங்கள்; அவனோ உங்கள் மாசுபடிந்த மனத்தைத் துடைத்தானில்லை. இன்றே புரட்சி செய்யுங்கள், புறப்படுங்கள்!'

அன்பானந்தம் பேசப் பேச ஒவ்வொரு தொழிலாளியாகக் கைகளில் கொடியேந்தி அவன் பின்னால் செல்கிறார்கள். அரியணையில் மன்னன் போர்வாளுடன் காத்திருக்கிறான். கூட்டத்தோடு வரும் அன்பானந்தனைக் கண்ட மன்னன், அரியணையிலிருந்து எழுந்து வருகிறான். அன்பானந்தத்தில் கையில் அந்த வாளைக் கொடுக்கிறான்.

'வீழ்ந்தது முடியாட்சி. எழுந்தது குடியாட்சி. திராவிட நாடு திராவிடருக்கே!' அன்பானந்தன் பெருங்குரலெடுத்து முழங்க, 'திராவிட நாடு வாழ்க!' என்று கூடியிருப்பவர்கள் கோஷம் எழுப்புகிறார்கள்.

இதுவே போர்வாள் நாடகத்தில் வரும் இறுதிக் காட்சிகள். நாடகத்தை எழுதியவர் சிற்றரசு. அன்பானந்தனாக ராதா.

நாடகத்தில் ஒரு காட்சி. பெரியாரின் படம் வைக்கப்பட்டி ருக்கும். அதன் ஒருபுறம் ராதா. மறுபுறம் அவரது நண்பர். அவர் கேட்பார்.

'பெரியார் படத்தை வீட்டுல மாட்டி வைச்சிருக்கியே, அப்படி அவர் என்னதான் செஞ்சுட்டாரு?'

'என்ன செஞ்சாரா? உன் நெத்தியையும், என் நெத்தியையும் பாரு.'

'ஏன்? அதுல ஒண்ணுமில்லையே!'

'யார்ரா செஞ்சாங்க? ஐயாதான் செஞ்சார். இல்லேன்னா உன் நெத்தியில நீளமா ஒரு மார்க். என் நெத்தியில குறுக்க ஒரு மார்க் இருந்திருக்கும். மார்க் டிஃபரென்ஸ் வந்தாலே பிரச்னை தாண்டா...'

'நீ சொல்றது சரிதான்.'

'இன்னொன்னு விஷயம். ஹோட்டல்ல போய் உக்காந்துக்கிட்டு நம்ம காசைக் குடுத்துட்டு சாமி ஒரு காபி குடுங்கன்னு கேட்டுக் கிட்டிருந்தோமே, இப்ப என்ன பண்ணுறோம்? ஓய் அய்யர், ஒரு காபி குடுங்கன்னு கேக்கறோம். இந்த சவுண்டு யார்ரா குடுத்தது? பெரியார் ஐயாதானே...'

மக்களால் வெகுவாக ரசிக்கப்பட்ட இந்த நாடகம், அரசால் தடை செய்யப்பட்டது. 'சர்வாதிகாரி' என்ற பெயர் மாற்றி அதே நாடகத்தைத் தொடர்ந்து பல ஊர்களில் நடத்தி வெற்றி கண்டார் ராதா.

●

ராதா அடுத்து தன் நாடகத்துக்காக எடுத்துக்கொண்ட கதா பாத்திரம் லஷ்மி காந்தன். சமூக அவலங்களை, கலைஞர்கள் அடித்த கூத்துகளை வெட்டவெளிச்சம் போட்டுக் காண்பிக்க நினைத்த லஷ்மி காந்தனின் கதை. நாடகத்தில் காட்சிக்குக் காட்சி குபீர் சிரிப்புதான். ராதாதான் லஷ்மி காந்தனாக வேடமேற்று நடித்தார்.

அந்த நாடகத்தில் ஒரு பாடல் காட்சியில் பெண் வேடமிட்டு வந்தார் ராதா. அந்தப் பாத்திரத்தின் பெயர் ரங்கூன் கமலம். அது ஒரு டப்பாங்குத்து நடனம். 'சிங்கார லஹரி சித்த கண சுப ஹரி' என்று நீளும் அந்தப் பாடலுக்கு ராதா ஆடும் தளுக்கு மினுக்கு நடனத்துக்கு விசில் ரசிகர்களிடையே விசில் பறக்கும்.

லஷ்மி காந்தன் தன் பத்திரிகையில் தோலுரித்துக் காட்டிய விஷயங்களைவிட, ராதா தன் நாடகத்தில் வைத்திருந்த காட்சிகளும் வசனங்களும் வீரியம் மிக்கவையாக இருந்தன.

லஷ்மி காந்தன் தன் உதவியாளருடன் பேசுவதுபோல ஒரு காட்சி.

'கோவிந்தா, என்னடா இன்னிக்கு மேட்டரெல்லாம் வந்துருச்சா?'

'வந்துருச்சுங்க.'

'சரி, நான் கோர்ட்டுக்குப் போய்ட்டு வந்துடுறேன்.'

'கோர்ட்டா?'

'ஆமா கேஸு. இந்த ரமணி பாய் இருக்காளே, அவ என்மேல கேஸ் போட்டிருக்கா.'

'என்ன கேஸு?'

'ஏதோ மானம் போயிருச்சாம்.'

'ஏதாவது வக்கீலை வைச்சுக்க வேண்டியதுதானே?'

'ஏய். இதுக்குப் போய் வக்கீலா? இது நானே பேசி முடிச்சிட்டு வந்துருவேன்.'

'எப்படி? புரியலையே...'

'ஆமாடா. இப்ப அவ என்ன கேஸ் போட்டிருக்கா? மானம் போயிருச்சுன்னு. இப்ப என்னோட வாட்ச் போயிருச்சுன்னு சொல்லுறேன். அப்போ இதுக்கு முன்னாடி நான் வாட்ச் கட்டியிருந்தேன்னு நிரூபிக்கணும்ல. அப்போதானே போயிருச்சுன்னு சொல்ல முடியும். அவ என்ன கொடுத்திருக்கா? இதுக்கு முன்னே அவளுக்கு மானம் இருந்துச்சா? இருந்துச்சுன்னா எப்படிப் போச்சு? எந்தப் பக்கமா போச்சு?'

•

பொதுவாக ராதா தன் நாடகங்களில் வரும் வேலைக்கார கதாபாத்திரங்களின் பெயர்களை ராமன் அல்லது முருகன் என்றே வைத்துக் கொண்டார். லஷ்மி காந்தனில் வேலைக்காரன்

ராமனோடு ஒரு காட்சி. அவன் தன் நெற்றியில் மாபெரும் நாமம் ஒன்றைப் போட்டிருக்கிறான்.

'டேய் என்னடா இது?'

'பேங்கு.'

'இங்க யாருடா வருவாங்க?'

'பணம் போடறவங்க.'

'ஏன்டா பணம் போடுறவங்க உள்ளாற வரும்போதே வாசல்ல நீ இப்படி இருந்தா, எவன்டா நம்பி பணத்தைப் போடுவான். எதுக்காகடா இதைப் போட்டுக்கிட்டிருக்கே?'

'பாதம், எம்பெருமான் பாதம்.'

'ஓ.. எம்பெருமான் பாதத்தை நீங்க நெத்தியில போட்டுக் கிட்டிருக்கீங்களா. ஆமா அந்த எம்பெருமான் நெத்தியில போட்டிருக்கே அது யார் பாதம்டா? தெரிஞ்சுக்க. தெரிஞ்சுக் கிட்டு வந்து அப்புறம் போடு.'

●

தஞ்சையில் ராதா, லஷ்மி காந்தன் நாடகத்தைத் தொடர்ந்து பல வாரங்கள் நடத்தி வந்தார். அப்போது திருவாரூர் சிங்கராயர் என்ற ராதாவின் நண்பர் ஓர் இளைஞரை அழைத்து வந்தார். 'இவர் திருவாரூர் மு. கருணாநிதி. நல்ல எழுத்தாளர்' ராதாவிடம் அறிமுகப்படுத்தினார். அப்போது அவர் டைபாய்டு காய்ச்சல் வந்து அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்.

ராதாவும் கருணாநிதியும் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தனர். 'நீங்கள் ஏன் எனக்கொரு சமுதாய சீர்திருத்த நாடகம் எழுதித் தரக்கூடாது?' ராதா கேட்டார். கருணாநிதி சம்மதித்தார். ராதாவுடனேயே தங்கியிருந்து, ஒரு நாடகத்தையும் எழுதிக் கொடுத்தார். அதற்கு வைக்கப்பட்ட பெயர் 'தூக்குமேடை.'

அந்த நாடகத்தில் கல்வி நிறுவனத்தின் உரிமையாளராக, வைதீகராக அபிநய சுந்தர முதலியார் பாத்திரத்தில் நடித்தார். அவரை எதிர்க்கும் மாணவர் தலைவர் பாண்டியன் கதா பாத்திரத்தில் நடித்தார் கருணாநிதி.

பெரியார் தலைமையில் நாடகத்தை அரங்கேற்றலாம் என்று நினைத்தார் ராதா. முதல் காட்சியின் வசூலை கருணாநிதிக்குக் கொடுத்துவிட திட்டமிட்டிருந்தார். 'கண்டவனுக்கு நிதி கொடுக்க நான் வரமுடியாது' என்று மறுத்துவிட்டார் பெரியார். காரணம்? ராதாவே சொல்லியிருக்கிறார் 'விஷயம் என்னான்னா, கருணாநிதியை அப்போ பெரியாருக்குக் கொஞ்சம் பிடிக்காது. காரணம் வேறு ஒண்ணுமில்லே, மேடைப் பேச்சிலே சில சமயம் எல்லோரையும் மிஞ்சிப் பேசி, அப்போதே பொதுமக்களிடம் 'அப்ளாஸ்' வாங்கிவிடும் சாமர்த்தியம் கருணாநிதிக்கு உண்டு. அது பெரியாருக்குப் பிடிக்காது'

ராதாவுக்குப் பெரியாரைச் சம்மதிக்க வைப்பது எப்படி என்று தெரியும். தன் பையில் இருந்து நூறு ரூபாய் நிதி கொடுத்தார். அதற்குப் பின்பு பெரியார் நாடகத்துக்கு வருவதாகச் சம்மதித்தார்.

'இரண்டு புரட்சி நடிகர்கள் நடிக்கும் தூக்குமேடை' என்று தஞ்சையெங்கும் விளம்பரம் செய்யப்பட்டு, நாடகம் பரபரப்பான வெற்றி அடைந்தது (1946). முதல் காட்சியின் வசூலை கருணாநிதியிடம் அளித்தார் பெரியார்.

ஒருநாள் சுவரொட்டியில் 'அறிஞர் கருணாநிதி தீட்டி நடிக்கும் தூக்குமேடை' என்று விளம்பரம் செய்யப்பட்டது. அண்ணாவின் மேல் பேரன்பு கொண்ட கருணாநிதியால், தன் பெயருக்கு முன்னால் அறிஞர் என்ற அடைமொழியைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அப்போது கருணாநிதியின் வயது 22.

'நான் இனி நடிக்கப் போவதில்லை' என்று ராதாவுக்குத் தகவல் அனுப்பினார். 'தவறுதான். அந்தக் குறை நீக்கப்படும்' என்று கூறிய ராதா, கருணாநிதியை மீண்டும் நடிப்பதற்கு அழைத்தார். பட்டுக்கோட்டை அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி தலைமையில் அன்றைய தூக்குமேடை நாடகம் நடந்தது.

முடிவில் ராதாவின் ஆலோசனைப்படி, அழகிரிசாமி கருணா நிதிக்குக் கொடுத்த அடைமொழி 'கலைஞர்'.

1952-ல் பெரியார் தலைமையில் நடந்த போர்வாள் நாடகத்தில், அழகிரிசாமிதான் ராதாவுக்கு 'நடிகவேள்' என்ற பட்டத்தை வழங்கினார்.

●

தூக்குமேடையில் ஒரு காட்சி. ராதா ஒரு பெண்ணைத் தன்னுடன் வைத்திருப்பார். வேலைக்காரன் வருவான்.

'யாருண்ணே இது?'

'அண்ணிடா.'

'அண்ணி காலைப் பாருங்க'

'என்ன?'

'யானைக்கால் மாதிரி இருக்கு.'

'போடா, பிள்ளையாருக்கே யானைத்தலை இருக்கு. இது வரைக்கும் ஒருபயலும் கேட்கலை. கால் யானைக்காலா இருக்கறதைச் சொல்ல வந்துட்டான்.'



7

# ராதா Vs கருணாநிதி

சுதந்திரத்துக்குப் பின்னும் கம்யூனிஸ்ட்டுகள் என்றால் ஆயுதமேந்திப் போராடுபவர்கள் என்ற முத்திரையே இருந்தது. அப்போதைய முதல்வர் பிரகாசம், கம்யூனிஸ்ட்டுகளுக்கான நடவடிக்கைகளை முடுக்கி விட்டிருந்தார். எனவே அந்தச் சமயத்தில் தமிழகமெங்கும் கம்யூனிஸ்ட்டுகள் தலைமறைவாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். பொன்மலை என்ற ஊரிலே கம்யூனிஸ்ட்டுகளை சுட்டுத் தள்ளுகிறார்கள் என்றொரு செய்தியும் பரவிக்கொண்டிருந்தது.

நாடகங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னே மேடையில் ஒரு திரை தொங்குமே, அதில் 'திராவிட நாடு திராவிடருக்கே!' என்று எழுதி வைத்திருப்பார் ராதா. அப்போது அந்த வாசகத்தை மாற்றியிருந்தார் ராதா. 'உலகப் பாட்டாளி மக்களே, ஒன்றுபடுங்கள்!' என்ற வாசகம் மின்னியது.

சிலர் ராதாவை எச்சரித்துச் சென்றனர். 'திரையை மாத்திருங்க, இல்லேன்னா

நீங்களும் கம்யூனிஸ்ட்டோட கம்யூனிஸ்ட்டா உள்ள போக வேண்டியதிருக்கும்.'

ராதா மாற்றவில்லை. அந்த நேரத்தில் ராதாவின் நண்பர் ஒருவர், இன்னொருவரை அழைத்துக்கொண்டு வந்தார்.

'இவர் என் தோழர். பெயர் ஜீவானந்தம். கம்யூனிஸ்ட். தலை மறைவா இருக்க நீங்கதான் உதவணும்.'

'அதுக்கென்ன செஞ்சுட்டாப் போச்சு.'

ஆனால் ராத்ாவின் அரங்கமும் பாதுகாப்பனதல்ல. ஏனென்றால் நாடகம் நடக்கும் சமயத்தில் போலீஸ வரும். யோசித்த ராதா, ஜீவாவை மொட்டையடித்துக் கொள்ளச் சொன்னார் ராதா. நெற்றி நிறைய விபூதி இட்டுவிட்டார். மக்களோடு மக்களாக உட்கார வைத்து நாடகம் நடத்த ஆரம்பித்தார்.

ஜீவாவுக்கு ராதா அடைக்கலம் கொடுத்திருப்பதை திராவிட கழக நண்பர்கள் சிலர் எதிர்த்தார்கள். 'இது கட்சி விஷயமல்ல, என் நட்பு சம்பந்தப்பட்ட விஷயம். நீங்க போயிட்டு வாங்க' என்று அவர்களை அனுப்பினார் ராதா. நாடகம் இல்லாத சமயங்களில் ஜீவாவை ஒளித்து வைப்பதற்கு படாதபாடு பட வேண்டிய திருந்தது. இருந்தாலும் தோழர்கள் சிலர் ஜீவாவை சந்திக்க ரகசியமாக வந்தபடி இருந்தனர். ராதாவுக்கு மேலும் ஒரு வேலை வந்து சேர்ந்தது.

'தோழரே, இந்தக் கடிதத்தை இதிலுள்ள முகவரியில் இருக்கும் பெண்ணிடம் கொடுத்துவிட முடியுமா?' ஜீவா கேட்டார்.

'அதுக்கென்ன கொடுங்கள்' என்று ராதா வாங்கிக்கொண்டு போனார். அந்தப் பெண்ணிடம் கடிதத்தைக் கொடுத்தார். அந்தப் பெண்ணும் கடிதத்தைப் படித்துவிட்டு, பதில் கடிதம் எழுதிக் கொடுத்தார். ஏதோ கட்சி விசயம், கடிதத்திலேயே புரட்சி செய்கிறார்கள்போல என்று எண்ணிக்கொண்டார் ராதா. கடிதப் போக்குவரத்து பல நாள்கள் தொடர்ந்தது.

'என்னிக்குப் புரட்சி வெடிக்கும்?' என்றார் ராதா, ஜீவாவிடம்.

'நாட்டிலே இல்ல, வாழ்க்கையிலே கூடிய சீக்கிரம் வரும்' என்று சிரித்தார் ஜீவா. ராதாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

ஆவடியில் ஒரு கலவரம். போலீஸிடமிருந்து ஜீவாவைக் காப்பாற்ற அங்கிருந்த நண்பர் ஒருவர் வீட்டில் ஒளிய வைத்தார் ராதா. மீண்டும் ராதா அங்கு ஜீவாவைச் சந்திக்கச் சென்றார். அவர் தப்பித்துச் சென்றிருந்தார்.

சில நாள்கள் கழிந்தன. ஜீவாவும், கடிதப் பெண் பத்மாவதியும் திருமணம் செய்து கொண்டார்கள். ராதாவுக்கு அப்போதுதான் அது புரட்சித் தூது அல்ல, காதல் தூது என்று புரிந்தது.

•

அண்ணாவுக்கு ராதா நடிப்பென்றால் உயிர். கழக மாநாடுகளில் ராதாவின் நாடகம் இடம்பெற வழிவகுத்தது அண்ணாதான். எம்.ஏ. படித்த அண்ணாவைப் பார்த்து ராதா கேட்கும் கேள்வி இதுதான்.

'அரசாங்க வேலைக்குப் போறதுக்குத்தானே எம்.ஏ. பட்டம்? சங்கராச்சாரியார் எம்.ஏ.வா படிச்சிருக்கார்? மக்களைத் திருத்தறவங்க யாரும் எம்.ஏ. படிச்சதாகத் தெரியலையே?'

பல சமயங்களில் அண்ணாவைப் பொதுக்கூட்ட மேடைகளி லேயே வாரியும் விட்டார் ராதா.

'படிக்காத முட்டாளால் உருவாக்கப்பட்ட அ, ஆ எழுத்துகளைப் படித்துவிட்டு நீ படித்தவன், அறிவாளி என்று சொல்லலாமா?'

ராதாவின் செயல்கள் எதிலுமே அண்ணாவுக்குக் கோபம் வராது. அமைதியாக ரசிப்பார். 'யார் யாருக்கோ சரித்திரம் எழுதுகிறார்கள். என் ராதா அண்ணனுக்குச் சரித்திரம் எழுத வேண்டும். அதை என் கையாலே நான்தான் எழுதுவேன்' என்று பல சமயங்களில் அண்ணாவே மேடைகளில் கூறியிருக்கிறார்.

ஆனால் ராதா, அழகிரிசாமி மற்றும் சில நண்பர்கள் கூடி மது அருந்துவார்கள். அந்தச் சமயத்திலே மட்டும் அண்ணா, அவர்கள் பக்கமே வரமாட்டார். எங்கே தன் வாயிலும் வலுக்கட்டாயமாக ஊற்றி விடுவார்களோ என்ற பயம்.

தூத்துக்குடியில் திராவிடர் கழக மாநாடு நடக்கவிருந்தது.

'என்ன அண்ணா, தூத்துக்குடிக்கு நான் ஃபர்ஸ்ட் கிளாஸ் டிக்கெட் வாங்கிவிட்டேன். நீங்க?'

'நீங்க போங்க. நாங்க வர்றோம்' என்று பொதுவாகப் பதில் சொன்னார் அண்ணா. அந்தச் சமயத்தில் அண்ணாவுக்கும் பெரியாருக்கும் கருத்துவேறுபாடு ஏற்பட்டிருந்தது. இரண்டு காரணங்கள். சுதந்தர தினம் கொண்டாடக் கூடாது என்ற பெரியாரின் கருத்தில், அண்ணாவுக்கு உடன்பாடில்லை. பெரியார் மணியம்மையைத் திருமணம் செய்துகொண்டதும் பிடிக்கவில்லை. இந்த விரிசல் பற்றி ராதாவுக்கு ஒன்றும் தெரியாது.

தூத்துக்குடிக்கு ரயில் கிளம்பத் தயாராக இருந்தது. ரயில் நிலையமெங்கும் கறுப்புச் சட்டைக்காரர்கள். கழகக் கொடி ஒன்றைக் கையில் எடுத்த ராதா, அதை எஞ்சினின் முன்புறம் கட்டச் சொன்னார். ரயில் கிளம்பும் நேரம் நெருங்கியது. தளபதி அண்ணா வரவில்லை. பலத்த யோசனையுடன் ரயிலேறினார் ராதா. தொண்டர்கள் ரயிலில் அப்பிக் கொண்டு வந்தார்கள்.

தூத்துக்குடியில் கே.வி.கே. சாமி என்பவர் பிரம்மாண்டமான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். மாநாடு ஆரம்பமாகவிருந்தது. அதுவரை அண்ணா வராமலிருந்தது ராதாவுக்கு உறுத்தலாக இருந்தது.

பெரியாரிடம் சென்றார். 'மணி பத்தரை ஆகப் போகுது. இன்னும் இந்த அண்ணாவைக் காணலியே. வெயில்ல மக்கள் ரொம்ப சங்கடப்படுறாங்க. மாநாட்டைத் தொடங்கலாமே?'

'தொடங்குங்கள்' என்றார் பெரியார். ஒவ்வொருவராகப் பேசிக் கொண்டிருந்தார்கள். ராதாவால் பொறுமையாக இருக்கமுடியவில்லை. பெரியாரின் காதருகே சென்று, 'ஐயா, இன்னும் அண்ணா வரலீங்களே?' என்றார்.

'என்ன அண்ணா? அவர் என்ன பெரிய கே.பி. சுந்தராம்பாளா? அந்த அம்மாள் வரவில்லையென்றால்தான் பாட ஆள் இல்லாமல் கச்சேரி நின்று போகும். இங்கே இருப்பவர்கள் எல்லோருமே அண்ணாக்கள்தாம். எல்லோருமே தம்பிகள்தாம்.'

சத்தமாகவே சொன்னார். ஏதோ பிரச்னை என்று ராதாவுக்கு அப்போதுதான் புரிந்தது. பின்பு மற்றவர்களிடம் விசாரித்து முழுமையாகப் புரிந்துகொண்டார். அண்ணா மேல் கோபம் கோபமாக வந்தது.

மாலையில் நாடகத்தை முடித்துவிட்டு மைக் பிடித்தார் ராதா.

‘மாநாடுகளுக்குத் தலைவர் வராமல் இருக்கலாம். தளபதிகள் வராமல் இருக்கலாமா? அண்ணா, தளபதி பதவிக்குத் தகுதி யற்றவர்.’

ராதாவின் பேச்சு கருணாநிதிக்கு சுரீர்ரென்றிருந்தது. அவர் திராவிட நாடு பத்திரிகையிலே எழுதினார். ‘தூத்துக்குடி மாநாட்டில் ராதா நஞ்சு கலந்தார்.’

‘அண்ணாவின் அவசரம்’ என்றொரு புத்தகத்தைத் தயாரித்து அதைக் கழகத் தொண்டர்களிடையே பரப்பினார் ராதா. அண்ணாவிடமும் கொடுத்து படித்துப் பார்க்கச் சொன்னார்.

ராதாவுக்கு எழுதப் படிக்கத் தெரியாதே. எனவே அண்ணா, ‘இந்தப் புத்தகத்தை யார் எழுதிக் கொடுத்தார்கள்?’ என்று கேட்டார்.

‘யார் எழுதினால் என்ன? நான் சொல்லுறதை எழுதுனவன் படிச்சவன்’ என்றார் ராதா.

அதற்குப் பின் பொதுக்கூட்டங்களிலும் அண்ணாவை திட்டோ திட்டென்று திட்டினார். நாடக வசனங்கள் வழியாகவும் திட்டினார். ஆனால் அவர்களிருவருமே கட்சி வேறு, கொள்கை வேறு என்பதில் தெளிவாக இருந்தனர். அவர்களுக்கிடையே இருந்த நட்பு அப்படியே இருந்தது.

அப்போது அண்ணா, திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்திருந்தார். காஞ்சிபுரத்தில் திராவிடர் கழக மாநாடு நடந்தது. அதில் கலந்துகொள்ளச் சென்ற ராதா அண்ணாவின் வீட்டிலே சென்று தங்கினார்.

‘என்ன திராவிடர் கழக மாநாட்டுக்கு வந்திருக்கிறீர்களா?’ என்று இயல்பாகச் சிரித்துக் கொண்டே கேட்டார் அண்ணா. ‘எனக்கு வேறென்ன வேலை’ என்று பதில் அளித்தார் ராதா.

ஒருமுறை ஈரோடு சென்றார் ராதா. அங்கு ஈ.வி.கே. சம்பத் வீட்டில் சென்று தங்கினார். அப்போது பிரிந்து தி.மு.க.வில் இணைந்திருந்தாலும் எல்லோருமே பழைய நண்பர்கள்தானே. ஆனால் அப்போது கட்சியில் பொதுக்குழு கூட்டம் சம்பத் வீட்டில் கூடுவதாக இருந்தது. வெளியாளான ராதா இருப்பதை மற்றவர்கள் விரும்பவில்லை. ராதாவை வெளியே போகச் சொன்னார்கள்.

‘யாரும் இருக்கக் கூடாதுன்னா சதிதானே நடக்கிறது என்று அர்த்தம். என்னய்யா சதி பண்ணுறீங்க? இங்கே நடப்பதை அங்கே சொல்ல மாட்டேன். அங்கே நடப்பதை இங்கே சொல்ல மாட்டேன். நான் ஒன்றும் திராவிடக் கழக உறுப்பினர் அல்ல. என்னைப் பற்றி அண்ணாவுக்குத் தெரியும்’ ராதா கோபமாகச் சொன்னார்.

‘ராதா எங்கேயும் இருக்கலாம். அதில் ஒண்ணும் தவறில்லை’ அண்ணாவும் குரல் கொடுக்க சலசலப்பு அடங்கியது.

●

தூக்குமேடை நாடகம். கருணாநிதியும் அங்கு இருந்தார். அண்ணாவை விமரிசிப்பதுதான் ராதாவின் வழக்கமாயிற்றே. அண்ணாவின் உண்மையான விசுவாசியான கருணாநிதி வேறு இருக்கிறார். விடுவாரா? அபிநய சுந்தர முதலியாருடன் மாணவர் தலைவர் பாண்டியன் வாக்குவாதம் செய்வதுபோல ஒரு காட்சி. அந்தக் காட்சியில் இல்லாத வசனம் ஒன்றைப் பேச ஆரம்பித்தார் ராதா.

‘ஏன்டா, ரொம்பப் பேசுறியே. நான் ஒரு கேள்வி கேட்குறேன். பதில் சொல்லுடா பார்க்கலாம்.’

‘என்ன கேள்வி?’

‘என்னமோ உங்க அண்ணாதான் அப்படிப்பட்டவரு, இப்படிப் பட்டவரு, ‘தளபதி’ன்னு சொல்லுறீங்களே. அவரு எந்தப் போர்க்களத்துக்குப் போனாரு? யாரை வெட்டுனாரு? எங்க ஜெயிச்சாரு? எப்படிடா அவரு தளபதி ஆனாரு?’

கூட்டத்தில் சலசலப்பு. கருணாநிதியும் வசனத்தில் சளைத்தவரா என்ன? உடனடியாகப் பதிலடி கொடுத்தார்.

‘வீணை மீட்டப்படாமல் இருந்தாலும் கைவிரல்கள் பட்டதும் நாதம் எழும் அல்லவா. வாள் வெட்டாமல் இருந்தாலும் எடுத்து வெட்டினால் ஒருவருடைய உடம்பில் ரத்தக்காயம் ஏற்படும் அல்லவா. அப்படித்தான், போர்க்களம் என்று ஒன்று வராமல் இருந்தாலும் எங்கள் அண்ணா தளபதி தளபதிதான், மீட்டப் படும்போது வீணை நாதம் இசைக்கும். வெட்டும்போது வாள் தன் கூர்மையைக் காட்டும். போர்க்களம் என்று வரும்போது எங்கள் தளபதி, தான் ‘தளபதி’ என்பதை நிரூபிப்பார்.’



8

## சிறுவெங்காயமும் பழையதும்

இழந்த காதல், விமலா, தூக்கு மேடை, லட்சுமி காந்தன், போர்வாள்... இதே நாடகங்கள் மீண்டும் மீண்டும். ரசிகர்களும் சலிக்காமல் கண்டு களித்தார்கள் என்றாலும் புதிது புதிதாகக் கொடுக்க வேண்டியது ஒரு கலைஞனின் கடமையல்லவா. 'ரத்தக்கண்ணீர்' நாடகம் உருவானது. திருவாரூர் தங்கராசுவின் வசனங்கள் நாடகத்துக்கு வலு சேர்த்தன.

1949 தமிழர் திருநாளில் நாடகத்தை அரங்கேற்றினார் ராதா. வெளிநாட்டிலிருந்து திரும்பும் செல்வச் சீமான் மோகன், தன் ஆணவத்தாலும் பெண்ணாசையாலும் அழிந்து போகும் கதை. குஷ்டரோகி பாத்திரத்தில் ராதா. ஆரம்பத்தில் நாடகம் அவ்வளவு பெரிய எதிர்பார்ப்பையெல்லாம் உண்டாக்கவில்லை.

'குஷ்டரோகி வேடமெல்லாம் வேண்டாம். எங்களுக்குப் பயமாக இருக்கிறது' ராதாவின் குடும்பத்தினரே பயந்தார்கள், அவருக்கு நிஜமாகவே குஷ்டரோகம் வந்துவிடுமோ என்று.

தன் நடிப்பில் கொஞ்சம் வித்தியாசத்தைக் காட்டினால்தான் இந்தக் கதை மக்களிடம் எடுபடும் என்று நினைத்தார் ராதா. பல நாள்கள் உட்கார்ந்து சிந்தித்தார். மது துணையாக இருந்தது. ஆரம்பத்தில் வரும் மோகனின் தோற்றம் எவ்வளவுக்கு எவ் வளவு அழகாக, டாம்பீகமாக இருக்கிறதோ, அதற்கு நேர்மாறாக குஷ்டரோகியின் தோற்றம் குரூரமாக இருக்க வேண்டும் என்று தோன்றியது அவருக்கு. ஒப்பனையில் சில மாற்றங்களைச் செய்தார். நடிப்பிலும் புது யுக்திகளை யோசனை செய்து வைத்திருந்தார்.

இடையில் சில காலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'ரத்தக் கண்ணீர்' மீண்டும் புதுப்பொலிவுடன் அரங்கேறியது. ரசிகர்கள் தள்ளி நின்று, ஆனால் அள்ளி அணைத்து வரவேற்றார்கள். அசத்தலான நாடகம் என்று செவி வழிச் செய்தி ஏகத்துக்கும் பரவியது. குஷ்டரோகி மோகனைக் காணவே ஏராளமான பெண்கள் வரத் தொடங்கினார்கள். ஆண்கள் பலர் பயந்து கொண்டு வரவில்லை என்பது வேடிக்கை.

ஒருநாள் பாகவதர் ரத்தக் கண்ணீருக்குத் தலைமை தாங்கினார். நாடகத்தை வெகுவாக ரசித்துப் பாராட்டிய அவர், மேடையில் ராதாவைத் தொட்டுப் பேச பயந்தார். எல்லாம் குஷ்ட ரோகத்தின் மீதிருந்த பயம். பெண்களுடன் முறைகேடான உறவு வைத்துக் கொண்டால் குஷ்டம் வந்துவிடும் என்றொரு கருத்து சமுதாயத் தில் எல்லோர் மனத்திலும் ஆழமாக விழுந்தது. நிஜமில்லை என்றாலும் அதன் பாதிப்பு பல வருடங்களுக்கு நீடித்தது.

கூடவே பகுத்தறிவுடன் கூடிய நகைச்சுவைக் காட்சிகளை மக்கள் பெரிதும் ரசித்தனர். போகும் ஊர்களிலெல்லாம் ராதாவால் மூட்டை கட்ட முடியவில்லை. காரணம் கூட்டம் குறையவே இல்லை. ஒரு கட்டத்தில் 'ரத்தக்கண்ணீர்' நாடகத்தைப் பார்க்காத வர்களின் தலையை எண்ணிவிடலாம் என்ற அளவுக்கு அதன் புகழ் பரவியது. தெலுங்கு, கன்னடம், மலையாள நடிகர்களும் தங்கள் மாநிலங்களில் ரத்தக்கண்ணீர் நாடகத்தைப் போட்டனர். ஆனால் அவர்கள் யாருக்கும் குஷ்டரோகியாக நடிக்கும் தைரியம் வரவில்லை.

ராதா, 'ரத்தக்கண்ணீர்' நாடகம் தொடங்குவதற்கு முன்னால் அன்றைய செய்தித்தாளை படிக்கச் சொல்லி கேட்பார். பின்பு மேக்-அப் ரூமுக்குச் செல்வார். மேக்-அப் போட்டு

முடிந்தவுடன், உட்கார மாட்டார். குறுக்கும் நெடுக்குமாக அலைந்து கொண்டே இருப்பார். அவருக்குள் புதிய வசனம் ஒன்று உருவாகியிருக்கும்.

அதற்கு நியூஸ் பேப்பர் ஸீன் என்று பெயர். காந்தா வீட்டு வேலைக்காரன், மோகனிடம் நியூஸ் பேப்பரைக் கொடுப்பான். அதிலுள்ள செய்தியைப் படித்து கருத்துச் சொல்லுவான் மோகன். அது அன்றைய செய்தியாக இருக்கும். அதற்கு ராதா அடிக்கும் கமெண்ட், சம்பந்தப்பட்டவர்கள் நாக்கைப் பிடுங்கிக் கொள்வது போல இருக்கும். இந்த நியூஸ் பேப்பர் ஸீனைக் காண்பதற் காகவே தினமும் நாடகத்துக்கு வந்த ரசிகர்களும் உண்டு.

மோகன் தன் மாமனாரிடம் பேசும் காட்சி ஒன்று. படத்தில் இந்த வசனங்கள் பல இடம் பெற்றிருக்காது. சென்ஸாரிடம் சிக்கி இருக்கலாம்.

'என்ன மேன்?'

'மேன் மேன்னு கூப்பிடாத தம்பி.'

'வொய்?'

'நான் உன் மாமனாராச்சே.'

'எந்த நாராயிருந்தாலும் நான் இப்படித்தான் கூப்பிடுவேன். என்ன மேன் உடம்பு பூரா கோடு கோடா போட்டிருக்க?'

'இது பட்டை.'

'ஓ... நீ பட்டை அடிக்கிற சாதியா?'

'இல்லல்லை தம்பி, இது விபூதிப்பட்டை.'

'ஓ... அது என்ன மேன் கழுத்துல கொட்டை?'

'தம்பி தப்பாப் பேசாதே இது ருத்திராட்சக் கொட்டை.'

'இதை எதுக்கு மேன் போட்டுக்கிட்டிருக்கிறே?'

'தம்பி உனக்குத் தெரியாது. இதுல கடவுள் இருக்காரு.'

(மோகன் பாய்ந்து தன் மாமனார் கழுத்தில் தொங்குகிற ருத்திராட்சக் கொட்டையைப் பிடித்துக் கொண்டே கத்துகிறான்)

‘ஏய்... போலீஸுக்குப் போன் பண்ணு. அவனவன் கடவுளைக் காணும், கடவுளைக் காணும்னு தேடிக்கிட்டிருக்கான். கடவுள் என்னடான்னா இந்தக் கொட்டையில ஒளிஞ்சிக்கிட்டு இருக்கான்.’

●

ராதா நாடகத்துறைக்கு நுழைந்த காலத்தில் மைக் எல்லாம் கிடையாது. கடைசி வரிசையில் உட்கார்ந்திருக்கும் ரசிகனுக்கும் கேட்கும் வகையில் தொண்டை கிழிய கத்தித்தான் பேச வேண்டியதிருக்கும். எனவே, ஒவ்வொர் இரவும் நாடகம் முடிந்தபிறகும் ராதா, மேக்கப் அறைக்குள் வருவார். ஒரு பெரிய குண்டா அவருக்காகக் காத்திருக்கும். வாயை மட்டும் நீரால் துடைத்துவிட்டு உட்காருவார்.

குண்டாவில் பாதி அளவுக்குப் பழைய சோறு, மீதி அளவுக்குச் சிறு வெங்காயம் நிரம்பியிருக்கும். அவ்வளவையும் மிச்சம் வைக்காமல் சாப்பிடுவார். மற்றவர்கள் என்றால் நள்ளிரவில் பழையதும் சின்ன வெங்காயமும் சாப்பிட்டால் ஜன்னி வந்து விடும். ஆனால் மேடையில் தன் சக்தியை எல்லாம் பிரயோகித்து நடித்துவிட்டு வந்த பின் அந்த உணவு ராதாவுக்குத் தேவையான தாகவே இருந்தது. அவரது குழுவிலிருந்த சிறுவர்களுக்கு, ராதாவுக்காக வெங்காயம் உரிப்பதுவும் முக்கியமான வேலையாக இருந்தது.

தன் குழுவில் இருந்த ஒவ்வொருவரிடமும் தனிப்பட்ட முறையில் அக்கறை காட்டினார் ராதா. குழுவில் கிட்டத்தட்ட ஐம்பதில் இருந்து அறுபது பேர் வரை இருந்தார்கள். அதில் பெண்கள் பத்து முதல் பதினைந்து பேர் வரை இருக்கும். ஆள்கள் ஒரே குழுவில் இருந்துவிட மாட்டார்களே.

‘நாடக நடிகர்கள் எல்லாம் தூங்கக்கூடாது தூங்கறப்பகூட காலாட்டிக்கிட்டே தூங்கணும். இல்லேன்னா செத்துப் போயிட்டான்னு வேற யாரையாவது போட்டுருவாங்க.’

இதுதான் ராதா தன்னைச் சார்ந்தவர்களிடம் அடிக்கடி சொல்லும் வசனம். தன்னுடைய எம்.ஆர். ராதா நாடக மன்றத்திலிருந்து யாராவது விலகிச் செல்லும்போது, அவர்கள் நினைத்துப் பார்க்க முடியாத பெருந்தொகையைக் கொடுத்து வாழ்த்தி வழி யனுப்புவது ராதாவின் பழக்கமாக இருந்தது.

கிட்டத்தட்ட வருடத்தின் 365 நாள்களும் நாடகங்கள் இருந்து கொண்டே இருந்தன. என்றாவது ஒருநாளாவது லீவு கிடைக்குமா என்று குழுவினர்கள் ஏங்கித் தவிக்கும் அளவுக்கு நாடகங்கள் நடந்துகொண்டே இருந்தன. ஆனால் எந்த நிலை யிலும் யாரும் சோர்ந்து போகாதபடி உற்சாகப்படுத்துவார் ராதா.

குறிப்பாக, தன் குழுவினருக்கு உணவளிக்கும் விஷயத்தில் கடுமையாகவே நடந்துகொண்டார். கடுமை என்றால்? சமையல் சரியில்லை என்றால் சமையல்காரன் செத்தான். ராதாவின் வாயிலிருந்து கிளம்பும் கெட்ட வார்த்தைகள் அவனைச் சுட்டுப் பொசுக்கிவிடும்.

வாரத்தில் மூன்று நாள்களாவது அசைவம் போட வேண்டு மென்பது ராதாவின் கட்டளை. மீன், மட்டன் அதில் பிரதானமாக இருக்கும். ராதாவுக்கும் சமைப்பதில் ஆர்வம் உண்டு. நேரம் கிடைக்கும்போதெல்லாம் மட்டன் சமைப்பதில் ஆர்வம் காட்டுவார் ராதா. அவர் அன்று சமைக்கப் போகிறார் என்றதுமே குழுவினருக்கு எச்சில் ஊற ஆரம்பித்துவிடும். ராதா சமையலில் எம்டன்.

தன் குழுவினருக்குத் தானே உணவு பரிமாறுவதிலும் ஆர்வம் காட்டுவார் ராதா. அவரது குழுவில் சுத்த சைவ பார்ட்டிகளும் இருந்தார்கள். அவர்களுக்குத் தனிப்பந்தி நடைபெறும். அப்போது ராதா அடிக்கும் கமெண்ட், ‘அவங்க எல்லாம் தீண்டத்தகாதவங்க. தனியா உட்கார்ந்து சாப்பிடட்டும்.’

ஒரு ஸ்டுடிபெக்கர் கார், இரண்டு வேன்கள். ராதாவின் கம்பெனிக்குச் சொந்தமாக இருந்தன. காரில் நடிகைகளை ஏற்றிக் கொள்வார். ஒரு வேனில் மற்ற நடிகர்கள் வருவார்கள். இன்னொரு வேனில் சாமன் செட்டுகள் வரும். கம்பெனியை நிர்வகித்து வந்த சாம்பு அய்யரின் மேல் மிகுந்த மரியாதை வைத்திருந்தார் ராதா. அவர் தன்னுடன் காரில் வரப்போகிறார் என்றால், பெண்களிடம் ரகசியமாகக் கடிந்துகொள்வார். ‘அடியேய், வேன்ல வாங்கடி, கார்ல ஏறாதீங்கடி...’

பெரிய பேபி, நீலா, ரமணி, பிரேமா, சுகுணா (மற்றும் சிலர்) இவர்களெல்லாம் ரத்தக் கண்ணீரில் காந்தாவாகவும் சந்திரா வாகவும் நடித்த பெண்கள். குறிப்பாக சந்திரா கேரக்டரில் நடித்த நீலா பேரழகி என்றும், ராதா அவரைக் காதலித்து, திருமணம் செய்துகொண்டார் என்றும் செய்திகள் உண்டு.

சுந்தரம் என்பவர் ரத்தக்கண்ணீரில் வேலைக்கார ராமன் வேஷம் போட்டு வந்தார். அவர் திடீரென கம்பெனியிலிருந்து வெளி யேறினார். அப்போதுதான் அறிவானந்தம் என்கிற பன்னிரண்டு வயது சிறுவன் சேர்ந்திருந்தான். ராதா அந்த வேடத்தை அந்தச் சிறுவனிடம் கொடுத்தார். அவனோ நடுங்கிக் கொண்டு நின்றான்.

'டேய் அறிவு, இங்க வாடா, என்னடா பயமா இருக்கா?' ராதா கேட்டார். அவன் ஆமாம் என்று தலையசைத்தான்.

'நம்மளைப் பார்க்க காசு கொடுத்து டிக்கெட் வாங்கிட்டு வந்திருக்கான். அவங்களைவிட நாம மூணு அடி உயரத்துல இருக்கோம். முன்னால் இருக்கறவனுக்கெல்லாம் ஒண்ணும் தெரியாதுன்னு நினைச்சுட்டு நடிடா!'

ராதா உற்சாகப்படுத்த அறிவுக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் பயம் தெளிந்தது.

வசனங்களை ராதா உள்வாங்கிக் கொள்ளும் விதமே அலாதி யானது. 'அறிவு, ஆரம்பிக்கலாமா?' கேட்டுவிட்டு நாற்காலியில் சாய்ந்து கண்களை மூடி உட்கார்ந்து கொள்ளுவார். அறிவு வாசிக்க ஆரம்பிப்பான். ராதாவிடமிருந்து பதிலோ, அசைவோ இருக்காது. அவர் தூங்கி விட்டாரோ என்று நினைத்து அறிவு நிறுத்துவான்.

'ம்..' என்று குரல் கொடுப்பார் ராதா. தொடர்ந்து மூன்று நாள்கள் வாசித்தால் போதும். அதற்குப் பின் ராதாவுக்குப் பாடம் தேவை யில்லை. அவரது ஞாபக சக்தி அந்த அளவுக்கு அபாரமானது.

அந்தக் காலத்தில் நவாப் ராஜமாணிக்கம் கம்பெனி நாடக செட்டுகளுக்காகவே மக்கள் நாடகம் பார்க்க வருவார்கள். பெரிய பாம்பு, பிளக்கும் கடல், சிருங்கார அரண்மனை, பிரும்மாண்ட தேவலோகம் என்று அசர வைத்தார்கள் மக்களை. ஆனால் ராதா அதற்கு நேர் எதிர்.

நீலநிறப் படுதா, அதில் காடு என்றிருக்கும். காட்சி மாறும். சிவப்பு நிற படுதா, அதில் வீடு என்று இருக்கும். அடுத்து பச்சை நிறப் படுதா. அதில் பொது இடம் என்றிருக்கும். மற்றபடி எந்த செட்டிங்கும் கிடையாது. மக்கள் படுதாவைப் பார்த்து எங்கு காட்சி நடக்கிறது என்று புரிந்துகொண்டு ரசிப்பார்கள்.

‘மக்கள் என் நடிப்பைத்தான் பார்க்க வர்றாங்களே தவிர செட்டிங்கை இல்லே’ என்பார் ராதா.

பல நேரங்களில் வெளியூர் செல்கையில், செட் சாமான்கள் எதை யும் எடுத்துச் செல்லாமல் வெறும் படுதாக்களை வைத்து வெற்றி கரமாக நாடகம் நடத்தியிருக்கிறார் ராதா. அதிலும் குறிப்பாக ‘ரத்தக்கண்ணீர்’ அப்படி பலமுறை அரங்கேறியிருக்கிறது.

தன் வாழ்நாளில் மட்டும் ராதா, புதிய புதிய காட்சிகளுடன், புத்தம் புதிய வசனங்களுடன் கிட்டத்தட்ட ஐயாயிரம் முறைக்கும் மேல் ‘ரத்தக்கண்ணீர்’ நாடகத்தை மேடையேற்றியிருக்கிறார்.



M.R. ராதா

9

# உப்பு, புளி, சினிமா

கையில் லட்டுபோல ஒரு ஸ்கிரிப்ட். ஏற்கெனவே மக்கள் மத்தியில் பெருமளவு வரவேற்பு பெற்ற ஸ்கிரிப்ட். அதனைத் திரைப்படமாக்கினால் கொள்ளை லாபம் உத்தரவாதம். எந்தத் தயாரிப்பாளருக்குத்தான் ஆசை இருக்காது?

எல்லோருக்கும் ஆசையிருந்தது. ஆனால் அந்த லட்டு ராதாவின் கையில் இருந்ததால், எல்லோரும் தள்ளி நின்று ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்தனர். ஸ்கிரிப்ட்டை வைத்துக்கொண்டு வேறு யாரையாவது வைத்துப் படமெடுக்கலாம்தான். ஆனால் யார் இந்தக் கதாபாத்திரத்தில் நடிக்க முன்வருவார்கள்? அப்படியே நடித்தாலும் ராதாபோல நடிக்க முடியுமா என்ன? எடுபடாதே. முரட்டுத்தனமான மனிதர், கலகக்காரர் என்ற இமேஜ் ராதாவைச் சுற்றி உருவாகியிருந்ததால், பல தயாரிப்பாளர்கள் ராதாவை நெருங்க பயந்தனர்.

ராதாவுக்கும் அப்போது சினிமா மேல் விருப்பம் இருக்கவில்லை. பழைய

அனுபவங்கள் கொடுத்த பாகற்காய் கசப்பு. நாடகங்களே மன நிறைவைத் தந்தன. கூடவே கழகப் பணிகள். நிற்க நேரமில்லை. கூட்டம் கூட்டமாகச் சென்று பகுத்தறிவுப் பிரசாரம் செய்யத்தான் நேரம் சரியாக இருந்தது.

நேஷனல் பிக்சர்ஸ் பி.ஏ. பெருமாள் அப்போது ராதாவைத் தேடி வந்தார். லட்டு பற்றிப் பேசத்தான். நந்தனார் படத்தில் நடித்த தற்காக கே.பி. சுந்தாராம்பாள், ஜெமினி வாசனிடம் ஒரு லட்ச ரூபாய் சம்பளம் வாங்கியிருக்கிறார் என்று பரபரப்பாகப் பேசப் பட்ட காலம் அது.

'ம்... இந்த சினிமாக்காரங்க பழக்கத்தை விட்டே ரொம்ப வருஷம் ஆச்சு. இப்போ நீங்க விரும்பிக் கூப்பிடறீங்க. வரேன். ஆனா, எதிலுமே என் வழி தனி வழின்னு உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும்.'

'ஓ... நல்லாத் தெரியுமே. எல்லாத்தையும் தெரிஞ்சுக்கிட்டுத் தானே வந்திருக்கேன். என்ன பண்ணனும் சொல்லுங்க?'

'சினிமாவுக்காக நாடகத்தை விட மாட்டேன். எனக்கு நாடகம்தான் பெரிசு. சினிமா சைட் பிஸினஸ் மாதிரி. ஒற்றைவாடைத் தியேட்டர்ல என் நாடகம் தொடர்ந்து நடக்கும். அது முடிஞ்சு ராத்திரியிலேதான் என்னால படப்பிடிப்புக்கு வரமுடியும். சம்மதமா?'

'அதுக்கென்ன, தாராளமா வைச்சுக்கலாம்.'

'நான் நாடக நடிகன். காமிராவின் இஷ்டத்துக்குத் திரும்பித் திரும்பி நான் நடிக்க மாட்டேன். என் இஷ்டத்துக்குத்தான் காமிரா திரும்பித் திரும்பி என்னைப் படம் பிடிக்கணும். என்ன சொல்றீங்க?'

'சரி.'

'சமீபத்துல வாசன், கே.பி.எஸ்ஸுக்கு ஒரு லட்ச ரூபாய் சம்பளம் கொடுத்திருக்கார். எனக்கு நீங்ககூட இருபத்தஞ்சாயிரம் போட்டு ஒண்ணே கால் லட்சமா கொடுத்துருங்க.' 'அதுக்கென்ன, தாராளமா செஞ்சுட்டாப் போச்சு' பெருமாள் எல்லாவற்றுக்கும் சம்மதித்தார்.

நேஷனல் பிக்சர்ஸ் அளிக்கும் 'ரத்தக்கண்ணீர்.' செய்தித் தாள்களில் விளம்பரம் வந்தது.



பலருக்குச் சந்தோஷம். ஆனால் எதிர்மறை கருத்துகளும் வெளிவந்தன.

'இதுவரை படமாக்கப்பட்ட நாடகங்கள் பல தோல்வியைத் தழுவியிருக்கின்றன. இது என்ன ஆகுதுன்னு பார்க்கலாம்.'

'நாடகத்துல ராதா தினமும் பத்திரிகை செய்தியைப் படிச்சுக் காட்டி டூப் விட்டு ரசிக்கச் செய்யறார். சினிமாவிலயும் அப்படிச் செய்ய முடியுமா என்ன?'

'ஏதோ கத்துகிறார். நடிப்பா அது? நாடகமாக இருப்பதால் ஒன்றும் தெரியவில்லை. சினிமாவாக வந்த பின்பு பாருங்களேன்.'

'நாடகமாகப் பார்த்தவர்கள், படமாக வெளிவந்தபின் மீண்டும் பார்க்கப் போகிறார்களா என்ன? ஏற்கெனவே பார்த்த கதைதானே.'

விமரிசனங்கள் ஒருபுறம் வந்து விழுந்து கொண்டேயிருந்தன. பிரகாஷ் ஸ்டூடியோவில் படத் தொடக்க விழா (1952) நடைபெற்றது. நரசு ஸ்டூடியோவில் படப்பிடிப்பு ஆரம்பமானது. பின்பு ரேவதி ஸ்டூடியோவிலும் தொடர்ந்தது. கதை, வசனம் திருவாரூர் தங்கராசு. கிருஷ்ணன்-பஞ்சு இயக்கம். சந்திரா பாத்திரத்தில் நடிக்க ஸ்ரீரஞ்சனி ஒப்பந்தமானார். காந்தா என்ற தாசி கேரக்டரில் நடிக்க யாருமே கிடைக்கவில்லை. அப்போதைய முன்னணி நடிகைகள் எல்லோருமே முகம் சுளித்தார்கள் அல்லது விலகி ஓடினார்கள். தேடல் நீண்டது.

இரவு நாடகம் முடிந்து வீட்டுக்கு வந்து கொஞ்சம் ஓய்வெடுப்பார் ராதா. அப்போது அவரது வீட்டில் மணக்க மணக்க சாப்பாடு தயாராகும். சிறிது ஓய்வுக்குப் பின், வீட்டிலிருந்து ஸ்டூடியோவுக்குக் கிளம்புவார் சாப்பாடுடன். ராதாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் இருந்ததால், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டிலிருந்து சாப்பாடு வரும். செட்டில் எல்லோரும் ராதாவின் வருகைக்காகக் காத்திருப்பார்கள். பசியுடன். நல்ல சாப்பாட்டுக்காக.

ராதா வந்ததும் சாப்பாட்டை இறக்கச் சொல்லுவார். எல்லோருக்கும் பரிமாறச் சொல்லுவார். சில சமயங்களில் மீன், மட்டனைத் தானே பரிமாறுவார். எல்லோரும் உண்டு முடிக்க மணி பத்தைத் தாண்டிவிடும். பின்பு ராதா சாப்பிடுவார்.

மீந்துபோகும் சாதத்தில், வெங்காயம் போட்டு, காய்ச்சிய பாலை ஊற்றி, அதில் தயிரைவிட்டு மூடி வைத்துவிடுவார்.

பதினோரு மணியளவில் படப்பிடிப்பு ஆரம்பமாகும். ஆரம்ப மான பின் ராதா மிகவும் உற்சாகமாக மாறிவிடுவார். அவரது முகத்தில் சோர்வைக் காணவே முடியாது. காலை ஐந்து மணி வரை வேலை நடக்கும்.

'எல்லாரும் முகத்தைக் கழுவிட்டு, பல்லைத் தேய்ச்சிட்டு வாங்க' என்பார் ராதா. வந்தவுடன் அந்தத் தயிர்சாதத்தைப் பரிமாறுவார். பின்பு வீட்டுக்குக் கிளம்புவார்.

சில நேரங்களில் நாடகம் முடிந்துவந்து வீட்டிலேயே அசந்து தூங்கிவிடுவார் ராதா. கால தாமதமாவது தெரிந்தால் பெருமாளே நேராக ராதாவின் வீட்டுக்கு வருவார். ராதாவை எழுப்பி படப் பிடிப்புக்கு அழைத்துச் செல்லுவார். மற்ற யாரையும் அனுப்ப மாட்டார். ராதாவை எழுப்பும் தைரியம் மற்றவர்களுக்கு இருக்குமா என்ன? சில சமயங்களில் செட்டுக்கு வந்து தூங்குவார். பெருமாள் வந்து எழுப்புவார். சடாரென எழுந்து, 'ரெடி, டேக்' என்பார் ராதா.

ஆறு மாதத் தேடலுக்குப் பிறகு காந்தா கதாபாத்திரத்தில் நடிக்க எம்.என். ராஜம் என்ற அறிமுக நடிகை ஒப்பந்தமானார். ராஜம் அப்போது டி.கே. சண்முகம் நாடகக் குழுவில் நடித்துக் கொண்டிருந்தார். கிருஷ்ணன் பஞ்சுவுக்குத் தெரிந்த பெண். ஆனால் ராஜத்துக்கு ராதா பற்றி எதுவுமே தெரியாது. சினிமா வாய்ப்பு கிடைக்கிறதே என்று ஒப்புக்கொண்டார்.

ரிகர்சல் எல்லாம் இல்லை. நேராக ஷாட்டுக்குச் சென்று விட்டார்கள். நவநாகரிக மோகன், காந்தாவுடன் பூங்காவில் உல்லாசமாகப் பேசிக்கொண்டு வருவது போன்ற காட்சிதான் முதலில் எடுக்கப்பட்டது. ராதாவின் நாடகங்கள் எதையும் பார்த்திராத, அவரது நடிப்பாற்றலை அறிந்திராத ராஜம் இயல்பாக நடித்தார். அதுவே டைரக்டர்களுக்குப் போதுமான தாக இருந்தது.

ஒருநாள் ராதா, ராஜத்தை அழைத்து அறிவுரை கூறினார்.

'நீ காந்தா கேரக்டரில் நல்லா நடிக்கணும். இது உனக்கு ரொம்ப நல்ல பேரு வாங்கிக் கொடுக்கப் போற கேரக்டர். நான்

கஷ்டப்பட்டு நடிச்சு, நீ பேசாம இருந்தா, என்ன இவரு இந்த அளவுக்கு அதிகமா நடிக்குறாரு, இந்தப் பொண்ணு நடிக்கவே இல்லைன்னு சொல்லுவாங்க ஆடியன்ஸ். அதனால நீ எனக்குச் சரிசமமா நடிக்கணும். ராதாவா ராஜமான்னு மக்கள் பேசணும்.'

'சரிண்ணே' என்று தலையாட்டினார் ராஜம்.

ஸ்டூடியோவில் ஒரே ஒரு மேக்-அப் ரூம்தான். ஹீரோவும் ஹீரோயினும் அங்கேதான் மேக்-அப் செய்துகொள்ள வேண்டும். ராதாவுக்குக் குஷ்டரோகி மோகனாக மேக்-அப் நடந்து கொண்டிருந்தது. மேக்-அப் மேன் கோபால்ராவ். உடலெல்லாம் கோரமாக, ரத்தம் ஒழுகுவது போல, சீழ் வடிவது போல. ஆனால் அங்குதான் ராஜமும் உட்கார்ந்து தனக்கான மேக்-அப்பை போட்டுக்கொண்டிருந்ததால், அவருக்கு எதுவும் அருவருப்பாகத் தெரியவில்லை. அதனால் ஷாட்டில் நடிக்கும்போது, ராஜத்தால் எந்தவிதத் தயக்கமுமின்றி ராதாவுடன் சேர்ந்து நடிக்க முடிந்தது. பல காட்சிகளில் ராஜத்துக்கு நடிப்பு சொல்லிக் கொடுத்தார் ராதா.

மோகனை, காந்தா படியில் இருந்தபடியே எட்டி உதைக்கும் காட்சி அப்போது படமாக்கப்படவிருந்தது. காட்சியைக் கேட்டதுமே ராஜத்துக்கு என்னவோ போலாகிவிட்டது. தயங்கித் தயங்கி ராதாவிடம் போய் நின்றார்.

'என்னம்மா? ஷாட்டுக்குப் போகலாமா' என்றார் ராதா.

'அண்ணே நீங்க மூத்த நடிகர். நான் சின்னப்பொண்ணு. எப்படி உங்களை எட்டி உதைக்கிறது?' மென்று விழுங்கிப் பேசினார்.

'அதெல்லாம் ஒண்ணும் கிடையாது. கேமராவுக்கு முன்னாடி நீ ராஜம் இல்லை. நான் ராதா இல்லை. நீ காந்தா. நான் மோகன். இது படத்துல வர்ற காட்சி. கதைப்படி நீ எட்டி உதைக்கத்தான் செய்யணும்.'

'என்னால முடியாதுண்ணே' என்று தர்ம சங்கடத்துடன் சொல்லிவிட்டார் ராஜம்.

ராதாவிடம் கிருஷ்ணன் பஞ்சு வந்தார்கள். 'அந்தப் பொண்ணு எட்டி உதைச்சு. இந்த ஸீனை எடுக்கலைன்னா நான் ஆக்ட் பண்ண மாட்டேன்' கறாராகச் சொன்னார் ராதா.

பஞ்சு, ராஜத்திடம் சென்றார். 'இங்க பாரும்மா. இவ்வளவு நாள் படத்துல நீ கஷ்டப்பட்டு நடிச்சிருக்க. படமும் நல்லா வந்திருக்கு. உனக்கும் நல்ல பேரு கிடைக்கப் போகுது. இப்போ நீ இந்த ஒரு ஸீன்ல நடிக்க மாட்டேன்னு சொன்னா படத்துல இருந்தே உன்னைத் தூக்கிருவாங்க. என்ன சொல்லுற?'

சினிமாவுக்குள் வரும் ஒவ்வொருவரும் உயரத்துக்குப் போகவேண்டும் என்ற லட்சியத்துடன்தானே வருவார்கள். அந்தக் கனவைச் சிதைய விடுவார்களா என்ன? எட்டி உதைக்க ஒப்புக்கொண்டார் ராஜம், இல்லையில்லை காந்தா.

காட்சிக்குத் தயாரானார்கள். 'ரிகர்ஸல் எல்லாம் வேண்டாம். நேரா ஷாட்டுக்குப் போயிடலாம்' என்றார் ராதா.

ராஜம் உதைத்தார். ராதா விழவில்லை. பதற்றத்தோடு உதைத்த வேகத்தில் ராஜம்தான் தடுமாறி விழுந்தார். 'இங்க பாரும்மா. பத்துத் தடவை உதைக்காதே. ஒரே தடவையா உதை. ஆனா பலமா உதை' என்று சொல்லிவிட்டு ரெடி என்றார். இந்தமுறை சரியாக எட்டி உதைத்தாள் காந்தா. படிகளில் உருண்டு விழுந்தான் மோகன். ஷாட் ஓகே ஆனது. ராதாவுக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டு, ரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது. பதறிய ராஜம், ராதாவிடம் ஓடி வந்து மன்னிப்புக் கேட்டார்.

'ஒரு நடிகையா நீ காட்சிக்கு வேண்டியதைத்தான் செஞ்சிருக்க. உன் தப்பு ஒண்ணுமே இல்லை. நீ நல்ல நடிகையா வருவே' ஆசீர்வாதம் செய்தார் ராதா. அவருக்கு உடனே முதலுதவி செய்யப்பட்டது. சிறிது ஓய்வுக்குப் பின் படப்பிடிப்பு தொடர்ந்தது.

படத்தின் க்ளைமாக்ஸ் காட்சியில் மோகன், தன் மனைவி சந்திராவை நண்பன் பாலுவிடம் கைப்பிடித்துக் கொடுக்கும் காட்சி. இது ராதாவாக யோசித்த காட்சி. எல்லோரும் கொஞ்சம் தயங்கினார்கள். மக்கள் ஏற்றுக் கொள்வார்களா? சர்ச்சை உண்டாகுமே? சமுதாயச் சீர்கேடு என்றெல்லாம் குதிப்பார்களே? டைரக்டர்கள் தயங்கினார்கள்.

இதுதான் க்ளைமாக்ஸ். இந்தக் காட்சி வைக்காவிட்டால் நான் மேற்கொண்டு நடிக்கமாட்டேன் என்று கறாராகச் சொல்லி விட்டார் ராதா. இந்தப் பிரச்னையிலேயே சில மாதங்கள் படப் பிடிப்பு நின்றுபோனது. பின்பு ராதாவின் விருப்பப்படியே க்ளைமாக்ஸ் படமாக்கப்பட்டது.

மொத்தமாக இரண்டு வருடங்கள் ஓடிப் போயிருந்தது. 'என்ன நேஷனல் பிக்சர்ஸ்காரங்க ரத்தக்கண்ணீர் வடிக்கிறாங்களாமே?' என்று வெளியே பேசிக் கொண்டனர். பணம் தண்ணீராகச் செலவழிகிறது, பெருமாள் மாட்டிக்கொண்டார் என்று பத்திரிகைகள் எழுதின. அந்தச் சமயத்தில் 'தென்னாட்டுத் திரை வரலாற்றில் மீண்டும் ஒரு பொன்னேடு. நேஷனல் பிக்சர்ஸ் தயாரித்து வழங்கும் 'ரத்தக்கண்ணீர்' - தீபாவளித் திருநாள் முதல்' என்ற சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. வருமா வராதா என்று கேள்வியெழுப்பியவர்களுக்கும் ஓர் எதிர்பார்ப்பு உண்டானது.

'அண்ணே படத்தோட பேரு 'இரத்தக்கண்ணீர்'னு 'இ' சேர்த்துக்கலாம்ணே!' ராதாவிடம் கேட்டார் ஒருவர்.

'எதுக்கு?'

'இல்ல, 'ரத்தக்கண்ணீர்' எட்டெழுத்து. சரிவராது. 'இ' சேர்த்தா ஒன்பது எழுத்து. ராசி. படம் நல்லா ஓடும்.'

'போடா, அதெல்லாம் மாத்தமுடியாது. அப்புறம் என்ன பகுத்தறிவுக்கு மரியாதை. ரத்தக்கண்ணீர்தான்.'

1954 தீபாவளித் திருநாளன்று (நவம்பர் 6) 'ரத்தக்கண்ணீர்' வெளியானது. பெருமாள் ஆர்வமாக டாக்கீசுக்குப் போனார். பாதியிலேயே வீட்டுக்கு வந்து கவலையுடன் படுத்துக் கொண்டார். காரணம், படம் பார்த்துவிட்டு வெளியே வந்த வர்கள் முகத்தில் எந்தவொரு மகிழ்ச்சிக் கோடுகளும் அவருக்குத் தென்படவில்லை. ரசிகர்களிடமிருந்து அவர் நிறைய எதிர்பார்த் தார். ஆனால் சலனமில்லாமல் மக்கள் வெளியேறுவதைக் கண்டு அவர் துவண்டு போனார். உடனே அங்கிருந்து கிளம்பினார்.

ஆனால் மெல்ல மெல்ல 'ரத்தக்கண்ணீர்' படத்தை மக்கள் விரும்ப ஆரம்பித்தார்கள். சாயங்காலக் காட்சிகளில் கூட்டம் நிரம்பி வழிய ஆரம்பித்தது. எல்லாப் பத்திரிகைகளும் பாராட்டித் தள்ளின. ஒருமுறை பார்த்தவர்கள் மறுமுறை, இன்னொரு முறை என்று மீண்டும் மீண்டும் டாக்கீசுக்கு வந்துகொண்டே இருந் தார்கள். புரட்சிகரமான க்ளைமாக்ஸ் முதலில் சலசலப்பை ஏற்படுத்தினாலும், நாளடைவில் அதற்காகவே படம் வெற்றி பெற்றது என்று சொல்லுமளவுக்கு மாறியது.

ஒருநாள், ஒருவர் ரத்தக்கண்ணீர் படம் பார்த்துக் கொண்டிருந்தார். காந்தா மோகனை உதைத்துத் துரத்தும் காட்சி, குற்றம் புரிந்தவன்

பாடல் எல்லாம் ஓடிக் கொண்டிருந்தது. அந்த நபர் அழ ஆரம்பித்துவிட்டார். பின் தன்னருகிலிருந்த நபரிடம் 'யார் இந்த நடிகர்?' என்றார். அருகிலிருந்தவருக்குப் பேரதிர்ச்சி.

'என்னது இவரைத் தெரியாதா? தமிழ்நாட்டுக்கே தெரியுமே. இவர்தான் எம்.ஆர். ராதா.'

'ஓ அப்படியா. எனக்கு பம்பாய். இப்ப இங்க வந்திருக்கேன். தமிழ் கொஞ்சம் புரியும். இந்தப்படம் ஹிந்தியில எடுத்தா நல்லா ஓடும். ஆனா இவர் மாதிரி அங்க யாராலயும் நடிக்கமுடியாது' என்று ஆதங்கப்பட்டுக் கொண்டார்.

அந்தச் சமயத்தில் பெரியார் சினிமாவுக்கு எதிரான பல்வேறு கருத்துகளைப் பரப்பி வந்தார். அந்தக் கருத்துகளின் தாக்கத்தால் சினிமாத் துறையே கொஞ்சம் ஆட்டம் கண்டுதான் இருந்தது. இந்நிலையில் பெரியார் ரத்தக் கண்ணீரைப் பார்த்தார். கருத்து சொன்னார்.

'சினிமாப் பார்ப்பதில் எனக்கு விருப்பம் இல்லை. ஆனால் சந்தர்ப்பங்கள் சில படங்கள் பார்க்க வைத்துவிட்டன. அதில் 'ரத்தக்கண்ணீர்' ஒன்று.நடித்து மக்கள் ஆதரவைப் பெற்ற தோழர் ராதா, குஷ்டரோகியாக திறம்பட நடித்து சினிமாவிலும் தன்னை நிரூபித்துக் கொண்டார்.'

படப்பிடிப்பில் ராதா சரியாக ஒத்துழைக்காத நேரத்தில், பெருமாள் சென்று பெரியாரைச் சந்தித்ததாகவும், பின் பெரியார் சொன்னதன் பெயரில் ராதா படத்தை முடித்துக் கொடுத்ததாகவும் ஒரு தகவல் உண்டு.

சரி, ரத்தக்கண்ணீர் வெற்றிக்குப் பின் ராதா கூறிய கமெண்ட் என்ன?

'ரத்தக்கண்ணீர் சினிமாப் படத்தில் நான் கோ-ஆப்பரேட் பண்ணியது பெரிய விஷயம். கொஞ்ச நேரம் எங்கேயாவது போய் வேலை செய்தால் உப்பு, புளிக்கு எதாவது கிடைக்கும் என்று சொல்லுவார்களே, அதைப் போலத்தான் எனக்கு சினிமா வேலை. எனக்குச் சினிமா ஒத்து வரவில்லை. அன்றைக்கும் சரி. இன்றைக்கும் சரி.

நான் சினிமாவில் கோ-ஆப்பரேட் பண்ணவில்லை என்று சில பேர் சொன்னார்களென்றால் அதற்குக் காரணம் என்ன என்று



என்னிடம் யாரும் பேச முடியாது. அதைப்பற்றிப் பேசக்கூடிய யோக்கியதை யாருக்கும் இல்லை. நான் எப்போதும் சொன்னால் சொன்னதுதான். மீறி நடக்க யாருக்கும் தகுதி கிடையாது. நண்பன் என்கிற முறையில் என்னைக் கேட்டுக் கொள்ளலாமே தவிர யாரும் ஆர்டர் போட முடியாது.'

●

'ரத்தக்கண்ணீர்' படத்துக்குப் பிறகு அதில் நடித்த நடிகர் சந்திரபாபுவுக்கு பல வாய்ப்புகள் வந்தன. காந்தாவாக நடித்த எம்.என். ராஜத்துக்கும் நிறைய வாய்ப்புகள் கிடைத்தன. ஆனால் ராதாவுக்கு?

தயாரிப்பாளர்கள் அவரை நெருங்க பயந்தார்கள். அவரைச் சுற்றி அப்படி ஒரு இமேஜ் வட்டம் உருவாகியிருந்தது. ராதாவை நடிக்க வைக்கலாம். ஆனால் ஹீரோவாகவா நடிக்க வைக்க முடியும்? அவர் ரத்தக்கண்ணீரிலேயே நெகட்டிவ் ரோல்தானே செய்திருக்கிறார். எனில், வில்லன் வேடம் கொடுக்கலாமா? அய்யய்யோ, அதை அவரிடம் எப்படிப் போய்க் கேட்பது என்று சிலர் ஒதுங்கிக் கொண்டார்கள். ரத்தக் கண்ணீருக்கு அவர் வாங்கிய சம்பளமும் தயாரிப்பாளர்களை பின்வாங்க வைத்தது.

ராதாவும் அந்தச் சமயத்தில் அடுத்தடுத்த பட வாய்ப்புகளை யெல்லாம் எதிர்பார்க்கவுமில்லை. வாய்ப்பு தேடி பட கம்பெனிகளின் கதவைத் தட்டும் பழக்கமும் அப்போது அவருக்கிருக்கவில்லை. நாடக மேடைகளில் ராதாவின் ராஜாங்கம் தொடர்ந்து கொண்டிருந்தது.



10

# கோர்ட் ஏறட்டும் குடிகாரக் கடவுள்

ராமாயணம் நாடகத்தின் மூன்றாவது காட்சி ஆரம்பமாகிறது.

ராமர் மேடையில் அறிமுகமாகிறார். ஒரு கையிலே மதுக் கலயம். மற்றொரு கையிலே மாமிசத் துண்டு. அருகில் சீதா. அங்கு மது அருந்திக் கொண்டிருக்கும் லட்சுமணனிடம் பேச ஆரம்பிக்கிறார்.

'லட்சுமணா மது, மாது... மனுஷனுக்கு வேறு என்னடா வேணும்?'

ராமர் வேடத்தில் ராதா. காட்சி வளர்ந்துகொண்டே செல்கிறது. மக்கள் கைதட்டி ஆர்ப்பரிக்கின்றனர். திடீரென ஒரு கும்பல் எழுந்து 'நாடகத்தை நிறுத்து' என்று கலகம் செய்ய ஆரம்பிக்கின்றனர். நாடகம் தடைபடுகிறது. ராதா மேடை மேலிருந்து பெருங்குரலெடுத்துக் கத்த ஆரம்பிக்கிறார்.

'இது பகுத்தறிவை ஊட்டக்கூடிய நாடகம். நான் அதைச் செய்து கொண்டி ருக்கிறேன். இது சந்தை. இந்தச் சந்தை


ராமர் வேடத்தில் ராதா

யில் ஒருநாள் மீன் விக்கும், ஒரு நாளைக்கு கத்தரிக்காய் விக்கும். உனக்கு மீன் பிடிக்காதுன்னா மீன் கடைக்கு வராதே. இங்க வந்துட்டு ஏன் மீன் நாறுது மீன் நாறுதுன்னு கத்துற? மீனுன்னா அப்படித்தான் இருக்கும். நான் விக்குறது மீனு. அப்படித் தான் நான் பேசுவேன். உனக்கு கத்தரிக்காய்தான் பிடிக்கு முன்னா கத்தரிக் காய் விக்குறப்போ வா. இப்போ வந்துகிட்டு ஏன் பிரச்னை பண்ணுற? உனக்குப் பிடிக்கலேன்னா டிக்கெட் கௌண்டர்ல காசைத் திருப்பி வாங்கிட்டுப் போ.'

கலவரக்காரர்கள் தொடர்ந்து பிரச்னை செய்யவே, ராதாவே மேடையை விட்டு இறங்கினார். மக்கள் மத்தியில் பாய்ந்தார். உடன் அவரது ஆள்களும் களமிறங்கினார்கள். கலவரக்காரர் களை அடித்து விரட்டினார்கள். அதற்குப் பின் நாடகம் தொடர்ந்து நடைபெற்றது.

வால்மீகி ராமாயணத்தை அடிப்படையாகக்கொண்டு ராதா தயாரித்ததே ராமாயண நாடகம். வசனம் திருவாரூர் தங்கராசு. ஆரிய எதிர்ப்புக் குரலாக ஒலித்த வசனங்கள் பெரும் சர்ச்சையைக் கிளப்பின. ராமாயணம் நாடகத்தைத் தடை செய்ய வேண்டும் என்று பெரும் குரல்கள் எழுந்தன. ராதாவாயிற்றே, சலசலப்புக் கெல்லாம் அஞ்சுபவரா என்ன?

அவர் அப்போது பட்டுக்கோட்டையில் ராமாயண நாடகம் போட்டுக் கொண்டிருந்தார். பெருங்கூட்டம். அரங்கத்தினுள் இடமில்லாமல் பலர், வெளியே நின்று வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நாடகத்தின் முடிவில் நன்றி கூறி ராதா பேச ஆரம்பித்தார்.

‘சென்ற வாரம் நண்பர் ராஜ மாணிக்கம் அவர்களது நாடகத்துக்குத் தலைமை வகித்த மந்திரி திரு. சுப்ரமணியம் அவர்கள், வந்த வேலையை விட்டுவிட்டு வாய்க்கு வந்தபடி யெல்லாம் பேசியிருக்கிறார். நான் நடத்துவது ‘கீமாயணம்’ என்றும், கீழ்த்தரமான நாடகம் என்றும், இந்த நாடகத்தைப் பார்க்க மக்கள் கூசினார்கள் என்றும் பேசியிருக்கிறார். வேறு மேடையிலே நின்றுகொண்டு, இந்த நாடகத்தை வந்து பாராமலேயே குறை கூறுவது என்றால் அது சரியா?

மக்கள் ஏராளமாகப் பார்த்துப் பாராட்டுகிற நாடகம் இது. இப்படியிருக்கும்போது, இந்த மந்திரியார் இது கீழ்த்தரமான நாடகம் என்று கூறுகிறார். இது எவ்வளவு மட்டமான பேச்சு என்பதை நீங்கள் உணர வேண்டும். நாடகத்தைப் பார்க்க மக்கள் கூசுகிறார்கள் என்று பேசியிருக்கிறார் இந்த பக்திமான். நான் இங்கென்ன கும்பமேளாக் காட்சியா நடத்திக் காட்டுகிறேன் பக்தியின் பெயரால்? இல்லையே, நன்கு உடை உடுத்தித்தானே வருகிறோம் நாடகத்தில்.

கிராமத்திலே ரோட்டிலே போகிற காரைப் பார்த்து நாய் குரைக்கும். உடனே ஊருக்குள்ள இருக்குற நாயெல்லாம் குரைக்கும். ஊருக்குள்ள குரைக்குற நாய்க்குத் தெரியுமா ரோடிலே கார் போவது? எதையும் பார்க்காமலே பிறர் சொல்கேட்டு ஒரு பொறுப்புள்ளவர் பேசுவது பெருந்தவறு. ஆகவே நான் அவர்மீது வழக்குத் தொடரப் போகிறேன்.

ஆனால் இவரிடம் நியாயம் கிடைக்குமா என்பதில்தான் சந்தேகம். ஒருவருக்கு மூன்று பொறுப்பை (கல்வி, சட்டம், நீதி) அளித்திருக்கிறார்கள். சட்டமும் கோர்ட்டும் நிர்வகிக்கிற இவர் மேலேயே வழக்குத் தொடர்ந்தால், நியாயம் கிடைக்குமா என்பதுதான் என் சந்தேகம்’ கூட்டத்தின் கரகோஷம் அடங்க வெகு நேரமானது.

1954, நவம்பர் 27 அன்று அரசு கெஸட்டில் புதிய சட்டம் பற்றிய அறிவிப்பைக் கொண்டு வந்தது.

1876-ம் ஆண்டு நாடகச் சட்டம் கிட்டத்தட்ட எண்பது ஆண்டு களுக்கு முன் இயற்றப்பட்டது. அதிலிருந்தும் அதிலும் குறிப்பாக அரசியல் சட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்தும் நிலைமையில் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்தச்

சட்டத்தின் பல பகுதிகள் திருப்தியளிக்கக் கூடியதாக இல்லை. எனவே புதிய நாடகச் சட்டத்தைக் கொண்டு வர இருப்பதாக அந்த அறிக்கை கூறியது.

எந்த ஒரு நாடகமோ, நடிப்போ ஆட்சேபகரமானவை என்று ராஜ்ய சர்க்கார் கருதுமானால் அத்தகைய நாடகம், நடிப்பு பொது இடங்களில் நடந்துகொண்டிருந்தாலும் சரி அல்லது நடக்க விருந்தாலும் சரி, அதற்கு தடை விதிக்கலாம். ஒரு நாடகத் தினால் சமுதாயத்திற்குக் கேடு விளையும் என்று சர்க்கார் கருதினால், அதனைத் தடை செய்யலாம். தடை விதிக்கப்பட்ட பின் எவர் ஒருவர் அதற்குக் கீழ்ப்படியாமல் நாடகத்தையோ, நடிப்பையோ தொடர்ந்து நடத்தினாலும் நடத்த அனு மதித்தாலும் அதற்கு ஆறு மாதங்கள் வரை சிறைத் தண்டனையோ, அபராதமோ அல்லது இரண்டும் சேர்ந்தோ விதிக்கப்படும் இவை மேற்படி விவரங்கள்.

ராமாயண நாடகத்தைக் குறி வைத்து ஆளும் காங்கிரஸ் அரசு கொண்டு வந்துள்ள மசோதா இது என்று புரிந்துபோனது ராதாவுக்கு. அசராமல் ராமாயணத்தைத் தொடர்ந்து நடத்தினார். தினம் தினம் நாடக அரங்கம் கலவர பூமியாகவே மாறிக் கொண்டிருந்தது. அதுபோக, ராமாயணத்தை எதிர்த்து ஆங் காங்கே ஆர்ப்பாட்டங்கள், மறியல்கள் தனியாக நடைபெற்றன.

ராதாவும் எதிர் சவால் விட்டார்.

'நான் நடத்தும் ராமாயணம் இந்துக்களின் மனத்தை புண்படுத்து வதாகவும், ஆகவே அதை எதிர்த்துப் பலர் மறியல்கள் செய்யப் போவதாகவும் அறிந்தேன். எங்களையும் இந்துக்கள் என்றுதான் ஆட்சியாளர்கள் குறித்து வைத்திருக்கிறார்கள் என்பதை மறியல் செய்யும் தோழர்கள் அறிய வேண்டும்.

எண்ண, எழுத, பேச, எடுத்துச் சொல்ல அரசியல் சட்டத்தின் மூலம் மக்களுக்குப் பிரஜை உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அதன்படி என்னுடைய கருத்தை எடுத்துச் சொல்ல எனக்கும் உரிமை இருக்கிறது. தக்க ஆதாரத்தோடும், அரசாங்கத்தின் உத்தரவு பெற்றுத்தான் ராமாயணம் நாடகம் நாடெங்கும் நடைபெறுகிறது. இதைப் புரிந்துகொள்ளாமல் எதிர்த்து மறியல் செய்வோரை அரசாங்கமும் அனுமதித்தால், எதிரொலியாக நாங்களும் கீழ்க்காணும் முறையல் மறியல் செய்ய நேரிடும் என்பதை அறிவித்துக் கொள்ளுகிறேன்.

- இதிகாசம், புராணங்கள் நடக்கின்ற இடங்களிலெல்லாம் மறியல் செய்வது.
- திதி, திவசம், திருமணம் முதலிய இடங்களில் பார்ப்பனர்கள் அனுமதிக்கப்படுவதை எதிர்த்து மறியல் செய்வது.
- இதிகாசம். புராணம் குறித்து நடத்தப்படுகின்ற கதா காலட்சேபங்களை (அது அக்ரஹாரமாக இருந்தாலும் சரி) எதிர்த்து மறியல் செய்வது.

இந்த மறியல், சாத்வீக முறையில் அமைதியாக நடைபெறும்.

உடனடியாக எல்லோரும் சேர்ந்து நான் நடத்தும் ராமாயணத்தை தடைசெய்ய ஏற்பாடு செய்யும் நாளை எதிர்பார்க்கிறேன். தடை செய்யப்பட்டால்தான், தற்பொழுது வந்திருக்கும் நாடகப் புதுச் சட்டத்தின் மூலம் ராமாயணம் பற்றி உயர்நீதி மன்றத்தில் விவாதிக்க முடியும். ராமன் குடிகாரன், கடவுளல்ல அயோக் கியன் என்பதை விவாதித்து சட்டத்தின் மூலம் ராமாயணம் புனிதமான கதைதானா, மக்களுக்குத் தேவைதானா என்பதை முடிவு செய்ய முடியும். அப்பொழுதுதான் குடிகாரக் கடவுளான ராமன், கோர்ட்டின் மூலம் நாட்டில் தடுக்கப்படுவான். நாடும் நாட்டு மக்களும் ராமாயணத்தின் யோக்கியதையை, ஊழல்களை நன்றாகப் புரிந்து கொள்வார்கள். கோர்ட் ஏறட்டும், குடிகாரக் கடவுள் ராமன்!'

இது *1954*, நவம்பர் *29* அன்று எம்.ஆர். ராதா வெளியிட்ட அறிக்கை.

•

மதுரை. அன்று மாலை ராமாயணம் நாடகம் என்று அறிவிக்கப் பட்டிருந்தது. நாடகத்தை எப்படி நடத்துகிறாய் என்று பார்க்கிறேன் என்று பகிரங்க மிரட்டல் விடுத்தார் அணுகுண்டு அய்யாவு என்பவர்.

நாடகம் ஆரம்பமானது. ராமனாக நடித்துக் கொண்டிருந்தார் ராதா.

ராமன்: நாளை மறுதினம் நாம் அயோத்தி புறப்படவேண்டும். ஏற்பாடுகளைச் செய். மாருதி, நீ இன்றே புறப்பட்டு அயோத்திக்குப் போய், எங்கள் வருகையை

பரதனுக்குச் சொல். பதினான்கு ஆண்டுகள் முடிந்து விட்டதைக் கூறு. பெரும்படையோடும், விபீடணன், சுக்ரீவன் போன்ற பெரும் வீர வேந்தர்களோடும் நான் வந்து கொண்டிருப்பதாகச் சொல்.

அனுமன்: உத்தரவு பிரபு.

ராமன்: ஏனென்றால், பதவி மோகம் யாரையும் சும்மா விடாது. அதுவும் அரச பதவி மிகவும் ஆபத்தானது. ஒரு முறை அனுபவித்து விட்டால் பிறகு அந்த ஆசையை அகற்ற முடியாது. அதற்காகத்தான் சொல்லுகிறேன், நான் எப்படி வருகிறேன் என்பதை விளக்கமாக பரதனிடம் சொல்லி, அவன் முகம் எப்படி எப்படி மாறுகிறது என்பதையெல்லாம் தெளி வாகக் கவனி.

அந்த நேரத்தில் அரங்கத்தினுள் சில ரவுடிகளுடன் புகுந்து கலகம் செய்ய ஆரம்பித்தார் அய்யாவு. ராதா, தன் குழுவிலுள்ள பெண்களையும் சிறுவர்களையும் மட்டும் பத்திரமாக வண்டி யேற்றி அங்கிருந்து அனுப்பினார். பின்னர் கோதாவில் குதித்தார்.

‘டேய் அந்த ரிவால்வரை எடுடா. குண்டு ஃபுல்லா இருக்கா? ஆறு குண்டு ஆறு பேரு. சுட்டுத் தள்ளிடறேன்’ - அரங்கம் அதிரக் கத்தினார். யாருக்கும் ரிவால்வர் இருக்கிறதா என்றுகூடத் தெரியாது. ஆனால் அய்யாவு கும்பல் பயந்து சிதறி ஓடியது.

அன்றைய வசூல் தொகை மூவாயிரம் ரூபாய்.

•

ராமாயணத்தோடு ஊர் ஊராகச் சென்றார் ராதா. அவர் போகின்ற இடத்திலெல்லாம் ராமாயணத்துக்கு 144 தடை உத்தரவு போட்டது அரசு.

ஒருமுறை லட்சுமி காந்தன் நாடகம் போடப் போவதாகச் சொல்லி ராமாயணத்தை ஆரம்பித்தார் ராதா. சிறிது நேரத்தி லேயே போலீஸ் உள்ளே வந்தது. இன்ஸ்பெக்டர், ராதாவைப் பார்த்து ஆங்கிலத்தில் வேகமாகப் பேச ஆரம்பித்தார். ராதா மேடையில் நின்றபடி அவரது பாணியில் பதிலளித்தார்.

‘தமிழ்ல பேசுங்க. நீங்க பேசறது எல்லோருக்கும் புரியட்டும். ஆங்கிலத்தில் பேசினால் எனக்கு மட்டும்தான் புரியும்.’

இன்ஸ்பெக்டரும் தமிழில் பேச ஆரம்பித்தார்.

'இது தடை செய்யப்பட்ட நாடகம். நீங்க வேற பேர்ல போடுறீங்க.'

அதை அப்புறம் பேசலாம். என் நாடகத்தைப் பார்க்க உள்ள வரணும்னா மந்திரியா இருந்தாக்கூட டிக்கெட் வாங்கிட்டுதான் வரணும். நீங்க வாங்கிட்டீங்களா?' இன்ஸ்பெக்டர் விழித்தார்.

'வாங்கலையா? சரி பரவாயில்லை. உட்காருங்க. அய்யாவுக்கு சேர் எடுத்துப் போடு. நாடகம் முடிஞ்ச உடனே பேசிக்கலாம்' என்று நாடகத்தைத் தொடர ஆரம்பித்தார். இன்ஸ்பெக்டர் செய்வதறியாமல் நாடகம் முடியும் வரை காத்திருக்க வேண்டியதாயிற்று.

பின்னர் ராதாவைக் கைது செய்தார் இன்ஸ்பெக்டர். ராதா அதற்கு எந்த எதிர்ப்பும் காட்டவில்லை. ஆனால் மக்கள் 'கைது செய்யாதே' என்று கூப்பாடு போட ஆரம்பித்துவிட்டார்கள். மேடையை நோக்கி ஓடி வர ஆரம்பித்தார்கள். அந்தச் சூழலில் ராதா, மக்களைப் பார்த்துப் பேச ஆரம்பித்தார்.

'ஏன் கத்தறீங்க? அவங்க என்ன எங்க கைது பண்ணுறாங்க. ராமரைத்தானே கைது பண்ணுறாங்க. ராமனைக் கைது பண்ணனுங்கறதுதானே நம்மோட கோரிக்கையே. அதைத்தானே சொல்லிக்கிட்டிருக்கோம். விடுங்க, விடுங்க.'

அங்கிருந்த கலவரச் சூழல் நிறம் மாறியது. மக்கள் கலகலப்பானார்கள். 'ராதா வாழ்க' கோஷம் முழங்க, அவர் போலீஸாரால் அழைத்துச் செல்லப்பட்டார். மறுநாள் நீதி மன்றத்துக்கும் ராமர் வேடத்திலேயே சென்று வாதாடினார். ஒரு வார சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இப்படி எத்தனை தடைகள் வந்தாலும் ராதா விடுவதாக இல்லை. ஒரு கை பார்த்துவிடலாம் என்று எதற்கும் துணிந்து களமிறங்கி இருந்தார்.

அரசு 144 தடை உத்தரவு போடுவதும், அதை ராதா மீறுவதும், கைதாகி விடுதலையாவதும் வாடிக்கையாகப் போனது. நம்பியார் என்றொரு வக்கீல் சென்னையில் இருந்தார். தடை உத்தரவை எதிர்த்து ரிட் மனு போட நம்பியாரை நாடினார் ராதா.

அவர் கொஞ்சம் காஸ்ட்லி வக்கீல். ஒரு வழக்குக்கு பத்தாயிரம் வரை வாங்கினார். ஆனால் ராதா அவரிடம் பேசிய தொகை ரூபாய் 750. அதிலும் கொஞ்சம் மட்டும் அட்வான்ஸ் கொடுத்து விட்டு, மீதியை கடன் பாக்கி வைத்து நாடகத்தில் வசூலாக வசூலாகக் கொடுத்து வந்தார்.

ராதா தெருவில் நடந்தால், மேடையில் நடித்தால், நாடகம் முடிந்து வீட்டுக்குப் போனால் என எங்கும் பிரச்னைகள் காத்திருந்தன. காங்கிரஸ்காரர்கள் தன்னைக் கொல்லத் திட்ட மிடுவதாகக் கருதிய அவர், தன் காரை தானே ஓட்ட ஆரம்பித்தார். யாராவது எதிரே வந்து மறித்தால் டிரைவர் பயந்து காரை நிறுத்தி விடுவானோ என்ற தயக்கம். குறுக்கே யார் வந்தாலும் அவர்கள் மீது காரை ஏற்றிவிடலாம் என்று முடிவெடுத்து, எங்கு போனாலும் தானே ஓட்ட ஆரம்பித்தார் ராதா.

வேலூருக்குச் சென்றார்கள். ராமாயணம். 144 தடை உத்தரவு. ராதாவும் விடாமல் போராடி ஸ்டே வாங்கினார். அதிலும் குறிப் பாக ஜஸ்டிஸ் சோமசுந்தரம் தன் ஜட்ஜ்மெண்டில் குறிப்பிட்டி ருந்த வார்த்தைகள் முக்கியமானவை. ‘காங்கிரஸ் ரவுடிகள் எம்.ஆர். ராதா நாடகத்துக்குத் தொந்தரவு கொடுக்கிறார்கள்.’

ஒவ்வொரு ஊரிலும் ராதாவின் நலம் விரும்பிகளும் இருந் தார்கள். அவர்கள் மூலமாக, தடை உத்தரவு வரப்போகும் செய்தி ராதாவுக்கு முன்பாகவே தெரிந்துவிடும். உடனே மாலை மூன்று மணிக்கே நாடகத்தைத் தொடங்கிவிடுவார். கொஞ்சம் கொஞ்ச மாகக் கூட்டம் வர ஆரம்பித்து சிறிது நேரத்தில் அரங்கம் நிரம்பி விடும். ஆர்டர் வருவதற்குள் நாடகம் முடிந்துபோய்விடும்.

ராமாயணத்துக்கு மட்டுமல்ல, ‘போர்வாள்’ போன்ற பிற நாடகங்களுக்கும் தடை உத்தரவு வர ஆரம்பித்தது. இன்று ‘பக்தன்’ நாடகம் நடைபெறும் என்று அறிவிப்பார். ஆனால் நடப்பது ‘போர்வாள்’ நாடகமாகத்தான் இருக்கும். பெயர் மாறியதால் அரசாங்க ஆர்டர் செல்லாததாகிவிடும்.

அரசு, ராதாவின் நாடகங்களைக் கண்காணித்து ரிப்போர்ட் அளிக்குமாறு சிஐடிக்களை அனுப்பியது. அவர்களும் நாடகம் ஆரம்பிக்கும் முன்னரே முதல் வரிசையில் வந்தமர்ந்தார்கள்.

‘எவன்டா அவன்? கவர்மெண்டு ஆளு மாதிரி தெரியுது. போயி டிக்கெட்டு வாங்கியாரச் சொல்லு. முன்வரிசை டிக்கெட்

பதினைஞ்சு ரூபா' தன் மேனேஜரிடம் சொல்லி அனுப்பினார் ராதா. அவரும் சிஐடிக்களிடம் சொன்னார். அவர்களும் டிக்கெட் வாங்கி வந்து பின் நாடகம் பார்த்தனர்.

முதல் இரண்டு காட்சிகள் லட்சுமி காந்தன் நாடகத்தில் இருந்து நடிக்கப்பட்டது. மூன்றாவது காட்சியில் இழந்த காதலில் இருந்து ஒரு காட்சி வந்தது. நான்காவது காட்சியில் ராதா மயில் ராவணனனாகத் தோன்றி நடித்தார். எல்லாவற்றையும் மக்கள் ரசித்தார்கள். ஆனால் வந்த சிஐடிக்கள்தான் என்ன ரிப்போர்ட் எழுதுவதென்று தெரியாமல் குழம்பிப் போனார்கள்.

மறுநாள் கமிஷனர் அருள், ராதாவைக் கூப்பிட்டனுப்பினார். அவர் மிகவும் கண்டிப்பானவர். டிபார்ட்மெண்டே அவரைப் பார்த்து தொடை நடுங்கிய காலம் அது.

'நாடகத்துக்கு வந்த சிஐடிக்களை பதினைந்து ரூபா கொடுத்து டிக்கெட் வாங்கிட்டு வரச் சொன்னீங்களா?'

'அய்யா நீங்க தப்பா நினைச்சுக்கக் கூடாது. சர்க்காருக்கே இது புரியணும். நாங்க கலைஞர்கள். நாங்க பண்ணுறது வியாபாரம். அந்த ஸ்தலத்திலே யார் வந்து உட்கார்ந்தாலும் காசு கொடுத்துத்தான் ஆகணும், சிஐடிக்களாவே இருந்தாலும். இந்தப் பழக்கம் எம்.ஆர். ராதாவால உருவாச்சுன்னு கலை உலகத்துக்குப் பெருமை. ஒரு நாடகக்காரன் இதையெல்லாம் சர்க்காருக்குச் சொல்லித் தர்றான்னு எனக்குப் பேரு கிடைக்கும்.'

கமிஷனருக்கு ராதாவின் வாதம் நியாயமாகப்பட்டது. அன்றும் நாடகம் நடந்தது. இரண்டு சிஐடிக்கள் வந்தார்கள். முன் வரிசை டிக்கெட்டை நூறு ரூபாயாக உயர்த்தினார் ராதா. இருநூறு ரூபாய் கொடுத்தபின்பே அவர்கள் உள்ளே நுழைய அனுமதித்தார் ராதா.

•

புதிய நாடகச் சட்டத்தை நிறைவேற்றுவது குறித்த விவாதம் சட்டசபையில் நடந்துகொண்டிருந்தது. டி.கே. சண்முகம், நாராயணசாமி பிள்ளை, ராஜமாணிக்கம் உள்பட பலர் அங்கு பேசுவதற்காக வந்திருந்தனர். யாரும் எதிர்பாராத நேரத்தில் ராதாவும் சட்டசபைக்குள் நுழைந்தார்.

'இங்க எனக்கு மரியாதை கிடைக்காது. இருந்தாலும் என்னதான் செய்யறீங்கன்னு பார்ப்போம் என்று தெரிஞ்சுக்கத்தான் உள்ளே

நுழைஞ்சேன். இந்த டிராமாடிக் ஆக்டைக் கொண்டு வர்றது ரொம்பவும் கேவலம். எனக்காகத்தான் போடுறீங்க. நல்லாத் தெரியுது. ஆனா, நீங்க எதைப் போட்டாலும் நான் மீறுவேன். உங்களுக்குக் கெட்ட பேரு வராமப் பார்த்துக்கோங்க' அதிரடியாகப் பேச ஆரம்பித்தார்.

'அது உங்கள் இஷ்டம். இப்போ பேசாதீங்க' என்றார்கள் சபையில் உள்ளவர்கள்.

'நீங்க பேசறப்போ, நான் பேசக்கூடாதா என்ன? நான் நாடகம் போடறவன். நீங்க நிறுத்தறவங்க. அவ்வளவுதான். பேசாதேன்னு சொல்லாதீங்க' ராதா வாதாடினார்.

'நாடகங்களிலே கடவுள் இருக்கிறது என்று சொல்ல எங்களுக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ, அதேபோல கடவுள் இல்லை என்று சொல்ல ராதாவுக்கும் உரிமை இருக்கிறது. இங்கே பேசவும் அவருக்கு உரிமை இருக்கிறது' டி.கே. சண்முகம் ராதாவுக்கு ஆதரவாகப் பேசினார்.

மந்திரி கோபால் ரெட்டி எழுந்தார். 'கலை இங்கே டி.கே.எஸ். பிரதர்ஸ்கிட்டே இருக்கு. நாங்க பார்த்திருக்கிறோம். மீதியெல்லாம் மூர்மார்க்கெட் கலை' என்று ராதாவைப் பார்த்து பேசிவிட்டு அமர்ந்தார்.

'கனம் மந்திரியாரே! தாழ்த்தப்பட்டவர்களைவிடக் கேவலமானவர்கள் என்று எண்ணிக் கொண்டிருந்த எங்களை கலைஞர்கள் என்று சொல்ல ஆரம்பித்திருக்கிறீர்கள். எங்களை சோப் போடுவதற்கு என்று நினைக்கிறேன். இது ரொம்ப நடிகர்களுக்குத் தெரியாது. நாங்கள் உயர்ந்து வருகிறோம். அதை யாரும் தடுக்க முடியாது. மூர்மார்க்கெட் கலைஞர்கள் இருப்பதாகச் சொன்னீர்கள். பொய்யில்லை. எப்படி நாட்டில் நல்ல மந்திரிகளும் இருக்கிறார்கள், செங்காங்கடை மந்திரிகளும் இருக்கிறார்களோ அப்படித்தான் இதுவும்.'

செங்காங்கடை என்றால் பொறுக்கி என்று அர்த்தம். கோபால் ரெட்டியின் முகம் தொங்கிப் போய்விட்டது. சட்டசபைக்குச் சென்று தன் எதிர்ப்பை வெளிப்படுத்தியதில் ராதாவுக்கு மகிழ்ச்சி. ஆனால் இவ்வளவு பிரச்னைகள் நடந்து கொண்டிருந்த நேரத்தில் பெரியார் பர்மா, மலேயா நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார். பெரியார் வந்த பின்பு அடுத்த என்ன

செய்யலாம் என்று முடிவெடுக்கலாம், அதுவரை கொஞ்சம் பொறுமையாக இருக்கும்படி திராவிட கழகத்தினர் ராதாவைக் கேட்டுக் கொண்டனர்.

'நடிகர் ஒருவருக்காகவே தனிச்சட்டம் செய்யப்படுவது இந்திய வரலாற்றிலேயே இதுதான் முதல் தடவை. சென்னை சட்ட சபையிலே கொண்டு வரப்பட்டிருக்கின்ற புதிய நாடகத் தடை மசோதாவின் நோக்கத்தைப் பற்றி யார் என்ன சொன்னபோதி லும், இதன் அவசரத்தையும், நீதி இலாகா அமைச்சரின் பேச்சை யும் கூர்ந்து கவனிப்போருக்கு, இம்மசோதா, தோழர் ராதாவுக் காகவே வருகிறது என்ற உண்மை விளங்காமற் போகாது.

உணவு, உடை, கல்வி, வேலையில்லாமை போன்ற எத்தனையோ அடிப்படைப் பிரச்னைகள் இருக்கும்போது, வைதீக நாடகங்களை மட்டும் காப்பாற்றுவதற்காக ஒரு சட்டம் இயற்றுவதற்கு நீதி இலாகா அமைச்சர் துடியாய்த் துடிப்பது வருந்துதற்குரியதே.'

விடுதலை நாளிதழ் கண்டனத் தலையங்கங்கள் வெளிவந்த வண்ணம் இருந்தன. மேலும் பல பத்திரிகைகளும் இம் மசோதாவை எதிர்த்து கருத்துகள் வெளியிட்டன.

டிசம்பர் 10. திருச்சியில் முகாமிட்டிருந்த ராதா, அங்கு 'ராமாயணம்' நாடகம் நடத்தப் போவதாக அறிவித்தார். தடை உத்தரவு போட்டுக் கொள்ளுங்கள், நான் மீறுவேன் என்றும் பகிரங்கமாக அறிவித்தார்.

மறுநாள் அவரது துணிச்சலைப் பாராட்டி, கழகத்தினர் அவருக்கு தேநீர் விருந்து அளித்தனர். அதிலும் ராமன் வேடத்திலேயே கலந்துகொண்டார். அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க நாடகம் நடத்தவில்லை என்றும் அறிவித்தார். சென்னைக்கு வந்தார். சில நாள்களிலேயே அடுத்த அறிவிப்பை வெளியிட்டார்.

'டிசம்பர் 18 அன்று திருச்சியில் 'ராமாயணம்' நாடகம் நடைபெறும். நான் சிறையிலிடப்படுவேன் என்றால் எப்போது வெளிவருவேனோ தெரியாது. பெரியார் அவர்கள் திரும்பி வரும்வரையில் சிறைவாசம் ஏற்பட்டால், அவர்கள் வந்து மற்றக் காரியங்களைப் பார்த்துக் கொள்வார்கள். அதுவரையில் கழகத் தோழர்கள் கட்டுப்பாடுடன் நடந்துகொள்ளுமாறு

கேட்டுக் கொள்கிறேன். அடையாள எதிர்ப்பாகவே இக்காரியத்தில் ஈடுபடுகிறேன். ஆட்சியாளருக்குத் தொல்லை கொடுப்பதற்காக அல்லவே அல்ல என்று தெரிவித்துக்கொண்டு, உங்களிடமிருந்து விடைபெறுகின்றேன்.'

எதிர்பார்த்ததுபோலவே 18-ம் தேதி காலையிலேயே ராதா, திருச்சி போலீசாரால் கைது செய்யப்பட்டார். திராவிடக் கழகத்தினர், தோழர் சுயம்பிரகாசம் தலைமையில் நாடக மசோதாவை எதிர்த்தும், ராதாவை விடுதலை செய்யக் கோரியும் சென்னையில் மாபெரும் கண்டன ஊர்வலம் நடத்தினார்கள். 'ராமன் ஒழிக! ராவணன் புகழ் வாழ்க!' என்ற கோஷம் ஊர்வலமெங்கும் எதிரொலித்தது.

எம்.ஜி. ராமச்சந்திரன், எஸ்.வி. சஹஸ்ரமநாமம், டி.கே. சண்முகம் அடங்கிய நடிகர் குழுவினர், முதல்வர் காமராஜரைச் சந்தித்து, ராதாவை விடுதலை செய்யும்படி மனு கொடுத்தனர். அவர் பரிசீலிப்பதாகக் கூறினார். நீதி அமைச்சர் சுப்ர மணியத்துக்கும், முதல்வர் காமராஜருக்கும் நாடக மசோதா விஷயத்தில் கருத்துவேறுபாடு இருப்பதாகவே செய்திகள் வெளிவந்தன.

டிசம்பர் 22, அன்று கூடிய சட்டசபையில் நாடகத் தடை மசோதா, சட்டமாக நிறைவேற்றப்பட்டது. அதில் விருப்பமில்லாத எதிர்க் கட்சிகள், வெளிநடப்பு செய்தனர். ராதா விடுதலை செய்யப் பட்டார்.

நாடகம் நடத்துவதாக இருந்தால் அந்த நாடகம் சம்பந்தப்பட்ட முழு கதை வசனத்தையும் 'within one week அரசாங்கத்துக் கொடுத்துவிட வேண்டும் என்று சட்டத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது. அதைப் பார்த்து அரசு அனுமதித்தாலே நாடகம் நடத்த முடியும். நான்கைந்து நாள்களுக்கு முன்னால் கொடுத்தால் திருப்பி அனுப்பி விடுவார்கள்.

அதனால் ராதா, வழக்கறிஞர் நம்பியாரின் உதவியை நாடினார்.

'within one week என்றால் ஒரு வாரத்துக்குள் என்று பொருள். Before one week என்றால்தான் ஒரு வாரத்துக்கு முன்பு என்று பொருள். எனவே, என் கட்சிக்காரர் நாடகம் தொடங்குவதற்கு முன்புகூட ஸ்கிரிப்டை கொடுக்கலாம்' என்று வாதாடினார். சரிதான் என்று நீதிமன்றம் ஒப்புக் கொண்டது.

‘என்னய்யா இது, வித்இன் ஒன் வீக்குக்கு அர்த்தம் தெரியாத பசங்க நாட்டை ஆளுறாங்க’ என்று கமெண்ட் அடித்தார் ராதா. மீண்டும் துணிச்சலாகக் களமிறங்கினார்.

தூக்குமேடை நாடகம் என்று அறிவித்துவிடுவார். அதற்கான ஸ்கிரிப்ட்டையும் சமர்ப்பித்துவிடுவார். நாடகம் நடக்கும் சமயத்தில் அதைத் தடை செய்ய போலீசார் வருவார்கள். வெறும் மேடை என்ற தலைப்பில் நாடகம் ஓடிக் கொண்டிருக்கும்.

‘என்னய்யா இது? தூக்குமேடைக்குத்தானே ஸ்கிரிப்ட் கொடுத்தீங்க?’

‘ஆமாம் உண்மைதான். என்ன செய்ய? தூக்குமேடை நடிகர் களுக்கு ஸிக். உடம்பு சரியில்லை. அதான் வெறும்மேடை நாடகம் நடத்தறோம்’ என்பார்.

கோவையில் நாடகம் நடத்தச் சென்றார் ராதா. யாரும் அவருக்கு தியேட்டர் கொடுக்கக் கூடாது என்று தடைகளை ஏற்படுத்தினார் கலெக்டர். கோவைக்கு அருகில் ஓர் சிறிய ஊரில் ஒரு பெரும் பணக்காரர் இருக்கிறார், அவர் உதவுவார் என்று நண்பர்கள் சிலர் சொன்னார்கள். அவரைத் தேடிச் சென்றார் ராதா.

நாடகம் நடத்த இடம் கொடுத்து உதவுமாறு கேட்டார். அவர் தயங்கினார்.

‘ஒண்ணுமில்லீங்க. நீங்க இந்த இடத்தை எனக்கு நாடகம் நடத்த எழுதிக் கொடுத்துட்டதா சொல்லிருங்க’ என்று ஆலோசனை கொடுத்தார் ராதா. அப்படியும் அவர் தயங்கினார்.

‘நம்மளை மாதிரி ஆள்களை, மேல்சாதிக்காரங்க ஒதுக்கி வைச்சிருக்காங்க. அந்தச் சமுதாய ஏற்றத்தாழ்வை நீக்குற துக்குத்தான் பாடுபடறோம். மத்தபடி இந்தத் தொழிலால எங்க வயித்துக்கே வருமானம் வர்றதில்லை’ ராதா தன் பாணியில் மடக்க, தலையசைத்தார் அந்தப் பணக்காரர். நாடகம் நடத்த இடம் கொடுத்தார். ஓலைக் கொட்டகை தயாரானது.

கலெக்டர் அந்தப் பகுதிக்கே 144 போட்டார். அங்கு யாரும் கூட்டம் போடவோ, கும்பலாக நிற்கவோ கூடாது. மீறினால் துப்பாக்கிச் சூடு என்று எச்சரிக்கை விடுத்தார். ராதா கவலைப் படவில்லை. நாடகம் நடைபெறும் என்று அறிவித்தார்.

போலீஸ் கொட்டகைக்குள் நுழைந்தது. 'கூட்டம் போடக் கூடாது' என்று கத்தினார்கள்.

'கூட்டம்தானே போடக்கூடாது. நான் நாடகம்தானே நடத்தப் போறேன். அதுக்குத் தடையில்லை. ஜனங்க வரலேன்னாப் பரவாயில்லை. இங்க இருக்குற நாற்காலி, பெஞ்சுகளுக்காவது பகுத்தறிவு வளரட்டும்' என்று கூறி பெல்லை அடித்தார்.

போலீஸார் ஒன்றும் செய்ய முடியாமல் வெளியேறினர். பெல் சத்தம் கேட்ட மக்கள் ஒவ்வொருவராக வர ஆரம்பித்தனர். கூட்டம் சேர ஆரம்பித்தது. போலீஸார் துப்பாக்கிகளுடன் வெளியே தயாராக இருந்தார்கள்.

'சாகத் துணிந்தவர்கள் மட்டும் என் நாடகம் பார்க்க உள்ளே வரலாம்' உள்ளிருந்து ராதாவின் குரல் ஓங்கி ஒலித்தது. 'நாங்க வர்றோம்' என்று வெளிப்புறமிருந்து மக்களின் குரல் எதிரொலித்தது. நிலைமை உஷ்ணமாகிக் கொண்டே போனது. எங்கே கலெக்டர் ஃபயரிங் ஆர்டர் கொடுத்துவிடுவாரோ என்று பயந்தார் ராதா. நாடகத்தைப் பார்க்க வந்தவர்களுக்குக் காயம் ஏற்பட்டால்கூட அதற்குக் காரணம் அவராகத்தான் இருக்க முடியும். எனவே நாடகம் மறுநாள் நடைபெறும் என்று சொல்லி மக்களை அனுப்பிவைத்தார். பின்பு சென்னை வந்து தடை உத்தரவு மீது ஸ்டே வாங்கி, அங்கு நாடகம் நடத்தினார்.

அடுத்த முகாம் வேலூர் முள்ளிப்பாளையத்தில். அங்கு நடந்தவையெல்லாம் கலவரமல்ல, போர் என்றே சொல்லலாம்.

நாடகம் நடந்து கொண்டிருக்கும். ரசிகர்களோடு ரசிகர்களாக கலந்திருக்கும் கலவரக்கும்பல், திடீரென எழுந்து மிளகாய்ப் பொடியைத் தூவ ஆரம்பிக்கும். ரசிகர்கள் மிரண்டு போவார்கள். எதற்கும் தயாராக இருக்கும் ராதா கையில் கம்புடன் களமிறங்குவார். தூத்துக்குடியான் என்றொருவரும் ராதாவின் குழுவின் இருந்தார். அவரும் ராதாவும் சேர்ந்து கையில் கம்புடன் களமிறங்கினால், சிலம்பாட்டத்தில் பொறி பறக்கும். அப்படிச் சமாளித்துத்தான் முள்ளிப்பாளையத்தில் நாடகம் நடத்தி வந்தனர்.

அன்று இரவு சாலைகள் போடுவதற்காகப் போடப்படும் கற்கள் அந்த இடத்தில் நாடக அரங்கின் முன் கொட்டப்பட்டன. அந்தப் பகுதியில் போக்குவரத்து தடை செய்யப்பட்டது. ஏதோ சதி நடக்கப்போகிறது, வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று ராதாவுக்குத் தோன்றியது.

நள்ளிரவு நேரம். அரங்கத்தின் மேல் படபடவென கற்கள் வந்து விழ ஆரம்பித்தன. 'அண்ணே, வெளிய அறுபது, எழுபது பேர் நிக்குறாங்க. அவங்க கையில கத்தி, அருவா, கம்புன்னு நிறைய ஆயுதங்கள். நம்மளைச் சாகடிக்காம விடமாட்டங்க போல' குழுவிலுள்ள ஒருவர் ஓடி வந்து ராதாவிடம் சொன்னார். ஏதாவது கலவரம் நடக்கும் என்று தெரிந்தே ராதா அரங்கத்தினுள் யாரும் நுழையமுடியாதபடி மின்சார வயர்களைப் போட்டு கனெக்‌ஷன் கொடுத்திருந்தார்.

'டேய், இன்னிக்கு நிச்சயமா தலை உருளப் போகுதடா!' ராதா உள்ளிருந்து கர்ஜித்தார். கற்கள் விழுவது நின்றன.

'ஏய் தாமோதரா, நீ போய் மெயின் கேட்டைத் திறந்து வையி, நான் பின்னாடியே வர்றேன்' ராதா அவனை வெளியே அனுப்பினார். அவசரமாகச் சென்ற தாமோதரன், அந்தக் கும்பலிடம் மாட்டிக் கொண்டான். அவன் மேல் வேல்கம்பு பாய்ந்தது.

ராதாவும் தூத்துக்குடியானும் கம்புடன் வந்து கேட்டைத் தாண்டிக் குதித்தார்கள். சண்டை ஆரம்பமானது. ஒரு கட்டத்தில் ராதா சாதுர்யமாகக் குரலெழுப்பினார்.

'ஒரு பொணம் விழுந்துருச்சி, இந்த ரோடிலே இன்னும் ஏழெட்டுப் பொணம் விழணும். அடிடா பலமா!'

தங்களில் யாரோ ஒருவன்தான் கொல்லப்பட்டுவிட்டான் என்றெண்ணிய கலவரக் கும்பல், கொஞ்சம் கொஞ்சமாகப் பின் வாங்கியது. அரங்கத்தினுள் இருந்து ராதாவின் ஆள்கள் மேலும் சிலர் ஆயுதங்களுடன் வந்தனர். அதில் கையெறி குண்டுகளும் உண்டு. கலவரக் கும்பல் தெறித்து ஓட ஆரம்பித்தது. ராதாவும் அவரது ஆள்களும் ஓட ஓட விரட்டினார்கள்.

போகிற போக்கில், கலவரக் கும்பல் பஜாரில் வைக்கப் பட்டிருந்த ராதாவின் நாடக பேனருக்குத் தீ வைத்தது. அந்தத் தீ எக்குத் தப்பாகப் பரவி, வேலூர் மார்க்கெட்டே கருகிப் போனது.

●

மதுரை ரயில் நிலையம். அன்று அங்கு காமராஜர் வந்திருந்தார். சிலர் அவர் முன் ஒரு மனுவோடு சென்று நின்றனர்.



‘அய்யா, ராதாவின் ராமாயணக் கேலியாலே பக்தர்கள் மனம் புண்ணாகிறது.’

காமராஜர் மென்மையான குரலில் பதில் அளித்தார்.

‘நாம எப்படி கடவுள் இருக்கிறார்னு சொல்லுறோமோ அதேபோல அவர் கடவுள் இல்லைன்னு சொல்லுறாரு. நமக்கு கடவுள் இருக்காருன்னு சொல்ல உரிமை இருக்குறது போல, அவருக்குக் கடவுள் இல்லைன்னு சொல்லுற உரிமை இருக்கு.’

•

சுற்றுப் பயணங்களை முடித்துக் கொண்டு திரும்பிய பெரியாரும் பொதுக்கூட்டங்களில் ‘நாடகச் சட்டத்தை ஒழித்தே தீருவோம். புராணப் பிரசாரத்துக்குப் பார்ப்பனருக்கு மட்டும் தாராள அனுமதியா?’ என்று பேசினார்.

ராதாவும் ஊர் ஊராகச் சென்று திராவிடர் கழகப் பொதுக் கூட்டங்களில் கலந்துகொண்டார். குடந்தையில் ராமாயண நாடகத்துக்காகக் கைது செய்யப்பட்டார் ராதா. அதை எதிர்த்து பொதுமக்கள் நூற்றுக்கணக்கானோர் காவல் நிலையத்தை முற்றுகையிட்டனர். முற்றுகை பலமணி நேரம் நீடித்தது. பின்னர் தீயணைப்பு வண்டிகள் வந்து நீரைப் பீய்ச்சியடித்து கூட்டத்தைக் கலையச் செய்தனர். விடுதலையான பின் ராதா அங்கொரு பொதுக்கூட்டத்தில் பேசினார்.

‘தற்பொழுது திரு. காமராஜர் ஆட்சி நடைபெறுகிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. திரு. காமராஜருக்கு எந்தவிதத் தொல்லையும் நம்மால் ஏற்பட்டு விட்டதாக இருக்கக்கூடாது. காமராஜர் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக அவரது எதிரிகள் மறை முகமாகச் செய்யும் சூழ்ச்சியின் விளைவே இதுபோன்ற நிகழ்ச்சி களுக்குக் காரணம். இதை எதிர்த்து நான் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் காணப்போகிறேன். அதுவரை மக்கள் அமைதிக்குப் பங்கம் விளைவிக்காது நடந்துகொள்ள வேண்டும்.’

ராமாயணத்தைத் தொடர்ந்து தசாவதாரம் என்ற நாடகம் போட்டார் ராதா. அதில் மோகினி, இரணியன், ராமர், கிருஷ்ணர் என்று நான்கு வேடங்களில் அசத்தினார். இரணியன் வேடத்தில் ராதா வரும்போது சிறுவர், சிறுமியர் அலறினார்கள். இந்த நாடகமும் மக்களால் வரவேற்கப்பட்டது.





11

## காங்கிரஸ் வெள்ளைக்காரனுக்குப் பிறந்தது

நாள்கள் ஆக ஆக ராதாவின் பேச்சில் பகுத்தறிவின் ஆழம் அதிகமாகிக் கொண்டே போனது. அவரது நாடகங் களைப் போல, அவரது பேச்சைக் கேட்க வும் கூட்டமாகக் கூடினார்கள் மக்கள். அந்த சமயத்தில் ராதா பேசிய பொதுக் கூட்ட பேச்சு ஒன்று.

'நகரப்பகுதியில் உள்ள மக்கள் உண்ண வும் உடுத்தவும் வகை செய்பவர்கள், கிராமப்பகுதியில் வாழும் விவசாயப் பெருங்குடி மக்களே. ஆனால் அவர் களுடைய நிலை உண்ணவும் உடுத்தவும் முடியாத நிலையாக உள்ளது. கிராமவாசி களை முன்னேற்ற முடியாத எத்தனை ஐந்து ஆண்டுத் திட்டங்கள் வந்து போனாலும் அதனால் பயன் ஒன்றும் இருக்க முடியாது.

பரட்டைத் தலையோடும், பஞ்சடைந்த கண்களோடும், குழிவிழுந்த கன்னங் களோடும் காணப்படுகின்ற உழைப்பவர் களின் நிலையை நினைக்க நினைக்க

நெஞ்சு வேகிறது. ஆனால் உழைக்காமல் ஒரு கூட்டம் வாழ்கிறது. அவர்களுடைய மேனியில் மினுமினுப்பு காணப்படுகிறது. நம்முடைய தாய்மார்கள் வாழ்நாள்களில் ஒரு தடவைகூட பட்டாடை அணிந்திருக்க மாட்டார்கள். ஆனால் உழைக்காத அவர்கள் வீட்டுப் பெண்கள், 24 மணி நேரமும் அணிவது பட்டாடையே! நம்முடைய உழைப்பை உறிஞ்சிக் கொழுக்கிறார்கள். அதற்குத் தகுந்தாற்போல் சமூக அமைப்பைத் திரித்துக் காண்பித்து விட்டார்கள்.

வர்ணாசிரம தர்மத்தை நம்மிடையே நிலைநாட்டி, நாங்கள் பிறப்பால் உயர்ந்தவர்கள். நீங்கள் அனைவரும் வேசி மக்கள், வைப்பாட்டி மக்கள், சூத்திரர்கள், எனவே இழிந்தவர்கள். எங்களுக்கு நீங்கள் உங்கள் உழைப்பை அளிப்பதன் மூலம்தான் கடவுளை அடையமுடியும் என்ற எண்ணத்தை நம்மிடையே நன்கு வளர்த்துவிட்டார்கள். இதற்குத் தகுந்தாற்போல் புராண இதிகாசங்களையும், மனுதர்ம சாஸ்திரத்தையும் எழுதி வைத்துக் கொண்டார்கள். நாமும் ஏமாறுகிறோம். நம்மையெல்லாம் படைத்தது ஆண்டவன்தான் என்றால் அவன் இந்த இழி நிலையை விரும்புவானா? சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

ஆண்டவனுக்குக் கோயில் எடுப்பது நாம். நமது உழைப்பு. சிலை செய்து வைப்பதும் நாம். நமது சிற்பிகள். ஆனால் கும்பாபிஷேகம் என்று சொல்லி பார்ப்பான் வந்துவிடுகிறான். நிரந்தரமாகக் குடியேறிவிடுகிறான். நமது உழைப்பால், நமது திறமையால் உருவாக்கப்பட்ட அந்தக் கோயிலில் நம்மை விடுவதில்லை. பார்ப்பானின் ஏகபோக வயிற்றுப் பிழைப்புக்கு ஏதோ பித்தலாட்டம் செய்கிறான். நாமும் ஏமாறுகிறோம். இது வெட்கக் கேடல்லவா?

இன்று ஆலயப் பிரவேசம் செய்துவிட்டதாகச் சிலர் பெருமை பேசுகிறார்கள். இது வெறும் பித்தலாட்டம். முன்பு ஆதி திராவிட மக்கள் வெளியில் இருந்தார்கள். இப்போது அவர்களைவிட சமுதாய அமைப்பில் சற்று உயர்ந்தவர்கள் என்று கருதும் மக்கள் இருக்கும் இடத்துக்குத்தான் அவர்களைக் கொண்டுவந்து விட்டார்கள். ஆனால் பார்ப்பான் இருக்கும் இடத்துக்கு விடவில்லையே? இதுதான் ஆலயப் பிரவேசமா?

நமது சமுதாயத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள இந்த இழிவுகள் ஒழியவேண்டும் என்பதற்காகத்தான் திராவிடர் கழகம்

பாடுபடுகிறது. உழைக்காத சோம்பேறி பார்ப்பனர்களுக்கு இங்கு இடமில்லை. உழைப்பவர்களுக்குத்தான் இங்கு இடம் என்ற நிலையை உருவாக்குவதே திராவிடர் கழகத்தின் லட்சியம்.

இதற்காகத்தான் திராவிடர் கழகத்தார் சுமார் 4000 பேர் சிறை சென்றுள்ளனர். ஒப்பற்ற தலைவர் தந்தை பெரியார் அவர்களையும் சிறையில் அடைத்து வைத்திருக்கின்றனர். இன்றைய பார்ப்பன அடிமை அரசாங்கமே, இவர்கள் செய்த குற்றம் என்ன? சாதி ஒழிய வேண்டும், அதற்குப் பாதுகாப்பான அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றனர்.

அரசாங்கம் கேளாக் காதினராக நடந்துகொண்டது. தங்களுக்கு இழிவு கற்பிக்கும் சட்டத்தைத் தீயில் இட்டுக் கொளுத்தினார்கள் என்பதற்காக இவ்வளவு கைது. பல கொடுமைகள்.

இதெல்லாம் வெறும் பித்தலாட்டம். திருடர்களின் கூட்டமே இன்றைய சர்க்கார். நமது நாட்டுக்குச் சுதந்தரம் இரவு 12 மணிக்கு வந்ததாம். இதன் அர்த்தம் என்ன? திருடன் திருடனிடம் கொடுத்த நிர்வாகம் என்றுதானே அர்த்தம்? எனவே, இவர்களிடம் நாணயத்தை எதிர்பார்க்க முடியுமா?

எல்லா வகையிலும் வடநாட்டார் நம்மை அடிமைப்படுத்தியே வைத்திருக்கிறார்கள். இதையெல்லாம் திராவிடர் கழகம் தவிர வேறு யார் கேட்கிறார்கள். யாருக்கு அந்தத் தகுதி இருக்கிறது. காங்கிரஸ் நம் நாட்டுக் கட்சி அல்ல, அது வெள்ளைக் காரனுக்குப் பிறந்தது. கம்யூனிஸ்ட்டோ மாஸ்கோ கட்சி. அது நம் நாட்டுக்கு ஒத்து வராது. மற்றக் கட்சிக்காரர்கள் எல்லாம் பிசினஸில் இறங்கியுள்ளார்கள். அவர்கள் எல்லோரும் பதவி வேட்டையில் இறங்கி மக்களை ஏமாற்றும் வேலை செய்கிறார்களே தவிர, உண்மை நிலையை மக்களுக்கு விளக்குவதில்லை. அப்படி அவர்கள் பேச ஆரம்பித்துவிட்டால் அவர்களுக்கு ஓட்டு கிடைக்காது என்ற பயம். நம் இனத்தின் மீது எவ்வளவு இழிவு கற்பிக்கப்பட்டிருந்தாலும் அவர்களுக்கு அதைப்பற்றி மானம் ரோஷம் எதுவும் கிடையாது.

திராவிடர் கழகம் ஒன்றுதான் மக்களிடத்தில் உண்மை நிலையை விளக்கி, இழிவு ஒழிய பாடுபடுகிறது. திராவிடர் கழகத்தாருக்கு ஓட்டுப் பிரச்னை கிடையாது. எனவே, எதையும் தைரியமாக அவர்களால் பேச முடிகிறது.

சினிமா ஒரு கலை. அதிலே நடிப்பது ஒரு வேலை. அப்படியிருக்க சினிமாக்காரர்களுக்கும் சினிமாக்காரிகளுக்கும் மக்கள் ஏன் அளவுக்கு மீறிய மரியாதை கொடுக்க வேண்டும்? சினிமாக் கூட்டம் ஒரு விபசாரக் கூட்டம். அதற்கு ஏன் இவ்வளவு பெரிய மரியாதை? நம்முடைய மாணவர்கள், இளைஞர்கள் சினிமாவினாலேயன்றி வேறு எதனாலே கெடுகிறார்கள்?

பெரியாரும் ஆச்சாரியாரும் சினிமாவை எதிர்க்கிறார்கள் என்றால் சினிமாவில் அவர்களை நடிக்கக் கூப்பிடவில்லை என்றா எதிர்க்கிறார்கள்? அந்தக் கலையின் நிலை நாளுக்கு நாள் மோசமாகி வருவதைக் கண்டு மனங்கொதித்துத்தானே கண்டிக்கிறார்கள். உண்மையிலேயே பொழுதுபோக்குக்காக சினிமா என்றால் இரவு நேரத்தில் பார்க்கட்டுமே. பகல் இரண்டு மணிக்கு நல்ல வெயிலில் சினிமாக் காட்சியேன்? பி.ஏ., எம்.ஏ. படித்தவர்கள் எல்லாம் கியூவரிசையில் நிற்கிறானே? இந்நாடு எப்படி உருப்படும்?

விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் தங்களின் குழந்தைகளை சினிமாவுக்குச் செல்லவொட்டாமல் தடுத்து நன்கு படிக்க வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். காமராசர் அதற்கு நன்கு வசதி செய்து கொடுத்திருக்கிறார்.'

ராதாவின் பேச்சுகளுக்கு ஏகோபித்த வரவேற்பு கிடைத்தது. இருந்தாலும் ராதாவின் மனத்தில் ஒரு குறை இருந்தது.

# மூன்றாவது இன்னிங்ஸ்

ராஜசேகரனில் ஆரம்பித்த ராதாவின் சினிமா இன்னிங்ஸ், அதன்பிறகு சில படங்களுடன் நின்றுபோனது. ஒரு வெற்றிப்படம்கூட அமையவில்லை. இரண்டாவது இன்னிங்ஸ் ரத்தக் கண்ணீரில் ஆரம்பித்தது. அதனோடே முடிந்தும் போனது. இடைப்பட்ட காலத்தில் எடுக்கப்படும் சினிமாக்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது. மக்களிடையே சினிமாவுக்கு மவுசு அதிகமாகியிருந்தது. கூடவே நாடகம் பார்க்க வரும் ஜனங்களின் எண்ணிக்கையும் குறைய ஆரம்பித்திருந்தது. பட்டிதொட்டியெல்லாம் சென்று நாடகம் போட்டாகிவிட்டது. வசூல் குறைந்துகொண்டே போனது. ஐம்பது பேரை வைத்து ஒரு குழுவை நடத்துவது கொஞ்சம் சிரமமாகவே இருந்தது.

என்ன செய்யலாம்? யோசித்தார் ராதா. நடிப்பு என்பது தொழில். தான் ஒரு நல்ல நடிகன் என்பதை நாடக மேடைகளில் போதிய அளவு நிரூபித்தாயிற்று.

சினிமாவில்? அதிலும் நிரூபித்தாயிற்று. ஆனால் அதில் வெற்றி பெற முடியவில்லையே. அதிலும் ஒரு ஆட்டம் ஆடிப் பார்க்க வேண்டும். பார்க்கலாம்.

அந்தச் சமயத்தில் ராமானுஜம் என்பவர் ராதாவைச் சந்தித்தார். அவர் ராதாவிடம் நேரடியாகவே கேட்டார்.

'ரத்தக்கண்ணீர் சினிமாவுக்கு அப்புறம் உங்களை சினிமாவி லேயே பார்க்க முடியறதில்லையே?'

'நாடகத்திலேதான் பார்க்கறீங்களே, அது போதாதா?'

'உங்க பிரசாரத்துக்கு நாடகத்தைவிட சினிமா பவர் ஃபுல்லாச்சே?'

'பவர்ஃபுல்தான். என் இஷ்டத்துக்கு எங்கே அதிலே பேச விடறாங்க?'

'அதுக்கு நீங்க சொந்தப்படம்தான் எடுக்கணும்.'

'எடுக்கலாம். பணம் யார் போடுவா?'

'நான் வேணும்னா என்னால முடிஞ்ச அளவு உதவறேன். அது சம்பந்தமாத்தான் உங்ககிட்ட பேச வந்தேன்.

ராதாவுக்குச் சந்தோஷம். பேச்சுவார்த்தைகள் நடந்தன. தேனாம் பேட்டை போயஸ் சாலையில் ஒரு வீட்டைப் பிடித்தார். அதன் வாசலில் 'எம்.ஆர். ஆர். புரொடெக்ஷன்ஸ்' என்ற போர்டு தொங்கவிடப்பட்டது. நேஷனல் பிக்சர்ஸ் பெருமாளும் முன் வந்து பணம் போட்டார். படத்துக்கான கதை விவாதிக்கப்பட் டது. இயக்கம் கிருஷ்ணன் பஞ்சு என்று பேசி முடிவு செய்யப் பட்டது. படத்துக்கு வைக்கப்பட்ட பெயர் ஆளப்பிறந்தவன்.

திடீரென டைரக்டரை மாற்றினார் ராதா. ஏ.பி. நாகராஜன் புதிய டைரக்டராகப் போடப்பட்டார். அதற்கு ராதா சொன்ன காரணம், 'ஒரு நாடகக்காரர் எடுக்குற படத்தை இன்னொரு நாடகக்காரர் டைரக்ட் செஞ்சாத்தான் சரிவரும்.'

படம் மெதுவாக வளர்ந்து வந்தது.

அதே சமயத்தில் வி.கே. ராமசாமி 'நல்ல இடத்துச் சம்பந்தம்' என்றொரு படத்தை எடுக்க ஆரம்பித்திருந்தார். அதற்கும்

டைரக்டர் ஏ.பி. நாகராஜன்தான். ராதா, வி.கே.ஆரின் அலுவலகத்துக்குச் சென்றார். ராதா, நாடகத்தில் வி.கே.ஆரை விட சீனியர்.

'என்னப்பா ராமசாமி, உனக்குக் கடிதம் போட்டேன். பதிலே இல்லை. அதான் நேரா வந்துட்டேன். படம் எடுக்குறியாமே. நாடகத்துல முன்ன மாதிரி வசூல் ஆகறதில்லை. கொஞ்ச நாளைக்கு நாடகத்தை நிறுத்தலாம்னு இருக்கேன். என்னைப் பத்தி நல்லாத் தெரிஞ்சவன் நீதான். உன்கிட்ட வேஷம் கேட்குறது தப்பில்லைன்னு தோணுச்சு. வந்துட்டேன்.'

வி.கே.ஆருக்குத் தயக்கம். நாலு நாள்கள் படத்தில் நடித்துவிட்டு பின் நாடகம் என்று போய்விட்டார் என்றால்? பல லட்சம் போட்டு படம் எடுக்கிறோமே, ஃபைனான்ஸியரிடம் பதில் சொல்ல முடியாதே. ஆனால் மூத்தவர். தேடி வந்து உரிமையுடன் கேட்கும்போது, மறுக்கவா முடியும்? தன் நிலையை விவரமாக எடுத்துச் சொன்னார் வி.கே.ஆர்.

'இந்தப் படம் முடியற வரைக்கும் நான் நாடகம் போடப் போறதில்லை. என்னால் உங்களுக்கு எந்தத் தொந்தரவும் வராது' என்று வாக்குறுதி கொடுத்தார் ராதா.

'அண்ணே சம்பளம்..?'

'உன் இஷ்டம் போல கொடுப்பா.'

கதைப்படி டி.கே. ராமச்சந்திரனுக்கு வைத்திருந்த முக்கியமான ரோல்தான் ராதாவுக்கும் பொருத்தமாக இருந்தது. 'அண்ணே, டி.கே.ஆர்.கிட்ட அட்வான்ஸ் கொடுத்துட்டேனே' என்றார் வி.கே.ஆர்.

'அட, அவன் நம்ம புள்ளைதாம்பா! என்கூட வர்ற மாதிரி புது ரோல் உருவாக்கிக்கலாம்' என்றார் ராதா. ஆனால் வி.கே.ஆரின் நிலைமையைப் புரிந்துகொண்ட ராமச்சந்திரன் படத்திலிருந்து விலகிக் கொண்டார்.

முரட்டுக் கணவனாக ராதாவும், அவனிடம் வதைபடும் மனைவி யாக சௌகார் ஜானகியும் நடித்தார்கள். வெளியே பொல்லாத வன், ஆனால் மனத்தின் அடி ஆழத்தில் மனைவி மேல் பாசம் இருக்கும். இந்த வேடம் ராதாவுக்குக் கணக் கச்சிதமாகப் பொருந் தியது. முழு ஒத்துழைப்புடன் படத்தில் நடித்து முடித்தார் ராதா.

படம் வெளிவந்தது (1958). நல்ல வெற்றி பெற்றது. ராதா இல்லாத படம் சாதா என்று விமரிசனம் எழுதியது குமுதம் இதழ். ஐம்பத்தோரு வயதில் ராதாவின் மூன்றாவது சினிமா இன்னிங்ஸ் ஆரம்பமானது.

ராதாவுக்கு எந்த மாதிரியான வேடம் கொடுக்கலாம் என்று தெரியாமல் குழம்பிக்கொண்டிருந்தவர்களெல்லாம், நகைச் சுவை கலந்த வில்லன் வேடத்துக்கு ராதாவை ஒப்பந்தம் செய்ய ஆரம்பித்தார்கள். அடுத்தடுத்த படங்களில் நடிக்க ஆரம்பித்தார் ராதா. அதனால் அவர் சொந்தமாகத் தயாரித்து வந்த ஆளப் பிறந்தவனை நிறுத்திவிட்டார். அதற்கான தயாரிப்புச் செலவை யும் பின்னாள்களில் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

•

சினிமா ஒப்பனையாளர் கஜபதி, பாகவதர் காலத்திலிருந்தே கலைஞர்களுக்கு அரிதாரம் பூச ஆரம்பித்தவர். கூண்டுக்கிளி படத்தில் எம்.ஜி.ஆருக்கும் சிவாஜிக்கும் ஒரே சமயத்தில் ஒப்பனை செய்தவர். நல்ல இடத்து சம்பந்தத்தில் அவர் முதன் முறையாக ராதாவுக்கு ஒப்பனை செய்தார். அப்போதெல்லாம் வெகு சிலரே பிரத்யேக ஒப்பனையாளர்களை வேலைக்கு வைத்திருந்தனர். மற்றவர்கள் கம்பெனி ஒப்பனையாளரிடம் மேக்-அப் போட்டுக்கொள்வார்கள்.

ராதாவுக்கு எண்ணெய் அதிகமாக இருக்கும் முகம். எனவே ஒப்பனை சீக்கிரம் கலைந்துவிடும். அதற்கேற்ப ஒப்பனை செய்த கஜபதியை ராதாவுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று. ‘நீயே எனக்கு இனிமே மேக்-அப் போடுயா’ என்றார் ராதா.

ஆனால் கஜபதி அப்போது சிவாஜிக்கும் ஒப்பனை செய்து கொண்டிருந்தார்.

ஒருநாள் சிவாஜிக்கு மேக்-அப் போட வேண்டியதிருந்ததால், கஜபதி ராதாவுக்குத் தன் உதவியாளரை அனுப்பினார். அவர் போட்ட ஒப்பனையில் ராதாவுக்குத் திருப்தி இல்லை. ராதா போனில் கஜபதியை அழைத்தார். ‘சீக்கிரம் வாய்யா, மேக்-அப் சரியில்லை. ஷூட்டிங் நிக்குது. உடனே கிளம்பி வா’ என்று உத்தரவிட்டார். ராதா சீனியராயிற்றே. சிவாஜியும் உடனே கஜபதியை அனுப்பினார். இப்படி இருவருக்கும் இடையே மாட்டிக் கொண்டு விழிக்க ஆரம்பித்தார் கஜபதி.

ராதாவுக்கு அடுத்தடுத்து படங்கள் ஒப்பந்தம் ஆக ஆரம்பித்தன. ‘என்னோட கால்ஷீட், சம்பள விவகாரங்களையெல்லாம் நீயே பார்த்துக்கோயா. கணேசன்கிட்ட சொல்லிட்டு இங்கயே வந்துரு’ என்று சொல்லி கஜபதியைத் தன் மேலாளராக நியமித்தார் ராதா. கஜபதியும் சிவாஜியை விட்டுவிலகி ராதாவிடமே முழுநேரப் பணி செய்ய ஆரம்பித்தார்.

●

1959. பீம்சிங் இயக்கத்தில், சரவணா பிலிம்ஸ் தயாரிப்பில், சிவாஜி, சரோஜாதேவி நடிப்பில் ‘பாகப்பிரிவினை’ வெளியானது. அல்டாப்பு சிங்காரம் என்ற வில்லன் கேரக்டரில் வந்து நகைச்சுவை வசனங்களை அள்ளி வீசி அப்ளாஸ் வாங்கினார் ராதா. படம் பெரிய ஹிட்.

சரோஜா தேவி அப்போதுதான் அறிமுகமாகி இருந்தார். அவருக்கும் வரிசையாகப் படங்கள் ஒப்பந்தம் ஆகிக் கொண்டிருந்த காலம் அது. அதில் கிராமத்துப் பெண்ணாக நடித்தார். சரோஜா, துடைப்பத்தால் ராதாவைத் துரத்தித் துரத்தி அடிக்க வேண்டும். ராதாவுக்கும் சரோஜாவுக்குமான முதல் காட்சியே இதுதான். மாட்டேன் என்று மறுத்தார் சரோஜா தேவி.

ராதாதான் இந்த மாதிரியான காட்சிகளில் நடிக்க இமேஜ் எல்லாம் பார்க்க மாட்டாரே. ‘பொண்ணு புதுசு. பெங்களூர் பொண்ணு. மாட்டேன்னு சொல்லுது’ என்றார் பீம்சிங் ராதாவிடம்.

‘யாரந்த பெங்களூர் பொண்ணு?’ சத்தமாக ராதா கேட்டதிலேயே அதிர்ந்து போனார் சரோஜா.

‘அடிக்க மாட்டேன்னு சொன்னியாமே?’ ராதா கேட்டார்.

‘நீங்க சீனியர் ஆக்டர். என்னால முடியாது. எனக்கு முடியாது’ என்று பிடிவாதமாக மறுத்துவிட்டார் சரோஜா. பீம்சிங்கும் எவ்வளவோ சொல்லிப்பார்த்தார்.

‘பொண்ணைப் பார்த்தா பாவமா இருக்கு. விட்டுடலாம்’ என்றார் ராதா. காட்சி மாற்றியமைக்கப்பட்டது. உள்ளிருந்து ‘என்னை அடிக்காதே.. என்னை அடிக்காதே’ என ராதாவின் அலறல் கேக்கும். சரோஜா கையில் துடைப்பத்துடன் வெளியே வருவார். பின்னாலேயே ராதா வருவார். அவரது தலையிலெல்லாம் துடைப்பக்குச்சி சொருகப்பட்டிருக்கும்.

நாளடைவில் சரோஜா தேவி மேல் ராதாவுக்குத் தனிப் பாசம் வந்தது. பீம்சிங்கிடம் ராதா இப்படிச் சொல்வார். 'சின்னப் பொண்ணு. நைட்டெல்லாம் ஷூட்டிங் போல. களைப்பா இருக்கும். பீமு, சரோஜாவுக்கு முதல்ல ஷாட்டை வைச்சு அனுப்பி விடுப்பா. பாவம்.'

சரோஜா பேசும் தமிழ் சரியில்லை என்ற ஒரு கருத்தும் இருந்தது. ராதா சொன்னார். 'நீ கொஞ்சிக் கொஞ்சிப் பேசறதே நல்லாத்தான் இருக்கு. இந்தத் தமிழையும் ரசிப்பானுங்க பாரு.'

ஒரு காட்சியில் நம்பியார் சிவாஜியிடம் 'குழாப்புட்டு சாப்பிடுங்க' என்பார். இடையில் புகுந்து ராதா பேசும் வசனம், 'வெளிநாட்டுக்காரன் நீராவிலே ரயிலு விடுறான், கப்பல் விடு றான். விமானம் விடுறான். நம்மாளு இன்னும் நீராவிலே கொழக் கட்டைதான் விடுறான்.' இந்த வசனம் மிகவும் புகழ்பெற்றது.

'பாகப்பிரிவினை' பட வெற்றி விழா நடந்து கொண்டிருந்தது. அப்போது நடிகர்கள் தங்கியிருந்த இடத்துக்கு சுனில் தத் வந்தார். சிவாஜி அவரை வரவேற்றார். வந்ததும் சுனில் தத், ராதா எங்கே என்று விசாரித்தார். பின்னால் இருப்பதாகச் சொன்னார் சிவாஜி. அங்கு சென்றார் சுனில் தத்.

அங்கே தன் வழக்கமான உடைகளான அண்டர்வேர், முழுக்கை பனியனுடன் சமையல் செய்து கொண்டிருந்தார் ராதா. இவரா அவர் என்று வாயடைத்துப் போனார் சுனில் தத்.

ராதாவின் அருகில் சென்ற சுனில் தத், கைகுலுக்கி, வேகவேக மாக ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்தார். அவர் பேசி முடிக்கும் வரை பொறுமையாக இருந்தார் ராதா.

'என்னடா சொல்லுறான் இவன்?' என்று பக்கத்தில் இருப்ப வரிடம் கேட்டார். அதற்குப் பிறகுதான் ராதாவுக்கு ஆங்கிலம் தெரியாது என்ற உண்மை சுனில் தத்துக்குத் தெரிய வந்தது. 'பாகப்பிரிவினை' படத்தில் தெளிவான உச்சரிப்புடன் ஆங்கிலம் பேசி அசத்தியிருப்பார் ராதா. அதை நம்பி ஏமாந்து போனார் சுனில் தத்.

•

அடுத்து 'தாமரைக்குளம்' என்ற படம் வெளியானது. முக்தா சீனிவாசன் இயக்கியிருந்தார். இதிலும் ராதாவுடன் சௌகார்

நடித்திருந்தார். புலிப்பட்டி ஜமீன்தார் மைனர் ரங்கதுரை என்ற கதாபாத்திரத்தில் ராதா அட்டகாசம் செய்திருந்தார்.

ராதா என்றாலே நடுங்கிக் கொண்டிருந்த மற்ற நடிகைகள் மத்தியில் அவரிடம் தைரியமாகப் பேசிப் பழகிய நடிகை சௌகார்தான். படித்தவர் என்பதால் ராதாவுக்கும் சௌகாரைப் பிடிக்கும்.

ஒருமுறை ராதா சௌகாரிடம் விளையாட்டாகக் கேட்டார். 'உன் காருக்கு ஒரு கேலன் பெட்ரோல் சும்மா போட்டுத் தர்றேனே?'

அதற்கு சௌகார் தைரியமாக சொன்ன பதில், 'நான் விரும்புறது உங்க நடிப்புக் கலையை. ஓசி பெட்ரோலை இல்ல.'

●

1959-ல் ராதா நடித்துவந்த இன்னொரு படம் 'உலகம் சிரிக்கின்றது'. அதில் அவர் கையில் தீச்சட்டி ஒன்றை வைத்துக் கொண்டு ஆடும் ஆட்டம் பேசப்பட்டது.

1960-ல் ராதாவுக்கு ஐந்துக்கும் மேற்பட்ட படங்கள் வெளிவந்தன. அதில் முக்கியமான இரண்டு, 'கைராசி' மற்றும் 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.'

ஒருநாள் இரவில் 'கைராசி' படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்தது. இரவு ஒன்பது மணிக்கு கால்ஷீட் கொடுத்திருந்தார் ராதா. வேறு வேறு படங்களில் நடித்துவிட்டு சரியாக ஒன்பது மணிக்கு செட்டுக்கு வந்துவிட்டார். அவரது முகத்திலேயே களைப்பு தெரிந்தது.

படத்தின் தயாரிப்பாளர் வாசுமேனன். இயக்குநர் கே. சங்கர். காட்சி ஒன்றை ராதாவிடம் விவரித்தார். உதவி இயக்குநர் ஒருவர், ராதாவுக்கான வசனங்களை அவரிடம் படித்துக் காண்பித்தார். இரண்டு, மூன்றுமுறை படிக்கச் சொல்லி கேட்ட ராதா, டேக்குக்குப் போகலாம் என்றார்.

டேக் ஆரம்பமானது. ராதா நடித்தார். இன்னொரு டேக் என்றார் சங்கர். ராதா மீண்டும் நடித்தார். ஓகே என்று சொல்லிவிட்டார் சங்கர். பின்பு தனியாக கஜபதியை அழைத்தார்.

'அண்ணன் ரொம்ப டயர்டா இருக்காரு போல. நான் வேற மாதிரி எதிர்பார்த்தேன். ஆனால் அண்ணன் இன்னொரு மாதிரி நடிச்சுக்



கொடுத்துட்டாரு. ஸீன் நல்லா வந்துருக்கணும். சரி பரவாயில்லை' என்றார். பொதுவாகப் பெரும்பாலான இயக்கு நர்கள் ராதாவிடம் நேரடியாகக் கருத்துச் சொல்ல தயங்குவார்கள். கஜபதி வழியாகத்தான் விஷயத்தைத் தெரிவிப்பார்கள்.

ஷூட்டிங் முடிந்து ராதா வீட்டுக்குக் கிளம்பினார்.

மறுநாள் காலையில் கஜபதி, ராதாவிடம் முந்தைய இரவு சங்கர் சொன்னதைச் சொன்னார்.

'அப்படியா? சரி உனக்கு சங்கர் வீடு தெரியுமா?'

'இங்கதான் கோடம்பாக்கத்துல இருக்குண்ணே.'

'ப்ரொடியூசர் வீடு?'

'அதுவும் அங்கதான் இருக்கு.'

'சரி, வா போகலாம்' என்று கஜபதியை அழைத்துக்கொண்டு கிளம்பினார். அப்போது சங்கர் வீட்டுக்கு வாசுமேனனும் வந்திருந்தார். ராதா உள்ளே நுழைந்தார்.

'ஏம்ப்பா சங்கரு, நேத்து ஸீனு திருப்தியா வரலையாமே?'

‘அதெல்லாம் ஒண்ணுமில்லைண்ணே’ தயங்கினார் சங்கர்.

‘நான் சொல்லுறதைப் பண்ணு. இன்னிக்கு சாயந்தரம் ஷூட்டிங் வைச்சுக்கலாம். அதுக்கான ஏற்பாடைப் பண்ணிரு. இன்னிக்கு ஆகுற தயாரிப்புச் செலவை நான் தந்துடறேன்.’

‘அய்யய்யோ, அதெல்லாம் வேண்டாம்’ வாசுமேனன் பதறி மறுத்தார்.

‘இல்லல்ல, செஞ்சுத்தான் ஆகணும்’ என்று பிடிவாதமாகக் கூறினார் ராதா. சாயந்தரம் படப்பிடிப்பு நடந்தது. அதே காட்சியில், சங்கர் எதிர்பார்த்ததைவிட பிரமாதமாக நடித்தார் ராதா. சொன்னபடியே தயாரிப்புச் செலவையும் கொடுத்து விட்டார்.

●

‘ஒன்று பட்டால் உண்டு வாழ்வு’ படப்பிடிப்பு அடுத்த நாள் இருந்தது. ராதாவுக்கு ஜமீன்தார் வேடம். ராமண்ணா டைரக்ஷன். ஆனால் ஒரு இருபதாயிரம் ரூபாய் பாக்கியைத் தராமல் இழுத்தடித்துக்கொண்டே போனார்கள்.

‘அண்ணே, இவங்க பண விஷயத்துல கொஞ்சம் குழப்படி பண்ணுற மாதிரி தெரியுது’ என்றார் கஜபதி.

‘அப்படியா. சரி பார்த்துக்கலாம்’ என்றார் ராதா.

மறுநாள் செட்டுக்கு ராதா வரவில்லை என்று தெரிந்ததும், வீட்டுக்கு ஆள் அனுப்பினார்கள். உடம்பு சரியில்லைன்னு சொல்லு என்று வீட்டுக்குள்ளிருந்தபடியே கஜபதியிடம் சொன்னார் ராதா. கஜபதியும் அப்படியே சொன்னார்.

‘அண்ணன் வரலேன்னா, இன்னிக்கு ஷூட்டிங் கேன்சல்’ - என்று தலையைச் சொறிந்தார் வந்தவர்.

‘இன்னிக்கு முடியாதுன்னுட்டார்’ என்று வந்தவரை அனுப்பினார் கஜபதி.

கொஞ்ச நேரத்திலேயே படத்தின் தயாரிப்பாளர் கையில் இருபதாயிரம் ரூபாயுடன் ராதா வீட்டுக்கு வந்தார். கஜபதியிடம் பணத்தை ஒப்படைத்தார். கஜபதியும் உள்ளே ராதாவிடம்



சென்று பணம் வந்துவிட்டது என்றார். 'அப்படியா, சரி அவரை உட்காரச் சொல்லு, நான் வர்றேன்' என்று சொல்லியனுப்பினார் ராதா.

சிறிது நேரம் கழித்து அறைக்குள் இருந்து வெளியே வந்தார் ராதா. அண்டர்வேர், மேலே ஒரு துண்டு. வலியால் முனகுவது போல முனகிக்கொண்டே நாற்காலியில் உட்கார்ந்தார். 'டேய் ராமசாமி, அந்த மருந்தெல்லாம் வாங்கச் சொன்னேனே, வாங்கிட்டியா?' கேட்டார். அப்படியே தன் மேல் துண்டை எடுத்தார். உடலில் அங்கங்கே கட்டுகள், பிளாஸ்திரிகள்.

கஜபதிக்கே ஒன்றும் புரியவில்லை. 'இவ்வளவு நேரம் நல்லாத்தானே இருந்தாரு' என்று தனக்குள்ளேயே குழம்பிப் போனார்.

'டேய் கொஞ்சம் உடம்பைப் பிடிடா, ஒரே அசதியா இருக்கு' என்றார் ராதா. வந்த தயாரிப்பாளரால் ஒன்றுமே பேசமுடிய வில்லை.

'நான் வரலேன்னா ஷூட்டிங் கேன்சல்னு சொன்னீங்கபோல. பணம் வேற கொண்டு வந்தீங்களாம். உடம்பு கொஞ்சம் அசதியா

இருக்கு. வேற ஒண்ணுமில்லை. நான் ரெடி. போகலாமா?' கேட்டார் ராதா.

'அண்ணே தப்பா நினைச்சுக்காதீங்க. நீங்க ரெண்டு மூணு நாள் ரெஸ்ட் எடுத்துட்டு வாங்க. ஷூட்டிங் கேன்சல் பண்ணிடலாம். ஒண்ணும் பிரச்னை இல்லை' சொல்லிவிட்டு தயாரிப்பாளர் கிளம்பிப் போனார்.

கஜபதி ஒன்றும் புரியாமல் 'என்னண்ணே ஆச்சு? நல்லாத்தானே இருந்தீங்க' என்றார்.

'உஷ்... கதவை மூடிட்டு வா' என்றார் ராதா. பின்பு பேசினார்.

'அவர் அனுப்புன ஆள்கிட்ட நீ என்ன சொன்ன? உடம்பு சரியில்லைன்னு. பணத்துக்குத்தான் இப்படிச் சொல்லுறாருன்னு நினைச்சு அவரும் கொண்டாந்து கொடுத்துட்டாரு. உடனே ஷூட்டிங் போனா, உடம்பு சரியில்லைன்னு சொன்னவன் பணம் கொடுத்ததும் வந்துட்டான்னு சொல்லுவான் இல்லையா. அதான் இப்படிப் பண்ணுனேன். இப்ப உண்மையா உடம்பு சரியில்லைன்னு நம்பிப் போயிட்டாரு' சிரித்தார் ராதா.





## மாமா... மாப்ளே!

முப்பதாயிரம் என் ரேட். யார் வேண்டுமானாலும் வந்து ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். ராதா வெளிப்படையாகக் கூறினார். குணசித்திரம், வில்லத்தனம், நகைச்சுவை மூன்றும் கலந்து செய்யும் நடிகர் என்பதால், பலர் ராதாவைத் தேடி வந்து ஒப்பந்தம் செய்ய ஆரம்பித்தனர். வருடத்துக்கு வருடம் ராதா நடிக்கும் படங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போனது.

எத்தனை படங்கள் ஒப்பந்தமானாலும், கால்ஷீட் எதுவும் சொதப்பாமல், மிகச் சரியான நேரத்துக்குச் சென்று அமைதியாக நடித்துக் கொடுத்தார் ராதா. அவர் மேலிருந்த இமேஜ் மாறியது. ராதாவைத் தாராளமா படத்தில் போடலாம், ஒரு பிரச்னையும் செய்ய மாட்டார். தொழிலில் அவர் அவ்வளவு சுத்தம் என்ற சினிமா உலகத்தினர் உணர ஆரம்பித்தார்கள்.

என்றாவது ஷூட்டிங்குக்கு வரத் தாமதமாகும் என்றாலோ அல்லது வரமுடியாது

13

என்றாலோ முந்தைய தினமே தகவல் தெரிவித்துவிடுவார் ராதா. செட்டுக்குள் அவர் நுழையும்போது மற்ற நடிகர்களோ, டைரக்டர்களோ எழுந்து நின்று மரியாதை கொடுக்கவேண்டும் என்று ராதா ஒருபோதும் எதிர்பார்த்ததில்லை.

எத்தனை டேக் எடுத்தாலும் எதுவும் சொல்லாமல் ஒத் துழைத்தார். மற்ற நடிகர்கள் செட்டுக்கு லேட்டாக வந்தாலும், ராதா தான் சொன்ன நேரத்துக்கு வந்து அமைதியாகக் காத்தி ருந்தார். ஷாட் இடைவேளைகளில்கூட ஸ்டூடியோவை விட்டு எங்கும் செல்லமாட்டார். தனக்கான அடுத்த ஷாட் வரும்வரை மேக்-அப் ரூமிலேயே பொறுமையாகக் காத்திருந்தார்.

உண்மையிலேயே செட்டில் ராதாவின் இயல்புகள் எல்லோருக்கும் ஆச்சரியத்தையே கொடுத்தன.

●

1961-ல் ராதா நடித்து சுமார் பத்துப் படங்கள் வெளிவந்தன. அதில் முக்கியமான படம் குமுதம், பாவ மன்னிப்பு, பாலும் பழமும், சபாஷ் மாப்பிள்ளே, தாய் சொல்லைத் தட்டாதே.

இதில் 'தாய் சொல்லைத் தட்டாதே சாண்டோ சின்னப்பா தேவர் தயாரித்த படம். தேவருக்கும் ராதாவுக்கும் ஒரு நல்ல நட்பு உண்டானது. 'தேவர் பிலிம்ஸ்ல மட்டும் எப்ப தேதி கேட்டாலும் கொடுத்துருப்பா' என்று கஜபதியிடம் சொல்லி வைத்தார் ராதா.

ஏனென்றால் தேவர் பண விஷயத்தில் படு நேர்மையானவர். நடிகர்கள் கேட்டால் அட்வான்ஸாகவே முழுச்சம்பளத்தையும் கொடுக்கக் கூடியவர். அதுவும் பணமாக, செக் அல்ல. தன் படத் தில் நடிக்கும் நடிகர்கள் மேல் அவ்வளவு நம்பிக்கை வைத்தி ருந்தார் அவர். எம்.ஜி.ஆர்., சரோஜா தேவி, எம்.ஆர். ராதா - இம் மூவரை வைத்து வரிசையாகப் படங்கள் தயாரிக்க ஆரம்பித்தார் தேவர். பட பூஜை அன்றே, ரிலீஸ் தேதியை சொல்லிவிடுவார். சொன்ன தேதியில் படத்தை முடித்து ரீலிஸூம் செய்துவிடுவார்.

●

குமுதம் ஷூட்டிங்கில் இருந்தார் ராதா. அது மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பு. தயாரிப்பாளர் டி.ஆர். சுந்தரம் பற்றித்தான் தெரியுமே. ஏகப்பட்ட கண்டிஷன்களுடன் கட்டுக் கோப்பாகப் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது.

அப்போது ராதாவுக்கு ஒரு செய்தி வந்தது. 'நடிகை பி.எஸ். ஞானம் ஒரு சாலை விபத்தில் இறந்து விட்டார்கள்.'

அதிர்ச்சியில் உறைந்துபோனார் ராதா. இதே மாடர்ன் தியேட்டர்ஸில்தான் ஞானத்தை முதன்முதலில் சந்தித்திருந்தார் ராதா. இரவோடு இரவாக ஞானத்தை அங்கிருந்துதான் கடத்திச் சென்றார்.!

ஷூட்டிங் போய்க் கொண்டிருந்தது. ராதாவின் கண்கள் கலங்கியிருந்தன. 'அண்ணே, போய்ட்டு வரலாம்ணே' என்றார் கஜபதி. யோசித்தார் ராதா. காரணம், சுந்தரம் மேல் ராதாவிக்கிருந்த மதிப்பு. தன்னுடைய முதலாளி போல அவரை மதித்தார். கொஞ்சம் யோசித்துவிட்டு சுந்தரத்திடம் சென்றார். விஷயத்தைச் சொன்னார். கூடவே இப்படியும் சொன்னார்.

'ஷூட்டிங் வைச்சுக்கோங்க. ஆனா எனக்கு மூட் சரியில்லை. நான் நடிக்கிறேன். ஆனால் இப்போ நீங்க என்கிட்ட எந்த நடிப்பையும் எதிர்பார்க்க முடியாது.'

மறுநொடியே சுந்தரம் பதிலளித்தார்.

'நீங்க கிளம்புங்க. உங்களால எப்ப முடியுமோ அப்ப திரும்பி வாங்க.'

●

1962 ராதாவின் காட்டில் இடியுடன் கூடிய பலத்த புயல் மழை. அவர் இல்லாத தமிழ்ப்படங்களே இல்லை என்ற நிலை. எந்தப் படத்தின் டைட்டில் கார்டிலும் அவர் இருந்தார். அந்த வருடத்தின் எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் அவர் நடித்த ஏதாவது ஒரு படமாவது ரிலீஸ் ஆனது என்று சொல்லலாம்.

சென்னை, சேலம், கோயமுத்தூர் என்று ஸ்டூடியோவுக்கு ஸ்டூடியோ ஓடிக் கொண்டிருந்தார் ராதா.

காலையில் ஆறு மணிக்கு எழுவார். ஏழுமணிக்கு கஜபதி செல்லுவார். ராதா தயாராக இருப்பார். வீட்டிலிருந்தே மேக்-அப்புடன் கிளம்புவார். அல்லது செட்டில்கூட போய் போட்டுக் கொள்வார். காலை ஒன்பது முதல் ஒரு மணி வரை ஒரு கால்ஷீட். மதியம் இரண்டு முதல் ஆறு வரை அடுத்த கால்ஷீட். மாலை ஆறரை முதல் பத்து வரை மூன்றாவது கால்ஷீட் என்று பறந்து கொண்டிருந்தார் ராதா.

சில நேரங்களில் காலையில் விமானத்தில் ஏறி கோயமுத்தூர் செல்வார். அங்கு நடித்து முடித்துவிட்டு, மதிய விமானத்தில் சென்னை திரும்புவார். இங்கு சாயங்கால கால்ஷீட். விமானத் தில் சீஸன் டிக்கெட் வாங்காத குறையாக பறந்து கொண்டி ருந்தார். விமான டிக்கெட் கிடைக்காத நேரங்களில் ரயிலில் பயணம் செய்தார்.

ஒருமுறை கோயமுத்தூரிலிருந்து சென்னைக்குத் திரும்ப விமான டிக்கெட், ரயில் டிக்கெட் இரண்டுமே கிடைக்கவில்லை. மறு நாள் படப்பிடிப்பு இருந்தது. சென்னை சென்றே தீர வேண்டிய நிலைமை. வாடகைக்கு ஒரு வேன் எடுத்தார். 'இந்த வண்டி ஊர் போய்ச் சேருற வரைக்கும் எந்தப் பிரச்னையும் செய்யலேன்னா, நான் வாங்கிக்கறேன்' என்று சொல்லிவிட்டு அமர்ந்தார்.

வேன் பயணம் இனிமையாக அமைந்தது. 'தேவர்கிட்ட பணம் வாங்கி இந்த வேனை வாங்கிருய்யா. அடுத்து நடிக்கிற படத் தோட சம்பளத்துல கழிச்சுக்கலாம்னு சொல்லிரு' கஜபதியிடம் சொன்னார். தேவர் பணம் கொடுக்க, ராதா வாங்கிய அந்த வேனின் எண் 8909.

வீட்டில் எதுவும் வாகனம் இல்லை, ஸ்டூடியோவுக்கு அவசர மாகப் போக வேண்டுமென்றால் தயங்காமல் ஆட்டோவில் ஏறிப் போகும் பழக்கத்தை வைத்திருந்தார் ராதா.

•

'பலே பாண்டியா' படத்தில் ஒப்பந்தமானார் ராதா. அதில் அவருக்கு இரண்டு வேடம். கதாநாயகனான சிவாஜிக்கும் மூன்று வேடம். அடுத்த சில நாள்களில் சிவாஜி அமெரிக்காவுக்குச் செல்லவிருந்ததால் இருபதே நாள்களில் படப்பிடிப்பை நடத்தி முடிக்கவேண்டும் என்று மொத்தமாக கால்ஷீட் கேட்டார் டைரக்டர் பி.ஆர். பந்தலு. ராதா ஒப்புக்கொண்டார்.

முதல்நாள் படப்பிடிப்பு. சிவாஜி மேக்-அப் எல்லாம் போட்டு விட்டு செட்டுக்குள் வந்துவிட்டார். ராதாவை ரூமிலிருந்து அழைத்து வரவேண்டும். உதவி இயக்குநராக இருந்த சண்முகத்தை அனுப்பினார்கள். அதுவும் பயமுறுத்தி.

'அவரு பயங்கர கோவக்காரரு. எப்படியாவது நீ அடிவாங்காம அவரை அழைச்சுக்கிட்டு வந்துரு.'

சண்முகம் ஏற்கெனவே ராதா பற்றிக் கேள்விப்பட்ட செய்திகளும் அதேபோலவே இருந்ததால் பயந்தபடி ராதாவின் மேக்-அப் ரூமுக்குச் சென்றார். வெளியிலிருந்து குரல் கொடுத்தார். கஜபதி சண்முகத்தை உள்ளே வரச் சொன்னார்.

'வாங்க' என்றார் ராதா. தொடர்ந்து 'என்ன வேணும்?' என்றார்.

'நான் அஸிஸ்டெண்ட் இரா. சண்முகம்'

'அப்படியா. உட்காருங்க. ஏன் தயங்குறீங்க? பரவாயில்லை, உட்கார்ந்து பேசுங்க.'

'இல்ல...'

'பயப்படாதீங்க, நானும் மனுஷந்தான்.'

'உங்களை அழைச்சுட்டு வரச் சொன்னாங்க...'

'சரி, நீங்க ஒரு மாதிரி பயந்து பயந்து பேசற மாதிரி தெரியுதே?'

'ஆமாண்ணே, எல்லாரும் சொல்லி அனுப்பிச்சாங்க, உங்ககிட்ட அடிபடாம உங்களை அழைச்சுட்டு வரச் சொன்னாங்க' சண்முகம் இப்படிச் சொன்னதும் ராதா விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்துவிட்டார். அப்புறம் பேசினார்.

'அது சும்மா ஒரு தோற்றம். நான் ஒண்ணும் ரௌடி இல்லையே. கெட்டவங்களுக்கு நான் கெட்டவனா இருப்பேன். உங்களைப் பார்த்தா பசு மாதிரி இருக்கே. இங்க வந்து முரட்டுத்தனம் பண்ணுனா சம்பளம் வராதே.'

'சரிதாண்ணே.'

'என்னோட நாடகம் பார்த்துருக்கீங்களா?'

'சின்ன வயசுல பார்த்துருக்கேன். முன்னைவிட கொஞ்சம் இளைச்சுட்டீங்க நீங்க.'

'அப்படியா, வயசாவுதுல. வாங்க செட்டுக்குப் போகலாம்.'

சண்முகம் ராதாவுடன் சகஜமாகப் பேசிக்கொண்டு வருவதைப் பார்த்த எல்லோருக்கும் ஆச்சரியம். அங்கு வந்த ராதா என்ன காட்சி என்று கேட்டார். ரிகர்ஸல் எதுவும் பார்க்கவில்லை. டேக் என்றார்.

●



பேப்பரில் உள்ள டயலாக்கை மனத்தில் வாங்கிக்கொண்டு, அதில் உள்ள பொருள் மாறாமல் தன் பாணியில் பேசுவது ராதாவின் ஸ்டைல். ஷாட்டில் அப்படிப் பேசும்போது, கூடுதலாக ஒன்றிரண்டு டயலாக்குகளைக் கலந்துவிடுவார் ராதா. எல்லாம் நாடக மேடை தந்த அனுபவம். ஆனால் உடன் நடிப்பவர் அந்தச் சமயத்தில் என்ன பேசுவதென்று தெரியாமல் திணறிப் போவார்கள்.

'இப்படி டயலாக்கையெல்லாம் சொந்தமாப் பேசுனா, நான் எங்கப்பா போவேன்' இப்படி சிவாஜியே சமயங்களில் கமெண்ட் அடித்ததுண்டு.

உடன் நடிப்பவர்கள் பேசும்போது, ராதா சும்மா இருக்க மாட்டார். தன் உடலசைவால் நடித்துக்கொண்டிருப்பார் அல்லது முகத்தில் விதவிதமான சேஷ்டைகளைக் காட்டுவார். இதனால் தியேட்டரில் மக்கள், ராதாவுக்கு டயலாக் இல்லாதபோதும் அவரையே கவனித்துக் கொண்டிருப்பார்கள். ஆடியன்ஸை தன் பக்கம் ஈர்க்கக்கூடிய திறன் ராதவுக்கு அளவுக்கு அதிகமாகவே இருந்தது. இதனால் உடன் நடிப்பவரது நடிப்பு எடுபடாமல் போனது. எனவே, ராதாவுடன் நடிப்பதென்பது ஒவ்வொருவருக்கும் தனிச் சவாலாகவே இருந்தது. இரண்டு அல்லது மூன்று டோன்களில் குரலை உயர்த்தித் தாழ்த்தி அவர் பேசும் ஸ்டைலில் எந்தக் காட்சியுமே கலகலப்பாக மாறிவிடும். பல சமயங்களில் ராதா பேசும் எதிர்பாராத பஞ்ச் வசனங்களில் உடன் நடிப்பவர் சிரித்துவிடுவர். காட்சியை மீண்டும் எடுக்க வேண்டியதாகிவிடும்.

•

பலே பாண்டியாவில் கள்வர் தலைவர் கபாலியாக நடித்த ராதாவின் கெட்-அப் மொட்டை. கஜபதி முடியை மறைக்கும்படியாக தலையில் ஒட்டவேண்டியதெல்லாம் ஒட்டிவிட்டார். இருந்தாலும் மேக்-அப்பில் திருப்தி இல்லை. கேரா மேல் ஒட்டியிருப்பது எல்லாம் நன்றாகவே தெரிந்தது. கேமரா முன் ராதா சும்மா இருக்க மாட்டாரே. குதிப்பார். துள்ளுவார். அதற்கெல்லாம் தாங்காமல் அந்த ஒப்பனை உறிந்து வந்துவிடும்போல இருந்தது.

'அண்ணே எனக்குத் திருப்தியில்லண்ணே!' என்றார் கஜபதி.

ராதா புரொடெக்ஷன் மேனேஜரை அழைத்தார். இருபது முழம் பூ வாங்கி வரச் சொன்னார். பூ வந்தது. அதைத் தன் மொட்டைத் தலையில் சுற்றினார். காதருகில் கேரா பகுதியில் இரண்டு துண்டுகளைத் தனியாகத் தொங்கவிட்டுக் கொண்டார். ராதாவின் இந்த ஐடியாவால் அந்த கேரக்டருக்கே தனி லுக் கிடைத்தது. ராதாவைப் பார்த்ததும் செட்டில் இருந்தவர்கள் எல்லாம் சிரித்து விட்டார்கள். தியேட்டரிலும் ரசிகர்கள் அதையே செய்தார்கள்.

•

'நீயே உனக்கு என்றும் நிகரானவன்...

மாமா... மாப்ளே...'

பாடலை முதன்முதலில் செட்டில் கேட்டார் ராதா. அவரது குரல் போலவே இருந்தது அது.

'அட யாருப்பா இது? நான் பாடுன மாதிரியே இருக்குது?' ஆச்சரியமாகக் கேட்டார். விவரம் சொன்னார்கள். பாடலைப் பாடிய எம். ராஜுவை உடனே பார்க்கவேண்டும் என்று விருப்பப்பட்டார் ராதா. அவர் எம்.எஸ். விஸ்வநாதன் குழுவில் இருந்தவர். வரவழைக்கப்பட்டார்.

ஒல்லியாக, சிவப்பாக இருப்பார் அவர். ராதா முன் சென்று நின்றார். 'என்னப்பா பாடகரை அழைச்சுட்டு வரலையா?' கேட்டார் ராதா. இவர்தான் என்றார்கள்.

'பாடுனது நீங்களா?' ராதாவுக்கு ஆச்சரியம்.

'ஆமாண்ணே' என்றார் ராஜு. மென்மையான குரல்.

'எனக்கு அதிசயமா இருக்கு. பேசறப்போ இவ்வளவு மெதுவா பேசறீங்க. என் குரல்லயே பாடியிருக்கீங்க. உங்களை எப்படிப் பாராட்டறதுன்னே தெரியலை. நான் உன்னை மறக்கவே மாட்டேன் தம்பி. யாருப்பா அங்க? தம்பிக்கு காபி கொடுங்க' உபசரித்து அனுப்பினார் ராதா.

அந்தப் பாடலில் நடிப்பதற்காக, சிவாஜி பலமாகப் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தார். பாடலில் கிட்டத்தட்ட இரண்டு, மூன்று நிமிடங்களுக்கு ஆலாபனை வருமே. அதற்காகத்தான் அவ்வளவு பயிற்சி.

[illegible], நீங்க மாட்டிக்கிட்டீங்க' என்ற போகிற போக்கில் [illegible] கலாட்டா செய்துவிட்டுப் போனார் சிவாஜி. [illegible]யே அவ்வளவு பெரிய ஆலாபனைக்கு உதடு [illegible]ல்லாம் ராதாவுக்குக் கடினமான காரியமாகத்தான் [illegible].

[illegible] ரக்டரிடம் வந்தார்.

[illegible] பந்தலு. கணேசன் மாதிரில்லாம் நம்மளால [illegible]. கேமராவை வைச்சுக்கோ. நான் பாட்டுக்கு ஆக்ட் [illegible]வேன். எங்க எனக்கு உதடசைக்கிறது கரெக்டா [illegible] தெரியுதோ, அந்த இடத்துல கேமாராவுக்கு [illegible] காட்டுவேன். மத்த இடத்துல குனிஞ்சுக்கிட்டுதான் [illegible]ன். வேற வழியில்லப்பா. நீ பாட்டுக்கு டைட் குளோஸ் [illegible]ல்லாம் வைச்சிடாதே. அப்பப்ப கட் சொல்லிடாதே. [illegible]?'

[illegible]லிவிட்டு ராதா ஷாட்டுக்குச் சென்றார்.

[illegible] படப்பிடிப்பு ஆரம்பமானது. பாதி பாடல் வரை [illegible]ங்காகப் போனது. ஆலாபனைக் காட்சிகள் வரும்போது, [illegible] தன் உதட்டசைவுகளை அட்ஜெஸ்ட் செய்ய, உட்கார்ந் [illegible]க்கும் சோபாவிலிருந்து குதியோ குதியென்று குதிக்க ஆரம் [illegible]த்தார். ஏகப்பட்ட சேஷ்டைகள் செய்தார். செட்டில் டைரக்டர், கேமராமேன், லைட் பாய் உள்பட எல்லோராலும் சிரிப்பை [illegible]க்கமுடியவில்லை. சில ரீடேக்குகள் ஆகத்தான் செய்தது.

ஒரு கட்டத்தில் ராதா திடீரென பெரிய பாடகர் போல காதருகே தன் இடது கையை வைத்து, வலது கையை நீட்டி பயங்கர ஆக்ஷன் கொடுப்பதைப் பாடலில் காணலாம். ஆனால் அது ஆக்ஷன் அல்ல. நடந்த விஷயமே வேறு.

ஏகத்துக்கும் குதித்ததில் ராதாவின் விக் லூஸாகி விட்டிருந்தது. அந்த ஷாட் முடியப் போகும் நேரம் அது. விக் கழண்டு விட்டால், இன்னொரு முறை நடிக்க வேண்டியது வருமே. அந்தச் சமயத்தில்தான் பெரிய பாடகர் போல ஆக்ஷன் செய்து, விக்கைக் காப்பாற்றிக் கொண்டார் ராதா.

அந்த இருபது நாள்களும் திருவிழாபோல 'பலே பாண்டியா'வின் ஷூட்டிங் நடைபெற்றது. சில நாள்களில் காலை ஏழு மணிக்கு ஆரம்பித்து, இரவு ஒரு மணிவரைகூட நீண்டது.

கடைசி நாள் ஷூட்டிங் முடிந்து கிளம்பும்போது, 'ரொம்ப சந்தோஷமா போறேன். அடிக்கடி கூப்பிடுங்க என்னை' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினார் ராதா.

●

'படித்தால் மட்டும் போதுமா' படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த நேரம். வெளியூருக்குச் சென்றிருந்த ராதா, காலையில் வர வேண்டிய நேரத்தில் வீட்டுக்கு வரவில்லை. கஜபதி ராதாவுக்காக வீட்டில் காத்திருந்தார். மணி ஏழானது. எட்டு, ஒன்பது, பத்தானது.

பட கம்பெனிக்கு போன் செய்தார் கஜபதி. 'ஊருக்குப் போன அண்ணன் வரலை. ஷூட்டிங் கேன்சல்' என்றார். ஆனால் ராதா ஷூட்டிங் நடந்து கொண்டிருந்த சதர்ன் ஸ்டூடியோவில் படுத்துக் கிடந்தார். விவரமறிந்த கஜபதி அங்கு விரைந்தார்.

'அதுவா, வீட்டுக்குப் போயிட்டு வந்தா லேட் ஆகும்னு தோணுச்சு. அதான் நேர இங்கயே வந்து படுத்துட்டேன்' என்றார் ராதா.

●

நடிப்பதாகச் சொல்லி அநாவசியமாகத் தொண்டை கிழியக் கத்துகிறார் என்று சில பத்திரிகைகள் பட விமரிசனங்களில் ராதாவைத் தாக்கி எழுதின. அதற்கு ஒருமுறை பதில் சொன்னார் ராதா.

'நான் கத்தறேன் கத்தறேன்னு சொல்கிறார்கள். புரியாதவர்கள். ஒரு சில ஆள்கள் வந்து வளவளவென்று பேசிவிட்டுப் போவார்கள். போனபின் அவன் என்ன பேசினான் என்றே நமக்குப் புரிந்திருக்காது. அதுபோல படங்களில் நான் நடிக்கும் கேரக்டர் அந்த மாதிரி. இது புரியாதவர்கள் அநாவசியமாகப் பேசுகிறார்கள். எனக்கு எப்படி நடிக்க வேண்டியதென்பதும், எப்படிப் பேச வேண்டுமென்பதும் நன்றாகத் தெரியும். நடிப்போ, பேச்சோ யார் சொல்லிக் கொடுத்தும் வருவதில்லை. அது இயற்கையாக வரவேண்டும்.'

●

1963லும் தமிழ் சினிமாவில் ராதாவின் ராஜ்யம் தொடர்ந்தது. அவரது மார்க்கெட் உச்சத்தில் இருந்தது. சிவாஜி, எம்.ஜி.ஆர்,

ஜெமினி கணேசன் படங்களென்றால் ஒரு லட்சமும், மற்றவர்கள் படத்துக்கு அறுபதாயிரமும் வாங்கினார் ராதா. வெளிவரும் பெரும்பாலான படங்களில் அவர் இடம்பெற்றிருந்தார்.

ராதாவே நகைச்சுவை, குணச்சித்திரம், வில்லன் இந்த மூன்றையும் சேர்த்து ஒரே பாத்திரமாகச் செய்துவிடுவதால், பல நடிகர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று விமரிசனங்கள் எழுந்தன. அதற்கு ராதா சொன்ன பதில்.

'நான் எந்தப்படத்தில் புக் ஆனாலும் ஒரே மாதிரி ரேட் வாங்கி வந்தேன். அது பட முதலாளிகளுக்கு வசதியாக இருந்தது. என்னுடைய நியாயமான ரேட், புதுமையான நடிப்பு, நேரப்படி படப்பிடிப்புக்கு வருவது ஆகியவற்றால் எனக்கு ஏகப்பட்ட படங்கள் புக் ஆயின. என் வரவால் அப்பா நடிகர்களும் காமெடி நடிகர்களும் பாதிக்கப்பட்டார்கள் என்பது தவறு. என்னுடைய ஒத்துழைப்பால், நேர்மையால் உயர்ந்தேன். ஜால்ரா கூட்டங் களால் நான் உயரவில்லை.'

'இருவர் உள்ளம்' படத்தில் டைரக்டர் எல்.வி. பிரசாத், படத்தில் ராதாவுக்கு வில்லன் வேடம் கொடுக்காமல், நல்லதொரு குணசித்திர பாத்திரத்தைக் கொடுத்திருந்தார்.

'புத்தி சிகாமணி பெத்த புள்ள...'

படத்தில் ராதாவுக்கான பாடல் இது. ஏ.எல். ராகவன் பாடி யிருந்தார். ராதாவுக்கான கரகர குரலில் எல்லாம் வேண்டாம், இயல்பான குரலில் பாடல் இருந்தால் போதும் என்று டைரக்டர் கேட்டதுபடியே பாடிக் கொடுத்தார் ராகவன்.

'எனக்கு இப்படி ஒரு பாட்டா? இதுல நான் நடிச்சா மக்கள் ஏத்துக்க மாட்டாங்க. நல்லா வராது' என்று மறுத்தார் ராதா.

'நான் பாட்டை எடுத்துடுறேன். அதை மட்டும் கட் செஞ்சு போட்டு உங்ககிட்ட காண்பிக்கிறேன். நீங்க நல்லாயிருக்குன்னு சொன்னா படத்துல வைச்சுக்கிறேன். இல்லேன்னா தூக்கிட லாம்' என்றார் பிரசாத்.

ராதா ஒப்புக்கொண்டார். நடிகை முத்துலட்சுமியுடனும், ஏராளமான குழந்தைகளுடனும் ராதா பாடுவதுபோல பாடல் படமாக்கப்பட்டது. பிரசாத் பாடலை ராதாவுக்குப் போட்டுக் காண்பித்தார். பாடலைப் பார்த்த ராதா கண்கலங்கினார்.

பிரசாத்தைப் பாராட்டினார். நீண்ட வருடங்களுக்கு அந்தப் பாடல் குடும்பக்கட்டுப்பாடு பிரசாரப் பாடலாகப் பட்டி, தொட்டியெங்கும் ஒலித்தது.

●

'நானும் ஒரு பெண்' படத்தில் ரங்காராவ் முக்கிய பாத்திரத்தில் நடித்தார். அவரும் ராதா போல ஒரு சீனியர். அவரிடம் பேசவும் எல்லோரும் பயப்படுவார்கள். ஆனால் அப்போது ரங்காராவ், ஒழுங்காக படப்பிடிப்புக்கு வராமல் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தார்.

காலையில் ஷூட்டிங் ஆரம்பிக்கும். ஒன்பது மணிக்கே ராதா வந்துவிடுவார். ஆனால் ரங்காராவ் பதினோரு மணிக்கு சாவகாச மாக வருவார். மதியம் ஒரு மணிக்கு வீட்டுக்கு சாப்பிடக் கிளம்பி விடுவார். சில சமயங்களில் மாலை மீண்டும் வருவார். பல சமயங்களில் மது அருந்திவிட்டு வீட்டிலேயே இருந்துவிடுவார். இது பல நாள்கள் தொடர்ந்தது. டைரக்டர் உள்பட யாராலும் அவரைக் கேள்வி கேட்க முடியவில்லை.

ராதா கூடிய மட்டும் பொறுமையாக இருந்தார். அவரது கால்ஷீட் வீணாகிக் கொண்டே போனது. அடுத்த நாள் செட்டில் ராதா காத்திருந்தார். பத்தரை மணிக்கு உள்ளே நுழைந்தார் ரங்காராவ்.

'ராதாண்ணே வணக்கம்' என்றார் அவர்.

உடனே ராதா கஜபதியிடம் 'பாருய்யா, படத்துல நான் கெட்டவன் வேஷம் போடுறேன். ஒன்பது மணிக்கே வந்து காத்துக்கிட்டிருக்கேன். படத்துல இவரு நல்லவன் வேஷம் போடறாரு. வர்ற நேரத்தைப் பார்த்தியா?' பஞ்ச் டயலாக் ஒன்றைச் சொன்னார்.

ரங்காராவின் முகம் சுருங்கிப் போனது. மேக்-அப் ரூமுக்குச் சென்ற அவர், கஜபதியை அழைத்தார். 'இந்தப் படம் முடியற வரைக்கும் தயாரிப்பாளர்கிட்ட சொல்லி, மதியானம் கொஞ்ச நேரம் நான் படுக்கறதுக்கு ஏற்பாடு செஞ்சு கொடுக்கணும்' என்றார்.

ஏற்பாடு செய்யப்பட்டது. ராதாவும் ரங்காராவும் மதியம் ஒன்று முதல் மூன்று வரை ரெஸ்ட் எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

மூன்று மணிக்கு வரும் டிகிரி காபியைக் குடித்துவிட்டு நடிப்பைத் தொடர்ந்தார்கள். படப்பிடிப்பு சீக்கிரம் முடிந்தது.

அன்று, சீனியர் நடிகர் யாராக இருந்தாலும் தவறு செய்தால் தட்டிக் கேட்கும் துணிச்சல் ராதாவிடம் மட்டுமே இருந்தது.

•

அதுவரை சிறு வேடங்களிலும் வில்லனாகவும் மட்டுமே நடித்து வந்த அசோகன், ராதாவைத் தேடி வீட்டுக்கு வந்தார். ராதாவைப் பார்த்து அவரது கால்களில் விழுந்தார்.

'அண்ணே, நான் ஹீரோவாகிட்டேன்.'

'அப்படியா. சந்தோஷம் சந்தோஷம். நீ நல்லா ஓஹோன்னு வா அசோகா!' நிறைந்த மனத்துடன் ஆசீர்வாதம் செய்தார் ராதா. கதாநாயகி சந்திரகாந்தா, ஜி.என். வேலுமணி தயாரிக்கிறார், படத்தின் பெயர் இது சத்தியம், டைரக்‌ஷன் கே. சங்கர் என்று இதர விவரங்களையும் அடுக்கினார் அசோகன். சொல்லிவிட்டு பின் இதையும் சொன்னார். 'எம்.ஜி.ஆர். சிவாஜி இவங்க காலுலயும் விழுந்து ஆசீர்வாதம் வாங்கிட்டேன் அண்ணே!'

டக்கென ராதாவின் முகம் மாறியது.

'அசோகா, நீ ஹீரோவா வரவே மாட்ட' என்று அழுத்தமாகச் சொன்னார் ராதா.

'ஏன் அப்படிச் சொல்றீங்கண்ணே?' அதிர்ச்சியாகக் கேட்டார் அசோகன்.

'நான் வில்லன். என் கால்ல விழுந்தே. நான் மனசார ஆசீர்வாதம் பண்ணுவேன். ஹீரோ ஆகட்டும்னு நினைப்பேன். ஆனா, நீ ஒரு ஹீரோ கால்ல போய் விழுந்து ஹீரோவாயிட்டேன்னு சொன்னா, அவன் எப்படி ஆசீர்வாதம் பண்ணுவான்? அது அவனை பாதிக்குமே. நீ ஹீரோவா வரவே முடியாது.'

தொங்கிய முகத்துடன் அசோகன், ராதா வீட்டிலிருந்து வெளியேறினார்.



# சரோஜா தேவியின் பிறந்தநாள்

ஒருநாள் திராவிடர் கழகப் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. பெரியார் பேசிக் கொண்டிருந்தார். லேசாக ஆரம்பித்த தூறல் கடும் மழையாக மாறியது.

பெரியார் உள்பட எல்லோரும் அருகிலிருந்த வேப்பேரி தேவாலயத்தில் ஒதுங்கினர். அங்கே வைத்து கூட்டத்தைத் தொடர பெரியார் அனுமதி கேட்டார்.

'நீங்க சாதி இல்லை, கடவுள் இல்லைன்னு சொல்லுறவங்க. உங்களுக்கு இடம் தர முடியாது' என்று மறுத்துவிட்டார்கள்.

'நான் வந்து பேசுறதுனால உங்க கடவுளுக்குச் சக்தி போயிரும்னு பயப்படுறீங்களா? சரி. நான் ஒரு மேடை கட்டுவேன். நான் கடவுள் இல்லைன்னு சொல்லுறவன். ஆனா நான் கட்டுற மேடையில 'கடவுள் இருக்கு'ன்னு சொல்லுறவங்க, கேட்டா அவங்களுக்கும் வாடகைக்குக்

14

கொடுப்பேன்' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்பினார் பெரியார்.

சொன்னது போலவே பெரியார் திடலில் கூட்டம் நடத்த அரங்கம் ஒன்றைக் கட்டினார் பெரியார்.

1963-ல் இந்த அரங்கம் கட்ட அடிக்கல் நாட்டினார் பெரியார். அந்த வருடத்தின் பெரியார் பிறந்த நாளன்று (செப்டம்பர் 17) அதன் திறப்பு விழாவுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அந்த அரங்கத்துக்கு பெரியார் வைத்த பெயர் 'நடிகவேள் ராதா மன்றம்.'

ராதாவுக்கு தர்ம சங்கடமாகப் போய்விட்டது. அதனால் அந்த விழாவையே புறக்கணிக்க நினைத்தார். ராதா பெயரிடப்பட்ட அந்த அரங்கத்தில் விழா ஆரம்பமானது. நேரம் சென்று கொண்டே இருந்தது.

'நானல்லவா அவர் பெயரை வைத்து இந்த மன்றத்தைத் திறக்கிறேன். ஏன் வரக்கூடாது? ராதாவைப் பெருமைப் படுத்துகிறேன் என்றால் அதனால் சமுதாயத்துக்கு இலாபம் என்று கருதிதானே நான் செய்கிறேன்' பெரியார் கோபமாகச் சொன்னார்.

உடனடியாக கி. வீரமணி, ராதாவின் வீட்டுக்குச் சென்றார். அவரை வலுக்கட்டாயமாக அழைத்துவந்து மேடையில் உட்கார வைத்தார். ராதா மேடையில் கொஞ்சம் அசௌகரியமாகவே அமர்ந்திருந்தார். பெரியார் பேச ஆரம்பித்தார்.

'இதற்கு ராதாவின் பெயர் ஏன் வைக்க வேண்டும்? ராதா ஒரு கலையில் இருக்கிறார். இந்த நாட்டுக்கு இதுவரைக்கும் பெரிய கேடு கொண்டுவந்த அநேக சாதனங்களில் மிக முக்கியமான சாதனம் சினிமா. அதில் இதுவரைக்கும் முட்டாள்தனமான நடிகர்களே தோன்றினார்கள். ஆனால் நடிகவேள் தோன்றி யிருக்கிறார். ஏனோ அதிசயமாகவோ, அவருக்கே புத்தி வந்ததோ, தோன்றினார். அவர்தான் நடிப்புக் கலையை கொஞ்சம் மாற்றினார். மனிதனுக்கு அறிவு வரும்படி சிந்திக்கும் படி சிரிப்பால் சொன்னாலாவது புத்திவரட்டும் என்று சொல்லி வருகிறார். மடையர்கள் சொல்லவில்லை. ராதாதான் சொல்லி வருகிறார். சுயமரியாதைக் கருத்துகளை எடுத்துச் சொன்னதால் ராதா ஒழிந்துவிடவில்லை. வாழமுடியாமல் போனதுமில்லை.



ராதா வாழ்க. ராதாவைப்போல் மற்றவர்களுக்கும் புத்தி வரட்டும்.'

●

கம்பர் விழாவில் கலந்துகொண்டு பேச ராதாவுக்கு அழைப்பு வந்தது. போனார். பேசினார்.

'பெரியவங்களே, சின்னவங்களே, பொம்பளைங்களே. நீங்கள்லாம் இப்ப எதுக்கு வந்திருக்கீங்க அப்படின்னு உங்களுக்குத் தெரியும். இந்த கம்ப நாடாரின் விழாவிலே...'

குறுக்கிடும் ஒருவர் 'அய்யா, அவரு நாடாரு இல்லை.'

'நாடார் இல்லையா. நம்மாளு போலருக்கு. இந்த கம்ப முதலியராகப்பட்டவர்...'

'அய்யா, அவரு முதலியாரும் இல்லை.

'முதலியாரும் இல்லையா! சரி என்னன்னு புரிஞ்சுப் போச்சு. இந்த கம்பர் அய்யர் ஆனவர்...'

'அய்யா, அவரு அய்யரும் இல்லை.'

'என்னது நாடார் இல்லை, முதலியார் இல்லை, அய்யரும் இல்லை. அப்ப இப்பதான் சாதியை எல்லாம் சொல்லிக் கிட்டிருக்கோமா? அப்ப ஜாதி கிடையாதா? சரிதான். இந்தச் சாதியில்லாத கம்பன் விழாவிலே...'

ராதாவின் பேச்சு தொடர்ந்தது.

●

1964லும் பெரும்பாலான படங்களில் இடம்பெற்றிருந்தார் ராதா. 'புதிய பறவை'யில் சிஐடி வேடத்தில் வித்தியாசமான நடிப்பை வெளிப்படுத்தியிருந்தார். 'அருணகிரிநாதர்' என்ற பக்திப் படத்திலும் நடித்தார்.

ஆச்சரியப்பட்டுக் கேட்டவர்களுக்கு 'காசு கொடுக்கிறான். நடிக்கிறேன். இது என் தொழில். அவ்வளவுதான்' என்று பதில் கூறினார் ராதா.

'மகளே உன் சமத்து' என்றொரு படம். புதிதாக நடிகை ஒருவர் அறிமுகமாகியிருந்தார்.

‘உன் பேரு என்னம்மா?’ ராதா கேட்டார்.

‘தெய்வநாயகி’ என்றாள் அந்தப் பெண்.

‘தெய்வநாயகியா? அய்யய்ய... இதெல்லாம் ஓல்டு மாடல். சினிமாவுக்கு எடுபடாது. விஜயா, கிஜயான்னு எதாவது வைச்சுக்கோ’ என்றார் ராதா.

அந்தப் பெண் விஜயா என்று வைத்துக் கொண்டார். கே.ஆர். விஜயா என்றால் புரியும்.

●

‘எங்க வீட்டுப் பெண்’ படத்தை நாகிரெட்டி எடுப்பதாக இருந்தார். அவரும் ராதாவும் அதற்கு முன்பு பார்த்ததுகூட கிடையாது. ராதாவை வாகினி ஸ்டூடியோவுக்கு வரச் சொல்லி யிருந்தார் நாகிரெட்டி.

வழக்கம்போல அண்டர்வேர், கட் பனியனுடன் வந்த ராதா விடமே நாகிரெட்டி கேட்டார், ‘ராதா வரலையா?’ என்று. அவர் கையில் மாலை வேறு இருந்தது. ‘நான்தான் ராதா’ என்று மாலையை வாங்கிப் போட்டுக்கொண்டார் ராதா. உள்ளே சென்றார்கள்.

படத்தின் டைரக்டர் ஏ.டி. கிருஷ்ணசுவாமி கதையைச் சொன்னார். ராதாவின் கதாபாத்திரம் பற்றியும் சொன்னார். முழு வதையும் பொறுமையாகக் கேட்டார் ராதா. அவர் பேசி முடித்த உடன், ‘படம் ஓடாது. இந்தப் படத்துல நடிக்க நான் தேவை யில்லை. நீங்க வேற யாரையாவது போட்டு எடுத்துக்கோங்க’ என்றார்.

பொதுவாக, படத்தின் கதை பற்றியெல்லாம் எந்த அபிப்ராயமும் யாரிடமும் சொல்லும் வழக்கம் ராதாவுக்கு இருந்ததில்லை. ஆனால் அன்று என்ன தோன்றியதோ, அப்படிச் சொல்லி விட்டார்.

‘நீங்க நடிக்கலைன்னா, நான் படமே எடுக்கலை’ என்றார் நாகிரெட்டி.

கொஞ்ச நேரம் யோசித்த ராதா, ‘சரி, வற்புறுத்துறீங்க. நடிக்கிறேன். ஆனா படம் ஓடாதுங்கிறது என் கருத்து’ என்றார் மீண்டும் ஒருமுறை.

படம் எடுக்கப்பட்டு வெளிவந்தது. பெரிதாக வெற்றிபெற வில்லை.

•

1965-ல் பத்துக்கும் மேற்பட்ட படங்களில் நடித்தார். குறிப்பாக 'ஹலோ மிஸ்டர் ஜமீன்தார்' படத்தில் பிரதான பாத்திரத்தில் நடித்திருந்தார்.

1966-ல் ராதா நடித்து மூன்று படங்கள் வெளியாயின. சந்திரோதயம், சித்தி, பெற்றால்தான் பிள்ளையா?

•

ஒருமுறை ஷூட்டிங்கின் மதிய இடைவேளையில் ராதாவுக்கு வீட்டில் சென்று சாப்பாடு எடுத்து வர வேண்டியதிருந்தது. ஆனால் வாகனம் எதுவும் இல்லை. சிவாஜி அப்போதுதான் இம்பாலா கார் புதிதாக வாங்கியிருந்தார். ராதா சாப்பாடு எடுத்து வருவதற்காக சிவாஜியிடம் காரைக் கேட்டார்.

'அண்ணே, அது இம்பாலாண்ணே!' என்று சொல்லிவிட்டார் சிவாஜி.

அடுத்த மூன்றே நாள்களில் புதிய இம்பாலா ஒன்றை வாங்கினார் ராதா. மதிய உணவு இடைவேளையில் சிவாஜி இருக்கும் நேரம் பார்த்து இம்பாலா அங்கு வந்து நின்றது. அதில் நிரம்ப நிரம்ப வைக்கோல் கட்டுகள் ஏற்றப்பட்டிருந்தன.

'கணேசா, பார்த்தியா இம்பாலா.'

'என்னண்ணே, வைக்கோல் கட்டுல்லாம் ஏத்திக்கிட்டு?' சிவாஜி கேட்டார்.

'அது என்ன? வெறும் தகரம்தானே. தோட்டத்துக்கு வைக்கோல் ஏத்திட்டுப் போக எனக்கு வண்டி கிடைக்கல. சரி இம்பாலால ஏத்திக்கோப்பான்னு சொன்னேன். வைக்கோலை நாம வேற எதுல போட முடியும்? இம்பாலாலதான் போட முடியும்.'

•

ஜனவரி 7. சரோஜா தேவியின் பிறந்த நாள் அது. அன்று அவர்கள் வீட்டில் சத்ய நாராயணா பூஜை இருக்கும். வருடா வருடம்



முன்னணி நட்சத்திரங்கள், சரோஜாவின் வீட்டுக்குச் சென்று அவரை வாழ்த்துவார்கள். பூஜையில் கலந்து கொள்ளுவார்கள். விருந்து சாப்பிட்டுவிட்டு வருவார்கள்.

சரோஜா மேல் பாசம் கொண்ட ராதாவும் அவரது பிறந்த நாள் விழாவில் வருடந்தோறும் கலந்துகொண்டார். ஷூட்டிங்கை எல்லாம் முடித்துவிட்டு இரவில் சரோஜா வீட்டுக்குச் செல்லு வார். வாசலில் வரும்போதே 'சரோஜா...' என்று வாய் நிறையக் கூப்பிடுவார். சரோஜா அவர் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்குவார்.

'உன் பொண்ணை நல்லா வளர்த்து வைச்சிருக்க. உடம்பு நிறைய துணி போட்டு வர்ற நடிகை யாருன்னா அது சரோஜாதான். என்னா அழகு! ரொம்ப சந்தோஷமா இருக்கு. ரொம்ப நல்ல பொண்ணு' என்று சரோஜாவின் அம்மாவிடம் மகிழ்ச்சியாகப் பேசுவார் ராதா.

ஷூட்டிங் முடிந்து இரவு ஒவ்வொரு நட்சத்திரங்களாக வர ஆரம்பிப்பார்கள். எம்.ஜி.ஆரும் வருவார். 'வாப்பா ராமச் சந்திரா...' என்று சிரித்து வரவேற்பார் ராதா. அப்போது எம்.ஜி.ஆரைப் பெயர் சொல்லி அழைக்கும் உரிமையும் துணிச்சலும் ராதாவிடம் மட்டுமே இருந்தது. எல்லோருடனும் சேர்ந்து சாப்பிட்ட பின்பே கிளம்புவார் ராதா.

●

ராதா அடிக்கடி நேரம் ஒதுக்கி பெரியாரை அவர் இல்லத்தில் சென்று சந்திப்பார். குறிப்பாக அவருக்கு உடல்நிலை சரியில்லையென்றால் உடனே கிளம்பிவிடுவார்.

'வாய்யா...' என்று வரவேற்பார் பெரியார். கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருப்பார்கள்.

'அய்யா உங்களுக்கு உடம்பு சரியில்லைன்னு சொன்னாங்க...' பணத்தை எடுத்து பெரியார் கையில் கொடுத்துட்டு, 'இப்போ உங்களுக்கு உடம்பு சரியாயிரும். வரட்டுங்களா?' என்று சிரித்தபடியே கிளம்பிவிடுவார்.

●

தயாரிப்பாளர் ஜி.என். வேலுமணியின் மகன் சரவணனுக்குத் திருமணம். ராதா சென்றிருந்தார். பெரியார் வருவதாக இருந்தது.

வேலுமணி, பெரியாருக்குக் கொடுப்பதற்காக ஒரு வெள்ளித்தடி ஒன்றை வைத்திருந்தார்.

'வேலுமணி, தடி குடுக்கப் போறியா? குடு, குடு. நம்ம ஆளு அதைத் தட்டித் தட்டிப் பார்ப்பாரு...' ராதா கமெண்ட் அடித்தார்.

பெரியார் வந்தார். வேலுமணி வெள்ளித்தடியை வழங்கினார். ராதா சொன்னதுபோலவே, தடியைக் கையில் வாங்கிய நேரம் முதல், பெரியார் அதையே திருப்பித் திருப்பி, தட்டித் தட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார். ராதா, வேலுமணியைப் பார்த்து கிண்டலாக்ப் புன்னகை செய்தார்.

•

ஒருநாள் ராதா கஜபதியை அழைத்தார். கையில் பணத்தைக் கொடுத்தார்.

'இளங்கோவனைத் தெரியுமா?' என்று கேட்டார்.

'நல்லாத் தெரியும்ணே' என்றார் கஜபதி.

'அப்படியா, சரி அந்தப் பணத்தைக் குடு' என்று கஜபதியிடம் இருந்து வாங்கி, தன் டிரைவரிடம் கொடுத்தார். பணத்தை இளங்கோவனிடம் கொடுக்கச் சொல்லி அனுப்பினார்.

கஜபதிக்கு ஒருமாதிரி ஆகிவிட்டது. கஜபதியின் முகம் மாறு வதைக் கண்ட ராதா, 'என்னய்யா ஒருமாதிரி இருக்க?' என்றார்.

'இல்லண்ணே, நான் கொடுத்துட மாட்டேனா? நம்பிக்கை இல்லையா?' என்றார் கஜபதி.

'இளங்கோவன் எவ்வளவு பெரிய வசனகர்த்தா. கொடி கட்டிப் பறந்தவரு. செட்டுல வசனத்துல ஒரு வார்த்தை மாத்துறதுனா கூட அவரைத் தேடிப்போய்க் கேட்டு அனுமதி வாங்கித்தான் மாத்துவாங்க. அவரு ஓஹோன்னு இருக்கறப்போ நீ பார்த் துருக்க. அவரை நல்லாத் தெரியும்னு சொல்லுற. இப்ப அவரு நிலைமை சரியில்லை. அவர் வீட்டை ஜப்தி பண்ணப் போறாங் களாம். நீ போய் பணம் கொடுக்குறப்போ என்ன நினைப்பாரு? நம்ம நிலைமை இப்படி ஆயிருச்சேன்னு வருத்தப்படுவாரு. அதான் தெரியாதவங்க மூலம் கொடுத்தேன். அவரு அவ மரியாதையா நினைக்கக்கூடாதே' ராதா தெளிவுபடுத்தினார்.

பொதுவாகவே ராதா ஏராளமான தரும காரியங்கள் செய்வார். கேட்டவர்களுக்கெல்லாம் இயன்ற அளவு உதவுவார். எந்த உதவியையுமே வெளியில் தெரியாமல் செய்ய வேண்டுமென்று நினைப்பார்.

'மாசத்துல ஒரு ரெண்டு நாள் மட்டும் ஃப்ரீயா விட்டுரு. மத்தபடி சினிமாவுக்கு கால்ஷீட் கொடுத்துரு' கஜபதியிடம் சொல்வார் ராதா.

ஒரு நாளைக்கு மூன்று கால்ஷீட் கொடுத்து, இரவு பகலாக நடித்து வந்த நேரத்திலும், மாதத்தில் இரண்டு நாள்களாவது நாடக மேடையில் நடித்தால்தான் ராதாவுக்கு நிம்மதியாக இருக்கும்.

'அந்த 13ஆம் தேதியில நாடகம் இருக்கே? அன்னிக்கு வேண்டாமே' என்பார். நாடகத்துக்காக ஒதுக்கிய நேரத்தில் எந்தக் காரணம் கொண்டும் சினிமாவுக்கு கால்ஷீட் தரமாட்டார்.

அத்தனை நாள்கள் தன்னை நம்பியிருந்த தன் நாடகக் குழுவினருக்குச் செய்யும் சிறு உதவியாக இதை நினைத்தார் ராதா. அவ்வப்போது அவரைத் தேடி, நாடகக்குழு ஆள்கள் வருவார்கள், உதவி கேட்டு.

'சாப்பிட்டியா?' ராதா கேட்கும் முதல் கேள்வி இதுவாகத்தான் இருக்கும். 'முதல்ல போய் சாப்பிட்டு வா' என்று தன் வீட்டுக்குள் அனுப்புவார். தினமும் ராதாவின் வீட்டில் குறைந்தது பத்து நாடகக் கலைஞர்களாவது சாப்பிட்டுக் கொண்டுதான் இருந் தார்கள். சாப்பிட்டு வந்தபின், 'என்னடா?' என்று விசாரிப்பார்.

'ரொம்பக் கஷ்டமா இருக்குண்ணே. கொஞ்சம் பண உதவி...'

'என்னடா நீ? இதெல்லாம் கேட்டேனா... சினிமாக் கம்பெனி யில எங்கடா ஒழுங்கா பணம் தர்றாங்க? இப்ப என்னத்த தர்றது. சாப்டேல்ல, அப்புறமா வா. பார்த்துச் செய்யுறேன்' என்று சொல்லியபடி உள்ளே செல்வார். பணம் எடுத்து தன் பனியனுக்குள் வைத்துக் கொண்டு வருவார். அந்த நபரின் அருகில் வந்து, பணத்தை வெளியே எடுத்து, கையில் திணித்து, 'போடா, போடா. இப்ப எங்கடா பணம் அப்பறம் பார்க்கலாம்' என்று சொல்லி அந்த நபரை அனுப்பிவிடுவார். ஒருவருக்குத் தான் செய்யும் உதவி மற்றவர்களுக்குத் தெரியக்கூடாது என்று நினைத்தவர் ராதா.



# 15

## 1967, ஜனவரி 12

*1967-ல் விடுதலை நாளிதழில் பெரியார் தனது பொங்கல் செய்தியை வெளி யிட்டார். கடந்த நாள்களில் நடந்த சம்ப வங்களால் அவரது மனம் எவ்வளவு பாதிக்கப்பட்டிருந்தது என்பதை அந்த எழுத்துகள் வெளிப்படுத்தின. காகிதமே பொசுங்கிப் போகுமளவுக்குச் சூடாக இருந்தன அவரது வார்த்தைகள்.*

*சாதாரணமாக ராதா வானாலும் ராமச்சந்திரன் ஆனாலும் இவர்களுக்கு பொது மக்கள் உலகத்தில் உள்ள மதிப்பு இவர்கள் கூத்தாடிகள், வேஷம்போட்டு நடிப்பவர்கள், காசுக் காக எந்த வேஷத்தையும், எப்படிப்பட்ட இழிமக்கள் தன்மையான கதையையும் எந்த உருவத்திலும் நடிப்பவர்கள் என்பதல்லாமல், இவர்களுக்கு பொதுநல யோக்கியதைக்கு ஏற்ற ஒழுக்கம், நாணயம், பொறுப்பு என்ன இருக்க முடியும்? இவர்கள் நடிப்பால் பொது மக்களுக்குப் பெரிதும்? பல தீயகுணங் களும், ஒழுக்கக்கேடும் ஏற்படு*

வதல்லாமல் என்ன கலைஞானம் 100க்கு 90 மக்களுக்கு ஏற்பட்டு விடும்? ஏற்படக்கூடும்?

இக்காரியங்களில் ஈடுபட்ட இரண்டு கூத்தாடிக் கீழ்த்தர மக்களுக்குள் நடந்த மூர்க்கத்தனமான, காலித்தனமான சம்பவத்திற்காக எவ்வளவு ஆர்ப்பாட்டம், விளம்பரம், மக்கள் இடையில் உணர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது. அரசாங்க ஆக்கினைகள் எவ்வளவு என்று பார்த்தோமானால் சமுதாயத்தின், ஆட்சியின் கீழ்த்தரம் எந்த அளவுக்கு இறங்கிவிட்டது என்று கவலைப் படுகிறேன்.

இதற்காக அரசாங்கம் நாட்டு நிகழ்ச்சிகளை ரூ. 1000, ரூ. 2000 செலவு செய்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சிகளை 144 உத்தரவு போட்டு தடுப்பது என்றால் இது என்ன கூத்தாடிகள் ராஜ்யமா? கூத்தாடிகள் அரசாங்கமா? என்றுதானே கேட்கத் தோன்றுகிறது.

நிலைமை இப்படியே மோசமாக வளர்ந்து வருகிறது என்றால், இந்த ஆட்சிக்கு ஆளத்தகுதி இல்லை அல்லது ஜனநாயகத்துக்கும் நம் நாட்டுக்கும் மக்களுக்கும் பொருத்தம் இல்லை. ராணுவமோ, சர்வாதிகாரமோ கொண்டுதான் சமதர்மத்தை அமுல்நடத்த முடியும் என்கிற முடிவுக்கு வரவேண்டும்.

ஏன் எனக்கு இப்படி விரக்தி முடிவு தோன்றுகிறது என்றால், இரண்டு கூத்தாடிகளுக்கு ஏற்பட்ட காலித்தன நிகழ்ச்சிக்காக, காங்கிரஸ் ஆபீசு கொளுத்தப்பட்டது, காமராசர் வீட்டுக்குக் காவல், பெரியார் வீட்டுக்குக் காவல், காமராஜருக்குக் காவல் என்றெல்லாம் காரியம் நடப்பதென்றால் பிறகு நாட்டில் யாருக்குத்தான் பாதுகாப்பு இருக்கமுடியும்?

இந்த காலித்தனத்தின் பயனாக ஏற்பட்ட விளைவு இது என்றால், நாட்டில் உண்டாக்கப்பட்டிருக்கும் உணர்ச்சி எப்படிப்பட்டதாக இருக்கிறது என்பதைப் பொதுமக்கள், அறிஞர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்பதற்காகவே எழுதுகிறேன்.

காமராஜருக்கோ, காங்கிரஸ் கூட்டங்களுக்கோ, எனக்கோ, காமராஜர் தாயாருக்கோ, அவர் வீட்டிற்கோ என்னதான் கேடு வந்தாலும் அதனால் உலகம் முழுகியாப் போய்விடும்?

பெரியார் இவ்வளவு உணர்ச்சிவசப்பட்டு எழுதியதற்குக் காரணமான சம்பவத்தை நாடறியும். யாவரும் அறிவார்கள். அதிலுள்ள நிஜத்தை?

●

'சபாஷ் மீனா' என்கிற படம் பெரு வெற்றியடைந்தது. அதன் கதாநாயகி மாலினி, தன் கணவர் ராகவனுடன் சேர்ந்து அடுத்து ஒரு படத்தைத் தயாரித்தார். படத்தின் பெயர் 'சபாஷ் மாப்பிள்ளை.' எம்.ஜி.ஆர். கதாநாயகன். படத்தில் ராதாவும் உண்டு. படம் 1961-ல் வெளியானது.

படத்தின் சென்னை நகர உரிமையை எம்.ஜி.ஆர். வாங்கினார். எம்.ஜி.ஆர். அளிக்கும் 'சபாஷ் மாப்பிள்ளை' என்று விளம்பரம் செய்யப்பட்டது. இது ராதாவுக்குப் பிடிக்கவில்லை.

ஒரு நகரத்தின் உரிமையை வாங்கிவிட்டால் அவர், தன் பெயர் போட்டு அளிக்கும் என்று விளம்பரப்படுத்தலாமா? படத்தின் தயாரிப்பாளர் பெயர்தானே முன்னிலைப்படுத்தப்பட வேண்டும் என்பது ராதாவின் வாதம். இந்த விஷயத்தால் படத்தின் ஷூட்டிங்குக்கு ராதா சரிவர செல்லவில்லை. பின்பு மாலினி, ராதாவிடம் சமாதானமாகப் பேசி, நடிக்க வைத்தார்.

எம்.ஜி.ஆருக்கும் ராதாவுக்கும் நடந்த முதல் உரசலாகச் சொல்லப்படுவது இந்தச் சம்பவம்தான்.

●

தேவர் எடுத்துக் கொண்டிருந்த படம் அது. எம்.ஜி.ஆர்., சரோஜா தேவி, எம்.ஆர். ராதா கூட்டணி. படப்பிடிப்பில் ஒரு சம்பவம் நடந்தது.

ஒரு காட்சியில் வரும் வசனத்தில் உதயசூரியன் என்ற வார்த்தையை எம்.ஜி.ஆர். உபயோகிப்பதாக இருந்தார். ராதாவுக்கு அதில் உடன்பாடில்லை. அந்தப் பிரச்னையை ராதாவே தன் வார்த்தைகளில் சொல்லியிருக்கிறார்.

'உதயசூரியன் தி.மு.க. சின்னம். அதை ஏன் என் ஸீனில் கொண்டு வர வேண்டும்?

நான் விடுவேனா? 'என் மீது விழுகிற மாதிரி ஸீன் போடாதே. love ஸீனில் அதைப் போடு. எம்.ஜி.ஆரும் பொம்பளையும்



வரும்போது போடு என்றேன். இல்லாவிட்டால் நான் என் கட்சி சின்னத்தையெல்லாம் இழுக்க வேண்டி வரும்' என்றேன்.

'அண்ணே, சூரியன் எல்லோருக்கும் பொது அண்ணே' என்றார் எம்.ஜி.ஆர். 'அய்யோ சூரியனை நானும் கும்பிடறேன். ஆனால் அதை என் மேல போடாதே. வேறே ஆளைப் பார்.' இதுதான் நேரடியாக எங்களுக்குள் தொடங்கிய முதல் சண்டை. 'சரி அந்த காட்சியை எடுத்துடறேன்' என்றார். 'அதெல்லாம் முடியாது இப்பவே எடுத்து என்னிடம் ஃபிலிமை கொடுத்துவிடு' என்றேன். அவர் தயங்கினார். 'நெகடிவ் வேண்டும்' என்றேன்.

இதன் எதிரொலியாக அடுத்த படத்தில் என்னை டம்மியாக்கி விட்டார் எம்.ஜி.ஆர். அதுவும் தேவர் படம்தான். அந்த படத்தின் பெயர் 'தொழிலாளி'. 'நான் கேரக்டர் ஆக்டர். என்னை பொம்மை மாதிரி உட்கார வைக்கலாமா?' 'இந்தக் கதை போகட்டும் அண்ணே. அடுத்தது என் கதையில் நடிங்கண்ணே' என்றார் எம்.ஜி.ஆர்.

'உம் நடிக்கிறேன்' என்றேன்.

'இவர் என்ன என்னைண மடையன்னு நினைச்சிக்கிட்டாரா? என் ஆக்டைத் தடுக்கிற அளவுக்கு ஆயிட்டாரா?' என்று செட்டில் சொல்லிவிட்டு வந்தேன்.

இதைத்தான் 'உன்னை விட்டேனா பார்' என்று நான் பயமுறுத்தியதாக கோர்ட்டில் மாற்றிவிட்டார்கள். லிங்க் போட்டுக் கொண்டார்கள். வக்கீல்கள் அப்படித்தான் செய் வார்கள்.'

•

1964 ஜூலையில் 'பெற்றால்தான் பிள்ளையா?' என்ற படத்துக்கான பூஜை போடப்பட்டது. படத்தின் தயாரிப்பாளர் கே.என்.என்.வாசு. காங்கிரஸ்காரர். புதுக்கோட்டை இவரது சொந்த ஊர். ஊரில் நன்கு வாழ்ந்த இவர், ஒரு கட்டத்தில் அனைத்தையும் இழந்து சென்னைக்கு வந்தார். தனது நெடுநாள் சிநேகிதர்களான கிருஷ்ணன் பஞ்சுவின் உதவியை நாடினார். அவர்கள் வாசுவுக்கு ஒரு படம் இயக்கிக் கொடுப்பதாகச் சொன்னார்கள். கிருஷ்ணன் பஞ்சு மூலமாக, படத்தின் கதாநாயகனாக எம்.ஜி.ஆர். ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

படத்தின் தயாரிப்பாளர் வாசு என்றாலும், அவருக்குப் பண உதவி செய்ய ஆள் வேண்டுமே. கிருஷ்ணனும் பஞ்சுவும் ராதாவிடம் வாசுவின் நிலையை எடுத்துச் சொன்னார்கள். ராதாவும் படத்துக்கு இயன்ற அளவு முதலீடு செய்வதாகவும், சம்பள மின்றி நடித்துக் கொடுப்பதாகவும் கூறினார்.

சொன்னபடியே படத்துக்காக ஒரு லட்ச ரூபாய் வரை கொடுத்தார். படப்பிடிப்பு ஆரம்பமானது.

படம் 1966 டிசம்பரில் வெளிவந்தது.

•

'காமராஜர் உங்களைப் பார்க்கணும்னு சொன்னார். இன்னிக்கு இரவு இரண்டு மணிக்கு அவர் வீட்டுக்கு வரச் சொன்னார்' என்று வாசு, ராதாவிடம் சொன்னார்.

ராதாவும் காமராஜரைச் சந்திக்க இரவில் சென்றார். தனக்காகத் தேர்தல் வேலை செய்யும்படி கேட்டுக் கொண்டார் காமராஜர். ராதாவும் அதற்கு ஒப்புக் கொண்டார். வீட்டுக்குத் திரும்பினார்.

வீட்டுக்கு வந்ததும் வாசு, தேர்தல் செலவுக்காகப் பத்தாயிரம் ரூபாய் காமராஜர் உங்களிடம் கொடுக்கச் சொன்னார் என்று ஒரு செக்கை நீட்டினார்.

'இதை அவரிடமே கொடு. பெரியாரின் கட்டளைக்காகத்தான் காமராஜருக்கும் வேலை செய்கிறேனே தவிர, பணத்துக்காக அல்ல. தேர்தல் வேலை செய்ததற்குப் பணம் வாங்கினார் என்ற கெட்டபெயர் எனக்கு வேண்டாம்' என்று கூறி செக்கை வாங்க மறுத்துவிட்டார் ராதா.

காமராஜர் மீது எப்போதுமே ராதாவுக்குத் தனிப் பாசம் இருந்தது. காமராஜருக்கும் ராதா மீது பிரியம் இருந்தது. ராதாவின் மேடைப் பேச்சுகளாலும் நாடகங்களாலும் அடிக்கடி கலகங்கள், கல வரங்கள் மூண்டன. அப்போதெல்லாம் ராதாவுக்குப் போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடு செய்து கொடுத்தவர் காமராஜர்தான்.

ராதா நாடக மேடைகளிலே உங்களையும் நம் கட்சியையும் கண்டபடி திட்டிப் பேசுகிறார் என்று கட்சிக்காரர்கள் யாராவது காமராஜரிடம் சென்று புகார் கொடுப்பார்கள். அப்போது காமராஜர் சொல்லும் பதில், 'அவர் சொல்வதைக் கேட்டு, நாம் ஏற்று திருத்திக் கொள்ள வேண்டியவைகள் இருந்தால் திருத்திக் கொள்ள வேண்டும். ஆத்திரப்படக்கூடாது. பொது வாழ்க்கை யில் இது சகஜம்' என்பதாகத்தான் இருந்தது.

'காமராஜரை தீர்த்துக் கட்டிவிட்டால் நம்ம கட்சி வந்துடும்' என்று சிலர் பேசியதாக ராதாவுக்குத் தகவல் போனது.

யாரோ பேசியதுதான். ஆனால் உண்மையிலேயே அப்படி எவனாவது செய்துவிட்டால் என்ன ஆகும் என்று நினைத்தார் ராதா.

இதே செய்தி 'நாத்திகம்' என்ற பத்திரிகையிலும் வெளிவந்தது (ஜனவரி 1, செப்டம்பர் 25, 1965). 'காமராஜரைக் கொல்ல எம்.ஜி.ஆர். வாகினி ஸ்டூடியோவில் ஏர்கண்டிஷன் அறையில் சதி செய்கிறார்.'

மீதியை ராதாவே சொல்லியிருக்கிறார்.

'என்னிடம் பல பேர் ஓடிவந்தார்கள். நாத்திகத்தில் வந்த செய்தியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.



போலீஸ் பாதுகாப்புடன் அரசு பொது மருத்துவமனைக்குக் கொண்டு சென்றார்கள்.

டாக்டர் பி. ராமமூர்த்தி, ராதாவுக்கு முதலில் அறுவை சிகிச்சை செய்தார். மூளையின் மேற்போர்வையில் குண்டு இருந்தது. எடுக்கப்பட்டது. அதே நேரத்தில் எம்.ஜி.ஆருக்கும் அறுவை சிகிச்சை நடந்து கொண்டிருந்தது. ராமமூர்த்தி, அதில் இணைந்து கொண்டார்.

•

கொலை மற்றும் தற்கொலை முயற்சி என்று ராதா மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதினைந்து நாள் போலீஸ் காவலில் வைக்க உத்தரவும் வந்தது. ராதா சம்பந்தப்பட்டவர்கள், ராதாவைச் சார்ந்தவர்களிடம் போலீஸார் கடுமையான விசாரணையை மேற்கொண்டிருந்தனர். இன்னொரு புறம் இருவரையும் ஒரே மருத்துவமனையில் வைத்திருக்கக் கூடாது என்று சொல்லி கடும் எதிர்ப்பு கிளம்பியது.

'பெற்றால்தான் பிள்ளையா' படத்தில் ராதா, மாய மந்திர வித்தை செய்பவராக வருவார். படத்தில் ராதா, சரோஜாதேவியிடம் சொல்வது போல ஒரு டயலாக் வரும். 'இப்பதான் தெரியுது. எனக்கு ஒரு எதிரி இருக்குறான்னு, அந்த டயலாக்கை பிடித்துக் கொண்ட போலீஸார் அந்தப் படத்தின் கதாநாயகி சரோஜா தேவியை விசாரித்தனர். அவர் சொன்ன பதில். 'சின்னவரும் அண்ணாவும் நல்லாப் பேசிக்குவாங்க. என்ன நீங்க என்னென்னமோ கேக்கறீங்க? அது வெறும் டயலாக்.'

வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டது.

எம்.ஜி.ஆரைப் பார்க்க ஆஸ்பத்திரிக்கு பல நட்சத்திரங்கள், சினிமாக்காரர்கள், அரசியல்வாதிகள் வந்துபோய்க் கொண்டிருந்தனர். அதில் பெரும்பாலானோர் ராதாவிடமும் நன்றாகப் பழகியவர்கள்தான். ஆனால் அந்தச் சமயத்தில் ராதாவைச் சென்று பார்க்கவில்லை. பார்க்க நினைத்து யாராவது சென்றால் கூட, 'எதுக்கு வம்பு? பேசாமப் போயிருங்க' என்று சிலர் அவர்களைத் தடுத்து நிறுத்தினார்கள்.

இயக்குநர் ப.நீலகண்டன் எம்.ஜி.ஆரைக் காண வந்திருந்தார். பின் அங்கிருந்து வழி தெரியாமல் ராதாவின் அறைக்குச் சென்று

விட்டார். ராதாவும் அவரைப் பார்த்துவிட்டார். உடனே தன் பாணி வசனம் ஒன்றைப் பேசினார்.

'வாய்யா நீலகண்டா! ராமச்சந்திரனைச் சுட்டேன். அவனும் சாவலை. என்னைச் சுட்டுக்கிட்டேன். நானும் சாவலை. என் னய்யா துப்பாக்கி கண்டுபிடிக்கிறானுங்க? இந்தத் துப்பாக்கியை வைச்சுக்கிட்டுதான் சைனாக்காரனை ஓட்டப்போறாங்களா?'

நீலகண்டன் பதறிப்போய் அங்கிருந்து வெளியேறினார்.

●

புயல், மழை, வெள்ளம். தமிழகம் தொப்பலாக நனைந்திருந்தது. அன்று (நவம்பர் 4, 1967) தொண்ணூற்று ஆறு பேரை விசாரணை செய்த பிறகு, வழக்கின் தீர்ப்பு வெளியானது. நீதிபதி லட்சுமணன் 262 பக்கம் கொண்ட தன் தீர்ப்பைக் கூறினார். தீர்ப்பின் சுருக்கம் இதுதான்.

ராதாவுக்கும் எம்.ஜி.ஆருக்கும் அரசியல் விரோதமும், தொழில் போட்டியும் இருந்திருக்கிறது என்பதை அரசுத் தரப்பு நிரூபித்திருக்கிறது.

இந்தச் சம்பவங்கள் நடந்தபோது, ராதா ஏழு லட்சம் வரை கடன்பட்டிருந்தார். அதனால் மனமுடைந்திருக்கிறார் என்பதை யும் பிராசிக்யூஷன் தரப்பு நிரூபித்திருக்கிறது. ராதா சொன்னது போல, நாடகங்கள் மூலமாக அவருக்கு மாத வருமானம் ரூபாய் 50,000 இருந்திருக்குமானால் அவருக்கு இவ்வளவு கடன் இருந்திருக்காது.

சந்தர்ப்ப சூழ்நிலைகள், சம்பந்தப்பட்ட சாட்சியங்கள் இவற்றை நம்பியிருக்க வேண்டிய ஒரு வழக்கில், நோக்கம் மிகவும் முக்கியமான ஒன்று. நோக்கம் எதுவுமில்லை என்று நிரூபிக்கப் பட்டிருந்தால், அது ராதாவுக்குச் சாதகமாக அமைந்திருக்கும். ஆனால், சம்பவம் நடந்ததை ஒருவர் கண்ணெதிரே பார்த்திருக்கிறார். அதனால் சம்பவத்திற்கு நேரடிச் சாட்சியம் உள்ளது. நேரடிச் சாட்சியம் இருக்கும்போது, நோக்கம் உண்டா, இல்லையா என்பதை நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை.

தன்னுடைய பண பலத்தினால் இரண்டு லட்ச ரூபாய் கொடுத்து குண்டர்களை அமர்த்தி, காங்கிரஸ் தலைவர் காமராஜரைக் கொல்ல எம்.ஜி.ஆர். சதி செய்ததாக ராதா நினைத்து வந்தார்.

அதனால் எம்.ஜி.ஆர் மீது ராதாவுக்கு மனத்தாங்கல் இருந்து வந்திருக்கிறது. இது முற்றிலும் தவறான நினைப்பு. காமராஜர் பிறந்த நாள் விழாவில் எம்.ஜி.ஆர் கலந்து கொண்டிருக்கிறார். இன்னும் சொல்லப்போனால் எதிர்கட்சித் தலைவர் ஒருவரைப் புகழ்ந்ததற்காக அவருடைய கட்சி அவரைக் கண்டித்திருக்கிறது. எனவே, எம்.ஜி.ஆரைக் கொல்ல ராதாவுக்கு ஓர் உள்நோக்கம் இருந்திருக்கிறது.

ராதா, எம்.ஜி.ஆரைச் சுட்டுவிட்டு தன்னை இரு தடவை சுட்டுக் கொண்டார் என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ராதாவைச் சுடுவதற்கு எம்.ஜி.ஆர் தன் கைத்துப்பாக்கியைப் பயன்படுத்தினாரா என்பது தெரியவில்லை. சம்பவம் நடந்த அன்று ராதாவையும் வாசுவையும் கைகூப்பிய வண்ணம் எம்.ஜி.ஆர். வரவேற்றதாகத் தெரிகிறது. அந்தச் சமயத்தில் எம்.ஜி.ஆர். டெர்லின் சட்டை அணிந்திருந்தார். துப்பாக்கியை மறைத்து வைத்திருந்தால் அதை, சட்டை காட்டிக் கொடுத் திருக்கும். மேலும், எம்.ஜி.ஆர். சால்வை எதுவும் போர்த்திக் கொள்ளவில்லை. எம்.ஜி.ஆர். வாசு இருவரும் பேசிக் கொண்டி ருந்த நேரத்தில் ராதா துப்பாக்கியை எடுப்பதற்கு போதிய அவகாசம் இருந்திருக்கிறது.

ராதாவின் பையில் காணப்பட்ட இரு தோட்டாக்கள், எம்.ஜி.ஆரின் ஆள்களால் வைக்கப்பட்டவை என்பதை ஏற்க முடியவில்லை. துப்பாக்கிக்காக எம்.ஜி.ஆர். ராதா இருவருக்கும் சண்டை நடந்திருந்தால் அல்லது எம்.ஜி.ஆரிட மிருந்து துப்பாக்கியை ராதா பிடுங்கி இருந்தால், அவரிடம் இருந்து கைத்துப்பாக்கியைப் பறிப்பதற்காக ராதாவை மீண்டும் பிடிக்க எம்.ஜி.ஆர். முயற்சி செய்திருக்கவேண்டும். அல்லது ராதாவிடம் இருந்து கணிசமான தொலைவுக்கு எம்.ஜி.ஆர். ஓடியிருக்கவேண்டும். எம்.ஜி.ஆர். அப்படிச் செய்திருந்தால், மிக அருகில் அவருடைய காதருகே காயம்பட்டு இருக்காது. ராதா சொன்னது எம்.ஜி.ஆருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மைக்கு ஏற்றதாக இல்லை. எனவே, ராதாதான் எம்.ஜி.ஆரைப் பார்த்ததும் முதலில் சுட்டார். ராதாவை நோக்கி எம்.ஜி.ஆர். சுடவில்லை என்பது நிரூபணமாகிறது.

ராதாவுக்கு ஏற்பட்ட இரு காயங்களும் அவராகவே விளைவித்துக் கொண்டவை. மூன்றாவது நபர் இத்தகைய காயத்தை ஏற்படுத்தச் சாத்தியமில்லை.

எம்.ஜி.ஆர். மீது ராதா வெறுப்பும், அரசியல் விரோதமும் கொண்டிருந்தார். அவரைக் கொலை செய்து திராவிடர் கழகத் தியாகியாக வேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்தார். எனவே, ராதாதான் எம்.ஜி.ஆரைச் சுட்டார். எம்.ஜி.ஆர். தெய்வாதீனமாக உயிர்த் தப்பினார் என்ற முடிவுக்கு வர வேண்டியதாக இருக்கிறது. இது தற்செயலாகவோ, தற்காப்புக் காகவோ நடந்த சம்பவமல்ல. நன்கு திட்டமிடப்பட்ட சதி. ராதாவுக்கு வயது 57 ஆகிறது. இல்லாவிட்டால் இந்தக் குற்றத்துக்கு அவருக்குக் கடும் தண்டனை விதிக்க வேண்டும். குற்றம் 1967 ஜனவரி12-ம் தேதி அன்று இழைக்கப்பட்டது. அன்றிலிருந்து ராதா சிறையிலேயே இருக்கிறார். அவருக்கு ஜாமீன் கிடைக்கவில்லை. இதை மனத்தில்கொண்டு, ராதாவிற்கு ஏழு வருட கடுங்காவல் தண்டனை விதிக்கிறேன்.

அவருடைய உடல்நிலை காரணமாக அவர் 'ஏ' வகுப்புக் கைதியாக நீடிக்க சிபாரிசு செய்யுமாறு ராதா தரப்பு வழக்கறிஞர் களில் ஒருவரான என். நடராஜன் வேண்டுகோள் விடுத்தார். ஆயுதச் சட்டத்தின் கீழ் ராதா குற்றவாளியாக இருக்கிறார். அதனால் அவருக்கு 'ஏ' வகுப்பு வசதிகளை அளிப்பதற்கு இல்லை. அதற்கு சர்க்கார்தான் முடிவு செய்யவேண்டும். அதனால் இந்தியன் பீனல் கோடு 307, 309 பிரிவின் கீழும், 1959-ம் வருட ஆயுதச் சட்டத்தின் 25(1), 27 பிரிவுகளின் கீழ் அவருக்கு இந்தத் தண்டனை வழங்கப்படுகிறது.'

•

மத்திய சிறைச்சாலை. உள்ளே நுழைந்தார் ராதா. அங்கே ஒரு அறையில் ஆங்கிலேய அதிகாரிகளின் படங்கள் வரிசையாக மாட்டப்பட்டிருந்தன. அவற்றோடு திருவள்ளுவர் படமும் மாட்டப்பட்டிருந்தது.

'அடடே, திருவள்ளுவரு. இவரு எப்ப ஜெயிலுக்கு வந்தாரு?' ராதா கேட்க அதிகாரிகள் சிரித்துவிட்டனர்.

ராதாவைக் கையெழுத்துப் போடச் சொன்னார்கள். பேனாவை வாங்கிய அவர் மிகவும் சிரமப்பட்டு கையெழுத்தை வரைந்தார்.

'என்னப்பா இது, இவ்வளவு சிக்கலா இருக்கே. இதை வேற தினமும் போடணுமா?' என்று கேட்டுக்கொண்டார். அவருக் காக ஒதுக்கப்பட்ட அறைக்குச் சென்றார்.

•

1968, ஆகஸ்ட் 26 ராதாவின் மகள் ரஷ்யாவுக்கும், டாக்டர் ஸ்ரீனிவாசனுக்கும் திருமணம் நடந்தது. அவர்கள் சிறைக்கு வந்து ராதாவின் வாழ்த்துகளைப் பெற்றுச் சென்றனர். காமராஜர் சொல்லித்தான் ராதா, எம்.ஜி.ஆரைச் சுட்டார் என்ற வதந்தி பரவிக் கிடந்ததால், திருமணத்துக்கு அவர் தலைமை தாங்கவில்லை. கலந்துகொண்டார். பெரியாரின் தலைமையில் திருமணம் நடந்தது.

திரையுலகிலிருந்து ஜெமினி கணேசனும் சாவித்திரியும் மட்டுமே வந்திருந்தார்கள்.

●

'எம்.ஆர். ராதா சுட்டது எம்.ஜி.ஆர். என்ற புகழ்பெற்ற நடிகரை. ஜெயிலில் இருக்கும் பெரும்பாலானோர் அந்த நடிகரின் தீவிர ரசிகர்கள். ராதாவுக்கு முதல் வகுப்பு கொடுக்கவில்லை என்றால் உள்ளே அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம். எனவே, ஏதாவது ஒரு சலுகையின் அடிப்படையில் இதனை சட்டத்துக்கு உள்பட்டு செய்வீர்கள் என்று நம்புகிறேன்' என்று பெரியார், நீதிபதி சிங்கார வேலுக்கு ஒரு கடிதம் எழுதினார்.

ராதாவின் வக்கீலான என்.டி. வானமாமலை இப்படி ஒரு யோசனையைச் செயல்படுத்தினார். ராதாவுக்கு முதல் வகுப்பு கிடைத்தது.

வயதானவர் என்ற காரணத்தினால் ராதாவுக்குச் சிறையில் எளிமையான வேலைகள் மட்டுமே கொடுக்கப்பட்டன. அவரது நாடகங்களுக்காக எத்தனையோ இரவுகள் தெருத் தெருவாகச் சென்று போஸ்டர் ஒட்டியிருக்கிறார். அப்போது சிறையில் கவர் ஒட்டினார். நாள்கள் நகர்ந்தன.

குறிப்பிட்ட இடைவெளிகளில் மருத்துவர்கள் வந்து கைதிகளின் உடல்நிலையைப் பரிசோதிப்பார்கள். ஒருநாள் டாக்டர், ராதாவிடம் வந்தார். 'உங்களுக்கு என்ன பிரச்னை?' என்று கேட்டார்.

டாக்டரை விலகச் சொன்ன ராதா, தரையில் எச்சில் துப்பினார். 'இதுதான் பிராப்ளம்' என்றார். அந்த எச்சிலோடு ரத்தமும் கலந்து வந்திருந்தது.

‘பயப்படுவதற்கு ஒன்னுமில்லை, சாதாரண விஷயம்தான்’ என்று ராதாவின் உடல்நிலையைப் பரிசோதித்துவிட்டுக் கிளம்பினார் டாக்டர்.

●

நன்னடத்தை காரணமாகவும் சிறையில் அவர் செய்த வேலை காரணமாகவும் ராதாவின் தண்டனைக் காலம் சுமார் நான்கு வருடங்களாகக் குறைக்கப்பட்டது.

‘இன்னிக்கு உங்களுக்கு விடுதலை. கிளம்புங்க, கிளம்புங்க’ என்று ராதாவிடம் வந்து சொன்னார் சிறை அதிகாரி. ராதா அப்போது தோளில் துண்டோடும், கையில் வாளியுடனும் நின்று கொண்டிருந்தார்.

‘வெளியதான போகப் போறேன். இப்ப என்ன அவசரம்? குளிச்சிட்டு நிதானமாப் போறேன்’ - என்று குளிக்கக் கிளம்பினார் ராதா.



16

# மீண்டு, மீண்டும் சிறை

'சிறை வாழ்க்கை எப்படி இருந்தது?'

'மிகவும் சுகமான அனுபவங்கள் நிறைந்த வாழ்க்கை அது. என் வாழ்நாளில் இப்படி ஓர் ஓய்வு கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஒரு நடிகன் கடைசி மூச்சு உள்ள வரை ஓயாமல் ஓடியாடிக் கொண்டுதான் இருப்பான். அவனுடைய குடும்பத்தாரும் அவனை ஓய்வுபெற வைக்க மாட்டார்கள். ஆனால் எனக்குச் சிறைத் தண்டனை தந்த நீதிபதி ஒரு பேருதவியைத்தான் செய்தார். எனக்கு ஓய்வு கிடைத்தது.'

'உங்களைப் பார்க்க சிறைக்கு முக்கிய மானவர்கள் யாராவது வந்தார்களா?'

'என்னைப் பார்க்க வந்தவர்கள் எல் லோரும் முக்கியமானவர்கள்தான். அவர் களைவிட என் குடும்பத்தினர் கவலை யோடு வந்து நின்ற காட்சியை நான் மறக்கவில்லை. ஆனால் எவ்விதமான நோயுமின்றி நான் விடுதலை பெற்று வந்திருக்கிறேனே, அதுவே எனக்குப் பெரிய நிம்மதி.'



‘சிறைக்குச் செல்லும் குற்றவாளிகளில் யாரும் அதைவிட்டு வெளியேறும்போது, திருந்தி வெளியேறுவதில்லை என்கிறார் களே, அது உண்மைதானா?’

‘உண்மைதான். எதிரி மேலே வைச்ச வஞ்சத்தை மறக்கத்தான் ஜெயில் உதவுது. திருந்த உதவலே.’

‘இனி உங்களுடைய திட்டம் என்ன?’

’திட்டம் என்ன திட்டம்? நாடகம், சினிமாக்களில் நடிக்க வேண்டியதுதான். ஒரு நடிகன் வேறு என்ன செய்வான்? நான் எது செய்தாலும் எனக்காகச் செய்வதில்லை. எல்லாம் பொது நன்மையை மனத்தில் கொண்டே இதுவரை செய்து வந்திருக் கிறேன். இனியும் என் எதிர்காலம் அதே நோக்கோடு அமையும்.’

விடுதலையான ராதா, தன்னுடைய தேனாம்பேட்டை வீட்டில் உற்சாகமாகப் பேட்டி கொடுத்தார். கிட்டத்தட்ட நான்கு வருட சிறைவாசம். உடலளவில் கொஞ்சம் தளர்ந்து போயிருந்தாலும் மனத்தளவில் ராதா பழைய நம்பிக்கையுடன்தான் இருந்தார். சிறை நாள்கள் அவரது துணிச்சலை அதிகப்படுத்தத்தான் செய்திருந்தன.

1959-ல் இருந்து 1967 வரை ராதா நடித்து கிட்டத்தட்ட நூறு படங்கள் வெளியாகியிருந்தன. அப்போதெல்லாம் வாய்ப்புகள் வாசலில் தானாகத் தேடி வந்தன. ஆனால் சிறைக்குச் சென்று வந்தபின் பழையபடி வாய்ப்புகளோடு சினிமாக்காரர்கள் யாரும் தேடிவரவில்லை. ஆஸ்பத்திரியிலும் சிறையிலும் வந்து பார்ப்பதற்குத் தயங்கிய சினிமாக்காரர்கள், அப்போது மட்டு மென்ன வந்துவிடவாப் போகிறார்கள்? சிவாஜி போன்ற பெரிய நடிகர்கள்கூட ராதாவுக்கு வாய்ப்பு வழங்கவேண்டும் என்று நினைத்துப் பார்க்கவே இல்லை. எதற்கு வம்பு என்று ஒதுங்கி யிருக்கவே நினைத்தார்கள். சினிமாவையும் தாண்டி ராதாவோடு நெருங்கிய நட்பு வைத்திருந்தவர்கள் மட்டும் அக்கறையுடன் வந்து பார்த்தார்கள்.

●

எத்தனை வருடங்களாயிற்று நாடக மேடை ஏறி? என்னவோ போலிருந்தது ராதாவுக்கு? சிறையில் அவர் அதிகம் இழந்ததாக நினைத்தது நாடக மேடையைத்தான். அவசர அவசரமாக

ஒப்பனை, வசனங்களாக நீளும் காட்சிகள், ரசிக்கும் மக்களின் கைதட்டல், ஆரவாரம், விசில் இதற்கு ஈடாக என்ன இருக்க முடியும்?

படங்களில் வாய்ப்பு வராதது பற்றி அவர் கொஞ்சம்கூட கவலைப்படவில்லை. மீண்டும் நாடக மேடை ஏறத் திட்ட மிட்டார். முதல் நாடகம், வேறென்ன ரத்தக்கண்ணீர்தான்.

கூட்டத்துக்குக் குறைவே இல்லை. ராதாவுக்கு மிகவும் உற்சாகமாக இருந்தது. பழைய ராதாவாகக் களமிறங்கி மோகனுக்கு உயிரூட்டினார்.

பேப்பர் ஸீன் வந்தது. மக்கள் மத்தியில் ஏக எதிர்பார்ப்பு. ராதா பேச ஆரம்பித்தார்.

'நான் எம்.ஜி.ராமச்சந்திரனைச் சுட்டேன். நான் சுட்டது தப்புன்னு பெருந்தலைவர், பெரியார்ல இருந்து ஊர்ல இருக்குற வேற யாராவது அறிக்கை விட்டாங்களா? ஏன் விடல? ஆனா நான் சுட்டது தப்புன்னு என்னைப் புடிச்சு ஜெயில்ல போட்டான். ஏன் போட்டான்? ஏன்டா ஒழுங்கா சுடலைன்னு போட்டான். நான் என்ன பண்ணுறது? நான் எடுத்துட்டுப் போனது இந்தியன் பிஸ்டல்? அவன் அதுலயும் கலப்படம் பண்ணுவான்னு எனக்கு எப்படித் தெரியும்? இல்லேன்னா நான் ஃபாரின் பிஸ்டலை எடுத்துட்டுப் போயிருப்பேன். இனிமே என்னை ஒண்ணும் பண்ண முடியாது. நான் அதுக்குள்ள தண்டனையை அனுபவிச்சுட்டேன். என்னை ஒண்ணும் தடுக்க முடியாது.'

மக்களின் ஆரவாரம் அடங்க வெகு நேரமாயிற்று.

●

சிறைக்குச் சென்று வந்தபின், ராதா நடித்து வெளியாகிய முதல் படம் 'சமையல்காரன்'. ராதாவுக்கு வாய்ப்பு கொடுத்தவர் கருணாநிதி. படத்தின் கதாநாயகன் கருணாநிதியின் மகன் மு.க. முத்து. அதன் மூலம் ராதாவின் நாலாவது சினிமா இன்னிங்ஸ் ஆரம்பமானது. அதற்குப் பிறகு ஒருசில படங்களில் ஒப்பந்த மானார். தன் கடமை, நேரம் தவறாது நடித்துக் கொடுத்தார்.

'சமையல்காரன்' செட்டில் நடந்த ஒரு சம்பவம் இது. அன்று ராதாவுக்கு உடம்பு சரியில்லை. வயிற்றுப்போக்கு. அதனால் மேக்-அப் ரூமில் களைப்புடன் படுத்திருந்தார். மனோரமாவும்

அந்தப் படத்தில் நடித்தார். விஷயம் கேள்விப்பட்டு ராதாவைச் சந்திக்க மேக்-அப் ரூம் சென்றார். ராதாவின் அருகில் சென்று கேட்டார்.

'என்னண்ணே உங்களுக்கு உடம்பு சரியில்லையா?'

'யாரு சொன்னா? நான் நல்லாத்தான் இருக்கேன். ஷாட்டுக்குப் போகலாமா?' டபாரென்று எழுந்து நடிக்கக் கிளம்பினார் ராதா. ஒரு நடிகன் தன் இயலாமையை வெளியில் காட்டிக்கொள்ளக் கூடாது என்பது அவர் தீவிரமாகக் கடைப்பிடித்து வந்த கொள்கை.

●

அப்போது பெங்களூரில் ராதா நடிக்க ஒரு படத்தின் படப்பிடிப்பு தொடங்கியது. இங்கே ராதாவை நடிக்க விடுவதில்லை, அதனால்தான் அங்கே சென்று நடிக்கிறார் என்றும் செய்திகள் வெளியாயின. பத்திரிகையாளர்கள் ராதாவைத் தேடி பெங்களூருக்குச் சென்றார்கள்.

***சென்னையில் அவ்வளவு சௌகரியங்கள் இருக்கும்போது இங்கே வந்து படம் எடுக்கறீங்களே காரணம் என்ன?***

பெங்களூரின் க்ளைமேட்தான் காரணம். ஜிலுஜிலுன்னு இருக்கே. சென்னையிலே இப்படியா இருக்கு. சும்மா ஒரு 'சேஞ்ச்' வேணுமில்லே. அதுக்குத்தான்.

***அப்படியா ஆனால் விஷயமே இங்கு வேறுமாதிரி இருக்கிறது. அங்கே தமிழ்நாட்டில் நீங்கள் நடித்தால் படப்பிடிப்பில் தொந்தரவு ஏற்படலாம் என்பதற்காகத்தான் இங்கே வந்து படம் எடுப்பதாகப் பேசிக் கொள்கிறார்களே?***

தொந்தரவா? எனக்கா? அது எவன்யா கொடுக்கறவன்? அப்படியே தொந்தரவு கொடுத்தாலும் அதுக்கெல்லாம் பயப் படறவனா நான்? அதெல்லாம் காரணமில்லை. இங்கே வந்து படம் எடுக்கிறதுக்கான உண்மை காரணத்தை இப்போ சொல்றேன். இந்தப் படத்துக்கு இன்னும் பேர் வைக்கலே. இதைத் தயாரிக்கிறது ரோஷனா பேகம்னு ஒருத்தர். 'குடியிருந்தகோயில்' படத்தில் குங்குமப்பொட்டின் மங்கலம், பாட்டு எழுதினாங்களே அவங்கதான். இந்த மைசூர் கவர்மெண்ட் இருக்கானே இங்கே வந்து ஒரு படம் எடுத்தால்

ஐம்பதனாயிரம் ரூபாய் கொடுக்கறான். கன்னடப் படம் எடுத்தா மட்டுமே இந்தப் பணம் கெடைக்கும்னு நெனைச்சேன். ஆனா அப்புறம்தான் தெரிய வந்தது, கன்னடப் படம் என்று இல்லை, பெங்களூருக்கு வந்து முழுக்க முழுக்க இங்கேயே எந்தப்படம் எடுத்தாலும், கவர்மெண்டில் இருந்து ஐம்பதனாயிரம் ரூபாய் கிடைக்கிறது. இந்த ரகசியத்தை இங்கே ஏன் சொல்றேன்னா நம்ம தமிழ்நாட்டிலே நிறைய ஏழை புரொட்யூஸருங்க, வளர்ந்து முன்னுக்கு வரவேண்டியவங்க இருக்காங்க. அவங்கல்லாம் தெரிஞ்சிக்கட்டுமேன்னுதான். இங்கே ஸ்டூடியோ ரெண்ட் ரொம்பவும் குறைச்சல். அதுவும் இன்னொரு காரணம்.

***படம் தொடங்கியுள்ளபோதே ஒரே பரபரப்பாக இருக்கிறது. படம் எப்படி இருக்கும்? புதுமையாக இருக்குமா?***

புதுமையா? அதெல்லாம் கிடையாது. நல்ல கதை. அவ்வளவு தான் சொல்வேன். புதுமை அது இதுன்னெல்லாம் புருடா விடத் தெரியாது. ஒரு சின்னப் பரபரப்பு இருக்கிறதா சொன்னாங்க. பேப்பர்லேயும் பார்த்தேன். அதுக்கு மேலே அது பத்தித் தெரியாது.

***படத்தில் வேறென்ன விசேஷங்கள் இருக்கும். கதையை கொஞ்சம் சொல்வீர்களா?***

விசேஷங்கள்னு சொல்ல எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்பனும் மகனும் (வாசுவும்) நடிக்கிறோம் அதான் விசேஷம். கதையை இப்பச் சொல்ல மாட்டேன் சினிமா ஃபீல்டுலே திருட்டுப் பயல்கள் ஜாஸ்தி. திருடிப்புடுவானுங்க கதையை. அதனாலே படம் முடியப்போற சமயத்துலேதான் கதையை வெளியே சொல்வோம்.

***கதையைச் சொல்லாவிட்டால் பரவாயில்லை. படத்தில் உங்கள் பாத்திரம் எப்படிப்பட்டது என்பதையாவது சொல்லுங்கள். நீங்கள்தானே ஹீரோ?***

ஹீரோவா? அப்படின்னா என்னய்யா? ஹீரோன்னா நீங்க யாரைப் பத்தி கேக்கறீங்கன்னு வெளங்கலியே. ஓஹோ, அதுவா இல்லே இல்லே. நீங்க கேக்குற ஹீரோ கல்யாண சீன்லே மட்டும் வருவான், கழுத்திலே ஒரு மாலையை மாட்டிக்கிட்டு. எனக்கு அந்த ரோல் இல்லே, வேற ரோல். என்னுடைய பாத்திரம் எப்படிப் பட்டதுன்னு எனக்கு வெளங்கலை. வேணும்னா

இன்னிக்கு நடிச்ச ஸீனைச் சொல்றேன். பாத்திரம் எப்படின்னு தெரிஞ்சுக்கங்க. கல்யாணம் ஆகி முதல் இரவு பொண்டாட்டி' புருஷனுக்காகக் காத்திருக்கிறாள். அவன் லேட்டா வர்றான். உள்ளே ரூமுக்குள்ளே வர்றவனை ஆசையோடு நெருங்கி தயாரா வச்சிருந்த பால் தம்பளரைக் கொண்டுவந்து கொடுக்கறா. 'என்னடி அது' அப்படின்னு கேக்கறான். 'பால்'னு சொல்றா அவ. அப்புறம் 'பாலா? சின்ன வயசிலே குடிச்சதா ஞாபகம். இப்பக் கொடுக்கறியா, குடிக்கட்டுமா?' அப்படின்னு கேட்டுட்டு கொஞ்சம் வசனமெல்லம் பேசி முடிஞ்சபிறகு 'பாலெல்லாம் குடிக்கிறதில்லை. இதோ இதைத்தான் குடிக்கறது'ன்னு சொல்லிட்டு கோட் பையிலிருந்த மதுப்புட்டியை எடுக்கிறான் புருஷன். இந்த ஸீனுலே இன்னிக்கு நடிச்சேன். புருஷனாக நடிச்சது நான். பொண்டாட்டியா புஷ்பலதா நடிச்சாங்க.

***ஏதோ ஆகஸ்ட் பதினைந்தாம் தேதியன்று நீங்கள் நடிக்கும் 'நான் தான் சுட்டேன்' படம் வரப்போவதாகப் பெரிதாக விளம்பர மெல்லாம் வந்தது. ஒன்றையும் காணோமே இப்போது?***

நான் நடிச்ச படம் வரப்போவுதுன்னு நானா சொன்னேன்? என்னை வச்சி எடுக்கறவன் சொல்லியிருப்பான். வரலைன்னா நான் என்ன செய்ய? அந்தப்படம் வராதுன்னு தோணுது.

***தங்களுடைய ஜெயில் வாழ்க்கையைப் பற்றிச் சொல்லுவீர்களா?***

புதுசா எதையும் சொல்ல விரும்பல்லே. என்னைப் பொறுத்த வரைக்கும் யோக்யனுங்கல்லாம் ஜெயிலுக்குள்ளேதான் இருக்கானுங்க அவ்வளவுதான்.

●

ராதாவுக்குச் சில பக்திப்படங்களில் நடிக்க வாய்ப்புகள் வந்தன. அதில் முக்கியமானது வியட்நாம் வீடு சுந்தரம் எடுத்த கந்தரலங் காரம். சிறைக்குச் சென்று வந்தபின் ராதா மாறிவிட்டார். அவருக்குக் கடவுள் நம்பிக்கை வந்துவிட்டது என்றெல்லாம் செய்திகள் கிளம்பின. அதற்கு ராதா சொன்ன பதில்,

'பக்திப் படம்னு நான் பிரிச்சுப் பார்க்கலை. இதுவும் சினிமா. காசு கொடுக்கறாங்க. நான் நடிக்கறேன். அவ்வளவுதான்.'

படத்துக்காகத் தன்னை ஒப்பந்தம் செய்ய வரும்போதே சுந்தரத்திடம் ராதா தெளிவாகச் சொல்லிவிட்டார்.

‘நான் ஆன்மிகப் படத்துல நடிக்க வந்திருக்கேன். எந்த விதத்துலயும் இதை விளம்பரமோ, விமர்சனமோ பண்ணிடாதே, சர்ச்சைக்கு வழிவகுக்கும். நீயா போய் மாட்டிக்காதே. படம் வெளிவரும்போது விளம்பரத்தில்கூட என்னை ஃபோக்கஸ் பண்ணவேண்டாம்.

கும்பகோணம் அருகில் எட்டுக்குடி எண்கண் முருகன் கோயிலில் வைத்து படப்பிடிப்பு நடந்தது. படப்பிடிப்புக் குழுவினருடன் அந்த ஊரிலேயே தங்கி, நடித்துக் கொடுத்தார் ராதா. படத்தில் ராதாவுக்கு முருக பக்தர் வேடம். அதற்கேற்ப நடித்தார். எதையும் மாற்ற வேண்டும் என்று சொல்லவில்லை. தனக்கான ஷாட் இல்லாத நேரங்களில் கோயிலிலேயே அமைதியாகக் காத்திருந்தார். காலையில் ஏழு மணிக்கே ஷூட்டிங்குக்குத் தயாராக இருந்தார். இரவு பத்து மணியானாலும் எதுவும் சொல்லாமல் நடித்தார்.

‘அடேய் தம்பி, இங்க வாப்பா. அந்த ஜெனரேட்டர்ல டீசல் தீரப் போகுதுபோல. பார்த்துக்கோ’ சொல்லுவார் ராதா. ஜென ரேட்டர் ஓடும் சத்தத்தை வைத்தே அதில் எவ்வளவு டீசல் இருக்கிறது, தீரப்போகிறதா என்று கணிக்கும் மெக்கானிக் மூளை அவருக்கு இருந்தது.

சாமியைத் தெருவில் ஊர்வலமாகக் கொண்டு வரும் காட்சி படமாக்க இருந்தார்கள். ஊர்வலத்தில் முன்னால் யானை வருவதாக ஏற்பாடு. சப்பரத்துடன் ராதாவும் வருவார். ஷாட்டுக்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்துவிட்டார்கள். எடுக்கும் முன்பு சுந்தரத்திடம் வந்தார் ராதா.

‘கேமராவைத் தள்ளி வைச்சுக்கோ. இல்லேன்னா, ஜனங்களை கேப் விட்டு வரச்சொல்லு. ஓட வேண்டியதிருக்கும்’ என்று சொன்னார். சுந்தரத்துக்கு ஒன்றுமே புரியவில்லை. கேமரா மேனும் கேமராவை அந்த இடத்தில் வைப்பதுதான் சரியாக இருக்கும் என்று எண்ணியதால் மாற்றவில்லை. டேக் ஆரம்பமானது. ஊர்வலத்தில் வந்த யானை லேசாக மிரள ஆரம்பித்தது. பாகன் அதை அடக்கினான். ஷாட் தடைபட்டது.

‘மிருகங்களுக்கு அந்தப் பழக்கம் உண்டுயா. லைட்டை பக்கத்துல பார்த்தா மிரண்டுரும். கொம்புள்ளதுக்கு பத்தடி, குதிரைக்கு இருபது அடி, யானைக்கு நூறு கஜம்னு கேமரா வைக்க கணக்கு உண்டு. தள்ளி வைச்சுக்கணும். சமயத்துல

கரண்டுல காலை வைச்சுரும். பார்த்து எடு' என்று சொல்லி விட்டுப் போனார் ராதா.

படத்தில் ஒரு கதாகாலட்சேப காட்சி இருந்தது. வாரியார் வந்து வாழ்த்திப் பேசி தொடங்கி வைக்க, ராதா கதாகாலட்சேபத்தைத் தொடருவதுபோல காட்சி. ராதாவும் வாரியாரும் சேர்ந்து நடிக்கிறார்கள் என்று ஏக பரபரப்பு உண்டானது. ஆனால் வாரியாரும் மறுக்காமல் வந்து நடித்துக் கொடுத்துவிட்டுப் போனார். ராதாவும் எந்த எதிர்ப்பும் காட்டவில்லை. நல்ல ஒத்துழைப்பு கொடுத்தார்.

'இப்ப எடுக்கப்போறது கதாகாலட்சேபம். அதனால சின்னச் சின்ன ஷாட்டா எடுக்காதே. ரெண்டு கேமராவையும் ஓட விடு. பெரிய ஷாட்டா எடு' ஆலோசனை கொடுத்தார் ராதா.

படத்தில் ராதாவோடு அவரது மகன் வாசுவும் நடித்திருந்தார். படப்பிடிப்பு முடிந்தது. டப்பிங் சமயம். அதற்கும் சரியாக வந்து பேசிக் கொடுத்தார் ராதா. 'வேற என்ன பாக்கி?' என்று கேட்டார் ராதா. 'வாசு மட்டும் கொஞ்சம் டப்பிங் பேசணும். அதையும் நீங்களே பேசிக் கொடுத்துருங்களேன்' என்றார் சுந்தரம்.

'நான் இங்க இருக்கேன். பார்க்கணும்னு சொல்லி அவனைக் கூப்பிடு' என்றார் ராதா. தகவல் போனது. வாசு வந்தார். 'ஒண்ணுமில்லே. டப்பிங் பாக்கி இருக்காமே. பேசி முடிச்சுடு' என்று சொல்லிவிட்டு கிளம்பினார் ராதா.

•

நாடே பரபரப்பாகத்தான் இருந்தது. ஆனால் ராதா தனக்கும் அப்படி நடக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. வேக வேகமாக வந்த போலீஸ், அவரைக் கைது செய்துகொண்டு போனது. எமர்ஜென்ஸி. மிசா சட்டத்தின் கீழ் கைது. யாராலும் எதிர்த்து எந்தக் கேள்வியும் எழுப்ப முடியவில்லை.

வந்து இறங்கும் கைதிகள் எல்லோரையும் சிறைக்குள் காலடி எடுத்து வைக்கும்போதே அடித்து பெண்டு நிமித்தினார்கள். ராதாவையும் சிறைக்குள் கொண்டு வந்து இறக்கினார்கள். ஆஸ்துமாவால் அவதிப்பட்டுக் கொண்டிருந்த அவர், குளிருக்காக உடல் மீது, கம்பளி சுற்றியிருந்தார். மங்கி குல்லா போட்டிருந்தார். அவரையும் அடிக்கப் பாய்ந்தான் ஒருவன். உஷாரான ராதா கத்தினார்.

'டேய்ய்... அடையாளம் பார்த்துட்டு அடிடா. நான் எம்.ஆர். ராதாடா.'

'அய்யா நீங்களா?'

'டேய் என்னை அடிக்காதடா. நீ என்னை அடிச்சேன்னா நான் பொட்டுனு செத்துப் போயிடுவேன். ஏன்டா, நீ இன்னும் விடுதலை ஆகிப் போகலையா? இன்னும் ஜெயிலுக்குள்ளேயா இருக்குற? என்னை அடிச்சா நான் போயிருவேன். மறுபடியும் பத்து வருசம் நீ உள்ள இருப்படா.'

'அய்யா, நீங்க போங்கய்யா.'

அந்த நெருக்கடியான நேரத்திலும் தன் கிண்டல் மாறாமல் சமாளித்தார் ராதா.

சிறையில் திராவிடர் கழகத்தினர் பலர் இருந்தார்கள். குறிப்பாக ராதாவுக்கு நெருங்கிய வீரமணி இருந்தார். மிசாவில் உள்ளிருந்தாலும் பேசும் பேச்சில் தன் நகைச்சுவைப் பாணியை மாற்றிக் கொள்ளவில்லை ராதா.

வீரமணி பொழுதுபோக்குக்காக நிறைய ஆங்கிலப் புத்தகங்களைப் படித்துக் கொண்டிருப்பார். ராதா கேட்பார்.

'என்னப்பா நீ பாட்டுக்குப் படிச்சுக்கிட்டே இருக்குற? நீ என்ன படிக்குறேன்னு எங்ககிட்டயும் சொன்னாத்தானே நாங்களும் நாலு விஷயத்தைத் தெரிஞ்சுக்க முடியும்.'

நாடகம் நடத்தி அதில் வசூலான தொகையை வீரமணியின் படிப்புச் செலவுக்காக ராதா கொடுத்திருக்கிறார். வீரமணிக்கு மட்டுமல்ல, பல மாணவர்கள் படிக்காத ராதாவின் உதவியால் நன்கு படித்தார்கள்.

ராதா கேட்டுக் கொண்டதால் வீரமணியும் தான் படித்த செய்திகளை சொல்ல ஆரம்பித்தார். அப்போது வீரமணி படித்துக் கொண்டிருந்த புத்தகம் the freedom at midnight.

'இவ்வளவு மோசமா நாடு இருந்திருக்கு. என்னத்த சொல்ல? நான் வெளிய போய் இதை ஒரு நாடகமாப் போடலாம்னு நினைக்கிறேன்' சொன்னார் ராதா.

தினமும் வீரமணி முக்கால் மணி நேரம் ராதாவுக்கு, தான் படித்த விஷயங்களைச் சொன்னார். 'நீ நல்லாச் சொல்லுற. நீ சொல்லச்

சொல்ல என் மனசுல நாடகத்துக்கான காட்சியெல்லாம் ஓடிக்கிட்டே இருக்கு' என்பார் ராதா.

மிசா சிறைவாசம் முடிந்து வெளியே வந்த ராதா, மிகவும் தளர்ந்து போயிருந்தார்.

●

எப்போதாவது நாடகங்கள், வருடத்துக்கு இரண்டு அல்லது மூன்று படங்கள், மற்ற நேரங்களில் வீட்டில் ஓய்வில் இருந்தார் ராதா. பல நேரம் திருச்சியில் சங்கிலியாண்டபுரம் வீட்டுக்குச் சென்று தங்குவதை வழக்கமாக வைத்திருந்தார்.

உடல்நிலை அவ்வளவாகச் சரியில்லாத காலத்திலும் பொதுக் கூட்டங்களில் அவ்வப்போது கலந்துகொண்டு பேசினார் ராதா. தன் பகுத்தறிவுப் பிரசாரத்தை அவர் கைவிடவே இல்லை.

'பகவானுக்குக் கோயில் கட்டுறேன்னு சொல்லுற. மனுசனுக்கு வீடு கட்டுற மாதிரி. பகவான் வர்ற மனிதர்களுக்கெல்லாம் தரிசனம் கொடுக்கறதுக்காக விசிட்டிங் ரூம் கருவறை. கட்டியிருக்குற ஆல்ரைட். அதேபோல பகவானுக்கு ஆறுகால பூஜை ஆறு வேளை பிரசாதம் சமையல் பண்ண கிச்சன் ரூம் மடப்பள்ளி. கட்டியிருக்குற ஆல்ரைட். அதே மாதிரி பகவான் தூங்குறதுக்கு பெட் ரூம் சயன அறை. கட்டியிருக்குற ஆல்ரைட். நான் தெரியாமக் கேக்குறேன் இந்த ஆறுகால பூஜையில ஆறுவேளை பிரசாதம் சாப்பிட்ட பகவான், காலைல எழுந்தரிச்ச உடனே வெளிய போறதுக்கு ஏன்டா கக்கூஸ் கட்டல'

பெரியாரின் இறப்பு ராதாவை ரொம்பவே பாதித்திருந்தது. சமயம் கிடைக்கும்போதெல்லாம் கூட்டங்களில் பெரியாரை நினைவு கூர்ந்தார்.

'தமிழ் இனத்துக்குத் துரோகம் செய்பவர்களை ஒழிக்க ஒரு தற்கொலைப்படை வேண்டும் இந்த நாட்டுல. அதை உருவாக்கணும். அதுதான் என் லட்சியம். அதற்கு ஒரு முந்நூறு பேர் கிடைத்தால் போதும். தந்தை பெரியார் விரும்பிய மறுமலர்ச்சியை தமிழ்நாட்டில் என்னால் உருவாக்க முடியும்.'

தன் இறுதிக் காலம் வரை திராவிடர் கழகத்துக்காகப் பணிகள் செய்தாலும் ராதா, அதன் உறுப்பினராக இருந்ததில்லை.

திராவிடர் கழக உறுப்பினராக வேண்டுமென்றால் மது, புகை கூடாது. பிற விஷயங்களிலும் ஒழுக்கம் வேண்டும்.

'எவனாவது, எதையாவது பார்த்து எழுதிட்டா, என்னால கட்சிக்குக் கெட்ட பெயர் வந்துரும். நான் என் இஷ்டத்துக்கு ஃப்ரீயா இருப்பேன். அது கட்சி கட்டுப்பாட்டுக்கு ஒத்துவராது, அதனால் நான் உறுப்பினர் இல்லை.

●

ஒருமுறை இரவில் நாடகம் முடித்துவிட்டு காரில் வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தார் ராதா. அசதியில் உறங்கிக் கொண்டிருந்தார். காரை சீரான வேகத்தில் ஓட்டிக் கொண்டிருந்த டிரைவர் திடீரென பிரேக் போட்டார். கார் குலுங்கி நின்றது. ராதா சட்டென விழித்தார். யாரோ ஒருவன் காரின் குறுக்கே வந்ததால் அந்தத் திடீர் பிரேக்.

'விருந்தாளிக்குப் பொறந்த புள்ள. நடுராத்திரியில குறுக்க ஓடுற...' டிரைவர் திட்டினார். ராதா டக்கென பதில் சொன்னார்.

'கழுத, நாயின்னு திட்டு. விருந்தாளிக்குப் பொறந்த புள்ளைன்னு திட்டாத. ஏன் தெரியுமா? இதே ஊர்ல நாடகம் நடத்தறப்போ ரொம்ப வூட்லே விருந்து சாப்டிருக்கேன். ஓடினவன் என் புள்ளையாயிருந்தாலும் இருப்பான்.'

ராதா இப்படிப் பல விஷயங்களில் ஒரு திறந்த புத்தகமாகத்தான் இருந்தார். தனக்குப் பல மனைவிகள் உண்டு என்பதை அவரே பலமுறை வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார். எதையும் மூடி மறைத்ததில்லை.

ஆனால் எந்தப் பெண்ணுக்கும் துரோகம் செய்ததில்லை. ஏமாற்றியதில்லை. நகை, வீடு என்று தன்னை நம்பி வந்த பெண்களுக்கு நிறையவே செய்திருக்கிறார் ராதா. 'மத்தவங்க வயிறெரிஞ்சா, பொறாமைப்பட்டா ஒண்ணும் ஆகாது. ஆனா ஒரு பெண்கூட பழகிட்டு, அவளை கர்ப்பமாக்கிட்டு குழந்தையைக் கொடுத்துட்டு கைவிடவே கூடாது. ஏன்னா அவ வயிறெரிஞ்சா அது நம்மளைப் பாதிக்கும்' என்பார் ராதா.

●

அந்தத் திருமண மண்டபமே பரபரப்பாக இருந்தது. எங்கும் திரை நட்சத்திரங்கள். வாசலில் நின்று நடிகை மனோரமா



எல்லோரையும் வரவேற்றுக் கொண்டிருந்தார். அவரது மகன் பூபதியின் திருமணம் அது.

முதலமைச்சர் எம்.ஜி.ஆர். உள்ளே நுழைந்தார். மண்டபத்தி லுள்ளவர்கள் எல்லாம் எழுந்து நின்று வணக்கம் தெரிவித் தார்கள். மனோரமா அவரை வரவேற்று முன் வரிசையில் அமர வைத்தார். சில நிமிடங்கள் கழிந்தன. மண்டபத்தின் வாசலில் ஒரு கார் வந்து நின்றது. ராதா அதிலிருந்து இறங்கினார். உடன் கஜபதி.

'வாங்கண்ணே' சந்தோஷமாக வரவேற்றார் மனோரமா. இருந்தும் அவரது முகத்தில் ஒரு படபடப்புத் தெரிந்தது. ராதா உள்ளே சென்றார். கஜபதி, ராதாவின் காதில் கிசுகிசுத்தார். 'அண்ணே உள்ள எம்.ஜி. ஆர்...'

ராதா பதில் பேசவில்லை. அவர் பாட்டுக்கு முன் வரிசையை நோக்கிச் சென்றார். 'என்ன ராமச்சந்திரா, சௌக்யமா?' என்று எம்.ஜி. ஆரின் அருகில் சென்று கேட்டார். டக்கென எழுந்து நின்று வணக்கம் சொன்னார் எம்.ஜி. ஆர். இருவருமே அருகருகே சிறிது நேரம் உட்கார்ந்திருந்தார்கள். பொதுவாக ஒரு

சில வார்த்தைகள் பேசிக் கொண்டார்கள். சில நிமிடங்கள் கழித்து, ராதாவுக்கு இன்னொரு வணக்கம் தெரிவித்துவிட்டு எம்.ஜி.ஆர். கிளம்பினார்.

மறுநாள் 'அபூர்வ சந்திப்பு' என்று பத்திரிகைகள் ராதா, எம்.ஜி.ஆர். சேர்ந்திருக்கும் புகைப்படத்தை வெளியிட்டன. ராதா ஜெயிலில் இருந்து வந்தபின்பு எம்.ஜி.ஆர். உடனான இரண்டாவது சந்திப்பு அது. முதல் சந்திப்பு பெரியார் இறந்த போது நடந்தது. பெரியாரின் உடலைப் பார்த்து கதறியபடி ராதா சொன்ன வாசகம் இதுதான்.

'போச்சு, எல்லாம் போச்சு. இனிமே தமிழ்நாட்டுக்குத் தலைவனே கிடையாது.'





# ரத்தமும் கண்ணீரும்

இரவு இரண்டு மணி இருக்கும். சாரதா ஸ்டூடியோவின் வாசலில் ராதாவின் கார் வந்து நிற்கிறது. முகத்தில் களைப்பு தெரிந்தாலும், உற்சாகமாக செட்டுக்குள் நுழைந்தார் ராதா.

'நெல்லூர்ல ஒரு நாடகம். முடிச்சிட்டு வர லேட் ஆயிருச்சு' அங்கே காத்திருந்த நடிகர் ஸ்ரீகாந்திடம் சொன்னார் ராதா.

'அண்ணே, நீங்க ஏன் இப்படி சிரமப் படணும்?'

'இல்லப்பா, இது என் தொழில், என்னை நம்பி காசைப் போட்டிருக்கான். சொன்னா வந்துடணும். புரொடியூசரை ஏமாத்தக்கூடாது.'

பஞ்சபூதம் என்ற படப்படிப்பில் நடந்த சம்பவம் இது. இந்தச் சம்பவம் நடக்கும் போது ராதாவுக்கு வயது 71.

பஞ்சபூதம் படத்தில் ராதா, ஓதுவார்கள் சிலருடன் சேர்ந்து 'பொன்னார் மேனி யனே...' என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள்

17

தேவாரத்தைப் பாடி நடிப்பதுபோல ஒரு காட்சி. சங்கர் கணேஷின் இசையில் பாடல் பதிவுக்காக ரெகார்டிங் ஸ்டூடியோ சென்று பாடலைப் பாடினார்.

அந்தப் பாடல் வெறும் தேவாரம் அல்ல, அன்றைய அரசியல் நிலவரங்களை எல்லாம் எடுத்துக் காட்டிய நையாண்டி தர்பார்.

| | |
|---|---|
| ராதா | நம பார்வதி பதயே |
| மற்றவர்கள் | ஹர ஹர மகாதேவா... |
| ராதா | பொன்னார் மேனியனே...<br>புலித் தோலை.. |

என்னடா ஈன்னு இழுக்குறீங்க, அர்த்தமில்லாம. கூட்டு சர்க்கார் நடத்துனாத்தான் நல்லாயிருக்குன்னு இன்னிக்கு நினைக்குறாங்கடா. அதேமாதிரி பாட்டுலயும் கூட்டு சேர்ந்தாத்தான் ஒழுங்கா இருக்கும். அது தெரியலையா உங்களுக்கு? அறிவு கெட்ட பசங்களா?

......மண்ணே மாமணியே

'மணியே'ன்னு அப்படி இழுக்கணும். நீ என்ன கலை மாமணின்னு* நினைச்சுக்கிட்டிருக்கியா? மாமணி, அது தாண்டா உயர்ந்த மணி, ஆண்டவனுடைய கழுத்துல தொங் குற மணி, அப்பேர்ப்பட்ட மணியை நாம் சொல்லுகிறோம்.

யாரை நினைத்தேனே...

'யாரை நினைத்தேனே'ங்கிறதை அழுத்திச் சொல்லணும்? எவனை நினைக்கிறோம் இந்த நாட்டுல? ஆண்டவனைத் தவிர வேற எவனை நினைக்க முடியும்? எல்லோருக்கும் சொல் றேன். அரசாங்க உத்தியோகத்துல இருக்கறவங்களுக்குச் சொல்றேன். டிபார்மெண்டை கவனிக்க வேண்டாம். சதா அவனையே நினைச்சுக்கிட்டு இருங்கோ. பகல் பூரா ஆண்ட வனையே நினைச்சு பக்தி செய்யுங்கோ. ராத்திரில மட்டும் கொஞ்ச நேரம் செய்யுங்கோ. மத்த நேரம் பாத்துக்கலாம். ஆகையினாலே நீங்க எல்லோரும் ... மண்ணே மாமணியே..

பரமேஸ்வரா பரமேஸ்வரா பரமேஸ்வரா!

இப்படியாகப் பாடல் முடியும்.

---

* அந்த ஆண்டில் முதல்வர் எம்.ஜி.ஆர்., பல கலைஞர்களுக்கு கலைமாமணி விருதை அள்ளிக் கொடுத்திருந்தார்.



பஞ்சபூதம் படப்பிடிப்பு நடக்கும்போதே ராதாவுக்கு உடல்நிலை அவ்வளவாக ஒத்துழைக்கவில்லை. அன்றைய படப்பிடிப்பின் போது எழுந்து நடப்பதற்குக் கூட சிரமப்படும் நிலை உருவானது. இருந்தும் கால்ஷீட் கொடுத்து விட்டிருந்ததால், தவறாமல் படப்பிடிப்பில் கலந்து கொண்டிருந்தார்.

இரண்டு பேர் கைத்தாங்கலாகப் பிடித்துச் சென்று கேமரா முன் நிற்க வைக்கும் அளவுக்கு நிலை. தளர்ந்து நின்றார். டேக் என்ற சத்தம் குரல் கேட்டவுடன் நெஞ்சை நிமிர்த்தி வழக்கமான கம்பீரத்துடன் பேச ஆரம்பித்தார். காட்சி ஓகே ஆனது. ராதா கதறினார். 'டேய் பிடிங்கடா.. பிடிங்கடா...'

இரண்டு பேர் ஓடிச் சென்று அவரைத் தாங்கினார்கள். அன்றைய படப்பிடிப்பு அப்படித்தான் நடந்தது. படக்குழுவினர் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் ராதா பிடிவாதமாக நடித்துக் கொண்டிருந்தார்.

மதிய உணவுநேரம். தயாரிப்பாளர் சாகுலை அழைத்தார் ராதா.

'ஏம்பா சாகுலு, அடுத்து எப்ப ஷூட்டிங் வைச்சிருக்க?'

'அடுத்த மாசம் இருக்கும்ணே.'

'அடுத்த மாசமா? அடப்போடா. நான் நாளைக்கோ, நாளன்னைக்கோ எப்ப புட்டுக்குவேன்னு எனக்கேத் தெரியலை. சீக்கிரம் வைச்சு முடிச்சுக்கடா.'

'அது வந்து... காசில்லை. அதான்...'

'காசில்லையா? டேய் கஜபதி அவனுக்கு என்ன வேணுமோ கொடுடா.'

மறுநாள் ராதா நடிக்க வேண்டிய மீதிக்காட்சிகள் எடுக்கப்பட்டன. மாடு ஒன்று முட்ட, ராதா இறந்து போவதாக ஒரு காட்சி.

'அண்ணே, உங்க போர்ஷன் எல்லாம் முடிஞ்சது.'

'அப்படியா. சரி நான் கிளம்பவா?' பஞ்சபூதம் படக் குழுவினரிடம் விடைபெற்றுக் கிளம்பினார் ராதா.

அன்று மாலை நடிகர் எம்.கே. ராதாவுக்கும், எம்.ஆர். ராதாவுக்கும் பாராட்டு விழா ஒன்று நடந்தது. வி.ஜி. பன்னீர்தாஸ்

ஏற்பாடு செய்திருந்தார். ராணி சீதை ஹாலில் நடந்த அந்த விழாவில் கலந்துகொண்ட ராதா, பின்பு திருச்சி கிளம்பினார்.

அந்த வார கல்கண்டு பத்திரிகை வெளியாகியிருந்தது. அதில் ராதா ஒரு தொடர் எழுதிக் கொண்டிருந்தார். 'ராதா சொல்லும் ரகசியம்.' இருபத்தைந்தாவது அத்தியாயம் அதில் வெளியாகி யிருந்தது. அதை இப்படி முடித்திருந்தார்.

'காமராசருக்கும் முத்துராமலிங்கத் தேவருக்கும் ஏன் ஆகவில்லை என்பதை இப்போது சொல்ல மாட்டேன். மரணவாக்குமூலம் என்று சொல்வார்களே, அப்போதுதான் அதைச் சொல்லுவேன்.'

சங்கிலியாண்டபுர வீட்டை அடைந்தார் ராதா. அந்த வீடு அவரது மனத்துக்குப் பிடித்தமானது. காரணம், நாடகத்தால் சம்பாதித்த பணத்தினால் கட்டப்பட்ட வீடு அது. உடல்நிலை படு மோசமாகிக் கொண்டே போனது.

ராதாவின் குடும்பத்தினர் அவரை சரவணா நர்சிங் ஹோமில் சேர்த்தனர். டாக்டர்கள் மஞ்சள் காமாலை என்றனர். கவனிக்காமல் விட்டதில் அதுவும் முற்றிப் போயிருந்தது. மூன்று முறை ரத்த வாந்தி எடுத்தார்.

நினைவிழந்தார்.

பின் உயிரை.

அன்று தேதி செப்டம்பர் 17, 1979. திராவிடர் கழகத்தினர் பெரியாரின் நூற்றாண்டு நிறைவு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருந்தனர்.

திரையுலகத்தினர் சிலர் ராதாவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள். கறுப்புத் துணி போர்த்தப்பட்டிருந்த அவரது உடலுக்குத் திராவிடர் கழகத்தினர் பலர் மரியாதை செலுத்தி னார்கள். திருச்சி மக்கள் லட்சக்கணக்கானோர் இறுதி மரியாதை செலுத்தினார்கள்.

சங்கிலியாண்டபுரம் வீட்டிலிருந்து ராதாவின் இறுதி ஊர்வலம் காவேரிக்கரை ஓயாமாரி இடுகாடு நோக்கிக் கிளம்பியது. வழிநெடுக சுவர்களில் அன்று நடைபெறவிருந்த 'ரத்தக்கண்ணீர்' நாடகத்துக்கான போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன.

# பின்னிணைப்பு

## 1. மலேசியாவில் ராதா

*ராதா தன் இறுதி வருடங்களில் நாடகம் போடவும், பொதுக் கூட்டங்களில் பேசவும் மலேசியா சுற்றுப்பயணம் சென்றார். அங்கு அவர் பேசிய பேச்சுகள் பயங்கர பரபரப்பைக் கிளப்பின. ஒலிநாடாவாக வந்தும் விற்றுத் தீர்ந்தன. அந்தப் பேச்சு இங்கே.*

●

*பேரன்பு மிக்க பெரியோர்களே, உத்தியோகஸ்தர்களே, சர்வ கட்சி தோழர்களே, என்னை இங்கு வரவழைத்த தோழர்களே! என்னை வரக்கூடாது என்று பெட்டிஷன் போட்ட என் இனிய நண்பர்களே! (கைதட்டல், விசில் சத்தம்.) உங்கள் அனை வருக்கும் என் வணக்கம்.*

*நான் மலேசியா நாடு வரவேண்டிய காரணம் நமது நண்பர் ராமசாமி அவர்கள்தானே தவிர, நான் எப்போதுமே வெளிநாடு செல்வதில்லை. எனக்கு அது அவ்வளவு பிடித்ததில்லை. என்னுடைய குழந்தைகள் எல்லாம் அமெரிக்காவிலும் இங்கி லாந்திலும் இருக்கிறார்கள். இருந்தாலும் அவர்களைக்கூட பார்க்க அங்கே செல்ல எனக்குப் பிரியமில்லை. இங்கே வர வேண்டிய காரணம், இங்கே தமிழர்கள் ஏராளமாக இருக்கி றார்கள். ரப்பர் தோட்ட மக்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து இங்கே எப்படி வாழுகிறார்கள்? என்ன நிலைமையில்*

இருக்கிறார்கள் என்பதையெல்லாம் பார்த்துப் போகவேண்டும் என்ற காரணத்தினால்தான் வந்தேன். மற்றவர்கள் மாதிரி நான் சாமான்கள் வாங்கவோ, துணிகள் வாங்கவோ, அல்லது உசத்தியான சரக்கு இருக்குன்னு சொல்லுறாங்களே அதுகிட்ட எல்லாம் நெருங்குறதுக்கு நான் வரவில்லை. (விசில் சத்தம்)

நீங்கள் இந்த நாட்டிலே நான் பார்த்த அளவிலே நல்ல முறை யிலே வாழுகிறீர்கள். எல்லோரும் நல்லா அழகா இருக்குறீங்க. நல்லா வெள்ளைக்காரன் மாதிரி சூட் போட்டுட்டுத்தான் இருக்கிறீங்கோ. ரப்பர் தோட்டத்துல எதாவது வேற மாதிரி இருப்பான்னு போய் பார்த்தேன். அவனும் சூட் போட்டுக் கிட்டுத்தான் இருக்கான்.

(இடையில் ஒருவர் குறுக்கிட்டு, 'தயவுசெய்து நண்பர்களே, விசில் அடிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.')

நம்ம நாடு மாதிரி இங்க யாரும் கோவணம் கட்டிக்கிட்டு இல்லே. அது ஒரு பெரிய மகிழ்ச்சி. எல்லோரும் ஒண்ணு நினைச்சுக்கணும். எவன் ஆண்டாலும், கடவுளே நாட்டை ஆண்டாலும் நீங்க உழைச்சுத்தான் சாப்பிடணுமே தவிர, சும்மா வாயில கொண்டாந்து ஊட்ட மாட்டான் யாரும். அங்கே உழைத்தாலும் சாப்பிட முடியாது, ஓரளவுக்குத்தான் சாப்பிடலாம். ஆகையினாலே, தமிழகத்துக்கு வந்துவிடலாம் என்று கருதி, யாரும் தவறி வந்துவிடப் போகிறீர்கள்.

வந்தவனையெல்லாம் வாழவைக்கும் தமிழ்நாடு, அது எங்களுக்குத் தெரியும். வந்தவன்னா யாரை? எங்கங்க உதைச்சு அனுப்புறாங்களோ அவங்களையெல்லாம் வாழ வைப்போம். அவ்வளவுதான். நீங்க வந்தா அது அவ்வளவு நல்லாயில்லை. நல்லாயிருக்கறவங்க எல்லாம் வரக்கூடாது. எனக்குப் பொறாமையா இருக்கு. உங்களையெல்லாம் பார்த்தா. இவ்வளவு நல்ல நாட்டுல வந்து சிக்கிக்கிட்டீங்க நீங்க. தெரிஞ்சிருந்தா உங்களை விடவும் நாங்க வந்திருப்போம் அப்பவே! சான்ஸ் போச்சு, என்னத்த செய்து தொலைக்கிறது?

இங்கே உங்களுக்கு ஏதோ சிறுசிறு பிணக்கங்கள் இருக்கலாம். போகப்போகச் சரியாகிவிடும்.

அறிவுக்கு எட்டுன கடவுளைத்தான் நாங்கள் பாராட்டக் கூடியவர்கள். நாங்கள் அந்த நாட்டிலே அறிவு கொடுக்கிறோம்.

சீர்திருத்தக் கருத்துகளைச் சொல்லுகிறோம். எங்களுக்கு வேறோரு வேலையும் இல்லை. மக்களைத் திருத்துகிறோம். குழந்தைகளைப் படிக்க வைக்கவேண்டும் என்று தமிழ்நாட்டில் சொல்ல வேண்டியதிருக்கிறது. இங்கே பார்க்கிறேன் ஆறரை மணிக்கு குழந்தைகள் ஸ்கூலுக்குப் போகுது. இந்தக் காட்சி எந்த நாட்டிலே பார்க்க முடியும்?

தமிழர்களின் குழந்தைகள் படிக்கிறார்கள். தாயும் படித்தவர்கள், தந்தையும் படித்தவர்கள். பள்ளியிலே இருந்து வந்ததும் என்ன படித்திருக்கிறாய்? என்ன மார்க்? என்று கேட்கிறான். அந்த நாட்டிலே ப்டிப்பில்லே. படிப்பு கொடுத்திருக்கிறார்கள். படிக்கப் போகமாட்டான்.

இங்க ஆறரை மணிக்கு எழுந்திருக்குது குழந்தைங்க. அங்க பத்தரை மணிக்கு எழுந்ரிரிக்கும். ஆடு மாடுகளை அவுத்து விட்ட மாதிரி விடுவானுக. நேரே அங்க கஞ்சி ஊத்தற இடத்துல போய் சுத்தி உட்கார்ந்து டான்ஸ் பண்ணும். அவ்வளவுதான். ஒண்ணு கையை விட்டுச் சாப்பிடும். ஒண்ணு காலை விட்டுச் சாப்பிடும். சாப்பிட்டுட்டு நேர எங்கியாவது போயிரும். சினிமாவுக்குப் போயிரும். சின்ன வயசுல சினிமா. அதான் உருப்படாமப் போச்சு, நம்ம நாடு.

தாய், தகப்பன் கண்டிக்கறது இல்லே. குழந்தையைக் கேட்பான். 'எங்க நைனா போயிட்டு வந்தே இன்னிக்கு'ன்னு. கொஞ்சுவான் குழந்தையைப் புடிச்சுக்கினு. 'நான் இன்னிக்கு பள்ளிக்கூடம் போல நைனா. சினிமாவுக்குப் போனேன் நைனா.'

குழந்தை பார்க்கக்கூடிய சினிமாவா தமிழகத்தின்ல் எடுக்கிறார் கள். பெரியவர்களே பார்த்துக் கெட்டுப்போய் கெடக்குறான். மனுசன் உள்ள போய் பார்க்க முடியாது அவ்வளவு ஆபாசமான பாடல்கள். ஒவ்வொரு வார்த்தைக்கும் மூன்று அர்த்தங்கள். தவறான பாதையிலே உள்ள அர்த்தங்கள். 'பார்க்கலாமா சினிமாவை'ன்னு அடிக்கணும் தகப்பன்.

அந்த நிலை அந்த நாட்டிலே வரவில்லை. 'நல்லாயிருக்காடா'ன்னு கேட்பான். 'என்ன படம்டா பார்த்தே நைனா'ன்னு கேட்பான். 'சிவாஜி கணேசனும் சாவித்திரியும் போட்டு டப்பாங்குத்துனாங்க அதைப் பார்த்தேன் நைனா'ன்னு சொல்லுவான். அவங்க ஆக்ட் செஞ்சதெல்லாம் இவன்

அறிவுக்கு எட்டாது, டப்பாங்குத்துன்னா அவ்வளவு டேஸ்ட் அங்க.

டப்பாங்குத்தைப் பார்க்கலாமா பார்க்கலாமான்னு அறையணும். அவன்கிட்டயே அப்பன் கேட்பான். ‘நல்லாயிருக்காடா நைனா’ன்னு. அவன் ‘நல்லாருக்குன்னு‘வான். ‘அப்ப நீ வீட்டுல தூங்கு, நானும் உங்காத்தாளும் ரெண்டாவது ஷோவுக்குப் போறோம்’னு இவன் போவான். இப்படி குழந்தைகள் படிப்பதில்லை அந்த நாட்டிலே. இதையெல்லாம் நாங்கள் சீர்திருத்தம் செய்கிறோம்.

இங்கு நான் வரக்கூடாது என்று ஒரு பெட்டிஷன். மூணு மணிக்கு ஒரு கூட்டம் நடந்துச்சு. ஒரு மலேயா நண்பர். அவர் பார்லி மெண்டரி மெம்பர். பேசறப்போ அவர் சொன்னார். ‘பெட்டிஷன் இவரு ரொம்பக் கெட்டவர்னு வந்திருக்கு. நான்கூட நினைச்சேன் எப்படித் தலைமை வகிக்கிறதுன்னு? கெட்டவரா இருந்தா இவ்வளவு கூட்டம் வருமா?’ அப்படின்னு பேசுனார். நம்ம ஜனங்கதான். மெட்ராசுல இருந்து புறப்பட்டு வந்தோமே, அந்த தமிழ் ஆளுங்கதான். கொஞ்சம் தமிழாளுங்க அப்படித்தான் இருப்பாங்க. நம்ம அட்ஜெஸ்ட் பண்ணிட்டுத்தான் போகணும்.

என்ன எழுதியிருக்காங்க? அங்க சுட்டுட்டு, ஜெயில்ல இருந்துட்டு இங்க வந்திருக்காருன்னு. எவ்வளவு சுளுவா ஏன் கதையைத் தெரிஞ்சுக்கிட்டான்டா இந்த நாட்டுல.. ஆங்.. ஆங்.. யாரைப் போய் சுட்டோம்? ஏதோ இரண்டு நண்பர்கள். எம்.ஜி. ராமச்சந்திரனும் நானும் நண்பர்கள். அம்பது வருஷமா சிநேகிதம். ரெண்டு பேரும் தமாஷா சுட்டுக்கிட்டோம். ஏங்க டப்பாசு சுட்டுக்கல? அதேதான்.

சுட்டுக்கிட்டா என்ன இப்போ? நாங்க ரெண்டு பேரும் அங்க வாழுறோம். நாங்க சுட்டுக்கிறோம். தமாசு. இங்க இருக்கறவன், சும்மா ரெண்டு ரூபா கொடுத்துப்புட்டு வேடிக்கை பார்க்குற பய, இவனுக்கு என்னமோ அவனைத் தெரிஞ்ச மாதிரி பேசுறான்.

என்னுடைய சிநேகிதன் ராமச்சந்திரன். நாங்க கோபத்துல எதோ சுட்டுக்கிட்டோம். அவ்வளவுதான். ஏன் சுட்டுக்கக் கூடாதா? பொண்டாட்டியும் புருஷனும் அடிச்சுக்கலையா? அதைப் போய்க் கேளேன் பார்ப்போம். அப்பனும் மவனும் வெட்டிக்கலை? அதே மாதிரி ரெண்டு நண்பர்கள் அடிச்சிக் கிட்டோம். அவ்வளவுதான்.

கையில கம்பிருந்தா கம்பை எடுத்து அடிச்சிக்குவோம். கத்தி இருந்தா, கத்தி எடுத்து அடிச்சிக்குவோம். ரிவால்வர் இருந்துச்சு அந்த நேரத்துல. எடுத்து அடிச்சிக்கிட்டோம். அடிச்சதும் 'டப்பு' 'டப்பு'ன்னுது நிறுத்திட்டோம். அதுல என்ன ஒருத்தரை ஒருத்தர் கொன்னு போடணும்னா சுட்டுக்கிட்டோம். ரிவால்வர்ல எட்டு தோட்டா இருக்கு. அப்படி விரோதமா இருந்தா எட்டு தோட்டாவையும் பயன்படுத்தி இருப்போம். ஒரு தோட்டாதான் ஆச்சு. வெடிக்குதா வெடிக்கலையான்னு பார்த்தோம். அது வெடிச்சிருச்சு. இதையெல்லாம் ரொம்பப் பேர் புரியாம தவறாய்ப் பேசுகிறார்கள்.

ஆனந்த விகடன்ல எழுதியிருக்கார். 'நான் ஏன் பிறந்தேன்'. அதுல நடிகவேள் ராதா அண்ணன்தான் இன்றைக்கு கலை உலகில் எனக்கு வழிகாட்டி. படிச்சுப் பார்க்கோணும் இதெல்லாம். இவங்க படிக்கறதில்லை. சிவாஜி கணேசன் என் கம்பெனியில இருந்தவன். ஆக்டர். எல்லோருமே என் கம்பெனில இருந்தவங்க ஓரளவுக்கு. நீங்க பார்க்கறீங்க. ஆக்ட் நல்லா செய்யு றோம். சந்தோஷப்பட்டுக்கிட்டு போங்க. அவ்வளவுதான்.

கோயிலுக்குள்ள போங்க. சாமியைக் கும்புடுங்க. மரியாதையா வெளிய வாங்க. சாமிகிட்டயே உட்கார்ந்துக்கிட்டு குடும்பம் நடத்தாதீங்க. நல்லாயிருக்காது. அதேமாதிரி எங்களைப் பார்த்தா அபிப்ராயம் 'நல்லாயிருக்கு'னு சொல்லிட்டுப் போயிடுங்க. நாங்கதான்னு பெருசுன்னு காலம் பூரா எங்களையேவா நினைச்சுக்கிட்டு இருக்கறது? ஒரு அறிவாளியைப் பத்தி நினைக்கக்கூடாதா நீங்க? இந்த நாட்டிலே எத்தனையோ பேர் நல்லவர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றி புகழுங்கள். எங்கேயோ கூத்தாடுறோம். அது இங்க வந்து திரையில காண்பிக்குறான். நாங்களெல்லாம் கலைஞர்னு பேசறாங்க எல்லோரும். அது இப்ப வந்த பேரு. சமீபத்துல. எங்களுக் கெல்லாம் பணம் வந்தவுடனே கலைஞர்னு கொடுத்தாங்க. அது எவன் காசு வாங்கிட்டுக் கொடுத்தானோ அதுவே எனக்குத் தெரியலை.

கலைஞர்னா ரொம்ப உயர்ந்தவர்களா? அப்படி அல்ல. நாங்கள்லாம் இப்ப கோடீஸ்வரன் அங்கே. கோடீஸ்வரன் மட்டும் அல்ல. இன்கம்டாக்ஸுக்கு பாக்கி காரணமே நாங்கதான். நாங்க பெரிய தப்பெல்லாம் அங்க செய்வோம். இன்கம்டாக்ஸுன்னா என்ன? இந்த ஜனங்களுக்குத் தெரியலை.

அந்த அறிவில்லை. இன்கம்டாக்ஸுங்கறது மக்களுடைய பணம். மக்களுடைய பணத்தைக் கொடுக்காம ஏமாத்துற கூட்டம், இந்த கலைஞர் பசங்க அவ்வளவு பேரும். நான் உள்பட.

நான் பதிமூணு லட்சம் கட்டணும். அவங்க எங்கிட்ட இருந்து எங்க வாங்கப்போறான்? நான் எங்க கட்டப்போறேன்? அது ஒண்ணுமில்லை. அது வருஷா வருஷம் வரும். ஆகட்டும் பார்க்கலாம்னு சொல்லி விட்டுக்கிட்டே இருக்கறேன். நாங்க இவ்வளவு தப்பு செய்யறவங்க. மக்களுடைய பணத்தை மோசம் பண்ணுற ஒரு கூட்டம் இந்த சினிமாக்கார கூட்டம். இன்னிக்கு நான் மலேசியா வர்றேன். என்னை வரவேற்கிறாங்க. எங்க மேல எவ்வளவு பிரியமா இருக்கறாங்க. புரியாத காரணம்.

நீங்க அங்க வந்தா திரும்பிப் பார்ப்பானா அவன் எவனாவது? கூர்க்கா போட்டுருப்பான் இல்ல நாயைக் கட்டிருப்பான். அவ்வளவுதான். நாங்க ஒண்ணும் இல்லாதவங்க. நாங்கள்லாம் பணக்காரன் ஆனோம்னா ராவும் பகலும் நினைக்க வேண்டியது உங்களை. நீங்க பார்த்து கொடுத்த பணம். சினிமா டிக்கெட் வாங்கிட்டுப் பார்க்கறீங்களே அந்தப் பணத்துலதான் நாங்க பணக்காரன் ஆனோம். உங்களுடைய பணத்தாலே முன்னேறிய கூட்டம் சினிமாக்காரர்கள். நீங்கள்தான் எங்களுக்குத் தலை வர்கள். அதைவிட்டுவிட்டு எங்களைத் தலைவர்களாக்கிட்டு ரொம்பப் பேரு இருக்காங்களே, அந்த நிலைமை வரக்கூடாது.

நாங்க நாடகத்துல எவ்வளவோ கஷ்டப்பட்டு வந்திருக்கோம். எங்களுடைய சரித்திரமே தெரியாது. நாடகத்துல அந்தக் காலத்துல 'கூத்தாடி'ன்னு ஏன் பேரு வைச்சாங்க? சும்மாவா வைச்சுட்டான்? ஒன்ஸ்மோர் கேட்பான். பாடிட்டு உள்ள போவணும். பாதி நாடகத்துல நாட்டாமைக்காரன் வருவான். ஒன்ஸ்மோர் சொல்லுவானுங்க. பழையபடி பண்ணனும். இல்லேன்னா விட மாட்டான். சாவற ஸீன்ல சாவோம். ஒன்ஸ்மோருன்னுவான். இன்னொரு வாட்டி எழுந்திரிச்சு சாவணும். அவ்வளவு அறிவுள்ள மக்கள். அப்படியெல்லாம் நாடகம் நடத்தி கூத்தாடி வர்றதால கூத்தாடின்னு வைச்சான்.

அந்தக் காலத்து ராஜா என்ன செஞ்சான்? அந்தக் கதையெல்லாம் பார்த்திருப்பீங்களே. வருவான் ராஜா. 'மந்திரி, மாசம் மூணுவாட்டி மழை பெஞ்சுதா?' கேட்பான். அரசியல்

நடத்துறானுங்க அந்தக் காலத்துல. மூணுவாட்டி மழை பெய்யும்போது, இந்தப் பயலுக்குத் தெரியாமலா போயிரும்.

சேரன், சோழன், பாண்டியன் எல்லாம் அம்பது மைல் டிஃப்ரன்ஸ்லதான். ஒவ்வொருத்தனும் ஒவ்வொரு ராஜா. இவன் பொண்டாட்டியை அவன் எடுத்துட்டுப் போயிருவான். அவன் பொண்டாட்டியை இவன் எடுத்துட்டுப் போயிருவான். இதுக்கு ஊர் சனங்க தாலியறுத்து சாவணும் சண்டையில. பெரிசா ஆண்டுட்டானுங்க.

இன்னிக்கு ஆள்பவர்கள்தானடா மனிதர்கள். எந்த நாட்டையும் எடுத்துக்கொள்ளுங்கள். மக்களுக்காகத்தான் அரசாங்கம். நீங்களெல்லாம் ஒரு காலத்திலே இங்கே வந்தீர்கள் என்றால் எப்படி வந்தீர்கள் மலேயாவுக்கு? தமிழகத்திலே செய்த கொடுமை. பள்ளா பறையா தொடாதே. ரோட்டுல நடக்காதே. குடை பிடிச்சுட்டுப் போவாதே. செருப்பு போட்டுக்கிட்டுப் போவாதே. கொடுமைப்படுத்தியது பிராமணிஸம். அதனால் தான் எல்லோரும் முகமதியர்கள் ஆனார்கள். கிறிஸ்துவர்கள் ஆனார்கள்.

எப்படி ஆனார்கள்? அவர்கள் பள்ளா பறையா என்று விரட்டிய தால் இங்கே வந்துவிட்டார்கள். நாங்க ஏதோ நின்னு போராடிக் கிட்டிருக்கோம் இன்னிக்கும். போராடிப் போராடித்தான் இன்று தமிழர் ஆட்சி என்று ஒன்றை உருவாக்கியிருக்கிறோம். அது தந்தை பெரியாரால் வந்ததை யாரும் மறுத்துவிடக்கூடாது.

நாங்க எத்தனையோ வாட்டி ஜெயிலுக்குப் போயிருக்கோம். எதெதுக்கோ ஜெயிலுக்குப் போயிருக்கோம். ஜெயிலுக்குப் போனவர்னு சொல்லுறான். ஜெயிலுன்னா இவனுக்கு என்ன தெரியும்? பெரிய அறிவாளிங்க எல்லாம் உண்டாகிற இடம் ஜெயிலு. அங்க போனாத்தான் அடுத்தாப்புல நாட்டை ஆள வரலாம். எடுத்துக்கோங்களேன். காந்தி, ஜவஹர்லால் நேரு, தலைவர் காமராஜ், அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி... என்ன காலேஜுல இருந்துட்டா நேர அரசிய லுக்கு வந்தாங்க?

ஜெயிலுக்குப் போயிட்டு அப்புறம் அரசியலுக்கு வரணும். அரசியல் நடத்தறதா இருந்தா முதல்ல ஜெயிலுங்கிற காலேஜுல போய்ப் படிக்கோணும். அப்படித்தான் ஒவ்வொருத்தரும்

ஒவ்வொரு ப்ளான்ல போறோம். நான் ஒரு ப்ளான்ல போனேன். ஆக ஜெயிலுங்கிறது ரொம்ப உயர்ந்தது.

எனக்குக் கொடுத்தது ஏழு வருஷம். செவன் இயர்ஸ். என்னை மூணு வருசத்துல விட்டுட்டாங்க. ஏன் விட்டான்? நான் அங்க வேலை செஞ்சிருக்கிறேன். எங்களை விடுன்னு கெஞ்சனோமா? அப்படி அல்ல. எங்களை உள்ளயே வைச்சிருந்தா அரசாங்கத்தைப் பகைப்பாங்க.

சட்டப்படி, நாங்க ரெண்டு பேரும் அடிச்சிக்கிட்டதுக்கு சாவவே இல்லை. ரெண்டு பேரும் உயிரோட இருக்கறோம். எங்களுக்கு சட்டப்படி கொடுக்கறதா இருந்தா எனக்கு ஒருவாரம் கொடுக்க லாம். நியூஸென்ஸ் கேஸ். அடிச்சுப் போட்டது நியுஸென்ஸ் கேஸ். எனக்கு எதுக்கு ஏழுவருஷம் கொடுக்கணும்? அது பாலிடிக்ஸ்.

நான் கடவுள் இல்லேன்னு சொல்லலை. கடவுள் என்று ஒருவன் இருப்பானேயானால் அவன் என்னை மன்னிப்பானாக. 'டேய் கடவுளைப் பத்தி பேசாதேடா'ன்னு சொல்லுவான். என்னமோ இவனுங்க கடவுள் செகரட்டரி மாதிரியும், நான் என்னமோ கடவுள் விரோதி மாதிரியும். ஏன்யா நான் கேட்குறேன், கடவுள் இல்லைன்னு நான் சொல்லிட்டா அந்தக் கடவுள் இல்லாம போயிருவாரா? அப்ப எனக்கு அவ்வளவு பவர் இருக்குன்னு நினைக்கிறியா?

இவன் ஏழடி உயரம் இருப்பான். ஆறடி வாசக்கால் வைச்சு வீடு கட்டுவான். உள்ள போகும்போதே இடிச்சுக்குவான். 'ஆ கடவுளே...' என்னடா கடவுள்? ஏன்டா முட்டாளே, கூட ஒரு அடி தூக்கி வைச்சுக் கட்டுனா சரியாப் போச்சு. சும்மா கடவுளே கடவுளேன்னு கத்துனா? கடவுளை ரொம்ப டிஸ்டர்ப் பண்ணக்கூடாது.

அன்பே சிவனுங்கிறோம் கடவுளை. பெரியவர்களே, நீங்கள் நினைக்க வேண்டும் அன்பே சிவம்னு வைச்சிருக்கிறோம். அவன் கையில ஆயுதம் சூலம். அன்புக்கு ஆயுதம் எதுக்கு? கொலைகாரப் பயலுக எல்லாம் ஜெயில்ல இருக்கோணும். சூலத்தை உருவிட்டாப் போதுங்கிறேன். வேற ஒண்ணுமில்லை. இதைத்தான் நான் சொல்கிறேன். கடவுள் இல்லைன்னு சொல்வது அல்ல. எல்லா உயிர்களிலும் வீற்றிருக்கக்கூடிய

கடவுள் என்று சொல்லுகிறார்கள். அப்படியென்றால் என்னுடைய உயிரிலும்தான் கடவுள் இருக்கவேண்டும்.

இங்ககூட பலர் கேட்டார்கள். 'அங்க என்ன தமிழர்களுக்கும் மலையாளத்தாளர்களுக்குச் சண்டையா?' அப்படியே வெந்து போச்சு மனம். யாரோ திரிச்சி விட்டுட்டாங்க. என்னடா மலையாளிகளும் நாங்களும் அண்ணன் தம்பி மாதிரி வாழு றோம். நாங்க சண்டை போட்டுக்கிட்டோமுன்னு எவனோ சொல்லிட்டான். அந்த நினைப்பு யாருக்கும் இருக்கக்கூடாது. ராமச்சந்திரனுக்கும் அரசியலில் இருப்பவர்களுக்கும் ஏதோ தகராறு. அதை வைத்துக்கொண்டு இந்த விவாதத்தை இங்கே கிளப்பக்கூடாது. நான் தமிழகத்தைக் கேட்டுக் கொள்வதுபோல் இங்கும் கேட்டுக் கொள்கிறேன்.

ஆகையினாலே அருமை மலேசியா தமிழர்களே, இங்கே வந்து மிகப் பெருமையாக இக்கூட்டத்தை நடாத்திக் கொடுத்ததற்கு, உங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, இத்துடன் என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

## 2. சினிமா உலகம் பற்றி ராதா

(1977-ல் சொன்னது)

சினிமா உலகைப் பற்றி நினைப்பதற்கே என்னவோ போல் இருக்கிறது; இன்றைய நிலைமை அப்படி!

அன்று இதைப்போல் இல்லை. இவ்வளவுதான் பணம் வாங்குவது என்று ஒருமுறை இருந்தது. என்னைப் பல படங்களில் தயாரிப்பாளர்கள் புக் செய்வார்கள். அதற்குக் காரணம்? நான் நடிக்கவேண்டும் என்று அவர்கள் விரும்புவது மட்டுமல்ல, என்னை புக் செய்தால் மற்ற நடிகர், நடிகையர் செட்டுக்கு ஒழுங்காக டயத்துக்கு வந்துவிடுவார்கள் என்பதும் ஒரு முக்கியமான காரணம். நான் மட்டுமல்ல, என்னால் எனக்குப் பயந்துகொண்டு மற்றவர்களும் குறிப்பிட்ட நேரத்திற்கு வந்துவிடுவது அவர்களுக்கு மிகவும் உதவியாக இருந்தது.

இப்போது செட்டுக்கு குறித்த நேரத்துக்கு வருகின்ற நடிகர் நடிகையர் குறைவு. சினிமாத் தொழில் மிகவும் கேவலமாகப் போய்விட்டது. அவர்கள் நடிப்பதற்குச் சரியான நேரத்துக்கு வராததைப்போலவே படமும் சரியானபடி ஓடாமல் டப்பா வாகப் போய் விடுகிறது. வெள்ளிக்கிழமை வெளியான படம் அடுத்த வெள்ளிக்கிழமையே தியேட்டரை விட்டுப் போய் விடுகிறது.

இப்போது படங்களில் நடிக்கிறதுக்கு சிலபேர் பி.ஏ. எம்.ஏ. படிச்சவங்க உத்தியோகம் செய்து சம்பளம் வாங்குறது மாதிரி பணம் வாங்குகிறார்கள். சிலபேர் தானே பணம் கொடுத்து

நடிக்கிறார்கள். நடிகர், நடிகைகள்தான் இப்படி. சரி, டெக்னீ ஷியன்கள் எப்படியிருக்கிறார்கள்?

அவங்க இஷ்டத்துக்கு வருகிறார்கள், போகிறார்கள். அந்தக் காலத்தில் நேரமானாலும் இரண்டு ஷாட் பாக்கி இருந்தால் முடித்துவிட்டுப் போகலாம் என்று அவர்களே ஆர்வமாக இருப்பார்கள். இப்போது அப்படியா நடக்கிறது?

தயாரிப்பாளர்கள் எல்லாம் அப்போது நாணயஸ்தர்கள். டி.ஆர். சுந்தரம் போன்றவர்கள் இருந்தார்கள். இப்போதும் சிலர் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் தமிழ்ப்படம் எடுப்பதில்லை. அந்தக் கால புரொடியூசர்கள் பலபேர் பிளாட்பாரத்தில் பிச்சைக்காரர்கள்போல் அலைகிறார்கள். அதைப் பார்க்கும் போது, மனத்துக்குக் கஷ்டமாக இருக்கிறது. தேவர் நல்ல தயாரிப்பாளர். பேசிய பணத்தைத் தருபவர். முதலிலேயே பணம் கொடுப்பவர் அவர் ஒருவர்தான். வேறு யாரும் இல்லை. அவரும் மிருகங்களை நம்ப ஆரம்பித்துவிட்டார். மனிதர்கள் அவ்வளவு கெடுதல் செய்து விட்டார்கள்.

மற்றபடி கையிலே பணம் வைத்துக்கொண்டு இப்போது யார் படம் எடுக்கிறாங்க? கடன்காரங்கதான் தயாரிப்பாளரா இருக்கிறாங்க! ஒரு பணக்காரன் கூட இல்லை. இருக்கிறவங்க சிலர் மானத்தைவிட்டு, மரியாதையைவிட்டு இந்தி நடிகர் களுக்கு என்னென்ன கொடுக்கணுமோ எல்லாத்தையும் கொடுத்து இந்தியில் படம் எடுக்கிறார்கள்;

இப்போது சினிமா உலகில் நல்ல Standard இல்லை. இருக்கிற நிலைமையைப் பார்த்தால் இன்னும் கீழே போகும் மேலே வரவே வராது என்றுதான் தோன்றுகிறது. அவ்வளவு அயோக்கியத்தனம் நடக்குது.

தசாவதாரம் படத்திலே கே.எஸ். கோபாலகிருஷ்ணன், இரணியன் வேடத்தில் நடிக்க வேண்டும் என்று அழைத்தார். நான் தேவையில்லை. நம்ப ஜனங்களுக்கு இரணியன் என்றால் தடியனாக இருந்தால் போதும், ஓட்டலில் மாவு ஆட்டுகிற வனாகப் பார்த்து, மலை மாதிரி பருமனாக உள்ளவனாகப் போடு. நூறு ரூபாய், இருநூறு ரூபாய் கொடுத்தால் போதும். எனக்குக் கொடுப்பதுபோல் பணம் கொடுக்க வேண்டாம். செலவும் சிக்கனமாகும் என்றேன். செலவைப் பற்றிக் கவலையில்லை,

இரணியன் கேரக்டருக்கு தகுந்தாற்போல் நீங்கள் நடிக்க வேண்டும் என்று வற்புறுத்தி தசாவதாரத்தில் நடிக்க வைத்து விட்டார் அவர்.

இதுவரையில் நான் படங்கள் எதுவும் பார்த்ததே இல்லை. நான் நடித்த படங்களைக் கூடத்தான். என் மகன் வாசு இப்போது நடிக்கிறான். நல்ல பெயர் வந்திருக்கு. இதைப் பார்த்து சந்தோஷப்படமாட்டாங்க. இவன் எப்படி தனியா வளரலாம்னு அழிக்கப் பார்ப்பாங்க. இங்கே பெண்ணாக இருந்தால் கைத்தூக்கிவிட ஒப்புக்கொள்வார்கள். மற்றவர்களை அழிக்கத்தான் நினைப்பார்கள். நம்பிக்கை தருவதுபோல் யாராவது இருந்தால், அவர்கள் நம்மை மிஞ்சி விடுவார்களோ என்று அழித்து விடுகிறார்கள். இந்தக் கேடுகெட்ட புத்திதான் திரை உலக அழிவுக்குக் காரணம்.

தன்னைத் தவிர வேறு யாரும் போட்டியாக இருக்கக்கூடாது என்று அடிச்சு வீழ்த்த நினைக்கிறாங்க. சரியானபடி நடிப்பு, performance போட்டி இல்லாததால் சினிமா உலகம் தலைகுப்புற விழுகிறது. அந்த காலத்தில் நடிப்பிலே போட்டியை கதாநாயகர்கள் விரும்பினார்கள். இப்போது one man show செய்து, தங்களை ஒவ்வொரு காட்சியிலும் இருக்கும்படி செய்து புகழடைய விரும்புகிறார்கள். தன்னைவிட இன்னொரு நடிகன் ஒரு காட்சியில் நன்றாக நடித்துவிட்டால் பொறுக்காது. அடுத்தவன் கேமராவில் தெரிவதைக்கூட சகித்துக்கொள்ள முடிவதில்லை. இவ்வளவு மோசமாக, கேவலமான எண்ணம் வந்த பிறகு இந்தத் தொழில் அழியாமல் என்ன செய்யும்?

25 வருடங்களாக 'ரத்தக் கண்ணீர்' நாடகத்தை நடத்திக் கொண்டிருக்கிறேன். படமும் வெளிவந்து இன்றும் மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால் அதிலே ஒரு படிப்பினை இருக்கிறது என்பதுதான் காரணம். இன்னொன்று பெண்களுக்குப் பிடித்தமானது. ஆகையால் பெண்கள் விரும்பிப் பார்க்கிறார்கள். ஒரு பெண் வந்தால்தான் நான்கு ஆண்கள் பின்னால் வருவார்களே! கூட்டத்துக்கு அப்புறம் குறை ஏது?

அப்போது சினிமா உலகம் இருந்த நிலைக்கும், இப்போது இருப்பதற்கும் எத்தனையோ வேறுபாடுகள். எல்லாவற்றையும் சொன்னால், பொல்லாதவனாகி விடுவேன், எல்லாவர்க்குமே!

## 3. ராதாவின் இறுதி பேட்டி

*(தொலைபேசியில் எடுக்கப்பட்டது. 1979-ல் கல்கண்டு இதழில் வெளிவந்தது.)*

***இப்பொழுதெல்லாம் நீங்கள் நாடகம் போடுவதில்லையே ஏன்?***

*வயது எழுபதாச்சு. முன்னமாதிரி உடம்பு இல்ல. இந்த மிஷின் அடிக்கடி ரிப்பேர் ஆகுது. காரில் வெளியூர்களுக்குப் பயணம் பண்ண முடியல. உள்ளூர் சபாக்காரர்கள் ஏற்பாடு செய்கிற நாடகத்தில நடிச்சிக்கிட்டுதான் இருக்கேன். நாடகத்தில நடிக்கலன்னா எனக்குப் பைத்தியம் பிடிச்ச மாதிரி இருக்கும்.*

*உங்களது படவுலக வாய்ப்பு எப்படி இருக்கிறது?*

*நான் அன்னன்னைக்கு வந்து போகிற நடிகனல்ல. எனக்கு சாகிற வரைக்கும் மார்க்கெட் இருக்கும்னு நினைக்கிறேன். வருங்கால மார்க்கெட்டையும் சேர்த்துப் பிடிச்சுக்கிட்டுதான் நான் பேசுவேன். நான் ஃபீல்ட்டை விட்டு விலகிப் போறதில்ல. அதே நேரத்தில் படத்துக்காரங்க மூஞ்சியிலயும் முழிக்கிறதில்ல. என்னைப் போட்டா ஏதாவது நன்மை இருக்கும்னு அவர்களுக்குத் தெரியும். ஏன்னா என்னை ஊரே புகழ்ந்தாச்சு. பாராட்டாத பத்திரிகை இல்லை. பத்திரிகை தர்மம் தவறாம எல்லோருமே என்னைப் பத்தி நல்லா எழுதுறாங்க. இனிமேல்*

குறை சொல்லி எழுதினா, வேணும்னு எழுதுறாங்கன்னு அவுங்களுக்குத்தான் பெயர் வரும். பொதுவா, படங்களில் நடிக்கிறதுக்கு முன்னே என்னுடைய கருத்தோட என்னுடைய பாணி சேருமான்னு பார்ப்பேன். இதெல்லாம் சேர்ந்தாத்தான் நடிப்பேன். இல்லைன்னா நடிக்கணும்ங்கிற தேவையே இல்லை.

***வயதான நடிகர்கள் ரிட்டயர் ஆவது நல்லதா?***

*மீனுக்கு நீந்துவதற்கு வயசா இருக்கு? சாகிற வரைக்கும் நீந்துவது அது. நானும் சாகிறவரைக்கும் நடிப்பேன். நடிப்புத் துறையில இருக்கிறதுங்கிறது அவுங்கவுங்க இஷ்டம். வயித்துப் பொழப்புக்காகவும், தாங்கள் நடிக்க வரணுங்கிறதுக்காகவும் சிலர் வயதானவர்கள் ரிட்டையர் ஆகணும்னு சொல்றாங்க. நாங்க வயித்துப் பொழப்புக்காக இங்க இருக்கல. நாங்க கீழே இருந்து இந்த நிலைக்கு வந்தவுங்க. ஜனங்களுக்கு அதெல்லாம் தெரியும். அதனால ஜனங்களுக்கு எங்க மேல நீங்காத பாசம் ஏற்பட்டுப் போச்சு. அதை மாற்ற முடியாது.*

***நீண்ட இடைவெளிக்குப் பிறகு படவுலகில் நுழைந்திருக்கும் நீங்கள், படவுலகில் என்னென்ன மாற்றங்களைக் காண்கிறீர்கள்?***

*ரிவால்வர் சண்டை நடந்துதே, அப்போ சுட்டுட்டு ஜெயிலுக்குப் போனேன். வெளியே வந்தேன். மறுபடியும் நடிச்சேன். மறுபடியும் மிசாவினால உள்ள போயிட்டேன். இந்த இடைவெளிங்கிறது கிட்டத்தட்ட நாலு வருசம். இதற்குள்ளே இண்டஸ்ட்ரி பெரிசா ஒண்ணும் மாறிட்டதா தெரியல. பொதுவா ஜனங்களிடையே நல்ல படத்தைத்தான் பார்க்கணும் அப்படீங்கிற நிலைமை மாறி, பொழுதுபோவதற்கு எதையாவது பார்த்தா சரி அப்படின்னு நினைக்கிற நிலைமை வந்திடுச்சு. அதனால எல்லா சினிமா தியேட்டரும் ஃபுல். கருத்து இருக்கோ இல்லியோ, எதையாவது கோணல் மாணலாக எடுத்தாலும் சரி ஜனங்க பார்க்குது. அதனால் சினிமா இம்புருவ் ஆயிடுச்சின்னு நினைக்கக் கூடாது. சினிமா இம்புருவ் ஆகல்ல. பெரும் பணம் வாங்கியும் யாரும் நடிச்சிடல. பெரும்பணம் வாங்கினவனெல்லாம் அவனவனே படம் எடுக்கிறான். புதுமாதிரியா எடுக்கிறதாச் சொல்றாங்க. யார் எடுக்கிறாங்க? திறமை எங்கேயிருந்து திடீர்னு உற்பத்தி ஆயிடும்? சினிமா உலகம் நல்லபடியா வரும்கிற நம்பிக்கையே எனக்கு இல்ல.*

***நீங்கள் எம்.ஜி.ஆர். சப்போர்ட்டரா, கருணாநிதி சப்போர்ட்டரா?***

*நான் யார் சப்போர்ட்டரும் இல்ல. எம்.ஜி.ஆருக்கும் அரசியலுக்கும் என்ன சம்பந்தம்னு எனக்குத் தெரியல. எம்.ஜி.ஆரை எனக்கு நண்பர்னுதான் தெரியும். அவர் அப்போதெல்லாம் அந்த மாதிரி வேலைக்கே போகாதவர். அரசியல்ல கருணாநிதிதான் தேர்ச்சி பெற்றவர் அப்படிங்கிறது எனக்கு நல்லாத் தெரியும். அரசியலில் நல்லா ஊறினவரும் கருணாநிதிதான். அரசியலில் கருணாநிதியைத்தான் கெட்டிக் காரர்னு சொல்லமுடியும். எம்.ஜி.ஆரை அப்படிச் சொல்ல முடியாது. இப்போதைய அரசியல் நல்லா இல்ல. நல்லா இருந்தாத்தானே நான் ஒரு ஸ்டாண்ட் எடுக்க முடியும். அரசியல் நல்லதா தனிப்பட்ட அரசியல் தலைவர்கள் நல்லவர்களா என்று முன்னே கேள்வி எழுந்தது. தலைவர்கள் நல்லவங்களா இருந்தாங்க, அதனால அவர்களது அரசியலை ஏத்துக்கிட்டோம். இப்போ அரசியலும் சரியில்ல. அரசியல்வாதிகளும் சரியில்ல. அதனால எதை நம்பி யாரை சப்போர்ட் செய்வது? பெரியார் காலத்தில்கூட எனக்கு அவருடைய கொள்கை பிடிக்குமே தவிர கட்சி பிடிக்காது. நான் தி.க. அங்கத்தினராக இருந்ததும் கிடையாது. பெரியார், தி.க. சுயமரியாதைக் கட்சி அப்படி இப்படீன்னு ஏழெட்டு கடைகளை வைத்திருந்தார். நான் ஒரு கடையில்கூட அங்கத்தினர் இல்ல.*

***முதலமைச்சர் நடிப்பது என்பது உங்களுக்கு சரியாகப்படுகிறதா?***

*ஏன், கெடுதலா? நடிச்சா என்ன தப்பு? அப்புறம் முதலமைச்சர் கல்யாணம் பண்ணிக்கிறது நல்லதான்னும் கேப்பீங்க. குழந்தை பெத்துக்கிறது நல்லதான்னும் கேப்பீங்க. அதெல்லாம் அவுங் கவுங்க விருப்பத்தைப் பொறுத்தது. அவருடைய உரிமையைப் பறிப்பதில் நியாயம் என்ன இருக்கிறது? மனிதனுக்கு ரொம்ப அடிப்படை தேவைங்கிறது படிப்புதான். அதுவே முதலமைச்சர் பதவிக்கு வேணாம்னு ஆயிட்டபோது, மற்றது எப்படி இருந்தால் என்ன?*

***கலைஞர்களுக்கு எம்.ஜி.ஆர் ஆட்சியில் பதவி பட்டம் ஆகியன கொடுக்கப்படுவதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?***

*அது அவர் இஷ்டம். அவர் யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம். பரிசுபெற்ற கலைஞர்களை எனக்குப் பழக்கம் கிடையாது. அவுங்களெல்லாம் கலைஞர்களா அப்படீங்கிறதே*

எனக்குத் தெரியாது. ஆனா, உதவிங்கிறது யாருக்குச் செய்யப் பட்டாலும் எனக்குச் சம்மதம்தான். தனக்கு வேண்டியவர் களுக்குக் கொடுத்தாரா, மக்களுக்கு வேண்டியவர்களுக்குக் கொடுத்தாரா, என்ன நோக்கத்தில் கொடுத்தார் என்பது எனக்குத் தெரியாது. கலைஞர்கள் என்ற பார்வையில் கொடுத்திருந்தால் எனக்குக் கிடைக்கவில்லையே! நான் என்ன கலைஞ னில்லையா? வியாபாரியா? அப்படின்னா, என்னோட கலை யால் மக்கள் திருந்தியிருக்கிறாங்கன்னு சொன்ன தலைவர் களெல்லாம் மடையர்களாக அல்லவா இருக்கணும்? எனக்குப் பரிசு கொடுக்கணுங்கிறதுக்காக நான் இதைச் சொல்லல. பரிசு கொடுத்திட்டு வர்றாரு. இன்னும் கொடுப்பாரு.

***எம்.ஜி.ஆரின் தீவிர மதுவிலக்குக் கொள்கைபற்றி என்ன எண்ணுகிறீர்கள்?***

உலகமே ஆதரிக்கப் போறதில்லை. நானும்தான். புகழுக்காக இதையெல்லாம் செய்யலாமே தவிர, பலன் எதுவும் கிடைக்காது.

***தி.க. கொள்கையைக் கொண்ட நீங்கள் பக்தியை உண்டு பண்ணும் படங்களில் நடிக்க எவ்வாறு முன்வந்தீர்கள்?***

பெரியார் பக்தி வேஷம் போடாதேன்னா சொன்னாரா? அந்தப் படத்தை (கந்தர் அலங்காரம்) நீங்க பார்க்கணும். என்ன செய்யறேன், வார்த்தைகள், அர்த்தங்கள், யாரைப் போய் சாடுகிறது என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கணும். அதை நானே சொல்லக்கூடாது.

***பெரியாருடைய எல்லாக் கொள்கைகளுமே உங்களுக்கு உடன்பாடுதானா?***

எல்லாமே சம்மதம்னு சொல்ல முடியாது. அவருடைய பல கருத்துக்களை எதிர்த்திருக்கேன். பிராமணாள் ஹோட்டலில் சாப்பிடக் கூடாதுன்னு சொல்வாரு. அதை நான் எதிர்த்திருக்கேன். அவருடைய நண்பர் ஒருவர். பிராமின். மஞ்சள் வியாபாரி. அவரை ஆதரிச்சு ஓட்டுப் போடணும்னு சொன்னார். அதை எதிர்த்து, கம்யூனிஸ்டுகளுக்கு ஓட்டுப் போடுன்னு பிரசாரம் பண்ணியிருக்கேன். பல கடவுளைச் சொல்றாங்க. கடவுளே இல்லை அப்படின்னார் பெரியார். ஒரே ஒரு கடவுள் இருக்கிறது அப்படின்னார் அண்ணா. கடைசியில பெரியார் அதை ஆதரிச்சிட்டார். நான் அதை ஏத்துக்கல.

**படத்தில் நடிக்காத காலத்திலும் உங்களால் சந்தோஷமாக இருக்க முடியுமா?**

நல்லா இருக்க முடியும். சினிமாக்காரங்க சனியன் மாதிரி வந்து உயிரை எடுக்கிறார்கள். சினிமா உலகத்திலே இருந்துக்கிட்டு சினிமாவைத் திட்டிக்கிட்டு இருக்கேன். பெரிய சேவை இது. வேறு யாராலயும் செய்ய முடியாத சேவை. மத்தவன் இதைச் செஞ்சான்னா அவனுக்கு மார்க்கெட் போயிடும்.

**தங்களது கட்சிதான் உண்மையான தி.க. என்று திருவாரூர் தங்கராசுவும் கி.வீரமணியும் தனித்தனியே சொல்கிறார்களே?**

இரண்டு பேருமே நம்ம ஆளுங்கதான். அதனால் இதைப் பத்தி நான் ஒண்ணும் சொல்றதுக்கில்ல. ஆனா ஒண்ணு, கட்சியில பணம் இருந்தா சண்டைதான் வரும். சண்டை வேண்டாம்னு நெனைக்கிற ஆட்களெல்லாம் இனிமே பணமே சேர்க்கக் கூடாது. அப்படி இல்லாம பணம் சேர்த்துக்கிட்டிருந்தா அடிச்சிக் கிட்டு சாகவேண்டியதுதான்.

# 4. ராதா - சில சுவாரசியங்கள்

★ நாடகம் தொடங்குவதற்கு முன்பு பூஜை செய்வது என்பது பொதுவான பழக்கம். ஆனால் ராதா, தமிழ்த்தாய் வாழ்த்துபாடி தொடங்குவார்.

★ 'நடிப்பு இலக்கணம் பற்றி ராதாவுக்குத் தெரியாது. அதைப் பற்றி அவர் கவலைப்பட்டதும் கிடையாது. நீங்கள் எடுத்துக் கொண்டே இருங்கள். நான் நடித்துக் கொண்டே இருக் கிறேன்' என்பார். முதல் தடவை நடித்ததையே திருப்பி எடுத்தால், அதே மாதிரி நடிக்க அவரால் முடியாது. வேறு மாதிரிதான் நடிப்பார்' டைரக்டர் பஞ்சு.

★ இதுவரை வந்த தமிழ்ப்படங்களிலேயே அதிக 'பஞ்ச்' டயலாக்குகள் கொண்ட படம் ரத்தக்கண்ணீர்தான்.

★ ரஷ்யாவில் ஹிந்தி நடிகர் ராஜ்கபூர் பிரபலமாக இருந்தார். 'ஆவாரா' படத்தின் விழாவுக்குச் ரஷ்யாவுக்குச் சென்றிருந்தார் அவர். அப்போது பத்திரிகையாளர்கள் அவரிடம் கேள்வி கேட்டனர். 'இந்தியாவில் சிறந்த நடிகர் யார்?' ராஜ்கபூர் சொன்ன பதில், 'தென்னகத்துல கதாநாயகனாக, வில்லனாக, நகைச்சுவை நடிகனாக எல்லாப் பாத்திரங்களையும் உணர்ந்து நடிக்கிற நடிகர் ஒருவர் இருக்கிறார். அவர் எம்.ஆர். ராதா.'

★ திருச்சி தேவர் ஹாலில் கருணாநிதி எழுதிய 'மணிமகுடம்' என்ற நாடகத்தைப் பார்த்தார் ராதா. அதில் அல்லி

பாத்திரத்தில் நடித்தது நடிகை மனோரமா. ராதாவுக்கு மனோரமாவின் நடிப்பு பிடித்திருந்தது. 'எதிர்காலத்துல நீ நல்லா வருவே' என்று மேக்-அப் அறைக்குச் சென்று வாழ்த்தினார். பின் சென்னைக்கு வந்தார் மனோரமா. வாய்ப்பு எதுவும் கிடைக்கவில்லை. நாடகத்திலும் அவ்வளவு வருமானமில்லை. சொந்த ஊருக்கே திரும்பி விடலாம் என்று மனம் வெறுத்துப் போனார் மனோரமா. அந்த நேரத்தில் ராதா, 'இன்பவாழ்வு' என்றொரு படத்தில் மனோரமாவுக்கு வாய்ப்பு வாங்கிக் கொடுத்தார். அதுதான் மனோரமா சினிமாவில் நடித்த முதல் படம். படத்தின் கதாநாயகன் ராதாதான். மனோரமாவுக்குக் கதாநாயகியின் அம்மா வேடம். படப்பிடிப்பு பாதியிலேயே நின்றுபோனது. ஆனால் ராதா, அன்று தடுத்து நிறுத்தாவிட்டால், மனோரமா என்றொரு சிறந்த நடிகை திரையுலகுக்குக் கிடைத்திருக்க மாட்டார்.

★ ராதாவின் டிரைவர் பெயர் தமிழன். கார் ஓட்டும்போது டிரைவர் அசதியாக இருப்பதுபோல தெரிந்தால் ராதா கார் ஓட்ட விடமாட்டார். டிரைவரை பின் சீட்டில் உட்காரச் சொல்லிவிட்டு, தானே காரை ஓட்டிச் செல்லுவார்.

★ படப்பிடிப்பின் மதிய இடைவேளையில், சாப்பாட்டுக்குப் பின் இரண்டு பெக், பிராந்தி சாப்பிடும் பழக்கம் ராதாவுக்கு இருந்தது. பின் ஒரு மணி நேரம் ஓய்வெடுத்துக் கொள்வார். ஆனால் பிறகு மதுப்பழக்கத்தை அறவே விட்டுவிட்டார் ராதா. அவர் காதலித்து, பதிவுத் திருமணம் செய்துகொண்ட மனைவி கீதா கேட்டுக் கொண்டதால்தான் மதுவை விட்டார் ராதா.

★ ராதாவுக்கு இயல்பாகவே கட்டளையிடும் கரகரப்புக் குரல்தான். படத்தில் தேவைக்கேற்ப இரண்டு டோன்களில் அல்லது மூன்று டோன்களில் பேசுவதை ஸ்டைலாக மாற்றிக் கொண்டார்.

தன் நடிப்பு பாணி பற்றி ராதா சொன்னது:

'முன்பெல்லாம் சினிமா உலகம் டைரக்டர் கையிலே இருந்தது. இப்போது கதாநாயகன் கையிலே இருக்கிறது. கதை எழுதுறவன், பாட்டு எழுதறவன், வசனம் எழுதுகிறவன் எல்லோரும் கதாநாயகனிடம் அடைக்கலம் கதாநாயகன் தன்னைப் பற்றியே சொல்லுகிறான். அவனைப்

பற்றியே கதை எழுதுகிறவன் எழுதுகிறான். பாட்டு எழுதுகிறவனும் அவனைப் புகழ்ந்தே எழுதுகிறான்.

திருட்டுத்தனம் பண்ணுவதற்குத் தமிழ்தான் இடம் கொடுக்குமே. நல்ல டயலாக் எல்லாம் கதாநாயகன் பேசுகிறமாதிரி வரவேண்டும் என்கிறான். மற்றவர்கள் பேசுகிற டயலாக்கெல்லாம் டல்லாக இருக்கவேண்டும் என்கிறான்.

இதனால் 'என் வசனத்தை என் பாணியிலேயே பேசறேன். உங்க பாணி சரிப்பட்டு வராது' என்று சொல்லி நான் மாத்தினேன் பாருங்க, அது சக்ஸஸ் ஆகிவிட்டது.'

★ 'அண்ணே முதல்ல லெஃப்டுல இருந்து நீங்க வர்றீங்க. க்ளோசப்ல உங்களைக் காட்டுறோம். ரைட்ல திரும்பிப் பேசறீங்க. அப்புறம் லாங் ஷாட்ல...' - சோமு என்ற இயக்குநர் ராதாவிடம் காட்சியை விளக்கிக் கொண்டிருந்தார். அப்போது ராதா அடித்த கமெண்ட். 'இதெல்லாம் என்கிட்ட ஏன் சொல்லுற மேன்? லென்ஸை மாத்துறது எல்லாம் உன் வேலை. உன் வேலையை எதுக்கு என்கிட்ட சொல்லுற? டயலாக்கை சொல்லு.'

★ 'அடேய், எல்லா நடிகைங்க போட்டாவையும் மறைச்சு மறைச்சு வைச்சுப் பார்க்காதீங்கடா. சரோஜா தேவி போட்டோவை மட்டும் வைச்சுக்கோங்க. அவ நல்ல பொண்ணு' இது ராதா தன் பிள்ளைகளிடம் சொன்னது.

★ படப்பிடிப்பில் யாராவது 'ஏதாவது சின்ன ரோல் கிடைக்குமாண்ணே?' என்று ராதாவிடம் வந்து வாய்ப்பு கேட்டால், 'கொடுப்பா, பாவம்' என்று இயக்குநரிடம் சிபாரிசு செய்வார்.

★ யாராவது அசத்திட்டீங்கண்ணே என்று படப்பிடிப்பிலோ, சினிமாப் பார்த்துவிட்டோ பாராட்டினால் ராதா சொல்லும் கமெண்ட். 'நான் சாப்பாட்டுக்குக் கஷ்டப்படுறப்போதான் ஆக்ட் பண்ணினேன். இப்ப நான் எங்கேயா ஆக்ட் பண்ணுறேன்.'

★ தேனாம்பேட்டை நாடக நடிகர்கள் எல்லோர் மீதும் ராதா தனி பிரியம் வைத்திருந்தார். அவர்கள் எல்லோரும் 'நைனா' என்று

ராதாவை அழைத்தார்கள். அவர்கள் தன்னைத் தேடி வரும்போதெல்லாம் சாப்பிடச் சொல்லுவார் ராதா. நினைத்த நேரத்தில் எல்லாம் போய் சாப்பிட்ட நலிந்த கலைஞர்கள்கூட உண்டு.

★ 'எங்க அம்மா இறந்துட்டாங்க. போகணும். நான்தான் எங்கப்பாவோட மூத்ததாரத்துப் பையன். கண்டிப்பா போயே ஆகணும்' என்று ராதா வீட்டுப் பணியாள் விடுப்பு கேட்டார். 'சரிதான், உங்கப்பா என் டைப் போலருக்கு' என்று கமெண்ட் அடித்தார் ராதா. 'நீ நம்ம டைப் போலருக்கு' என்று கமெண்ட் அடித்தார் எம்.ஆர்.ஆர். வாசு.

★ நாடகத்தில் போலீஸ் வருவதுபோல காட்சி இருக்கும். அப்போது ராதா உடன் நடிப்பவர் பயப்படுவதுபோல நடிப்பார். உடனே ராதா வசனம் பேசுவார். 'ஏன்டா பயப்படுறே? போலீஸ்னா என்ன பெரிய கொம்பா? (ரசிகர்களைப் பார்த்து கைநீட்டி) எல்லாம் ஓசி டிக்கெட்ல முன்னாடி உட்கார்ந்திருக்கான் பாரு. காசு கொடுத்தவன்லாம் பின்னாடி உட்கார்ந்திருக்கான்.' ராதாவின் இந்த நக்கல் தாங்காமல், ஓசி டிக்கெட்டில் வந்தவர்கள் எழுந்து ஓடுவதும் உண்டு.

★ பின்நாள்களில் 'ரத்தக்கண்ணீர்' நாடகம் இருந்த நாள்களில் மதிய நேரத்தில் ஊசி ஒன்றை போட்டுக் கொள்ளும் பழக்கம் வைத்திருந்தார் ராதா. அது என்ன சத்து ஊசி என்று தெரியவில்லை. ஆனால் மனித ஆயுளின் ஒரு நாளை குறைக்கும் அளவுக்கு வீரியம் மிக்கதாம். அந்த ஊசி போடுவதற்கென்றே கம்பவுண்டர் ஒருவரை வைத்திருந்தார். ஊசி போட்டுவிட்டு இரண்டு மணி நேரம் தூங்குவாராம். பின்பு நாடகத்துக்குக் கிளம்புவாராம். நாடகத்தில் பழைய நடிப்பு கொஞ்சமும் குறையாமல் சிரமப்பட்டு நடிப்பதற்காகவே அந்த ஊசி போட்டுக்கொள்வாராம்.

★ திருச்சி சங்கிலியாண்டபுரம் வீட்டுத் தோட்டத்தில் ராதாவுக்கு என நினைவு மண்டபம் உள்ளது. அந்த வீட்டில் அவர் நாடகத்துக்குப் பயன்படுத்திய பொருள்கள், சாட்டின் படுதாக்கள் எல்லாம் இருக்கின்றன.

★ ராதா கொண்டாடும் ஒரே பண்டிகை - தமிழர் திருநாள்.

★ சிவாஜியின் நடிப்பு பற்றி அவரிடமே ராதா சொன்ன கமெண்ட் 'நீ படத்துல முதல்ல வரணும். அப்புறம் நடுவுல அப்பப்ப வரணும். அப்புறம் கடைசியில் முக்கியமான ஆளா வந்து உன்னை நிரூபிக்கணும். ஆனா படம் முழுக்க நீ இருந்துக்கிட்டிருக்கியே?'

★ 'இன்கம்டாக்ஸ் கட்டவில்லையா? போச்சு போச்சு, வந்து உங்கள் காரை ஸீஸ் செய்துவிட்டு போய்விடுவார்கள்' ராதாவிடம் சொன்னார் ஜி.டி. நாயுடு. ராதா நேராக தன் ப்ளைமவுத் கார் நிற்கும் இடத்துக்குச் சென்றார். அதை ஓரமாக நிறுத்திவைத்துவிட்டு, அதன் நான்கு டயர்களையும் கழட்டி எடுத்து ஒளித்து வைத்தார். பின்பு சொன்னார். 'சீஸ் பண்ண வர்றவங்க, டயர் இருந்தாத்தானே ஓட்டிக்கிட்டுப் போவ முடியும். இப்ப என்ன பண்ணுவாங்க?'

★ எம்.ஜி.ஆர் வந்தால் செட்டில் யாரும் உட்கார மாட்டார்கள். வேலையை வேகமாக முடிக்கவேண்டும் எனப் பரபரப்பாக இயங்குவார்கள். ஆனால் ராதா முன்பு எம்.ஜி.ஆர். உட்கார மாட்டார். ராதாவே வற்புறுத்திச் சொன்னால்தான் உட்காருவார். ராதாவுக்கான காட்சிகளை சீக்கிரம் முடித்து அனுப்பச் சொல்லுவார் எம்.ஜி.ஆர்.

★ இயக்குநர் ஏ.சி.திருலோகசந்தர் எப்போதுமே பைப் சிகரெட்டை பிடித்துக் கொண்டிருப்பார். ஒருநாள் ராதா செட்டில் ஓர் உதவி இயக்குநரைப் பார்த்துக் கேட்டார். 'பைப் வைச்சு புடிக்கிறாரே டைரக்டர், அந்த ஆளுங்க நடிக்கும்போதும் பைப் வைச்சுப் பிடிப்பாரா?' அந்த உதவி டைரக்டரின் பதில் 'நல்லா பிடிப்பாரண்ணே. சிவாஜி முன்னாலயும் பிடிப்பாரு. எம்.ஜி.ஆர். முன்னாலயும் பிடிப்பாரு. உட்கார்ந்துக்கிட்டே டைரக்ட் பண்ணுவாரு. அவரு எப்பவுமே இப்படித்தான்.' பதிலைக் கேட்ட ராதா மகிழ்ச்சியோடு சொன்ன கமெண்ட், 'இவன்தான்யா டைரக்டரு. ஒரு ஓரத்துல போயி பயந்து பயந்து சிகரெட் அடிக்கிறவனுங்க எல்லாம் என்னய்யா டைரக்டரு?'

## 5. எம்.ஆர். ராதா - படவரிசை

*1937*

ராஜசேகரன்

*1939*

சந்தனத்தேவன், பம்பாய் மெயில்

*1940*

சத்தியவாணி

*1942*

சோகாமேளர்

*1954*

ரத்தக்கண்ணீர்

*1958*

நல்ல இடத்து சம்பந்தம்

*1959*

பாகப்பிரிவினை, தாமரைக்குளம், உலகம் சிரிக்கின்றது

*1960*

பெற்றவள் கண்ட பெருவாழ்வு, ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு, ஒரே குடும்பம், ஆடவந்த தெய்வம், அதிர்ஷ்டசாலி, கவலை இல்லாத மனிதன், கடவுளின் குழந்தை, ரத்தினபுரி இளவரசி, கைராசி.

*1961*

பாவமன்னிப்பு, பணம் பந்தியிலே, பங்காளிகள், பாலும் பழமும், நல்லவன் வாழ்வான், தாய் சொல்லைத் தட்டாதே, குமுதம், சபாஷ் மாப்பிள்ளை.

*1962*

பாத காணிக்கை, பலே பாண்டியா, படித்தால் மட்டும் போதுமா?, பாசம், பட்டினத் தார், தாயைக் காத்த தனயன், குடும்பத்தலைவன், கவிதா, ஆலயமணி, கொங்கு நாட்டுத்தங்கம், காத்திருந்த கண்கள், மாடப்புறா, எல்லோரும் வாழவேண்டும், ஜமீன்தார் மாப்பிள்ளை, எதையும் தாங்கும் இதயம், செங்கமலத்தீவு, முத்து மண்டபம், சீமான் பெற்ற செல்வர்கள், கண்ணாடி மாளிகை, வளர்பிறை, மங்கையர் உள்ளம் மங்காத செல்வம், சாரதா, தென்றல் வீசும், இந்திரா என் செல்வம், மகாவீரபீமன், நாகமலை அழகி.

*1963*

பார் மகளே பார், பரிசு, பெரிய இடத்துப் பெண், பெண்மனம், தர்மம் தலைகாக்கும், காட்டுரோஜா, ஆனந்த ஜோதி, ஆசை அலைகள், காஞ்சித்தலைவன், கட வுளைக்கண்டேன், கல்யாணியின் கணவன், நானும் ஒரு பெண், இருவர் உள்ளம், இதயத்தில் நீ, நீதிக்குப்பின் பாசம், கொடுத்து வைத்தவள், மணி ஓசை,லவகுசா, சம்பூர்ண மகாபாரதம்.

*1964*

பாசமும் நேசமும், பச்சை விளக்கு, தாயின் மடியில், ஆயிரம் ரூபாய், வேட்டைக்காரன், என் கடமை, கறுப்புப்பணம், கை கொடுத்த தெய்வம், மகளே உன் சமத்து, உல்லாசப் பயணம், அருணகிரிநாதர், தொழிலாளி, புதிய பறவை, வழி பிறந்தது,

*1965*

பழனி, சரசா பி.ஏ, எங்கிருந்தாலும் வாழ்க, எங்க வீட்டுப் பெண், வழிகாட்டி, ஹலோ மிஸ்டர் ஜமீன்தார், கடவுள் தந்த பரிசு, படித்த மனைவி, விளக்கேற்றியவள், ஆனந்தி, தாழம்பூ, கலங்கரை விளக்கம், தாயின் கருணை, சாந்தி.

*1966.*

சந்திரோதயம், பெற்றால்தான் பிள்ளையா?, சித்தி

*1969*

தங்கமலர்

*1974*

சமையல்காரன்

*1976*

தசாவதாரம்

*1977*

முருகன் அடிமை

*1978*

வண்டிக்காரன் மகன், பஞ்சாமிர்தம்

*1979*

தர்மங்கள் சிரிக்கின்றன, கந்தர் அலங்காரம், வேலும் மயிலும் துணை, தேவைகள் யாருக்கு யார் காவல், ஆடு பாம்பே, பஞ்சபூதம்.

★ ★ ★

**நன்றி :**

இதழ் சேகரிப்பாளர் எஸ்.வி. ஜெயபாபு
பெரியார் திடல் நூலகம், சென்னை
ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், சென்னை
நடிகர் எஸ்.எஸ். ராஜேந்திரன்
நடிகர் ஸ்ரீகாந்த்
பாடகர் ஏ.எல். ராகவன்
நடிகை எம்.என். ராஜம்
நடிகை சரோஜா தேவி
நடிகை மனோரமா
ஒப்பனையாளர் கஜபதி
வசனகர்த்தா கே.பி. அறிவானந்தம்
நடிகர் ராஜேஷ்
நடிகர் கிரிதரன்
இயக்குநர் முக்தா சீனிவாசன்
இயக்குநர் வியட்நாம் வீடு சுந்தரம்
இயக்குநர் எஸ்.ஏ. கண்ணன்
இயக்குநர் எஸ்.பி. முத்துராமன்
இயக்குநர் ஏ.கே. சண்முகம்
லேனா தமிழ்வாணன்
இசையமைப்பாளர் கணேஷ்
மற்றும்
பெயரை அச்சில் விரும்பாத நண்பர்கள் சிலர்.

## உதவியவை

**புத்தகங்கள் :**


எனது கலைப்பயணம் வி.கே. ராமசாமி
சுட்டாச்சு சுட்டாச்சு சுதாங்கன்
ராமாயணம் M.R.ராதா, 1954, அறிவுப்பண்ணை, மதுரை.
தடைகள் பல தாண்டி டாக்டர் பி. ராமமூர்த்தி
வையகப் பெரு நடிகர் நடிகவேள் எம்.ஆர். ராதா
சிவகெங்கை வான்மதி
ரத்தக்கண்ணீர் சிறப்பு மலர், 1954, வெளியீடு கலைமன்றம்.
திரைப்பட நினைவுகள் - மா. லெட்சுமணன்
நந்தன் - புரட்சி மலர், ஜனவரி 16-31, 2001
பெரியார் பிறந்தநாள் மலர் 1965.

**நாளிதழ்கள் :**

விடுதலை ஜனவரி 16, 1967, தந்தை பெரியார் அவர்களின் பொங்கல் செய்தி.
விடுதலை மே 22, 1958, ராதாவின் லால்குடி மாநாட்டுப் பேச்சு.
விடுதலை ஏப்ரல் 15, 1958, செய்யாத்து விண்ணான் கூட்டத்தில் ராதாவின் பேச்சு.
விடுதலை நவம்பர் 28, 1954, எம்.ஆர். ராதா பேச்சு
விடுதலை டிசம்பர் 1, 1954, எம்.ஆர். ராதா அறிக்கை
விடுதலை டிசம்பர் 3, 1954, மதுரையில் கலவரம்
விடுதலை டிசம்பர் 8, 1954, நாடகத்தடை சட்டத்திற்கு அசெம்பிளியில் கண்டனம்
விடுதலை செப்டெம்பர் 20, 1963, பெரியார் பேரூரை
விடுதலை செப்டெம்பர் 18, 1979, ராதாவுக்கான இரங்கல் செய்திகள்
விடுதலை செப்டெம்பர் 23, 1979, ராதாவுக்கான இரங்கல் செய்திகள்
விடுதலை நவம்பர் 14, 2007, ராதா நூற்றாண்டு விழா

**தொடர்கள் :**

ராதா சொல்லும் ரகசியங்கள் கல்கண்டு
சிறைச்சாலை சிந்தனைகள் விந்தன், தினமணிக் கதிர்

**சினிமா கட்டுரைகள் :**

எனக்கு பயந்து நேரத்தோடு வருவார்கள் பேசும் படம் ஏப்ரல் 1977
பெங்களூரில் நடிகர் எம்.ஆர். ராதா பிலிமாலயா பிப்ரவரி 1973
எம்.ஆர். ராதா சொல்கிறார் இந்தியன் மூவி நியூஸ் அக்டோபர் 1971

**வார இதழ்கள் :**

குமுதம் டிசம்பர் 27, 2006, திருவாரூர் கே. தங்கராசு பேட்டி.
ராணி மே 27, 2007, நான் ரசித்த எம்.ஜி.ஆர். நடிகர் எஸ்.எஸ்.ஆர்.
மதி ஒளி செப்டெம்பர் 10, 1961, எம்.ஆர். ராதா பதில்.




**சிரிப்பு டாக்டர்**

முத்துராமன்

ISBN 978-81-8368-114-8

விலை ரூ.70




**காதலன்**

பா. தீனதயாளன்

ISBN 978-81-8368-197-1

**விலை ரூ.70**




**சிவாஜி: நடிகர் முதல் திலகம் வரை**

பா. தீனதயாளன்

ISBN 978-81-8368-123-0

**விலை ரூ.60**




குதி!

ச.ந. கண்ணன்

ISBN 978-81-8368-110-0

விலை ரூ.60



**கண்ணீரும் புன்னகையும்**

முகில்

ISBN 978-81-8368-098-1

*விலை ரூ.70*




**பாகவதர்**

ஜெ. ராம்கி

ISBN 978-81-8368-372-2

**விலை ரூ.70**




**மு.க.**

ஜெ. ராம்கி

ISBN 978-81-8368-126-1

**விலை ரூ.75**



**ரஜினி: சப்தமா? சகாப்தமா?**

ஜெ. ராம்கி

ISBN 978-81-8368-057-8

*விலை ரூ.70*

கொப்பளிக்கும் புத்திக் கூர்மை. டைமிங். மிரட்டும் மாடுலேஷன். அநாயாசமான நகைச்சுவை உணர்வு. வில்லன் வேடமேற்பவரையும் விழுந்து விழுந்து ரசிக்கலாம் என்று ரசிகர்கள் எண்ணத் தொடங்கியதே ராதாவுக்குப் பிறகுதான். அவருக்கு முன்னும் பின்னும் இந்தியத் திரையுலகில் அவருக்கு நிகரான இன்னொரு கலைஞர் உதித்ததில்லை.

அவர் நாடகங்கள் போட்டுக்கொண்டிருந்த காலத்தில் எந்தத் திரைப்படக் கதாநாயகரைக் காட்டிலும் பெரும் புகழ் பெற்றவராக இருந்தார். 'ராமாயணம்' புகழ் கொடுத்தது வால்மீகிக்கும் கம்பனுக்கும் மட்டுமல்ல. ராதாவுக்கும்கூட.

அந்த ஒரு நாடகத்துக்கு மட்டும் எத்தனை முறை அரசு தடையுத்தரவு பிறப்பித்திருக்கும்! அடிதடிகளும் கல் வீச்சுகளும் சொல்வீச்சுகளும் தமிழகத்தையே குலுக்கின. எதற்கும் அசராத அவரது துணிச்சல் அபாரமானது.

திராவிடர் கழக அனுதாபியாக இருந்தாலும் பெரியாரையும் அண்ணாவையுமே விமரிசிப்பார். காங்கிரஸ்காரர்களைப் பிடிக்காதென்றாலும் காமராஜரை மதிப்பார். தீவிர நாத்திகரானபோதிலும் பக்திப் படங்களில் எவ்வித மனச் சிடுக்குமின்றி நடிப்பார். எளிதில் பிடிபடாத குணச்சித்திரம்!

இந்நூல் எம்.ஆர். ராதாவின் முழுமையான வாழ்க்கை வரலாறல்ல. ஒரு காட்டாற்று வெள்ளத்தை கப் அண்ட் சாஸரில் ஏந்திக்குடிக்கிற முயற்சி மட்டுமே.